මහෙ. ප්‍රාථ අධිකරණ
2 ... 1987


# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டம்

*[1987, ஏப்பிறல் மாதம் 16 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1987, ஏப்பிறல் மாதம் 16 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

---

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

## பிரிவுகளின் அட்டவணை


| பிரிவு | | பக்கம் |
|---|---|---|
| 1. | சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும் .. .. | 1 |


### பாகம் I

### பிரதேச சபையை அமைத்தல்


| | | |
|---|---|---|
| 2. | பிரதேச சபைகளை அமைத்தல் .. .. .. | 1 |
| 3. | பிரதேச சபைகளின் பணிகள் .. .. .. | 2 |
| 4. | பிரதேச சபைகளின் உறுப்பினர்கள் .. .. | 2 |
| 5. | உறுப்பினர்களின் பதவிக்காலம் .. .. .. | 2 |
| 6. | பிரதேச சபையின் பதவிக்காலத் தொடக்கமும் அத்தகைய பிரதேச சபையினை அமைக்கும் தேதியும் | 3 |
| 7. | பதவியை வறிதாக்கல் .. .. .. | 4 |
| 8. | தவிசாளரும் துணைத் தவிசாளரும் .. .. .. | 4 |
| 9. | செயலாளரை நியமித்தலும், அவரது தத்துவங்களும் கடமைகளும் .. | 4 |


### கூட்டங்கள்


| | | |
|---|---|---|
| 10. | பிரதேச சபைக் கூட்டங்களில் தவிசாளர் அல்லது துணைத் தவிசாளர் தலைமை வகித்தல் | 5 |
| 11. | கூட்டங்கள் .. .. .. .. | 5 |
| 12. | பிரதேச சபை குழுக்களை நியமித்தல் .. .. | 6 |
| 13. | கூட்ட நடப்பெண் .. .. .. .. | 6 |
| 14. | பிரதேச சபையின் தத்துவங்கள் பெரும்பான்மைக்கு உரித்தாக்கப் பட்டிருத்தல் . | 6 |
| 15. | கூட்டக் குறிப்புகள் .. .. .. | 7 |


### பாகம் II

### பிரதேச சபைகளின் அந்தஸ்தும் தத்துவங்களும் கடமைகளும்


| | | |
|---|---|---|
| 16. | பிரதேச சபை ஒன்றிற்கு அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களையும் சொத்துக்கள் பொறுப்புக்கள் என்பனவற்றையும் உரித்தாக்கல் | 7 |
| 17. | அத்தகைய காணியின் நிருவாகம் முதலியவற்றை உரித்தாக்கும் முறை | 8 |
| 18. | பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட ஏனைய ஆதனம் . | 9 |
| 19. | பிரதேச சபையின் தத்துவங்கள் | 10 |
| 20. | அளப்பனவுகளை அதிகாரமளிப்பதற்குள்ள தத்துவம் | 17 |




2—எ 094616—4,085 (86/12)

## பாகம் iii

### பொதுவழிகள் பற்றிய தத்துவங்களும் கடமைகளும்


| பிரிவு | பொதுவழிகள் | பக்கம் |
|---|---|---|
| 21. | பொதுவழிகளுக்கும் தொடர்புகளுக்கும் பிரதேச சபையே பொது அதி அதிகாரசபையாக இருத்தல் | 18 |
| 22. | பொதுவழிகளும் திறந்த வழிகளும் தொடர்பாகப் பிரதேச சபைக்குள்ள பொதுவான தத்துவங்கள் | 19 |
| 23. | பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட பொதுவழிகள் | 19 |
| 24. | வீதிகளையும் பாதைகளையும் எல்லை குறித்து அவற்றின் நிரலொன்றைப் பிரதேச சபை வெளியிடுதல் | 20 |
| 25. | ஆட்சி வரையறை | 21 |
| 26. | அறிவித்தல்கள் எவ்வாறு சேர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது .. | 22 |
| 27. | புதிய பொதுவழிகளை நிருமாணிப்பதற்கும் எலவேயுள்ள பொது வழிகளை சீர்திருத்துவதற்கும் பிரதேச சபைக்குள்ள தத்துவம் | 22 |
| 28. | திசைதிருப்புதல்களுக்கு அல்லது பெருப்பித்தல்களுக்குத் தேவைப் படுகின்ற காணிகளைக் கொள்ளுதல் | 22 |
| 29. | பொதுவழியினைத் திசைதிருப்புதற்கு அல்லது பெருப்பிப்பதற்குத் தேவைப்படும் காணிகளின் கொண்டைகள். | 23 |
| 30. | பயன்படுத்தப்படாது இடைநிறுத்தப்பட்ட தெருவைக் கையுதிர்ப்பதற் கான தத்துவம் | 24 |
| 31. | கட்டிட நோக்கங்களுக்காகப் புதிய தெருவை அடுத்துள்ள காணியை எடுப்பதற்கான தத்துவம். | 24 |
| 32. | ஒரு பிரதேச சபையின் ஏனைய தத்துவங்கள். | 24 |
| 33. | ஆதனச் சொந்தக்காரர்களின் நன்மைக்கான வீதிகள் | 25 |
| 34. | பகிரங்க வாகனத் தொடர்புகள் | 26 |
| 35. | பாழடைந்த அத்துடன் அபாயகரமான நிலையிலுள்ள வீடுகள் .. | 26 |
| 36. | அறிவித்தலுடன் இணங்கியொழுகத் தவறுதல் .. .. | 26 |
| 37. | பழுதடைந்த வீடுகளின் பொருட்களை விற்பனை செய்தல் .. | 26 |
| | **பொது வழிகளைப் பேணுதலும் அவற்றைப் பழுதுபார்த்தலும்** | |
| 38. | பொதுவழிகளைப் பழுதுபார்த்தல் முதலியவற்றுக்காக காணிக்குள் பிரவேசிப்பதற்குத் தகுந்த அலுவலர்கள் அதிகாரமளிக்கப்படுதல் | 27 |
| 39. | பொருட்களை எடுப்பதற்கான தத்துவம் | 28 |
| 40. | கட்டடங்களை நிறுவுவதற்கானதும் கால்நடைகளை வைத்திருப்பதற்கான துமான தத்துவம் முதலியன | 29 |
| 41. | அருகாமையிலுள்ள காணிமீது குப்பை வீசுவதற்கான தத்துவம் .. | 30 |
| 42. | தற்காலிக வீதியை அமைப்பதற்கான தத்துவம் .. | 30 |
| 43. | மரங்களை வெட்டுவதற்கான தத்துவம் .. .. | 30 |
| 44. | வேலிகளைக் கட்டுவதற்கான தத்துவம் .. .. | 31 |
| 45. | நீர்வடிகால் முதலியவற்றை அமைத்து, திறந்துவைப்பதற்கும் வடிநீர்க் குழாய்கள் முதலியவற்றை கீழிடுவதற்குமான தத்துவம் | 31 |
| 46. | கற்கள் முதலியவற்றை இடுவதற்கான தத்துவம். | 31 |

| பிரிவு | பொதுவழிகளினூடாகவுள்ள கட்டடங்கள் | பக்கம் |
|---|---|---|
| 47. | ஒரு பொதுவழியினூடாக முன்னப்பட்ட கட்டடம் பற்றிய அறிவித்தல் .. | 32 |
| 48. | தற்காலிக வேலிகளையும் அடைப்புகளையும் நிறுவுதல் | 32 |
| 49. | வீதிகள் நெடுகலும் கட்டடவரையறைகள். .. | 33 |
| 50. | கட்டட வரம்புகளை எல்லை வரையறுத்தல் | 35 |
| 51. | 49 ஆம் பிரிவின்கீழான எல்லா உரிமங்களுக்கும் இணைக்கப்பட வேண்டியதான நிபந்தனை | 38 |
| 52. | சட்டத்திற்கு முரணாக நிறுவப்படும் கட்டிடத்தை, எல்லைச்சுவரை அல்லது வாசலைக் கையாள்வதற்குப் பிரதேச சபைக்குள்ள தத்துவம் | 39 |
| 53. | கட்டடத்தால் அபிவிருத்தியடைந்த காணி தொடர்பில் நட்டஈட்டை மதிப்பீடு செய்வதற்கான நெறிகள். | 40 |
| 54. | கட்டிட எல்லைக்குட்பட்ட காணியின் சொந்தக்காரருக்கென அடுத்துள்ள காணியைக் கொள்ளுதற்கு பிரதேச சபைக்குள்ள தத்துவம் | 41 |
| 55. | உரித்துறுதிகளைக் காண்பிக்குமாறு கோருவதற்குள்ள தத்துவம் | 41 |
| 56. | உறுதியைக் காண்பிக்குமாறு கோருதல், அதனைப் பரிசீலிப்பதற்கான தத்துவத்தையும் உள்ளடக்கும் | 42 |
| 57. | வளவுகளை நில அளவை செய்வதற்கான தத்துவம் .. | 43 |
| 58. | வெளிப்படையாக ஊடுருவல் செய்வதற்கான உரிமை உண்டென்பதை எண்பிக்கும் பொறுப்பு சொந்தக்காரர் மேலதாகும். | 43 |
| 59. | தடைகளை அல்லது சேர்த்தெல்லையிடல்களை அகற்றுதல் | 44 |

**பொதுவழிகள் முதலியவற்றிற்கான ஊறுகள்**

| | | |
|---|---|---|
| 60. | மைல்கல், பாலம் முதலியவற்றை அழித்தல் .. | 45 |
| 61. | ஏதேனும் விலங்கின் மீது அல்லது வாகனத்தின் மீது ஏறிச் செல்லுதலை அல்லது அதனை ஓட்டிச்செல்லுதலைத் தடை செய்தல் | 47 |
| 62. | காணிச் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் அவரது வீட்டிற்குச் செல்லும் வடிகால்கள்மீது பாலம் முதலியன அமைப்பதற்குக் கட்டுப் பட்டவராதல் | 48 |
| 63. | பொதுவழிக்கு ஊறுவிளைவிக்கின்றவாறான அத்தகைய விதத்தில் மரங்களை வளரவிடுதல் | 48 |
| 64. | அயலிலுள்ள காணியைத் துப்பரவு செய்தல், அதற்கு வடிகால் அமைத்தல் அல்லது அதனைத் திறத்தல் மூலம் பொதுவழியைச் சேதப்படுத்துதல் | 48 |

**பொது வழிகளில் தொல்லைகள் முதலியன**

| | | |
|---|---|---|
| 65. | தவறுகள் .. .. .. .. | 49 |
| 66. | கட்டப்படாத கால்நடைகளைக் கைப்பற்றுதல் .. .. | 52 |
| 67. | கால்நடைகளைக் கைப்பற்றுவோருடன் தலையிடல் .. .. | 53 |

**பொது வழிகளின் சிறப்புப் பயன்பாடு**

| | | |
|---|---|---|
| 68. | சிறப்பான நோக்கங்களுக்கென பகிரங்கப் பொதுவழிகளைப் பயன்படுத்துவதற்கு, அதிகாரமளிப்பதற்கு, பிரதேச சபைக்குள்ள தத்துவம் | 53 |

பிரிவு

| | | பக்கம் |
|---|---|---|
| 69. | துணைவிதிகள் .. .. .. .. | 54 |
| 70. | அசாதாரணமான வாகனாதிகளினால் விளைவிக்கப்படும் செலவுகள், அலுவலர்கள் முதலியோரின் தத்துவங்களும், கடமைகளும், பொறுப்புகளும் அலுவலர்கள் முதலியோரின் தத்துவங்களும் கடமைகளும் பொறுப்புகளும் | 55 |
| 71. | பகிரங்க வேலைகள் அவற்றிற்குப் பொறுப்பான எந்த அலுவலர்களினால் நிறைவேற்றப்படுதல் வேண்டுமோ, அந்த அலுவலர்களுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள் | 56 |
| 72. | முறையான அலுவலர்களால் செய்யப்பட்ட அளப்பனவுகள் முடிவான சான்றுதல். | 57 |
| 73. | அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களினால் ஆதனத்திற்கு விளைவிக்கப்படும் ஊறுக்கு நட்டஈடு | 57 |
| 74. | நடுத்தீர்ப்பு .. .. .. | 57 |
| 75. | அலுவலர்களும் ஒப்பந்தகாரர்களும் இரவில் பொதுவழிகளில் கற்கள் முதலியவற்றை விட்டுவைத்தல் | 58 |
| 76. | குறித்த சில விடயங்களில் தவிர வீதி அலுவலர் அல்லது வீதி ஒப்பந்தக்காரர் குற்றப்பணத்திற்கு ஆளாதலாகாது | 58 |
| 77. | பொலிச அலுவலர்களும் கிராம சேவை உத்தியோகத்தர்களும் இப்பாகத்தின் ஏற்பாடுகளை வலியுறுத்தல் வேண்டும் | 58 |

## பாகம் IV

## பொதுச் சுகாதாரம் தொடர்பிலான தத்துவங்களும் கடமைகளும்

### பொதுச் சுகாதாரம்

| | | |
|---|---|---|
| 78. | பிரதேச சபையானது பொதுவாக பகிரங்க சுகாதார அதிகார சபையாதல் வேண்டும் | 58 |

### வடிகாலமைப்பு

| | | |
|---|---|---|
| 79. | பிரதேச சபை பகிரங்க வடிகால்களை அமைத்தல் | 59 |
| 80. | வடிகால்களைச் செம்மையாக்கவும், மாற்றவும், இடைநிறுத்தவும் பிரதேச சபைக்குள்ள கடமை | 59 |
| 81. | மழைநீரும், வடிகால் கழிவும் வெளியேற்றப்படுவதற்கு முட்டுக் கட்டையிடுதல் | 60 |
| 82. | வடிகால்களின் பொதுவான கட்டுப்பாடு .. .. | 60 |
| 83. | அதிகாரமளிக்கப்படாத வடிகால்களைப் பகிரங்க வடிகால்களுக்குள் செலுத்துவதற்கான தண்டம் | 61 |
| 84. | பிரதேச சபையின் சம்மதமின்றி வடிகால்கள் முதலியன மீது கட்டடங்கள் நிறுவப்படலாகாது | 61 |

### மலசலகூடங்கள்

| | | |
|---|---|---|
| 85. | மலசலகூட வசதி தொடர்பில் பிரதேச சபைக்குள்ள கடமை .. | 62 |
| 86. | மேலதிக மலசலகூடங்களை நிர்மாணித்தல் .. .. | 62 |
| 87. | மலசலகூடங்களை ஏற்பாடு செய்வதற்குத் தொழிலாளர்களின் தொழில் தருநருக்குள்ள கடமை | 62 |
| 88. | தனிப்பட்ட மலசலகூடத்தை அடைப்பதில் அசட்டையாக இருத்தல் | 63 |

| பிரிவு | | பக்கம் |
| --- | --- | --- |


89. மலசலகூடங்களின் பொதுவான கட்டுப்பாடு .. .. 64

90. பிரதேச சபையின் பணிப்புக்களுக்கு அல்லது துணைவிதிகளுக்கு முரணாக மலசலகூடங்கள் முதலியவற்றை அமைக்கின்ற அல்லது மாற்றியமைக்கின்ற ஆட்களுக்கான தண்டம் 65

91. மலசலகூடங்களை சோதனையிடுதல் முதலியன 65

92. மலசலகூடத்தை அகற்றும்படி அல்லது மலசலக் குழியை மூடிவிடும் படி பணிப்பதற்குப் பிரதேச சபைக்குள்ள தத்துவம் 66


## மலசலமகற்றுதலும் குப்பையகற்றுதலும்


93. மலசலமகற்றுதலும் குப்பையகற்றுதலும் தொடர்பில் பிரதேச சபைக்குள்ள கடமை 66

94. சேகரிக்கப்பட்ட எல்லாக் குப்பையும் பிரதேச சபைக்குச் சொந்தமாக இருத்தல் வேண்டும். 67

95. குப்பையை அழித்தொழித்து விடுவதற்கும் சாதனத்தை வைத்திருப்பதற்குமான இடங்கள் 67


## சுகாதாரத்துக்கொவ்வாத கட்டடங்கள்


96. சுகாதாரத்துக்கொவ்வாத கட்டடங்கள் தொடர்பில் பிரதேச சபைக்குள்ள கடமை 67

97. உளதாயுள்ள கட்டடங்கள் தொடர்பில் பிரதேச சபைக்குள்ள கடமை 67

98. வீடுகள் மிதமிஞ்சி நெருக்கமாயிருத்தல் .. .. 68

99. வீடுகளைச் சோதனையிடவும் வெள்ளையடிக்கவும் பிரதேச சபைக்குள்ள தத்துவம் 68


## தொல்லைகள்


100. தொல்லைகளைச் சோதனையிடல் .. .. 69

101. தனிப்பட்ட வளவுகளிலுள்ள உடனலத்துக்கொவ்வாத கிடங்குகளைத் தூர்ப்பதற்கான தத்துவம் 69

102. விலங்கறு மனைகளுக்கு உரிமம் வழங்கல் .. .. 70

103. குழந்தையால் தொல்லை .. .. .. 70

104. பகிரங்க குளிக்கும் இடங்கள் .. .. .. 70

105. நீர்த்தேக்கம் அல்லது நீர் வசதி வேலைகளுக்குள் பாய்வதான அருவிகளின் தீழ்ப்பு 71

106. தொழிற்சாலைகளால் ஏற்படுத்தப்படும் தீழ்ப்பு .. .. 71

107. ஆளினது அல்லது ஆதனத்தினது பாதுகாப்புக்கு ஊறுவிளைப்பதான மரங்கள் அல்லது மரக்கிளைகள், அடிமரங்கள் அல்லது பழங்கள் தொடர்பாக பிரதேச சபைத் தவிசாளருக்குள்ள தத்துவம் 72


## பொதுப் பயன்பாட்டுச் சேவைகள்


108. பொதுப்பயன்பாட்டுச் சேவைகளைத் தாபிப்பதற்குப் பிரதேச சபைக்குள்ள தத்துவம் 73

109. பொதுப்பயன்பாட்டுச் சேவைகளுக்கான செலவுகளைக் கொடுத்துத் தீர்க்கும் முறை 73





3—ஏ 094616 (86/12)

| பிரிவு | | பக்கம் |
|---|---|---|
| 110. | நீர்ச் சேவைக்கான அல்லது மலசலமகற்றற் சேவைக்கான விசேட வீத வரியின் உச்சஎல்லை | 74 |
| 111. | அரச ஆதனம் தொடர்பில் விசேட வீதவரிகளுக்கான பொறுப்பு | 74 |
| 112. | விசேட வீதவரிகளை மதிப்பிடுதலும் அறவிடுதலும் .. .. | 74 |
| 113. | தீர்மானத்தின் மூலம் விசேட வீதவரியிலிருந்து விலக்களிப்பு .. | 7 |


**நீர் வழங்கல்**


| | | |
|---|---|---|
| 114. | அருகாமையிலுள்ள வளவுகளுக்கான வழங்கல் .. .. | 75 |
| 115. | பிரதேச சபைகளின் பொதுவான தத்துவங்கள் .. | 75 |
| 116. | வீதவரி செலுத்துநர்கள் வீட்டுப் பாவனைக்காகப் பகிரங்க நீர் குழாயிலிருந்து இலவச நீர் வழங்குகைக்கு உரித்துடையோராதல் | 75 |
| 117. | வீட்டுத் தேவைகள் என்பதன் பொருள் .. .. | 76 |
| 118. | தனியார் சேவைக்கான ஒப்பந்தம் .. .. | 76 |


**சந்தைகள்**


| | | |
|---|---|---|
| 119. | கிராம முறைச் சந்தைகள் தொடர்பில் பிரதேச சபைக்குள்ள தத்துவம் | 76 |
| 120. | ஒரு தனிப்பட்ட முறைச்சந்தைக்கு உரிமமொன்று தேவைப்படுமிடத்து ஏற்புடையனவான ஏற்பாடுகள் | 76 |
| 121. | தனிப்பட்ட முறைச்சந்தையை நடாத்தாது விட்டமைக்கான நட்டஈடு .. | 77 |
| 122. | துணை விதிகளை ஆக்குவதற்கான தத்துவம் .. .. | 78 |
| 123. | துணை விதிகளை அங்கீகரித்தலும் வெளியிடுதலும் .. .. | 78 |
| 124. | துணை விதிகளின் பிரதிகளை வழங்கல் .. .. | 79 |
| 125. | துணை விதிகள் அனுமதி மறுப்புக்கு அல்லது திருத்தத்திற்கு அமைவாதல் வேண்டும் என்பது | 79 |
| 126. | துணை விதிகளின் விடயப்பொருள் .. .. | 79 |
| 127. | சுடுகாடுகள் இடுகாடுகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் பிரதேச சபை தகுந்த அதிகாரிடாகவிருத்தல் | 91 |
| 128. | காணிகளையும் கட்டிடங்களையும் கட்டாயமாகக் கொள்ளல் .. | 91 |


## பாகம் V

**நிதி**


| | | |
|---|---|---|
| 129. | பிரதேச சபை நிதியம் .. .. .. | 92 |
| 130. | பிரதேச சபையால் பெற்றுக்கொள்ளப்படும் பணங்கள் வங்கியில் வைப்பிலிடப்படல் வேண்டும் | 93 |
| 131. | பிரதேச சபை நிதியத்தின் பாகம் எதனையும் முதலீடு செய்வதற்குள்ள தத்துவம் | 93 |
| 132. | பிரதேச சபை நிதியத்தின் பயன்பாடு .. . | 93 |
| 133. | பிரதேச சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்படுவதற்கான கட்டளைகள், காசோலைகள் முதலியன | 96 |


**வீதவரிகளும் வரிகளும்**


| | | |
|---|---|---|
| 134. | வீதவரிகளும் ஏக்கர் வரியும் .. .. .. | 96 |

| பிரிவு | | பக்கம் |
| --- | --- | --- |
| 135. | பிரதேச சபையால் விதிக்கப்பட்ட வீதவரியினின்று அல்லது ஏக்கர் வரியினின்று விலக்களித்தல் | 98 |
| 136. | அரச ஆதனத்தை வரி மதிப்பீடு செய்தல் .. .. | 99 |
| 137. | அரச ஆதனத்தைக் கைப்பற்றி விற்பனை செய்யப்படுவதற்கு உட்படுதலாகாது | 99 |
| 138. | வரிமதிப்பீட்டிற்கான ஆதனத்தைப் பிரித்தல் அல்லது ஒன்று திரட்டுதல் | 99 |
| 139. | விலைமதிப்பீட்டு நோக்கங்களுக்கான விபரத்திரட்டு .. .. | 100 |
| 140. | ஆதனங்களின் ஆண்டுப் பெறுமானத்தை வரிமதிப்பீடு செய்தல் .. | 101 |
| 141. | வரிமதிப்பீட்டு நிரலும் ஏக்கர் நிரலும் .. .. | 101 |
| 142. | வரிமதிப்பீடு முதலியவற்றிற்கெதிராக ஆட்சேபனை தெரிவிக்கும் விடயத்தில் நடவடிக்கை முறை | 103 |
| 143. | ஆண்டுப் பெறுமதியைப் பாதிக்கும் ஆதனத்துக்குரிய மாற்றல்கள் செய்ததன் மேல் மதிப்பீட்டைப் பிரித்தல், முதலியன | 104 |
| 144. | குறித்த சில விடயங்களில் வரிமதிப்பீட்டைப் பிரித்தல் அல்லது வீத .. வரிகளைச் சரிபார்த்தல் | 104 |
| 145. | குடியிருப்பு இல்லாத விடயத்தில் வீதவரிகளைக் குறைத்தல் .. | 104 |
| 146. | முன்னைய மதிப்பீடுகளை அல்லது சரிபார்த்தல்களை ஏற்றுக்கொள்ளுதல்.. | 105 |
| 147. | வரிகளையும் உரிமத் தீர்வைகளையும் விதிப்பதற்குப் பிரதேச சபைக்குள்ள தத்துவம் | 106 |
| 148. | வாகனங்கள், விலங்குகள் மீதான வரி .. .. | 106 |
| 149. | குறித்த சில உரிமத்தீர்வைகளை அறவிடுவதற்கு பிரதேச சபைக்குள்ள தத்துவம் | 108 |
| 150. | குறித்த சில வியாபாரங்கள்மீதான வரி .. .. | 109 |
| 151. | பல வியாபாரங்கள் கொண்டு நடாத்தப்படுமிடத்து தீர்வையை அல்லது வரியினைத் தீர்மானித்தல் | 110 |
| 152. | குறித்த சில தொழில்கள், உயர் தொழில்கள் என்பன மீதான வரி .. | 110 |
| 153. | அபிவிருத்தி செய்யப்படாத காணியின் மீதான வரி .. .. | 114 |
| 154. | குறித்த சில காணி விற்பனைகள் மீதான வரி .. .. | 115 |
| 155. | வீதவரிகள் முதலியன தொடர்பில் அசைவுள்ள ஆதனம், கைப்பற்றுதலிலிருந்து விலக்களிக்கப்பட்டிருத்தல் | 115 |
| 156. | போமதியான வாடகையிலிருந்து செலுத்தப்படும் தொகைகளைக் கழித்தல் | 116 |
| 157. | பெயர் முதலியனவற்றில் உள்ள பிழை காரணமாக மதிப்பீடு முதலியன குறை காணப்படவோ பாதிக்கப்படவோ ஆகாது | 116 |
| 158. | வீதவரிகளையும் வரிகளையும் அறவிடுவதற்கான எழுத்தாணை .. | 116 |
| 159. | பிரதேச சபைக்கு வருமதியான வாடகையையும், கட்டணங்களையும் அறவிடுவதற்கான எழுத்தாணை | 117 |
| 160. | ஆதனத்தைக் கைப்பற்றுவதற்கான மட்டுப்பாடுகள் .. .. | 118 |
| 161. | செலவுத் தொகைகளின் அளவுத்திட்டம் .. .. | 119 |
| 162. | ஆதனத்தின் கைப்பற்றுகை .. .. .. | 120 |

பிரிவு | | பக்கம்
---|---|---
163. | அசைவுள்ள ஆதனத்தின் விற்பனை .. .. | 122
164. | விற்பனையிலான மேன்மிகை .. .. .. | 123
165. | வீடுகளை உடைத்துத் திறப்பதற்குள்ள தத்துவம் .. | 123
166. | வீதவரி அல்லது வரிக் கொடுப்பனவிலான தவறுகை .. | 123
167. | நீதிவானின் மூடுதற் கட்டளை .. .. .. | 124


## பாகம் VI

## பிரதேச சபைகளை மேற்பார்வை செய்தலும் கட்டுப்படுத்தலும்


| | |
---|---|---
168. | வரவுசெலவுத் திட்டம் .. .. .. | 125
169. | வரவு செலவுத் திட்டம் தொடர்பில் தவிசாளரின் தத்துவங்கள் .. | 126
170. | வரவு செலவுத் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட செலவினத்தை வேறு படுத்தல் | 126
171. | நிதியத்தையும் ஆதனத்தையும் நிருவகிப்பது பற்றிய விதிகள் | 127
172. | கணக்கின் கணக்காய்வும் மேலதிகக் கட்டணமும் .. .. | 127
173. | வேலை நிறைவேற்றப்படுவதற்கான ஒப்பந்தங்கள், விதித்துரைக்கப்பட்ட எல்லைகளை விஞ்சினால், எழுத்தில் இடப்படுதல் வேண்டும் | 132
174. | 173 ஆம் பிரிவின் குறிப்பீடு செய்யப்பட்ட ஒப்பந்தங்களைச் செய்வதற்கான நடவடிக்கை முறை | 133
175. | செலவின விடயத்தின் சட்டப்படியாந்தன்மை பற்றிய ஐயுறவுகளைத் தீர்த்துவைத்தல் | 134
176. | ஓய்வூதியம், ஆண்டுத்தொகை, பணிக்கொடை அல்லது இளைப்பாறுப்படி முதலியனவற்றின் தண்ணளிக்கொடுப்பனவு | 134
177. | பணிக்கொடைத் திட்டத்தைத் தாபிப்பதற்கான தத்துவம் .. | 135


### கடன்கள்


| | |
---|---|---
178. | வீதவரிகள், வரிகள் ஆகியவற்றின் பிணைப்பொறுப்பின் மேல்கடன் பெறுவதற்குப் பிரதேச சபைக்கு உள்ள தத்துவம் | 135
179. | கடன் பெறும் தத்துவங்களை வரையறுத்தல் .. .. | 136
180. | பிணைப்பொறுப்பின் படிவம் முதலியன .. .. | 137
181. | கடன்கள் திரட்டுவது தொடர்பாகப் பிரதேச சபைக்குள்ள தத்துவங்களைத் தவிசாளர் எப்போது பிரயோகிக்கலாம் என்பது | 137
182. | பிரதேச சபைக்கு வருமதியான பணத் தொகைகளை விட்டுவிடுதல் .. | 137


## பாகம் VII

## பிரதேச சபை தொடர்பான குறைநிரப்பு ஏற்பாடுகள்


| | |
---|---|---
183. | பிரதேச சபைக்கு எதிராக வழங்கப்படும் செலவுத் தொகைகளின் கொடுப்பனவு | 137
184. | கூட்டங்கள், வரி, நிதி என்பன பற்றிய விதிகள் .. .. | 138
185. | தவிசாளர் அகற்றப்படுதலும் பிரதேச சபை கலைக்கப்படுதலும் .. | 139
186. | துணைவிதிகளை மீறல் .. .. | 142

பிரிவு

பக்கம்

187. பிரதேச சபையானது தவறுகை முதலியன புரியும் போது அமைச்சருக்குள்ள தத்துவம் 142

188. 181 ஆம் பிரிவின் கீழான அறிக்கை பெறப்பட்டதன்மேல் எடுக்கப்பட வேண்டிய வழி வகைகள் பற்றி அமைச்சர் தீர்மானித்தல் 143

189. கடன்களைத் திரட்டுவதற்கான பணிப்புரை வழங்குதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம் 144

190. செலவினங்களை அத்தாட்சிப்படுத்துவதற்கான தத்துவம் .. 144

191. கடன்களை முற்பணமாக வழங்க உள்ளூர் ஆணையாளர்களுக்குள்ள தத்துவம் 144

192. பிரதேச சபையிடமிருந்து முதலையும், வட்டியையும் அறவிடுதல் .. 144

193. உள்ளூராட்சி ஆணையாளரின் தத்துவங்களை அல்லது கடமைகளை உதவி ஆணையாளருக்குக் கையளித்தல் 145

194. பிரதேச சபையொன்றின் எதேனும் புத்தகங்களை அல்லது ஆவணத்தைக் கேட்டுப் பரிசோதிப்பதற்கு, அமைச்சருக்குக்குள்ள தத்துவம் 145

195. கொள்கை பற்றி விதப்புரைகள் செய்வதற்கான தத்துவம் .. 145

196. அமைச்சரினதும் ஆணையாளரினதும் தத்துவம் .. .. 145

197. ஆணையாளருக்குள்ள மேலதிக தத்துவங்கள் .. .. 146

198. வீதிக்கு அல்லது பாதைக்குப் பெயரிடுதல் .. .. 146

## பாகம் VIII

### பொது

### விதிப்பனவுகளையும் செலவுகளையும் அறவிடுதல்

199. வேலைகளை நிறைவேற்றுதலிலும் செலவுகளை அறவிடுவதிலும் சொந்தக்காரரால் அல்லது இருப்பாட்சியாளரால் செய்யப்பட்ட தவறுகைமீது, பிரதேச சபைக்குள்ள தத்துவம் 147

200. அவரது வாடகையிலிருந்து விதிப்பனவுகளைக் கழிக்கக்கூடிய இருப்பாட்சியாளர் மீது விதிப்பனவுகளை அறவிடுவதற்கான தத்துவம் 147

201. வருமதியாக வேண்டியவாடகையின் தொகையிலும் பார்க்கக்கூடிய தொகைக்கு இருப்பாட்சியாளர்கள் பொறுப்பாதல் ஆகாது என்பது 148

202. சொந்தக்காரர் தவறுகையில் இருப்பாட்சியாளர் வேலைகளை நிறைவேற்றுதலும் வாடகையிலிருந்து செலவுகளைக் கழித்தலும் 148

203. இருப்பாட்சியாளர்களினால் தடுக்கப்படுதல் .. .. 149

204. சொந்தக்காரரோ இருப்பாட்சியாளரோ செலவுகளைச் செலுத்தாவிடின் பரிகாரம் .. 149

205. சேதஈடுகள், செலவு தொகைகள் முதலானவைகளைத் தீர்மானித்தலும், அறவிடுதலும் 149

206. சேதஈடுகளை அறவிடுதல் .. .. .. 150

207. தனியார் ஆதனத்தினை மேம்படுத்துவதனால் ஏற்பட்ட செலவுகளை அறவிடுதல் 150

### நட்டஈட்டுக் கொடுப்பனவு

208. பிரதேச சபையானது பிரதேச சபை நிதியத்திலிருந்து நட்ட ஈட்டினை வழங்கலாம் 150

209. நட்டஈட்டினைத் தீர்மானித்தலும் கொடுப்பனவு செய்தலும் .. 150

பிரிவு பக்கம்

நடவடிக்கைமுறையும் சட்டநடவடிக்கைகளும்

210. அறிவித்தல்களைச் சேர்ப்பித்தல் .. .. .. 151
211. அறிவித்தல்கள் செயலாளரினால் அல்லது அதற்கான அதிகாரம் அளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலரினால் கொடுக்கப்படலாம் அல்லது பெறப்படலாம் 151
212. நீதிவானால் விளங்கப்பட வேண்டிய தவறு .. .. 151
213. குற்றவழக்குத் தொடுத்தற்கான வரையறை .. .. 152
214. ஒரு மாத அறிவித்தல்வரை அல்லது வழக்குக் காரணத்திற்கு ஆறு மாதங்களுக்குப் பின்னர் பிரதேச சபைக்கெதிராக வழக்கெதுவும் தொடுக்கப்படுதலாகாது என்பது 152
215. பிரதேச சபையும் அதன் அலுவலர்களையும் பாதுகாத்தல் 153

அலுவலர்களின் தத்துவங்களும், பொறுப்புக்களும்

216. பொது அதிகாரங்களை அதன் அலுவலர்களுக்கு வழங்குவதற்குப் பிரதேச சபைக்குள்ள தத்துவம் 154
217. பிரதேச சபையின் அலுவல்களைத் தடைசெய்தற்கான தண்டனை 154
218. பிரதேச சபை அலுவலர்களினால் தத்துவமானது துர்ப்பிரயோகம் செய்யப்படுதற்கான தண்டம் 154
219. பிரதேச சபையின் அலுவலர்களும் சேவையாளர்களும் ஒப்பந்தங்களில் அக்கறை காட்டக் கூடாதென்பது 154
220. பிரதேச சபையின் அலுவலர்களும், சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாதல் வேண்டுமென்பது 155

நீக்கம், இடைக்கால ஒழுங்குகள், பல்வினமானவை

221. எழுத்திலான எதேனும் சட்டத்தில் ஒரு பட்டினசபை, கிராமசபை அல்லது உள்ளூரதிகாரசபை பற்றிய குறிப்பீட்டின்பயன் .. 155
222. நீக்கம் .. .. .. 156
223. ஏற்பாடு செய்யப்படாத விடயங்களைச் சீராக்குதல் .. .. 156
224. இடைக்கால ஏற்பாடு .. .. .. 156
225. நீக்கமும் நிலைமாறுகால ஏற்பாடும் .. .. 156
226. பொருள்கோடல் .. .. 157

முதலாம் அட்டவணை 159
இரண்டாம் அட்டவணை 159
மூன்றாம் அட்டவணை 160
நான்காம் அட்டவணை 161
ஐந்தாம் அட்டவணை 162
ஆறாம் அட்டவணை 162

# 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்

(1987 ஏப்பிறல் 16 ஆம் தேறி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

1486
ச.வ—.ஓ.——
1804

**உள்ளூர் மட்டத்தில் நிருவாக மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக முடிவுகளை எடுக்கும் நடைமுறையில் பயனுறும் வகையில் மக்கள் பங்குபற்றுவதற்குப் பெருமளவு வாய்ப்புக்களை ஏற்பாடு செய்யும் நோக்குடன் பிரதேச சபைகளைத் தாபிப்பதற்கும் ஏற்பாடு செய்வதற்கும் ; அத்தகைய சபைகளின் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் குறித்துரைப்பதற்கும்; அவற்றுடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான ஒரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது, 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் அதன் எல்லா அல்லது எவையேனும் ஏற்பாடுகள் தொடர்பாக கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று அல்லது தேதிகளில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும். சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

## பாகம் I

### பிரதேச சபையை அமைத்தல்

2. (1) மக்கள், உள்ளூராட்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளில் பயனுறும் வகையில் பங்குபற்றுவதனை இயலச்செய்யும் கருத்துடன், அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஏதேனும் இடப்பரப்பினைப் பிரதேச சபை இடப்பரப்பு ஒன்றாக வெளிப்படுத்தலாம் என்பதுடன் அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட இடப்பரப்பின் நிருவாக எல்லைகளை வரையறுத்தலும் வேண்டும். அவ்வாறு வெளிப்படுத்தப்படும் பிரதேச சபை ஒவ்வொன்றினதும் நிருவாக எல்லைகளானவை, இயலுமானவரையில், உதவி அரசாங்க அதிபர் பிரிவின் எல்லைகளுக்குள் அடங்குபவையான மாநகரசபைப் பிரதேசத்தில் அல்லது நகரசபைகள்கட்டளைச் சட்டத்தின் பொருளுக்குட்பட்ட ஒரு பட்டினத்தில் அடங்கியிருப்பதான எவையேனும் இடப்பரப்புகள் நீங்கலாக உதவி அரசாங்க அதிபர் பிரிவொன்றன் எல்லைகளுக்கு நேரொத்தனவாக இருத்தல் வேண்டும். அமைச்சரானவர், அதே கட்டளை மூலம் அல்லது பின்னரான கட்டளை ஒன்றன் மூலம், அத்தகைய பிரதேச சபை இடப்பரப்புக்குப் பிரதேச சபை ஒன்றினை அமைக்கலாம் என்பதுடன் அத்தகைய சபைக்குப் பெயர் ஒன்றினையும் குறித்தொதுக்கலாம். பிரதேச சபைகளை அமைத்தல்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான கட்டளை ஒன்றன் மூலம் அமைக்கப்பட்டதான பிரதேச சபை ஒவ்வொன்றும், இடையுறுவழியுரிமையும், பொது இலச்சினையொன்றும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றுதல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, ஆதனத்தைக்கொள்வதற்கும் வைத்திருப்பதற்கும் விற்பதற்கும் தத்துவம் கொண்டதாதலும் வேண்டும், அத்துடன் அத்தகைய பெயரில் அது வழக்குத் தொடரலாம்; அதற்கெதிராக வழக்குத் தொடரவும் படலாம்.

(3) பிரதேச சபையின் பொது இலச்சினையானது, அத்தகைய சபையினது செயலாளரின் கட்டுக்காவலில் இருத்தல் வேண்டும் என்பதுடன் சமூகமாயிருந்தனர் என்பதற்கத்தாட்சியாக அவர்களது பெயரை ஏதேனும் ஒப்பந்தத்தில் அல்லது வேறு சாதனத்தில் ஒப்பமிட வேண்டியவர்களான, அத்தகைய சபையின் தவிசாளர், அத்துடன் செயலாளர் என்போர், முன்னிலையிலேயேயல்லாது, பிரதேச சபையின் சார்பாக எத்தகையதுமான அத்தகைய ஒப்பந்தம் அல்லது வேறு சாதனம் எதிலும் பொறிக்கப்படலுமாகாது.

(4) ஒராம் உட்பிரிவின் கீழான கட்டளை ஒன்றன் மூலம் அமைக்கப்பட்டதான பிரதேச சபை ஒன்றன் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடம் ஒன்று இருக்கிறது என்ற காரணத்தினால் மாத்திரம் அல்லது அதன் உறுப்பினர் ஒருவரின் தெரிவில் ஏதேனும் குறைபாடு இருக்கின்றது என்ற காரணத்தினால் மாத்திரம் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

பிரதேச சபைகளின் பணிகள்.

3. ஒவ்வொரு பிரதேச சபை இடப்பரப்புக்குமென அமைக்கப்பட்ட பிரதேச சபையானது அத்தகைய இடப்பரப்புக்குள்ளான உள்ளூர் அதிகாரசபையாக இருத்தல் வேண்டும் என்பதுடன் பொதுமக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டுச் சேவைகள், பகிரங்கப் பொது வழிகள் என்பன தொடர்பான கருமங்கள் எல்லாவற்றினதும் ஒழுங்கு படுத்துகையும், கட்டுப்பாடும், நிருவாகமும் அத்துடன் மக்களின் சௌகர்யத்தையும், வசதியையும், சேமநலனையும் அத்தகைய இடப் பரப்பினுள் இருக்கும் வாழ்வசதிகள் எல்லாவற்றையும் பொதுவாகப் பாதுகாத்தலும் மேம்படுத்தலும் அப்பிரதேச சபைக்குப் பொறுப்பிக் கப்பட்டதாக இருத்தலும் வேண்டும்.

பிரதேச சபைகளின் உறுப்பினர்கள்.

4. இரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை ஒன்றன் மூலம் அமைக்கப்பட்ட ஒரு பிரதேச சபையானது, தவிசாளர் ஒருவரையும், துணைத் தவிசாளரையும், அத்தகைய பிரதேச சபையானது எந்தப் பிரதேச சபை இடப்பரப்புக்கென அமைக்கப்பட்டதோ அந்தப் பிரதேச சபை இடப்பரப்பின் விஸ்தீரணம், மக்கள் தொகை, அத்துடன் பொருளாதார அபிவிருத்தி மட்டம் என்பனவற்றைக் கருத்தில் கொண்டு, அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான, தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

உறுப்பினர்களின் பதவிக்காலம்.

5. (1) பொதுத் தேர்தல் ஒன்றில் தெரிவுசெய்யப்படும் பிரதேச சபை ஒன்றின் உறுப்பினர் ஒவ்வொருவரதும் பதவிக்காலம்—

(அ) முதலாவது பொதுத் தேர்தலின் விடயத்தில், 6 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரால் குறித்துரைக்கப்படும் தேதியிலிருந்து கணிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) முதலாவது பொதுத் தேர்தலுக்குப் பின்னர் வரும் பொதுத் தேர்தல் ஒன்றில் தெரிவு செய்யப்படும் உறுப்பினர் ஒருவரின் விடயத்தில், நேர்முன்னரான பிரதேச சபை உறுப்பினர்களது பதவிக்காலம் முடிவடைந்ததிலிருந்து கணிக்கப்படுதல் வேண்டும்,

அத்துடன் இறப்பதன் மூலம், பதவி துறப்பதன் மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலம் அத்தகைய உறுப்பினர் முன்னதாகவே பதவியை வறிதாக்கினாலொழிய, அப்பதவிக்காலம் நாற்பத்தெட்டு மாதங்களைக் கொண்ட ஒரு காலப்பகுதியாதல் வேண்டும்.

(2) அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம்—

(அ) பதவிக்காலம் முடிவுறும் தேதிக்குப் பதிலாக, அத்தகைய பதவிக்காலமானது அவ்வாண்டின் அல்லது அவ்வாண்டிற்கு நேர்முந்திய ஆண்டின் எந்த மாதத்தில் முடிவுறுகின்றதோ, அந்த மாதத்திற்கு முந்திய ஏதேனும் மாதத்தில் ஒரு நாளை நியமிப்பதன் மூலம் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பதவிக்காலத்தைச் சுருக்கலாம் ;

(ஆ) ஓராம் உட்பிரிவின் கீழ் அல்லது இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் பதவிக்காலமானது முடிவுறும் தேதிக்குப் பதிலாகப் பதவிக்காலமானது அவ்வாண்டில் அல்லது அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஆண்டினை அடுத்துவரும் ஆண்டில் எந்தநாளன்று முடிவுறுகின்றதோ, அந்த நாளுக்குப் பிந்திய ஏதேனும் மாதத்தில் ஒரு நாளை, நியமிப்பதன் மூலம் அத்தகைய காலத்தை நீடிக்கலாம். அத்துடன், அதன் பின்னர், கடைசிக் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய காலம் முடிவுறும் தேதிக்குப் பதிலாகப் பிந்திய தேதியொன்றை நியமிப்பதன் மூலம் காலத்துக்குக் காலம் அத்தகைய காலத்தை நீடிக்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பதவிக்காலம் நீடிக்கப்படும் காலப்பகுதி அல்லது காலத்துக்குக் காலம் அத்தகைய பதவிக்காலம் நீடிக்கப்படும் காலப்பகுதிகளின் கூட்டுமொத்தம் பன்னிரண்டு மாதங்களை விஞ்சுதல் ஆகாது.

(3) இறக்கின்றவரான, பதவி துறக்கின்றவரான அல்லது வேறு வகையில் பதவியை வறிதாக்குகின்றவரான பிரதேச சபை ஒன்றின் உறுப்பினர் ஒருவரின் இடத்திற்கு உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்படுமிடத்து, அவர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, அவருக்கு முன் பதவி வகித்தவரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

பிரதேச சபையின் பதவிக்காலந் தொடக்கமும் அத்தகைய பிரதேச சபையினை அமைக்கும் தேதியும்.

6. இச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட இருப்பதான பிரதேச சபை ஒவ்வொன்றினதும் பதவிக் காலமானது, அமைச்சரானவர், கசற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் நியமிக்கக் கூடியதான அத்தகைய தேதியில் தொடங்குதல் வேண்டும். அத்தகைய தேதியானது, இச்சட்டத்தின் எல்லா நோக்கங்களுக்காகவும் அத்தகைய பிரதேச சபை அமைக்கப்பட்ட தேதியாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பிரதேச சபையானது அத்தேதியில் அமைக்கப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

பதவியை வறிதாக்கல்.

7. முன்னரே கோரிப் பெற்றுக்கொள்ளப்பட்டதான பிரதேச சபையின் அனுமதியின்றி, மூன்று மாத காலப்பகுதியொன்றுக்கு பிரதேச சபையின் கூட்டங்களில் கலந்துகொள்ளத் தவறுகின்றவரான பிரதேச சபை ஒன்றன் உறுப்பினர் எவரும் அந்நிகழ்வு காரண மாகவே பதவியை வறிதாக்குதல் வேண்டும்.

தவிசாளரும், துணைத் தவிசாளரும்.

8. (1) பிரதேச சபை ஒன்றன் தவிசாளர், பிரதேச சபையின் பிரதான நிறைவேற்று அலுவலராதல் வேண்டும் என்பதுடன் இச் சட்டத்தின் மூலம் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத் தின் மூலம் பிரதேச சபையினால் செய்யப்படவேண்டியவையென அல்லது நிறைவேற்றப்படவேண்டியவையெனப் பணிக்கப்பட்ட அல்லது தத்துவமளிக்கப்பட்ட எல்லா நிறைவேற்றுச் செயல்களும், பொறுப்பு களும், சந்தர்ப்பத்திலிருந்து முரணாக கருத்துத் தோன்றினாலன்றி, தவிசாளரால் செய்யப்படலாம் அல்லது நிறைவேற்றப்படலாம்.

(2) தவிசாளர், எழுத்திலான கட்டளை மூலம், இச்சட்டத்தினால் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் தவிசாளருக்கு அளிக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட அல்லது உரித்தாக்கப்பட்ட தத்து வங்களுள், கடமைகளுள் அல்லது பணிகளுள் எவற்றையேனும் பிரதேச சபையின் துணைத்தவிசாளருக்கு அல்லது செயலாளருக்கு அல்லது வேறு எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலாம்.

(3) பிரதேச சபையின் துணைத் தவிசாளரால், அல்லது செய லாளரால் அல்லது எவரேனும் வேறு அலுவலரால், தவிசாளரின் கட்டளை மூலம் அவருக்குக் கையளிக்கப்பட்டதான ஏதேனும் தத்து வத்தை, கடமையினை அல்லது பணியினைப் பிரயோகித்தலானது, நிறைவேற்றுதலானது அல்லது புரிதலானது, அக் கட்டளையில் குறித் துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கும் வரை யறைகளுக்கும் அமைந்ததாகவும் அத்தகைய நோக்கத்திற்கு அல்லது நோக்கங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் ஏதேனும் அத்தகைய கையளிப்பானது எந்நேரத்திலாயி னும் தவிசாளரின் கட்டளை மூலம் வேறுபடுத்தப்படலாம் அல்லது நீக்கஞ் செய்யப்படலாம்.

(4) சுகவீனம் காரணமாக அல்லது வேறு தவிர்க்க முடியாத காரணத்துக்காக தவிசாளர் வருகை தராத காலப்பகுதியின்போது, துணைத் தவிசாளர், தவிசாளரைப்போன்று அதே தத்துவங்களைப் பிரயோகிக்கலாம் என்பதுடன் அதே கடமைகளைப் புரியலாம்.

செயலாளரை நியமித்தலும், அவரது தத்துவங்களும் கடமைகளும்.

9. (1) பிரதேச சபையின் செயலாளராக இருப்பதற்கென அல்லது செயற்படுவதற்கென தகுதிவாய்ந்தவரும் பொருத்தமானவருமான ஆளொருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) பிரதேச சபை ஒன்றன் செயலாளர், பிரதேச சபையின் பிரதான நிருவாக அலுவலராக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவர், இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதான எவையே னும் விதிகளினால் அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ளதான வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அவருக்கு வழங்கப்பட்டவை யான அல்லது அவர்மீது சுமத்தப்பட்டவையான அத்தகைய தத்துவங் களை, கடமைகளை அத்துடன் பணிகளை பிரயோகித்தலும், புரிதலும், அத்துடன் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) தவிசாளரும் துணைத்தவிசாளரும் பதவி வகிக்காதொழியும் காரணத்தினால் பிரதேச சபை ஒன்று அதன் பணிகளை நிறைவேற்ற முடியாமலிருக்குமிடத்து, செயலாளர், அந்தப் பதவிகள் தொடர்பாக வெற்றிடங்கள் ஏற்பட்ட காலத்திற்கும் உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க அந்த வெற்றிடங்களை நிரப்பும் காலத்திற்கும் இடைப்பட்டதான ஏதேனும் காலப் பகுதியின்போது, இச்சட்டத்தினால் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினால் பிரதேச சபைக்கு, தவிசாளருக்கு அல்லது துணைத் தவிசாளருக்கு உரித்தாக்கப்பட்டவையான, அல்லது வழங்கப் பட்டவையான அல்லது சுமத்தப்பட்டவையான எல்லா உரிமைகளையும், சிறப்புரிமைகளையும், தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் கொண்டிருத்தல், பிரயோகித்தல், புரிதல், அத்துடன் நிறைவேற்றுதல் வேண்டும்.

### கூட்டங்கள்

10. தவிசாளர் அல்லது அவர் வருகை தராதபோது துணைத் தவிசாளர், பிரதேச சபையின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமைதாங்குதல் வேண்டும் என்பதுடன் தவிசாளர், துணைத்தவிசாளர் ஆகிய இருவரும் வருகை தராதபோது, சமூகமளித்துள்ள உறுப்பினர்கள் அவர்களுள் ஒருவரை கூட்டத்தில் தலைமை தாங்குவதற்கெனத் தெரிவு செய்தல் வேண்டும். *பிரதேச சபைக் கூட்டங்களில் தவிசாளர் அல்லது துணைத் தவிசாளர் தலைமை வகித்தல்.*

11. (1) பிரதேச சபை ஒன்றன் சாதாரண கூட்டங்கள் இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படும் எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் மூலம் ஆக்கப் பட்ட அல்லது ஆக்கப்பட்டதாகக் கருதப்படும் துணைவிதிகளினால் அல்லது விதிகளினால் நிர்ணயிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதிகளில் அல்லது அத்தகைய கால இடைவெளிகளில் அலுவல்களைக் கையாளுவதற்காக நடாத்தப்படுதல் வேண்டும். *கூட்டங்கள்.*

(2) பிரதேச சபையின் சிறப்புக் கூட்டமொன்று கூட்டுவது விரும்பத்தக்கதெனத் தவிசாளர் கருதும் போதிலெல்லாம், அவரால் கூட்டப்படலாம்; அத்துடன் பிரதேச சபையின் சாதாரண கூட்டங்களுக்கு விதித்துரைக்கப்பட்ட கூட்ட நடப்பெண்ணாக அமையும் உறுப்பினர்களின் தொகைக்குக் குறையாத உறுப்பினர்களினால் கையொப்பமிடப்பட்ட எழுத்திலான தேவைப்படுத்தலொன்று சமர்ப்பிக்கப்படும் போதிலெல்லாம் தவிசாளரால் கூட்டப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணக்கமாகக் கூட்டப்படும் சிறப்புக் கூட்டம், தவிசாளரினால் தேவைப்படுத்துகை பெறப்பட்ட எழு நாட்களுக்குள்ளாகக் கூட்டப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் பிரதேச சபையின் தவிசாளர், அவருக்குச் சமர்ப் பிக்கப்பட்ட ஏதேனும் தேவைப்படுத்துகையைப் பெற்றதிலிருந்து எழு நாட்களுக்குள்ளாகச் சிறப்புக் கூட்டமொன்றைக் கூட்ட மறுத்தால் அல்லது வேண்டுமென்று அசட்டை செய்தால், அதன்பின்னர் எந் நேரத்திலும் சிறப்புக் கூட்டமொன்றைக் கூட்டுவது உதவி ஆணையாளருக்குச் சட்டபூர்வமானதாதல் வேண்டுமெனபதுடன் அக் கூட்டத்தில் அவர் தலைமை தாங்குதலும் அல்லது பகிரங்க அலுவலர் ஒருவரைத் தலைமை தாங்கப் பிரதியீடுசெய்வதும் அவருக்குச் சட்டபூர்வமான தாதலும் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழான சிறப்புக் கூட்டம் பற்றியதும் அக்கூட்டத்தில் கையாளப்படவுள்ள அலுவல் பற்றியதுமான அறிவித்தல், அக் கூட்டத்துக்கென நியமிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் இரு நாட்களுக்குக் குறையாமல், பிரதேச சபை உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படுதல் அல்லது அவரது வதிவிடத்தில் விட்டுவைக்கப்படுதல் வேண்டும்.

பிரதேச சபை குழுக்களை நியமித்தல்.

12. (1) பிரதேச சபை ஒன்று காலத்திற்குக் காலம், ஒன்றில் சபை உறுப்பினர்களைக் கொண்டுள்ள அல்லது பகுதியளவில் சபை உறுப்பினர்களையும் பகுதியளவில் பிரதேச சபை இடப்பரப்பின் வேறு குடியிருப்பாளர்களையும் அத்தகைய பிரதேச சபை இடப்பரப்புக்குள்ளாகத் தாபிக்கப்பட்ட கிராமோதய சபைகளின் தவிசாளர்களையும் கொண்டுள்ள குழுக்களை, சபையின் தத்துவங்களுள், கடமைகளுள் அத்துடன் பணிகளுள் எது தொடர்பாகவேனும் அல்லது சபையின் பரிசீலனையின் கீழுள்ள கருமம் எது தொடர்பாகவேனும் சபைக்கு ஆலோசனை கூறும் நோக்கத்திற்கென நியமிக்கலாம், அத்துடன், காலத்திற்குக் காலம், அது தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைவாக, ஏதேனும் கடனைத் திரட்டுவதற்கு ஏதேனும் வீதவரியை விதிப்பதற்கு அல்லது ஏதேனும் வரியினைச் சுமத்துவதற்கு உள்ள தத்துவம் தவிர்ந்த அதன் தத்துவங்களுள் எதனையும், அத்துடன் கடமைகளுள் எதனையும் கையளிக்கலாம்.

(2) பின்வரும் விடயங்களுள் ஒவ்வொன்று தொடர்பிலும் பிரதேச சபைக்கு ஆலோசனையளிப்பதற்கென (1) ஆம் உட்பிரிவின் கீழ் தனியான குழு ஒன்று நியமிக்கப்படுதல் வேண்டும் :—

(அ) நிதி மற்றும் கொள்கை உருவாக்கம் ;

(ஆ) வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி ;

(இ) தொழினுட்பச் சேவைகள் ; அத்துடன்

(ஈ) சுற்றாடலும் வாழ்வசதிகளும்;

மேற்போந்தவற்றுக்கு அமைவாக (1) ஆம் உட்பிரிவின் கீழ் எத்தொகையினவான குழுக்களும் நியமிக்கப்படலாம்.

கூட்ட நடப்பெண்.

13. பிரதேச சபையின் கூட்டம் எதற்குமென கூட்ட நடப்பெண் அக் கூட்டத் தேதியில் பதவி வகிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றிலொன்றாதல் வேண்டும். அத்தகைய எண்ணிக்கையின் மூன்றிலொன்று முழுவெண்ணாகவும் பின்னமாகவும் இருக்குமிடத்து, அந்த முழுவெண்ணுக்கும் பின்னத்திற்கும் நேரே கூடியதான முழுவெண், இப்பிரிவின் நோக்கங்களுக்காக மூன்றிலொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

பிரதேச சபையின் தத்துவங்கள் பெரும்பான்மைக்கு உரித்தாக்கப்பட்டிருத்தல்.

14. (1) பிரதேச சபையொன்றினால் முடிவுசெய்யப்படவேண்டுமென இச்சட்டத்தினால் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கருமங்களும் அல்லது விடயங்களும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடாத்தப்படும் பிரதேச சபையின் கூட்டம் எதிலும் சமுகமாயிருக்கும் உறுப்பினர்களுள் பெரும்பான்மையினரால் முடிவுசெய்யப்படுதல் வேண்டும்.

**(2)** ஏதேனும் கூட்டத்தில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்களின் வாக்குகள் எவ்விடயத்தின் மீதேனும் சரிசமமாகப் பிரிந்திருந்தால், தவிசாளர், துணைத் தவிசாளர், அல்லது கூட்டத்திறகுத் தலைமை தாங்கும் வேறு உறுப்பினர், உறுப்பினர் என்ற வகையில் கொண்டுள்ள வாக்குடன் மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் உடையவராக இருத்தல் வேண்டும்.

**கூட்டக் குறிப்புகள்.**

**15.** பிரதேச சபை ஒன்றன் எல்லா நடவடிக்கைகளும், முடிபுகளும், கட்டளைகளும் அத்துடன் செயல்களும் கூட்ட அறிக்கைப் புத்தகம் ஒன்றில் பதியப்படுதல் வேண்டும் என்பதுடன் பிரதேச சபையின் அடுத்துவரும் கூட்டத்தில் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய திருத்தங்களுடன் அவற்றை உறுதிப்படுத்தியதன் மேல், தவிசாளரால் கையொப்பமிடப்படுதலும் வேண்டும் ; அத்துடன் அவ்வாறு பதிவு செய்யப்பட்டு ஒப்பமிடப்பட்டதான தவிசாளரால் சான்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் பதிவின் பிரதியொன்று, இலங்கையிலுள்ள நீதிமன்றம் அல்லது நியாயசபை எதிலும் சான்றாக அனுமதிக்கப் படற்பாலதாதல் வேண்டும்.

## பாகம் II

### பிரதேச சபைகளின் அந்தஸ்தும் தத்துவங்களும் கடமைகளும்

**பிரதேச சபை ஒன்றிற்கு அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களையும் சொத்துக்கள் பொறுப்புக்கள் என்பனவற்றையும் உரித்தாக்கல்.**

**16.** (1) அபிவிருத்திச் சபை ஒன்றுக்கு உரித்தாக்கப்பட்டனவும் பிரதேச இடப்பரப்பில் அமைந்திருக்கின்றனவும் பிரதேச சபையில் பயன்படுத்தப்படுவனவுமான எல்லா அசைவுள்ள, அசைவற்ற ஆதனங்களும் அமைச்சரால் அல்லது அதன் சார்பில் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரால் தீர்மானிக்கப் படக்கூடியவாறாக 1 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்படும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று அத்தகைய பிரதேச சபை இடப்பரப்புக்கென அமைக்கப்பட்ட பிரதேச சபைக்கு, அத்தகைய தீர்மானத் தேதியிலிருந்து உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனமானது (1) ஆம் உட்பிரிவு ஏற்புடைத்தாவதான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனமா என்பது பற்றிய பிணக்கு எதுவும், அமைச்சரினது அமைச்சுச் செயலாளருக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அதன்மீது அவரது முடிபானது இறுதியானதாதலும் வேண்டும்.

(3) பிரதேச சபை இடப்பரப்பொன்று தொடர்பாக அதன் உள்ளூராட்சித் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அபிவிருத்திச் சபையொன்றினால் கொள்ளப்பட்ட அல்லது உறப்பட்ட எல்லாச் சொத்துக்களும் பொறுப்புக்களும், 1 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து அந்தப் பிரதேச சபை இடப்பரப்புக்கென அமைக்கப்பட்டதான பிரதேச சபைக்குக் கைமாற்றப்பட்டு உரித்தாக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

(4) பிரதேச சபை இடப்பரப்பொன்றில் ஏதேனும் காணி அல்லது பொருள் தொடர்பாக பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது கிராம சபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் அல்லது உள்ளூராட்சி தொடர்பிலான வேறேதேனும் சட்டத்தின் கீழ் அபிவிருத்திச் சபையொன்றினால் அறவிடப்பட்டு 1 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட தேதியன்று செலுத்தப்படாது எஞ்சியுள்ள எல்லா வீத வரிகளும், வரிகளும், தீர்வைகளும், கட்டணங்களும் அல்லது வேறு இறுப்பனவுகளும் அத் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் அப்பிரதேச சபை இடப்பரப்புக்கென அமைக்கப்பட்ட பிரதேச சபைக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

அத்தகைய காணியின் நிருவாகம் முதலியவற்றை உரித்தாக்கும் முறை.

17. (1) பதினாறும் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் ஆதனத்தைக் கையளிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களினாலும் பிரதேச சபையின் சார்பில் அத்தகைய ஆதனத்தைப் பெறுவதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட பிரதேச சபையின் அலுவலரினாலும், ஒப்பமிடப்பட்ட உரித்தாக்கற் கட்டளை, சான்றிதழ் அல்லது வேறு பதிவேடு அத்தகைய பிரதேச சபைக்கு அத்தகைய ஆதனத்தையும் அத்தகைய ஆதனத்திலுள்ள எல்லா உரிமைகளையும், உரித்தையும், அக்கறையையும் உரித்தாக்குவதற்குப் போதுமானதாதல் வேண்டுமென்பதுடன் எல்லா நேரங்களிலும் போதுமானதாக இருந்திருப்பதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) பதினாறும் பிரிவில் அல்லது இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் உள்ளது எதுவும்—

(i) ஏதேனும் அத்தகைய ஆதனத்துக்கு அரசுக்குள்ள ஏதேனும் உரிமையை அல்லது உரித்தைப் பாதிப்பதாகவோ பங்கப்படுத்துவதாகவோ அல்லது பகிரங்க நோக்கங்களுக்காக அத்தகைய ஆதனத்தை எந்நேரத்திலும் மீளப்பெறுவதற்கு அல்லது கையளிப்பதற்கு அரசுக்குள்ள உரிமையைப் பாதிப்பதாகவோ பங்கப்படுத்துவதாகவோ கருதப்படுதலாகாது ; அல்லது

(ii) அரசின் சார்பில் அதற்குக் காணிகள் உரித்தாக்கப்பட்டுள்ள ஏதேனும் இராணுவ அல்லது வேறு அதிகார சபை ஏதேனும் ஆதனத்தில் அல்லது அதன் ஏதேனும் பாகத்தில் கொண்டுள்ள அல்லது கொண்டிருக்கக்கூடிய ஏதேனும் உரிமையை, உரித்தை அல்லது அக்கறையைப் பாதிப்பதாகவோ பங்கப்படுத்துவதாகவோ கருதப்படுதலாகாது ; அல்லது

(iii) அத்தகைய ஆதனம் தொடர்பிலான மேற்சொல்லிய உரித்தாக்கற் கட்டளையில், சான்றிதழில் அல்லது வேறு பதிவேட்டில் தரப்பட்ட நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கவன்றி வேறுவிதமாக, ஏதேனும் ஆதனத்தைப் பிரதேச சபை விற்க அல்லது வேறு வகையாக கையுதிர்க்கத் தத்துவமளிப்பதாகக் கருதப்படுதலாகாது.

(3) பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட ஆதனங்கள் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக நிர்வகிக்கப்படுதலும் அதன் வருவாய் பிரயோகிக்கப்படுதலும் பயன்படுத்தப்படுதலும் வேண்டும்.

18. இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, பின்வரும் வகுப்புக்களைச் சேர்ந்த ஆதனங்கள் ஒவ்வொரு பிரதேச சபைக்கும் மேலும் உரித்தாக்கப்படுதல் வேண்டும் :— *பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட ஏனைய ஆதனம்.*

(அ) அத்தகைய ஆதனம், எதுவும் பிரதேச சபைக்கு கைமாற்றப் பட்டிருக்கக் கூடிய ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்பின் நியதிகளுக்கு அல்லது ஏதேனும் சாதனத்தின் நிபந்தனை களுக்கு எப்போதும் அமைவாக, பிரதேச சபையினால் கொள்ளப்பட்ட அல்லது வேறு விதமாகக் கைமாற்றப்பட்ட எல்லாப் பகிரங்கப் பூங்காக்களும், தோட்டங்களும், திறந்த வெளியிடங்களும் அவற்றின் கண் உள்ள சகல கட்டமைப்பு களும் ஏனைய அமைப்புக்களும், அவற்றில் காணப்படும் உபகரணங்களும் ;

(ஆ) வேறு ஏதேனும் சட்டவாக்கத்தின் கீழ் வேறு ஏதேனும் அதிகாரசபைக்கு உரித்தாக்கப்பட்ட அத்தகைய வீதிகள் தெருக்கள், கால்வாய்கள், பாலங்கள் தவிர்ந்த எல்லாப் பகிரங்க வீதிகளும், தெருக்களும், கால்வாய்களும், பாலங் களும், அவற்றின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் காணிகளும், எல்லா நடைபாதைகளும், கற்களும் அவற்றின் வேறு பொருள்களும், அத்துடன் அவற்றுக்கென ஏற்பாடு செய்யப்பட்ட எல்லா நிர்மாணிப்புகளும், பொருள்களும், கருவிகளும், ஏனைய சார்பொருள்களும் ;

(இ) மேற்சொல்லிய ஏதேனும் அத்தகைய நம்பிக்கைப் பொறுப் புக்கு அல்லது நிபந்தனைக்கு எப்போதும் அமைவாக, எல்லாப் பகிரங்கச் சந்தைகளும், இச் சட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படக்கூடிய, கட்டியமைக்கப்படக்கூடிய அல்லது ஏற்பாடு செய்யப்படக்கூடிய அல்லது நீக்கஞ்செய்யப்பட்ட

ஏதேனும் சட்டவாக்கத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருக்கக் கூடிய, கட்டியமைக்கப்பட்டிருக்கக்கூடிய அல்லது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கக்கூடிய அல்லது வேறுவகையாகப் பிரதேச சபைக்கு மாற்றப்படக்கூடிய அல்லது மாற்றப்பட்டிருக்கக்கூடிய, பொதுமக்கள் நலனுக்கான அல்லது வசதிக்கான எல்லா வேலைகளும், கட்டமைப்புகளும் அல்லது அமைப்புகளும், எல்லா அமைவிடங்களும், சார்பிடங்களும், பொருள்களும், தளபாடமும் உபகரணமும் ;

(ஈ) மேற்சொல்லிய ஏதேனும் அத்தகைய நம்பிக்கைப் பொறுப்புக்கு அல்லது நிபந்தனைகளுக்கு எப்போதும் அமைவாக, பிரதேச சபையின், அல்லது வேறுவகையாக பிரதேச சபைக்குக் கைமாற்றப்படக்கூடிய நிதிகளிலிருந்து முழுமையாக அல்லது பகுதியளவில் கட்டியமைக்கப்பட்ட அல்லது ஏற்பாடு செய்யப்பட்ட மற்றெல்லாப் பகிரங்கக் கட்டிடங்களும் அதன் எல்லா அமைவிடங்களும் சார்பிடங்களும், பொருள்களும், தளபாடமும் உபகரணமும் ;

(உ) பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட வீதிகளிலும், தெருக்களிலும், பகிரங்க இடங்களிலும், அவற்றுக்கண்மையிலும் அல்லது அவற்றுக்குச் சொந்தமாகவும் இருக்கும் சகல விளக்குகள், விளக்குக்கம்பிகள், விளக்குக் கம்பங்கள், கதவடைப்புகள், அணைக்கட்டுகள், குழாய்கள், கம்பங்கள், சங்கிலிகள், துண்டங்கள், தண்டவாளங்கள் என்பவற்றிலும், அவற்றைச் சார்ந்த எல்லாப் பொருள்களிலும், தளபாடங்களிலும் அதற்குச் சொந்தமான பொருள்களிலும் உள்ள சொத்துரிமை, ஆயின், இவை வேறுவிதமாகச் சபையுடனான ஒப்பந்தத்தின் மூலம் ஒழுங்குபடுத்தப்படும் அல்லது தனியார் ஆதனம் என அல்லது தனியார் உரிமைகளுக்கு அமைவானதென வேறு வகையாகக் காட்டப்படும் அளவுக்குத்தவிர.

பிரதேச சபையின் தத்துவங்கள்.

19. (1) இச்சட்டத்தின் கீழ் அதன் கடமைகளைப் புரியும் நோக்கத்துக்காக பிரதேச சபை (சிறப்பாக அதற்கு உரித்தாக்கப்பட்ட வேறு எவையேனும் தத்துவங்களுக்குப் பங்கமின்றி) இச்சட்டத்தினதும் இதன் கீழாக்கப்படும் எவையேனும் விதிகளினதும் 1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, பின்வரும் தத்துவங்களை உடையதாதல் வேண்டும்:—

(i) பதவி உருவாக்கல் தொடர்பாகவும் சம்பளத்தைக் குறித் தொதுக்குதல் தொடர்பாகவும் ஆணையாளரின் எழுத்தி லான முன்னங்கீகாரத்துக்கு அமைவாக, அது அவசியமானதெனக் கருதும் அத்தகைய எல்லாப் பதவி களையும் அல்லது உத்தியோகங்களையும், உருவாக்குதலும், பிரதேச சபை பொருத்தமானதெனக் கருதும் அத்தகைய சம்பளத்தை, படியை அல்லது வேதனத்தை ஏதேனும் அத்தகைய பதவிக்கு அல்லது உத்தியோகத்துக்குக் குறித் தொதுக்கலும் ;

(ii) பிரதேச சபைகளின் சேவையிலுள்ள ஏதேனும் பதவிக்கு அல்லது உத்தியோகத்துக்கு நியமனங்களைச் செய்தல் ;

(iii) பிரதேச சபையின் எவரேனும் அலுவலரை அல்லது சேவையாளரை அகற்றுதல் ;

(iv) பிரதேச சபையின் சேவையிலுள்ள ஏதேனும் பதவியை அல்லது உத்தியோகத்தை நீக்கஞ்செய்தல் ;

(v) சேவையிலிருந்து இளைப்பாறுவதன் மேல் பிரதேச சபையின் அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் ஓய்வூதியங் கள் வழங்குதல் ;

(vi) பிரதேச சபையினதும் ஏதேனும் வேலையைக் கூட்டாக நிறைவேற்றுவதற்காக அல்லது எவரேனும் அலுவலரை அல்லது சேவையாளரை தொழிலுக்கமர்த்தி ஊதியமளிப்பதற்காக வேறு ஏதேனும் பிரதேச சபையு டன் அல்லது வேறு உள்ளூர் அதிகாரசபையுடன் ஏதேனும் உடன்பாட்டொழுங்கைச் செய்துகொள்ளுதல் ;

(vii) பிரதேச சபை நிதியத்தின் ஏதேனும் பாகத்தை, மகப் பேற்று மற்றும் சிறுவர் நலனோம்பு சேவையின் மீதும், சுகாதாரக் கல்வி, ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பரா மரித்தல் அத்துடன் பிரதேச சபை வீடமைப்புத் திட்டங் களினால் தாபிக்கப்பட்ட எவையேனும் மகப்பேற்றுச் சேவையின் நோக்கத்துக்காக மருத்துவிச்சிமாருக்குப் பயிற்சி அளிப்பதற்கும், மழைவீழ்ச்சி, வெள்ளப்பெருக்கு, புயலபாயம், தீவிபத்து, பூமிநடுக்கம், பஞ்சம் அல்லது கொள்ளைநோய் காரணமாக விளைந்த இடுக்கணுக்கு நிவா ரணமளிப்பதற்கான அத்தகைய நன்கொடைகளுக்கும் அல்லது அத்தகைய வழிவகைகளுக்கும் அல்லது அமைச் சரினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு நோக்கத்துக்காகவும் செலவிடுதல் ;

(viii) ஏதேனும் காணியை அல்லது கட்டிடத்தைக் கொள்வனவு செய்தல் அல்லது குத்தகைக்கு எடுத்தல் ;

(ix) எந்த இடப்பரப்புக்காக அத்தகைய பிரதேச சபை அமைக்கப் பட்டதோ அந்த இடப்பரப்பில் இருக்கும் மக்களுக்காக அல்லது அம்மக்களின் ஏதேனும் பிரிவினருக்காக

அல்லது பிரதேச சபையினால் நிருவகிக்கப்படும் ஏதேனும் பகிரங்க சேவையின் நோக்கத்துக்காக நம்பிக்கைப் பொறுப்பாக ஆதனத்தைப் பெறுதலும் வைத்திருத் தலும், அத்துடன் ஏதேனும் பகிரங்க நோக்கத்துக்காக நம்பிக்கைப் பொறுப்பாளராகச் செயலாற்றுதல் ;

(x) அமைச்சரின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடன், பிரதேச சபைக்குச் சொந்தமான அல்லது 16 ஆம் பிரிவின் பயனாகவல்லாது வேறுவகையாக அதற்குரித்தாக்கப்பட்ட ஏதேனும் காணியை அல்லது கட்டிடத்தை, அக்காணி அல்லது கட்டிடம் பிரதேச சபைக்கு எச்சாதனத்தின் மூலம் கைமாற்றப்பட்டதோ அச்சாதனத்தின் நியதி, நிபந் தனைகளுக்கமைவாக விற்றல் அல்லது கொடுத்து மாற்றுதல் ;

(xi) பதினாறும் பிரிவின் அல்லது 18 ஆம் பிரிவின் பயனைக் கொண்டு பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டதும், பகி ரங்க நோக்கமொன்றுக்குத் தேவைப்படாததுமான ஏதேனும் காணியை அல்லது, கட்டிடத்தை அக்காணி அல்லது கட்டிடம் பிரதேச சபைக்கு எச்சாதனத்தின் மூலம் கைமாற்றப்பட்டதோ அல்லது உரித்தாக்கப்பட்டதோ அச்சாதனத்தின் நியதி, நிபந்தனைகளுக்கமைவாக, அமைச்சரின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடன் வாட கைக்கு அல்லது குத்தகைக்கு விடுதல் ;

(xii) பதினாறும் பிரிவின் அல்லது 18 ஆம் பிரிவின் பயனாக வல்லாத வேறுவகையாகப் பிரதேச சபைக்குச் சொந்த மான அல்லது பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட ஏதே னும் காணியை அல்லது கட்டிடத்தை, அக்காணி அல்லது கட்டிடம் பிரதேச சபைக்கு எச்சாதனத்தின் மூலம் கைமாற்றப்பட்டதோ அல்லது உரித்தாக்கப்பட்டதோ, அச் சாதனத்தின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமை வாக, வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடுதல் :

ஆயின், அத்தகைய ஏதேனும் காணியின் அல்லது கட்டிடத்தின் மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப் பகுதிக்கான குத்தகை எதுவும் அமைச்சரின் எழுத்தி லான முன்னங்கீகாரமில்லாமல் நிறைவேற்றப்படுதல் ஆகாது.

(xiii) செய்யப்படவேண்டிய ஏதேனும் வேலைக்காக, ஆற்றப்பட வேண்டிய சேவைக்காக அல்லது வழங்கப்பட வேண்டிய பண்டங்களுக்காக அல்லது பொருள்களுக்காக எவரேனும் ஆளுடன் ஏதேனும் ஒப்பந்தத்தைச் செய்து கொள் ளுதல் ;

(xiv) பிரதேச சபை நிதியத்தின் ஏதேனும் பாகத்தை கிராம வேலைகளை நிருமாணிப்பதிலும், மாற்றுவதிலும், சீர் திருத்துவதிலும் அல்லது பேணுவதிலும் ; அத்துடன் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது சபையினால் கொள்ளப்பட்ட அல்லது வேறுவகையாக அதற்குக் கைமாற்றப்பட்ட ஏதேனும் ஆதனத்தை நிருவகிக்கும்

நோக்கத்துக்காக அல்லது இச்சட்டத்தின் அல்லது இதன் கீழ் ஆக்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்டதாகக் கருதப்படும் ஏதேனும் துணைவிதியின் ஏற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்காகவும் செலவிடுதல் ;

(xv) படகுச் சேவைகளைத் தாபித்தல், பிரதேச சபையினால் தாபிக்கப்பட்ட அல்லது பேணப்படும் ஏதேனும் படகுச் சேவையில் ஆயங்களை விதித்தல், அறவிடுதல் அல்லது ஆயங்களைச் சேகரித்தற்கான உரிமையைக் குத்தகைக்கு விடல், அத்துடன் அத்தகைய படகுச் சேவையின் பாதுகாப்புக்காக அதன் சார்பில் ஆக்கப்படும் துணைவிதிகள் மூலம் தனியார் படகுச் சேவைகளைத் தடைசெய்தல் அல்லது மட்டுப்படுத்தல் ;

(xvi) ஏதேனும் பிரதேச சபையின் எல்லைகளுக்குள்ளாக இருக்கும் ஏதேனும் இடத்துக்கும் வேறொரு பிரதேச சபையின் எல்லைகளுக்குள்ளாக இருக்கும் அல்லது வேறு ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் நிருவாக எல்லைகளுக்குள்ளாக இருக்கும் ஏதேனும் இடத்துக்கும் இடையே தாபிக்கப்பட்ட அல்லது பேணப்பட்ட படகுச் சேவையொன்றன் விடயத்தில், விடயத்துக்கேற்றுற்போல பிரதேச சபையுடன் அல்லது அத்தகைய உள்ளூர் அதிகாரசபையுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை மூலம் நிர்ணயிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் அல்லது விகிதசமத்தில், அத்தகைய ஏதேனும் படகுச் சேவை தொடர்பில் விதிக்கப்படும் அல்லது அறவிடப்படும் ஆயங்களைப் பகிர்ந்தளித்தல் ; அத்துடன் அத்தகைய படகுச் சேவை தொடர்பாக கிராம இடப்பரப்பு எல்லைகளுக்கப்பால் கொண்டு நடாத்தப்படவேண்டிய நிர்மாணிப்பு அல்லது பராமரிப்பு வேலை எதற்கும் பிரதேச சபைகளின் சேகரிப்புப் பணத்தின் எப்பாகத்தையும் செலவிடுதல் ;

(xvii) கமத்தொழிலிலும், வீட்டு விலங்குகளை வளர்ப்பதிலும் ஆராய்ச்சிகள் நடாத்துவதற்கும் பரிசோதனைப் பண்ணைகளைப் பேணுவதற்கும், அந்நோக்கங்களுக்காக ஆய்வுகள் செய்வதற்கும் பிரதேச சபை நிதியத்தின் ஏதேனும் பாகத்தைச் செலவிடுதல் ;

(xviii) சமயச்சடங்குகள், விழாக்கள் என்பனவற்றை ஒழுங்கு செய்தற்கான செலவுகளுக்காக உதவுதொகைகளைச் செய்தல், தர்மபாடசாலைகள், சாசனக்காப்பு மண்டபம் ஆகியனவற்றைப் பேணுதல், கலாச்சார நிலையங்களைத் தாபித்தல், இலக்கிய கலாச்சார விழாக்களை ஒழுங்கு செய்தல், இலக்கிய கலாச்சார பெறுமதியுடைய புத்தகங்களை வெளியிடுதல், கலைஞர்கள், நூலாசிரியர்கள் அத்துடன் கைப்பணியாளர் ஆகியோருக்கு பரிசுகள் வழங்குதல் உட்பட்ட சமய அத்துடன் கலாச்சார மேம்படுத்துகையில் பிரதேச சபையின் நிதியத்தின் எப்பாகத்தினையேனும் செலவுசெய்தல்;

**(xix)** (அ) கட்டடங்கள், தளபாடங்கள், விளையாட்டு மைதானங்கள், விடுதிகள், ஆசிரியர்களுக்கான தங்குமனைகள், விளையாட்டுப் பொருள்கள், நூல்நிலைய வசதிகள் போன்ற கல்வி வசதிகளைப் பிரதேச சபை இடப்பரப்பில் ஏற்பாடு செய்வதற்கு ஒரு திட்டத்தினைத் தயார் செய்து தோதான அதிகாரிக்குச் சமர்ப்பித்தல் ;

(ஆ) பிரதேச சபை இடப்பரப்பில் உள்ள பாடசாலைகளைத் திறத்தல், மூடுதல், ஒன்றிணைத்தல், பெயர் சூட்டல், தரம் உயர்த்தல் என்பன பற்றித் தோதான அதிகாரிக்கு விதப்புரை செய்தல்;

**(xx)** பிரதேச சபை இடப்பரபிலுள்ள பொதுமக்களுக்கு வேலைவாய்ப்புத் திட்டங்களை ஒழுங்கு செய்தல்;

**(xxi)** எந்த அபிவிருத்திச் சபையின் நிருவாக எல்லைகளுக்குள்ளாக பிரதேச சபை இடப்பரப்பு அமைந்துள்ளதோ அந்த அபிவிருத்திச் சபையால் பிரதேச சபைக்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் திட்டத்தை அல்லது வேலையை நடைமுறைப்படுத்தல்;

**(xxii)** பிரதேச சபை நிதியத்தின் எப்பாகத்தினையேனும் கிராமியப் பெண்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் தேர்ந்தெடுத்த கிராமங்களின் ஒருங்கிணைந்த அபிவிருத்தியிலும் சமூக அபிவிருத்தித் திட்டங்களிலும் கிராம அபிவிருத்திக் கருத்திட்டங்களும், கிராமோதய சபைகளுக்கும் கிராமோதய சபைகளில் பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதற்குத் தகைமையுள்ள கிராம அபிவிருத்தி ஒழுங்கமைப்புக்களுக்கும் மானியக்கொடைகளைச் செய்வதிலும் செலவிடுதல் ;

**(xxiii)** பிரதேச சபை நிதியத்தின் எப்பாகத்தினையேனும், ஏழை மக்களுக்கு நிவாரணம் ஏற்பாடு செய்வதிலும், கதியற்ற ஆட்களையும், உடல், உள அல்லது சமூக ரீதியாக குறைபாடுள்ளவர்களான ஆட்களையும் புனருத்தாரணம் செய்து பாதுகாப்பதிலும் செலவிடுதல்;

**(xxiv)** அமைச்சரிடம் முன்னரே பெற்ற அங்கீகாரத்துடன்—

(அ) முறையே மாநகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் அல்லது நகரசபைகள் கட்டளைசட்டத்தின் கீழ் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ், விடயத்திற்கு ஏற்ப, ஏதேனும் மாநகர சபையால் அல்லது நகரசபையால் தாபித்துப் பேணக்கூடியவையான பகிரங்க சேவைகளுக்கு அல்லது பொதுப் பயன்பாட்டுச் சேவைகளுக்கு தேவைப்படக்கூடியவையான அத்தகைய பொறித்தொகுதி, சாதனம், பொருள்கள், சாமான்கள் அத்துடன் பண்டங்கள் ஆகியனவற்றைத் தயாரித்தற்கும் உற்பத்திசெய்வதற்குமான வர்த்தக கைத்தொழில் பொறுப்பு முயற்சிகளில் ஈடுபடுதல்; அத்துடன்

(ஆ) பிரதேச சபையால் தீர்மானிக்கப்படக் கூடியதும் அமைச்சரால் அங்கீகரிக்கப்படக் கூடியதுமான அத்தகைய விலைகளில் ஏதேனும் நகர சபைக்கு அல்லது மாநகரசபைக்கு அல்லது பொதுமக்களுக்கு அத்தகைய பொறித்தொகுதியினை, சாதனங்களை, பொருள்களை, சாமான்களை, அல்லது பண்டங்களை விற்றல்;

(xxv) அதன்சார்பில் அதிகாரமளிக்கப்பட்டவரான அலுவலர்களும், அவர்களுடன் செல்லும் சேவையாளர்களும் அல்லது வேலையாட்களும் தொல்லையினைக் கண்டறிந்து தணிப்பதற்கும் அத்துடன் இச்சட்டத்தினது அல்லது இதன் கீழ் ஆக்கப்படும் துணைவிதிகளது அல்லது விதிகளது எல்லா மீறுகைகளையும் கண்டறிவதற்கும், தடுப்பதற்கும் அத்துடன் தணிப்பதற்கும் அல்லது இச்சட்டத்தின் கீழ் செய்யப்படவேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்டதான எச்செயல் தொடர்பாக சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் தவறியுள்ளாரோ அல்லது தவறியுள்ளவராகக் கருதப்படுவாரோ, அச்செயல்களைப் புரியும் நோக்கத்திற்காகக் காணிகளுக்குள்ளும் கட்டடங்களுக்குள்ளும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா நுழைவுகளைச செய்தலும் சோதனைகள் செய்தலும்;

(xxvi) அதன் தவிசாளரால் அல்லது அவரால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட வேறு அலுவலர்களால், தவிசாளர் இச்சட்டத்தின் எவையேனும் நோக்கங்களுக்கு அவசியமானதெனக் கருதக்கூடியதான எல்லா விசாரணைகளையும் நடாத்துதலும் அத்தகைய விசாரணைகளின் நோக்கங்களுக்காகச் சத்தியப்பிரமாணம் செய்வித்து சாட்சிகளை அழைத்தலும் ;

(xxvii) உள்ளூர் நிருவாகம் தொடர்பான கருமங்களை ஆலோசனைக்கெடுப்பதற்கான உள்ளூர் அதிகாரசபையின் ஏதேனும் கழகத்தின் செலவு தொடர்பாக, பிரதேச சபையின் நிதியத்திலிருந்து அமைச்சர் அங்கீகரிக்கக்கூடியதான அத்தகைய உதவுதொகைகளை ஒதுக்கிவைத்தல் ;

(xxviii) விதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களில் தவிசாளருக்கும், துணைத் தவிசாளருக்கும் எல்லாப் படிகளையும் கொடுப்பனவு செய்வதில் பிரதேச சபையின் நிதியத்திலிருந்து ஏதேனும் பாகத்தை செலவு செய்தல் ;

(xxix) பிரதேச சபையின் கூட்டங்களில் கலந்துகொள்வதற்கு பிரதேச சபை உறுப்பினர்களுக்கு அல்லது பிரதேச சபையின் அங்கீகாரத்துடன் உள்ளூர் நிருவாகம் தொடர்பான கருமங்களை ஆலோசனை செய்வதற்காக, பிரதேச சபைகளின் உறுப்பினர்கள் அல்லது அலுவலர்கள் மாநாடு அல்லது கூட்டம் எதனிலும் கலந்து கொள்ளுவதற்குப் பிரயாணப்படி கொடுப்பனவு செய்வதில் பிரதேச சபையின் நிதியத்திலிருந்து ஏதேனும் பாகத்தைச் செலவு செய்தல் ;

(xxx) பிரதேச சபையின் அல்லது பொதுமக்களின் உரிமைகளை வலியுறுத்தும் அல்லது பாதுகாக்கும் அல்லது அவர்களது கடமைகளை நிறைவேற்றும்போது அல்லது கருதப்பட்ட நிறைவேற்றுகையின்போது அதன் உறுப்பினர்களை அல்லது அலுவலர்களைப் பாதுகாக்கும் நோக்கத்துக்காக எவையேனும் சட்ட நடவடிக்கைகளைத் தொடுத்தல் அல்லது அவற்றில் எதிர்வாதிடுதல் ;

(xxxi) இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட அல்லது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதாகக் கருதப்படும் எவையேனும் துணை விதிகளை வலியுறுத்தலும், அத்தகைய துணைவிதிகளை மீறியமைக்காக நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தலும் ; அத்துடன்

(xxxii) பொதுவாக பிரதேச சபையின் தத்துவங்களையும், கடமைகளையும் திறமையாகப் பிரயோசிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவசியமான மற்றெல்லா விடயங்களையும் செய்தல்.

(2) (அ) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின் (xxiv) என்னும் பந்தியின் கீழான வர்த்தக அல்லது கைத்தொழில் பொறுப்பு முயற்சி எதனையும்.—

(i) அத்தகைய பொறுப்பு முயற்சியின் பொருளாதார ஸ்திரப்பாடு ;

(ii) ஏதேனும் பிரதேச சபைக்கும் பொதுமக்களுக்கும் அத்தகைய பொறுப்பு முயற்சியால் வந்துறக்கூடிய நன்மைகள் ;

(iii) அத்தகைய பொறுப்பு முயற்சியில் ஈடுபட்டுள்ள பிரதேச சபையின் நிதிநிலைமை,

ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு அங்கீகரிக்கலாம்.

(ஆ) பாராளுமன்றத்தால் 129ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (இ) அல்லது (ஈ) அல்லது (ஐ) என்னும் பந்திகளின் கீழ் ஒதுக்கப்பட்டவையான அல்லது வழங்கப்பட்டவையான பணத்தொகைகள் எவையும் ஏதேனும் வர்த்தக அல்லது கைத்தொழில் பொறுப்பு முயற்சியினைத்தாபிக்கும் அல்லது பேணும் நோக்கத்துக்காக அத்தகைய பிரதேச சபையால் பயன்படுத்தப்படுதல் ஆகாது.

(இ) அமைச்சர், ஏதேனும் பிரதேச சபையினது ஏதேனும் வர்த்தக அல்லது கைத்தொழில் பொறுப்பு முயற்சி தொடர்ந்து செயற்படுவதானது, பிறழ்முகாமை காரணமாக அல்லது சபைக்கு அது நிதி விவகாரத்தில் நஷ்டத்தை ஏற்படுத்தக்கூடியது என்ற காரணத்துக்காக அத்தகைய சபையின் நலன்களுக்குப் பங்கம் ஏற்படுத்தும் எனக் கருதுமிடத்து, அவர், சபையுடன் கலந்தாலோசித்துக் கொண்டதன் பின்னர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அத்தகைய பொறுப்பு முயற்சியின் செயற்பாட்டினை முடிவுறுத்தலாம் என்பதுடன பொறுப்பு முயற்சியின் எல்லாப் புத்தகங்கள், பதிவேடுகள், சொத்துக்கள் என்பனவற்றையும் பொறுப்பேற்க வேண்டுமெனவும் அத்தகைய கட்டளைக்குப் பயன்தருவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் சபைக்குப் பணிக்கலாம்.

(3) அமைச்சர் அல்லது ஆணையாளர், காலத்திற்குக்காலம், ஏதேனும் வர்த்தக அல்லது கைத்தொழில் பொறுப்பு முயற்சியில் ஈடுபட்டுள்ள ஏதேனும் பிரதேச சபைக்கு, அதன் அலுவல்களைக் கொண்டு நடாத்தவேண்டியமுறை பற்றி அல்லது அதன் தொழிலை ஆற்றவேண்டிய முறைபற்றி பொதுவான அல்லது சிறப்பான பணிப்புகளை வழங்கலாம் என்பதுடன் அத்தகைய பணிப்புகள் சபையால் நிறைவேற்றப்படுதலும் வேண்டும்.

(4) அமைச்சர் அல்லது ஆணையாளர், காலத்துக்குக் காலம் அத்தகைய பொறுப்பு முயற்சியின் தொழில் தொடர்பில், அவர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய படிவத்திலான விவரத் திரட்டுக்களையும், கணக்குகளையும், ஏனைய தகவலையும் தமக் எழுத்தில் தருமாறு சபையைப் பணிக்கலாம் என்பதுடன் அச்சபை அத்தகைய பணிப்பு ஒவ்வொன்றையும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

20. (1) எவ்விடப்பரப்புக்கென பிரதேச சபை அமைக்கப்பட்டதோ அவ்விடப்பரப்பில் அந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஏதேனும் பகிரங்க நோக்கத்துக்காக ஏதேனும் தனியார் காணியை, கட்டிடத்தை அல்லது வளவுகளைச் சோதித்தல் அல்லது அளப்பனவு செய்தல், அவசியமானதென ஏதேனும் பிரதேச சபையின் தவிசாளருக்குத் தோன்றுகின்ற போதிலெல்லாம், அத்தகைய சோதனையை அல்லது அளப்பனவைச் செய்யுமாறு பிரதேச சபையின் எவரேனும் அலுவலரை அல்லது சேவையாளரைப் பணித்தல் தவிசாளருக்குச் சட்டபூர்வமானதாதல் வேண்டுமென்பதுடன், அதன் மேல் அத்தகைய காணிக்குள், கட்டிடத்துக்குள் அல்லது வளவுகளுக்குள் அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர் அவர்களது வேலையாட்களுடன் நுழைதலும் அங்கு பின்வரும் செய்கைகளுள் ஏதேனும் ஒன்றைச் செய்தலும் அவருக்குச் சட்டபூர்வமானதாதலும் வேண்டும் :— அளப்பனவுக்கு அதிகாரமளிப்பதற்குள்ள தத்துவம்.

(அ) அளப்பனவு செய்தலும் மட்டங்கள் எடுத்தலும் ;

(ஆ) கீழ் மண்ணைக் கிண்டுதல் அல்லது துளைத்தல் ;

(இ) காணி, கட்டிடம் அல்லது வளவுகள் பகிரங்க நோக்கத்துக்கு ஏற்றதா எனக் கண்டறிவதற்கு வேண்டிய ஏனைய செயல்களைச் செய்தல் ;

(ஈ) கொள்ளப்பட வேண்டிய ஏதேனும் காணியின் அல்லது தெரு எல்லைக் கோடுகளின் அல்லது கொண்டு நடாத்தப்பட உத்தேசிக்கப்பட்ட ஏதேனும் வேலையின் கோடுகளின் எல்லைகளைக் குறித்தல் ;

(உ) அப்போதுள்ள கட்டடங்களில், மரங்களில், கம்பங்களில், சுவர்களில், வேலிகளில் அல்லது வேறு நிலையான பொருள்களில் நிரந்தர அடையாளங்களை வைப்பதன் மூலம் அல்லது புதிய அடையாளங்களைப் பொருத்துவதன் மூலம் அல்லது சந்தர்ப்பம் தேவைப்படுத்தக்கூடியவாறு அகழிகளை வெட்டுவதன் மூலம் அத்தகைய மட்டங்களை, எல்லைகளை அல்லது கோடுகளை ஆக்குதல் ;

(ஊ) வேறுவகையாக அளப்பனவு செய்யப்படமுடியாத விடத்து அல்லது மட்டங்கள் எடுக்க முடியாதவிடத்து அல்லது எல்லைகள் மற்றும் கோடுகள் அடையாளமிடப்படமுடியாதவிடத்து, அத்தகைய வேலையை நிறைவேற்றுவதுடன் தலையிடும் ஏதேனும் தடையை வெட்டி வீழ்த்தி அகற்றிவிடுதல்.

(2) ஒராமுட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட செயல்கள் எதனையேனும் புரிவதன் மூலம் ஏதேனும் காணிக்கு அல்லது அதிலுள்ள எதற்கும் ஏதேனும் சேதம் விளைவிக்கப்படுமிடத்து, பிரதேச சபையினால் சொந்தக்காரருக்கு அல்லது அதற்கு உரித்துடைய வேறு ஆளுக்கு பூரண நட்டஈடு செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) ஆள் எவரும் (1) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக ஏதேனும் கட்டிடத்துக்குள் அல்லது வதிவிட மனையோடு இணைந்துள்ள ஏதேனும் அடைப்புக்குள், அதனது இருப்பாட்சியாளரின் எழுத்திலான சம்மதத்துடன் தவிர அல்லது அத்தகைய சம்மதம் மறுக்கப்படுமாயின் பிரதேச சபைத் தவிசாளரின் எழுத்திலான அனுமதியுடன் தவிர, நுழைதலாகாது.

(4) இப்பிரிவின் கீழ் ஏதேனும் காணியின் மீது பொருத்தப்பட்ட குறி ஒவ்வொன்றும் பிரதேச சபையின் ஆதனமாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் III

## பொதுவழிகள் பற்றிய தத்துவங்களும் கடமைகளும்

### பொதுவழிகள்

பொதுவழிகளுக்கும்தொடர்புகளுக்கும் பிரதேச சபையே பொது அதிகாரசபையாக இருத்தல்.

21. (1) வேறு ஏதேனும் அதிகார சபைக்குச் சட்டத்தின் மூலம் பாரப்படுத்தப்பட்ட தத்துவங்களுக்கும் பொறுப்புக்களுக்கும் அமைவாக, பிரதேச சபையானது, இச்சட்டத்தின் கீழும் வீடமைப்பு பட்டின அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழும் அதன் சார்பில் காலத்துக்குக் காலம் சட்டமாக்கப்படும் வேறு ஏதேனும் சட்டவாக்கத்தின் கீழும் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டவாறான அத்தகைய சகல

தத்துவங்களுடன், அதன் நிருவாக எல்லைகளுக்குள்ளாக பிரதான பொது வழிகள் தவிர்ந்த எல்லாப் பொது வழிகளினதும் தொடர்பு களினதும் நோக்கத்துக்காகப் பொதுவான நிருவாக அதிகாரசபை யாதல் வேண்டும்.

(2) கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் காலத்துக்குக் காலம் அமைச்சரினால் கொடுபடக்கூடிய அத்தகைய பணிப்புக்களுக்கமைவாக, பிரதேச சபை அதன் இடப்பரப்புக்குள்ளாக அமைந்திருக்கக்கூடிய ஏதேனும் பிரதான பொது வழியைப் பாதுகாக்கும் நோக்கத்துக் காக நிருவாக அதிகார சபையாதல் வேண்டும் என்பதுடன் அத்த கைய நோக்கங்களுக்காக, ஏதேனும் அத்தகைய பிரதான பொது வழி தொடர்பில், பொது வழிகளில் கட்டிடங்களைக் கட்டுதல், பொதுவழிகளைத் தடைசெய்தல், பொதுவழிகள் மீதான ஊடுரு வல்கள், பொதுவழிகளைச் சேதப்படுத்துதல், பொதுவழிகள் மீது தொல்லை விளைவித்தல் என்பன தொடர்பிலான 43 முதல் 67 வரையிலான (இரண்டுமுட்பட்ட) பிரிவுகள் மூலம் அளிக்கப்பட்ட அல் லது விதிக்கப்பட்ட தத்துவங்களுள் அல்லது கடமைகளுள் எதனையும் பிரயோகிக்கலாம் அல்லது புரியலாம்.

**பொதுவழிகளும் திறந்த வழிகளும் தொடர்பாகப் பிரதேச சபைக் குள்ள பொதுவான தத்துவங்கள்.**

22. சட்டப்படி வேறு ஏதேனும் அதிகாரசபைக்குரிய தத்துவங் களுக்கும் பொறுப்புகளுக்கும் அமைவாக, பிரதேச சபை இடப்பரப்புக்குள்ளாக உள்ள சகல பொதுவழிகள் அல்லது அவற்றின் இடப்பரப்புக்கு மேலான திறந்தவெளிகள் என்பனவற்றிலிருந்து அல்லது அவை தொடர்பில் எழும் எல்லாப் பகிரங்க உரிமைகளையும் அக்கறைகளையும், வாழ்வசதிகளையும் உறுதிப்படுத்துவதற்கும் பேணு வதற்கும் அத்துடன் பகிரங்க நோக்கங்களுக்காக அத்தகைய பொது வழிகளையும் திறந்த வெளியிடங்களையும் பயன்படுத்துவதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும், இசைவாக்குவதற்கும் அபிவிருத்தி செய் வதற்கும் அவசியமான வழிவகைகள் எல்லாவற்றையும் மேற் கொள்ளுதல் பிரதேச சபையின் கடமையாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பிரதேச சபை ஒவ்வொன்றுக்கும் இத்தால் தத்துவம் அளிக்கவும் படுகிறது.

**பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட பொதுவழிகள்.**

23. பிரதேச சபையின் இடப்பரப்புக்குள்ளாக இருக்கும் பிரதான பொதுவழிகள் தவிர்ந்த மற்றெல்லாப் பொதுவழிகளும், அத்தகைய பொது வழிகள் வேறு ஏதேனும் சட்டவாக்கத்தின் பயனைக்கொண்டு ஏற்கனவே உரித்தாக்கப்பட்டிருக்குமளவுக்குத் தவிர, அவ்விடப்பரப் புக்கான பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

5—ஏ 094616 (12/86)

**வீதிகளையும் பாதைகளையும் எல்லை குறித்து அவற்றின் நிரலொன்றைப் பிரதேச சபை வெளியிடுதல்.**

**24.** (1) இவ்வேற்பாடுகள் வலுவுடையனவாக வந்ததிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள்ளாக, அல்லது ஏதேனும் விடயத்தின் சிறப்புச் சூழ்நிலைகளில் அமைச்சரினால் அனுமதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மேலதிக காலப்பகுதிக்குள்ளாக, பின்வருவனவற்றைச் செய்தல் ஒவ்வொரு பிரதேச சபையினதும் கடமையாதல் வேண்டும் :—

(அ) பிரதேச சபையினால் பேணப்படும் வீதிகளினதும் பாதைகளினதும் எல்லைகளை நிரந்தர அடையாளங்கள் மூலம் எல்லைகுறித்தலும், அத்தகைய எல்லா வீதிகளினதும்பாதைகளினதும் வரைபடங்களைத் தயாரிப்பித்தலும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய வீதிகளினதும் பாதைகளினதும் நிரலொன்றை எடுத்துக்காட்டும் அறிவித்தல்களை, ஒழுங்குவிதிகள் மூலம் விதித்துரைக்கப்பட்ட முறையில் வெளியிடுவித்தலும்.

(2) அத்தகைய அறிவித்தல்களை வெளியிட்டதன்மேல், எக்காணியிலிருந்து அத்தகைய வீதி அல்லது பாதை எல்லைகுறிக்கப்பட்டதோ அக்காணியின் சொந்தக்காரரெனக் கோரும் எத்திறத்தவரும் அத்தகைய அறிவித்தலில் விதித்துரைக்கப்பட்ட காலத்துக்குள்ளாக, அத்தகைய காணிக்கு அவருக்குள்ள உரித்தை நிலைநாட்டுவதற்காகத் தோதான நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடுத்தல் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவின் கீழான அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்றுமாத காலப்பகுதி முடிவடைந்ததன் பின்னரும் அத்துடன் ஆறுமாத காலப்பகுதி முடிவடையு முன்னரும், பிரதேச சபை—

(அ) இரண்டாம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறாகத் தொடுக்கப்பட்ட ஏதேனும் வழக்கில் எவ்வீதிகளும் பாதைகளும் தொடர்பாக அல்லது எவ்வீதிகளினதும் பாதைகளினதும் பாகம் தொடர்பாக இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லையோ அவ்வீதிகளையும் பாதைகளையும் அல்லது அவ்வீதிகளினதும் பாதைகளினதும் பகுதிகளையும் நீக்கிவிட்டு ; அத்துடன்

(ஆ) இரண்டாம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறாகத் தொடுக்கப்பட்ட ஏதேனும் வழக்கில் எவ்வீதிகளும் பாதைகளும் தொடர்பாகவும் வரைபடங்கள் தொடர்பாகவும் இறுதி முடிவொன்று எடுக்கப்பட்டுள்ளதோ அவ்வீதிகளையும் பாதைகளையும் வரைபடங்களையும் பொறுத்தமட்டில் அவசியமான திருத்தங்களைச் செய்துகொண்ட பின்னர்,

ஓராம் உட்பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தலில் காட்டப்பட்டவாறாக அத்தகைய எல்லா வீதிகளினதும் பாதைகளினதும் நிரலொன்றை எடுத்துக்காட்டும் அறிவித்தலொன்றை விதித்துரைக்கப்பட்ட முறையில் வெளியிடுவித்தல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் கீழான அறிவித்தல் வெளியிட்டதன் பின்னர் (2) ஆம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறாகத் தொடுக்கப்பட்ட ஏதேனும் வழக்கில் இறுதி முடிவொன்று செய்யப்பட்டுள்ளவிடத்து, பிரதேச சபை அத்தகைய வீதிகளினதும் பாதைகளினதும் அல்லது வீதிகளினதும் பாதைகளினதும் பாகங்களின் குறைநிரப்பு நிரலொன்றை எடுத்துக்காட்டும் அறிவித்தலொன்றை, விதித்துரைக்கப்பட்ட முறையில் வெளியிடுவித்தல் வேண்டும். இவ்வறிவித்தல் வெளியிடப்படுவதன் முன்னர் (2) ஆம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறாகத் தொடுக்கப்பட்ட ஏதேனும் வழக்குத் தொடர்பில் செய்யப்பட்ட இறுதித் தீர்மானத்தின் அடிப்படையில், வீதிகளினதும் பாதைகளினதும் எல்லைகளைக் குறிப்பதுடன் வரைபடங்களிலும் அவசியமான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

(5) மூன்றாம் அல்லது (4) ஆம் உட்பிரிவுகளின்கீழான அத்தகைய அறிவித்தலை வெளியிட்டதன்மேல் அத்தகைய அறிவித்தலில் வரையறுக்கப்பட்டனவும் அத்தகைய வரைபடங்களில் காட்டப்பட்டனவுமான அத்தகைய எல்லா வீதிகளும் பாதைகளும் அல்லது அத்தகைய வீதிகளினதும் பாதைகளினதும் பாகங்கள் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் வீதி அல்லது பாதை அல்லது ஏதேனும் வீதியின் அல்லது பாதையின் பாகம் வீதியாக அல்லது பாதையாகப் பயன்படுத்தப்படாதொழியுமிடத்து, பிரதேச சபை (3) ஆம் அல்லது (4) ஆம் உட் பிரிவின் கீழான அறிவித்தலுக்குத் திருத்தமொன்றை வெளியிடுதல் வேண்டும்.

25. பிரதேச சபை எல்லைகளுக்குள்ளாக இருக்கும் வீதிகளின் விடயத்தில், ஆட்சிவரையறைக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளோ அல்லது உடைமை மூலம் அல்லது பயன்பாடு மூலம் உரிமைகளைக் கொள்ளுதல் தொடர்பிலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளோ ஏற்பாடுடையனவாகமாட்டா ; அத்துடன் இச்சட்டம் நடைமுறைக்கு வருமுன்னரேனும் சரி, வந்தபின்னரேனுஞ் சரி, அத்தகைய வீதியை அல்லது அதன்பாகத்தை எவரேனுமாள் உடை ஆட்சி வரையறை.

மையில் வைத்திருந்தமை காரணமாக அத்தகைய வீதி அல்லது அதன் ஏதேனும் பாகம் தொடர்பில் புறநீங்கலான சொத்துரிமைக்கு, உடைமைக்கு அல்லது பயன்பாட்டுக்கு அவர் உரித்துடையவராகமாட்டார்.

அறிவித்தல்கள் எவ்வாறு சேர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது.

26. இவ்வத்தியாயத்தின் கீழ் கொடுக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் அறிவித்தல் ஒவ்வொன்றும் அத்தகைய ஆளிடம் நேரடியாக அல்லது அவரது வீட்டிலுள்ள எவரேனும் உறுப்பினரிடம் விட்டுவைப்பதன் மூலம் அல்லது அவரது வதிவிடத்தில் துலாம்பரமான இடத்தில் ஒட்டுவதன் மூலம் சேர்ப்பிக்கப்படலாம்.

புதிய பொது வழிகளை நிருமாணிப்பதற்கும் எலவே யுள்ள பொது வழிகளை சீர்திருத்துவதற்கும் பிரதேச சபைக்குள்ள தத்துவம்.

27. ஒவ்வொரு பிரதேச சபை இடப்பரப்பினதும் பிரதேச சபை அதன் இடப்பரப்புக்குள்ளாக, அத்தகைய நோக்கங்களுக்காகத் தேவைப்படும் ஏதேனும் ஆதனத்தின் சொந்தக்காரர்களுக்கு அல்லது இருப்பாட்சியாளர்களுக்கு அல்லது எவரது சட்ட உரிமைகள் பாதிக்கப்படுமோ அத்தகைய எவரேனும் ஆளுக்கு முறையான நட்டஈட்டைச் செலுத்தி—

(அ) புதிய வீதிகளையும், தெருக்களையும், பாலங்களையும், சுரங்கவழிகளையும் அல்லது வேறு பொதுவழிகளையும் வகுத்து நிருமாணிக்கலாம் ;

(ஆ) பிரதான பொதுவழியாகவிராத ஏதேனும் பகிரங்க வீதியை அல்லது பொது வழியை அத்துடன் பெருந்தெருக்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அனுமதியுடன் ஏதேனும் பிரதான பொதுவழியை அத்தகைய நோக்கங்களுக்குத் தேவைப்படும் ஏதேனும் ஆதனத்தின் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு அல்லது அதனால் சட்ட உரிமைப் பாதிப்புக்குள்ளான எவரேனும் ஆளுக்கு உரியநட்டஈடு செலுத்தி முழுமையாக அல்லது பகுதியளவில் விசாலிக்கலாம், திறக்கலாம், பெருப்பிக்கலாம் அல்லது வேறு வகையாகச் சீர்திருத்தலாம் அல்லது திருப்பலாம், திசைதிருப்பலாம், இடை நிறுத்தலாம் அல்லது மூடிவிடலாம்.

திசைதிருப்புதல்களுக்கு அல்லது பெருப்பித்தல்களுக்குத் தேவைப்படுகின்ற காணிகளைக் கொள்ளுதல்.

28. (1) ஏதேனும் பொதுவழியைத் திருப்புதல், திசைதிருப்புதல், விரிவாக்குதல், திறத்தல், பெருப்பித்தல் அல்லது சீர்திருத்துதல் தொடர்பாகப் பொதுப் பயன்பாட்டுக்காக எவரேனும் ஆளின் காணியை உடைமையிலெடுத்தல் ஏதேனும் பிரதேச சபைக்கு அவசியமானதாக வந்தால் அத்தகைய காணிக்கெனவும் அதிலுள்ள கட்டிடம், எல்லைச்சுவர், வாசல், வேலி அல்லது மரம் எதற்குமெனவும்

செலுத்தப்படவுள்ள நட்ட ஈட்டுக்கொனக் சொந்தக்காரருடன், ஒன்றில், முன்னைய பொதுவழியின் தரையை அல்லது தரையின் பாகத்தை உடைமையாக்குவதற்கு அவரை அனுமதிப்பதன் மூலம் அல்லது கொடுத்து மாற்றாக வேறு காணியைக் கொடுப்பதன் மூலம் அல்லது பணத்தைக் கொடுப்பனவு செய்வதன் மூலம் அல்லது அத்தகைய முறைகளில் எவையேனும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட முறைகளின் மூலம் உடன்படிக்கையொன்றைச் செய்தல் அத்தகைய பிரதேச சபைக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழான ஏதேனும் உடன்படிக்கையைப் பின்பற்றி பிரதேச சபையொன்றினால் உடைமையில் எடுக்கப்படும் ஏதேனும் காணி அதன் முறைப்படியான கைமாற்றம் எதுவுமின்றிப் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், ஏதேனும் முந்திய வீதியினது தரையின் ஏதேனும் பாகத்தை அல்லது (1) ஆம் உட்பிரிவின்கீழ் கொடுத்துமாறலாகக் கொடுக்கப்பட்ட ஏதேனும் காணியை உடைமையில் வைத்திருப்பதற்குச் சபையினால் எவரேனும் ஆள் அனுமதிக்கப்பட்டிருக்கிறார் எனச் சபையின் தவிசாளரால் அதன் நில அளவையொன்றுடன் சேர்த்து வழங்கப்படும் சான்றிதழானது, அத்தகைய நிலத்துக்கான அல்லது காணிக்கான அத்தகைய ஆளின் உரிமை பற்றிய போதுமான எண்பிப்பாக இருத்தலும் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவின் கீழ் செலுத்தப்படற்பாலதான நட்ட ஈடு பற்றி ஏதேனும் காணியின் சொந்தக்காரருடன் ஒரு பிரதேச சபைக்கு உடன்பாடு காணப்பட முடியாதவிடத்து, அல்லது அத்தகைய சொந்தக்காரர் கண்டு பிடிக்கப்படமுடியாதவிடத்து அல்லது ஏதேனும் காணியின் சொந்தக்காரருடன் உடன்படிக்கை எதனையும் செய்து கொள்ளுதல் உகந்ததல்லவெனப் பிரதேச சபை கருதுமிடத்து, அப்போது அத்தகைய காணியின் உடைமையைப் பெறுவதற்கு அல்லது சொந்தக்காரருக்கு நட்டஈட்டை வழங்குவதற்கு 128 ஆம் பிரிவினால் விதித்துரைக்கப்பட்ட முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்.

(4) ஒராம் உட்பிரிவின் கீழான ஒவ்வோர் உடன்படிக்கையும் எழுத்திலிருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் உடன்படிக்கைக்கு அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்படும் ஏதேனும் சான்றிதழுக்கு மோசடித் தடுப்புக்கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவு ஏற்புடையதாதலுமாகாது.

பொதுவழிகளைத் திசைதிருப்புவதற்கு அல்லது பெருப்பிப்பதற்குத் தேவைப்படும் காணிகளின் கொடைகள்.

**29.** ஏதேனும் பொதுவழியைத் திருப்புதல், திசைதிருப்புதல், விரிவாக்குதல், திறத்தல், பெருப்பித்தல் அல்லது சீர்திருத்துதல் தொடர்பாகப் பொதுப் பயன்பாட்டுக்காக எவரேனும் ஆளின் காணியை உடைமையிலெடுத்தல் ஏதேனும் பிரதேச சபைக்கு அவசியமாக ந்தாலும் காணியின் சொந்தக்காரரென உரிமைகோருகின்ற ஆள்

அத்தகைய நோக்கத்துக்காக பிரதேச சபைக்குக் காணியைக் கொடையாகக் கொடுப்பதற்கு விரும்பினும் தவிசாளரின் அல்லது அதற்கென எழுத்தில் தவிசாளரால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரின் முன்னிலையில் அத்தகைய ஆளினால் முறையாக ஒப்பமிடப்பட்ட அப்பயன்பட்டதான எழுத்திலான ஒரு பதிவு, பிரதேச சபைக்குக் காணியை உரித்தாக்கப் போதுமானதாதல் வேண்டும். ஒரு பிரசித்த நொத்தாரிசினாலும் சாட்சிகளினாலும் அத்தாட்சிப்படுத்தப்படல் பற்றிய மோசடித் தடுப்புக் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் தேவைப்பாடுகள் இணங்கியொழுகப்படவில்லை என்ற காரணத்தினால் மாத்திரம் அத்தகைய பதிவு எதுவும் செல்லுபடியற்றதாகவோ அல்லது சட்டப்படி பயனற்றதாகவோ கருதப்படலாகாது.

*பயன்படுத்தப் படாது இடை நிறுத்தப்பட்ட தெருவைக் கையுதிர்ப்பதற்கான தத்துவம்.*

**30.** ஒரு பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் தெரு அல்லது வேறு பொதுவழி அல்லது ஏதேனும் தெருவின் அல்லது பொதுவழியின் ஏதேனும் பாகம் ஒரு தெருவாக அல்லது பொது வழியாகப் பயன்படுத்தப்படாதபோதிலெல்லாம் பிரதேச சபையானது, அமைச்சரின் முன்னங்கீகாரத்துடன், அத்தகைய தெருவை அல்லது வேறு பொதுவழியை அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தை விற்பனை செய்யலாம், குத்தகைக்குக் கொடுக்கலாம் அல்லது கொடுத்துமாற்றலாம்.

*கட்டிட நோக்கங்களுக்காகப் புதிய தெருவை அடுத்துள்ள காணியை எடுப்பதற்கான தத்துவம்.*

**31.** ஏதேனும் புதிய தெருவை அல்லது பொதுவழியை இடுவதில் அல்லது நிருமாணிப்பதில் அல்லது ஏதேனும் தெருவை அல்லது பொதுவழியை திருப்புவதில், திசைதிருப்புவதில், அகலமாக்குவதில், திறப்பதில், பெருப்பிப்பதில் அல்லது வேறுவகையில் சீர்திருத்துவதில் பிரதேச சபையொன்று அதன் வண்டிப் பாதையினதும் நடைபாதையினதும் நோக்கங்களுக்காகத் தேவைப்படும் காணியுடன் மேலதிகமாகச் சொல்லப்பட்ட தெருவை அல்லது பொதுவழியை அமைப்பதற்கான வீடுகளுக்கும் கட்டடங்களுக்குமாக, அவசியமான காணியையும் கொள்வனவு செய்யலாமென்பதுடன் 18 ஆம் பிரிவின் (x), (xi), (xii) என்னும் பந்திகளின் ஏற்பாட்டுக்கமைவாகவும் பிரதேச சபை பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறு அதில் நிறுவப்படவுள்ள வீடுகள் அல்லது கட்டடத்தின் வகுப்பும் விவரணமும் பற்றிய அத்தகைய விதிப்புரைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாகவும் அதனை விற்பனை செய்யலாம், குத்தகைக்குக் கொடுக்கலாம் அல்லது வேறுவகையில் கையுதிர்க்கலாம்.

*ஒரு பிரதேச சபையின் ஏனைய தத்துவங்கள்.*

**32.** ஒரு பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள வேறெவையேனும் தத்துவங்களுக்குப் பங்கமின்றி பின்வரும் செயல்களுள் எவற்றையும் செய்தல் அப்பிரதேச சபைக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :—

(அ) தெருக்களுக்குத் தண்ணீர் இடுதல் ;

(ஆ) ஏதேனும் தெருவில் அல்லது தெருவின்மீதுள்ள அல்லது பெருவழியில் அல்லது பெருவழியின்மீதுள்ள அத்து மீறுகைகளை அல்லது முட்டுக்கட்டைகளை, பிரதேச சபைக்கு அவற்றுக்குப் பொறுப்பான ஆள் எவர் எனத் தெரிந்திருக்குமிடத்து அவ்வாளுக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டு அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்துக்குள் அல்லது உரிய விழிப்புக் கவனத்துடன் அத்தகைய அத்துமீறுகைகளை அல்லது முட்டுக்கட்டைகளை அகற்றுவதற்கு அவர் தவறினால் மாத்திரமே பிரதேச சபையினால் அத்தகைய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டுமென்ற நிபந்தனைகளுக்கமைவாகவே அகற்றலாம் ;

(இ) தெருக்களின் பெயர்களையும் அல்லது ஏதேனும் தனியார் ஆதனத்திலுள்ள வீடுகளின் அல்லது குடியிருப்பு மனைகளின் இலக்கங்களையும் மையிடுதல் ;

(ஈ) கைவிடப்பட்ட வீடுகளை மூடிப் பூட்டிவிடுதல் ;

(உ) இதற்கான (ஆ) என்னும் பந்தியின்கீழும் (ஈ) என்னும் பந்தியின் கீழும் எடுக்கப்படும் ஏதேனும் நடவடிக்கையால் உறப்பட்ட செலவை, எந்த ஆளின் செயல் அல்லது அசட்டையீனம் அத்தகைய நடவடிக்கையை அவசியமானதாக ஆக்கியிருக்க வேண்டுமோ அந்த ஆளிடமிருந்து இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் அறவிடுதல்.

ஆதனச் சொந்தக்காரர்களின் நன்மைக்கான வீதிகள்.

**33.** பிரதேச சபையானது அதன் எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு தோட்டம் அல்லது அதற்கு மேற்பட்ட தோட்டங்கள் அல்லது கைத்தொழிற் பொறுப்புமுயற்சிகள் எவற்றினதும் சொந்தக்காரரின் அல்லது சொந்தக்காரர்களின் வேண்டுகோளின் பேரில், அத்தகைய ஓர் இடப்பகுதியில் வீதியொன்றை நிருமாணித்தல் அல்லது பேணுதல் பொதுமக்களின் நலனை வேறு வகையில் நியாயமானதாக்காதென பிரதேச சபை அபிப்பிராயப்படும் ஏதேனும் விடயத்தில், பிரதேச சபையால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறாக அத்தகைய நிருமாணத்தின் அல்லது பேணுகையின் செலவுகள் தொடர்பான அத்தகைய உதவுதொகையைக் கொடுப்பனவு செய்வதற்கு அமைவாகவும் தோதான ஒரு சாதனத்தின் மூலம் அத்தகைய வீதி பகிரங்க வீதியொன்றாக அமைக்கப்பட்டுப் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்படும் என்ற நிபந்தனைக்கமைவாகவும், கேள்விக்குட்பட்ட தோட்டத்தின் அல்லது தோட்டங்களின் அல்லது தொழிற்பொறுப்புமுயற்சியின் அல்லது முயற்சிகளின் சேவைக்காக வீதியொன்றை நிருமாணிப்பதற்காக அல்லது பேணுவதற்காக, அத்தகைய சொந்தக்காரருடன் அல்லது சொந்தக்காரர்களுடன் ஒப்பந்தத்தைச் செய்யலாம் ; அத்துடன் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட அத்தகைய உதவுதொகைகள் யாவும் நன்மையடையும் காணிகளின் மீது சுமத்தப்படும் விசேட வீதவரிகளாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின் கீழ் சுமத்தப்படும் வீதவரியொன்றைப் போன்று அதே முறையில் அறவிடப்படற்பாலதாதலும் வேண்டும் ; அத்துடன் வீதவரிகள் தொடர்பிலான இச்சட்டத்தின் ஏற்பாடுகள் யாவும் அதுதொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

பகிரங்க வாகன தொடர்புகள்.

**34.** ஒரு பிரதேச சபையானது, வேறேதேனும் சட்டத்தினால் அது தொடர்பில் சுமத்தப்படக்கூடியதான அத்தகைய தடைக்கு அல்லது மட்டுப்பாட்டுக்கு அமைவாகவும், ஏதேனும் பிரதான பொதுவழி அதனால் பாதிக்கப்படக்கூடிய அளவு வரையும், பெருந்தெருக்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்துக்கமைய, பிரதேச சபையின் நிருவாக எல்லைகளுக்குள் உள்ள ஏதேனும் இடப்பரப்பினது வாசிகளின் சேவைக்காக ஒன்றில் தானாகவும், அதன் அலுவலர்கள் மூலமும் அல்லது ஊக்குவிப்போன் அல்லது ஊக்குவிப்போர்கள் எவருடனுமான உடன்படிக்கை மூலமும் எவ்விதத்தினதுமான பகிரங்க வாகனத் தொடர்பை ஒழுங்குபடுத்தலாம் அத்துடன் பேணலாம்.

பாழடைந்த அத்துடன் அபாயகரமான நிலையிலுள்ள வீடுகள்.

**35.** ஏதேனும் இடப்பரப்பிலுள்ள ஏதேனும் தெருவை அல்லது பொதுவழியை அடுத்துள்ள வீடு, கட்டடம், எல்லைச்சுவர் அல்லது வாசல் எதுவும் அல்லது அவற்றில் இணைக்கப்பட்டுள்ள எதுவும் பாழடைந்த ஒரு நிலையில் உள்ளதாக அந்த இடப்பரப்புக்கான பிரதேச சபையினால் கருதப்படின், அது அபாயகரமானதாக இருப்பினும்சரி அல்லது இல்லாவிடினுஞ்சரி அல்லது விழக்கூடிய சாத்தியத்தைக் கொண்டதாக இருப்பினுஞ்சரி பிரதேச சபையானது, அவசியமானதெனத் தோன்றினால், அத்தகைய தெருவை அல்லது பொதுவழியைப் பயன்படுத்துகின்ற ஆட்களின் பாதுகாப்புக்காக முறையான ஒரு அடைப்பு அல்லது வேலி ஒன்றை உடனே போடுவித்தல் வேண்டும் என்பதுடன், விடயம் தேவைப் படுத்துகின்றவாறு, அத்தகைய வீட்டை, கட்டடத்தை, எல்லைச்சுவரை அல்லது வாசலை அல்லது அவற்றில் இணைக்கப்பட்டுள்ள சாமானை உடனடியாக இடித்துவிடும்படி, உறுதியாக்கும்படி அல்லது பழுதுபார்க்கும் படி சொந்தக்காரரின் அல்லது இருப்பாட்சியாளரின் மீது எழுத்திலான அறிவித்தலைச் சேர்ப்பிக்கச் செய்தலும் வேண்டும்.

அறிவித்தலுடன் இணங்கியொழுக தவறுதல்.

**36.** முப்பத்தைந்தாம் பிரிவின்கீழ் ஒரு பிரதேச சபையினால் அல்லது சபையின் சார்பில் அறிவித்தலொன்று சேர்ப்பிக்கப்பட்டவரான ஆளெவரும், அது சேர்ப்பிக்கப்பட்டு மூன்று நாட்களுக்குள்ளாக அத்தகைய அறிவித்தலுடன் இணங்கியொழுகுவதற்குத் தொடங்காவிட்டால் அல்லது உரிய விழிப்புக் கவனத்துடன் வேலையை முடிக்காவிட்டால், பிரதேச சபையானது, நிறைவேற்றப்படுவதற்கு அவசியமென அது கருதக்கூடியதான வேலையாவற்றையும் அல்லது வேலையின் அத்தகைய அளவைச் செய்வித்தல் வேண்டும்; அத்துடன் பிரதேச சபையினால் உறப்படும் எல்லாச் செலவுகளும் அத்தகைய ஆளினால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக அறவிடப்படற்பாலதாதலும் வேண்டும்.

பழுதடைந்த வீடுகளின் பொருட்களை விற்பனை செய்தல்.

**37.** முப்பத்தாறும் பிரிவின்கீழ் ஏதேனும் பிரதேச சபையினால் ஏதேனும் வீடு, கட்டடம் அல்லது சுவர் அல்லது அவற்றின் ஏதேனும் பாகம் தகர்த்துடைக்கப்பட்டால், பிரதேச சபையானது, அவற்றின் பொருட்களை அல்லது உடைத்து எடுக்கப்பட்டிருக்கக்கூடிய பொருட்களின் அந்த அளவை விற்பனை செய்து அத்தகைய விற்பனையின் வரும்படிகளை உறப்பட்ட செலவுகளுக்கான கொடுப்பன

வாகப் பயன்படுத்தலாம் என்பதுடன், அத்தகைய விற்பனையிலிருந்து எழும் ஏதேனும் மேன்மிகையை, கோரப்பட்டதன்மீது அத்தகைய வீட்டின் கட்டடத்தின் அல்லது சுவரின் சொந்தக்காரருக்கு செலுத்துதலும் வேண்டும்:

ஆயின், கோரிக்கையைச் செய்வதற்கு உரித்துடையவரால் எவரேனும் ஆளினால் பன்னிரண்டு மாதங்களுக்குள்ளாக அத்தகைய மேன்மிகைக்காக அத்தகைய கோரிக்கை எதுவும் செய்யப்படாத விடயத்தில், பிரதேச சபை அத்தகைய மேன்மிகையின் தொகையைப் பிரதேச சபையின் நிதியத்தினது வரவுக்குச் செலுத்துவதற்குச் சுதந்திரமுடையதாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கோரப்படாத மேன்மிகையைச் செலுத்துவதற்கான அல்லது மேன்மிகை பற்றி அல்லது அது தொடர்பில் விடையளிப்பதற்கான பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டதாதலும் வேண்டும்:

ஆயின், மேலும் பிரதேச சபையானது, மேற்சொல்லப்பட்ட நோக்கங்களுக்காக அத்தகைய பொருட்களை விற்பனை செய்திருக்கக்கூடும் என்பது எது எவ்வாறிருப்பினும், விற்பனையினது வரும்படிகளைப் பயன்படுத்தியதன் பின்னர் வருமதியாக இருக்கக்கூடியவையான செலவுகளின் அத்தகைய அளவின் கொடுப்பனவைக் கட்டாயப்படுத்துவதற்காக, செலவுகளின் முழுமையினது கொடுப்பனவையும் கட்டாயப்படுத்துவதற்கென அதற்கு இச்சட்டத்தினால் கொடுக்கப்பட்டவையான அதே அதிகாரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## பொதுவழிகளைப் பேணுதலும் அவற்றைப் பழுதுபார்த்தலும்

38. பிரதேச சபையின் தகுந்த அலுவலர்களுக்கும் அவரினால் அல்லது அவரின்கீழ் ஊழியத்திலமர்த்தப்பட்டவர்களான சேவையாளர்களுக்கும், வேலையாட்களுக்கும், தொழிலாளர்களுக்கும் எல்லா நேரத்திலும் அவசியமானவையும் தகுந்தவையுமான எல்லா வண்டிகளுடனும், வண்டில்களுடனும், விலங்குகளுடனும், வேறு வழிவகைகளுடனும் அந்த இடப்பரப்பினிலுள்ள ஏதேனும் உளதான அல்லது முன்னப்பட்ட பொதுவழியை அடுத்துள்ள அல்லது பொதுவழிக்கருகிலுள்ள ஏதேனும் காணிக்குட் பிரவேசிப்பதற்கும் அங்கு அத்தகைய ஏதேனும் பொதுவழியைச் சுவடுகாணும், அளக்கும், ஆக்கும், அதில் வேலைசெய்யும், அதனைத் திறக்கும், மாற்றும், திருப்பும், பழுதுபார்க்கும், வெளியாக்கும், சீர்திருத்தும் அல்லது வேலியடைக்கும் நோக்கத்துக்காக அல்லது அவற்றிலுள்ள அல்லது அவற்றுடன் எவ்வகையிலும் தொடர்புபட்ட ஏதேனும் பாலத்தை, வேலியை, வாய்க்காலை, அணைக்கட்டை அல்லது குழியைக் கட்டுவதற்காக, அகழ்வதற்காக, பழுதுபார்ப்பதற்காக, வெளியாக்குவதற்காக, அல்லது சீர்திருத்துவதற்காக அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழான ஏதேனும் செயலை, கருமத்தை அல்லது காரியத்தைப் புரிவதற்காக அவசியமான எல்லாச் செயல்களையும், கருமங்களையும் காரியங்களையும் தனித்துச்செய்தலும் புரிதலும் சட்டமுறையானதாதல் வேண்டும்.

பொதுவழிகளைப் பழுதுபார்த்தல் முதலியவற்றுக்காக காணிக்குள் பிரவேசிப்பதற்கு தகுந்த அலுவலர்கள் அதிகாரமளிக்கப்படுதல்.

**பொருட்களை எடுப்பதற்கான தத்துவம்.**

**39.** பிரதேச சபையின் தகுந்த அலுவலருக்கும் அவரினால் அல்லது அவரின் கீழ் ஊழியத்திலமர்த்தப்பட்டுள்ள சேவையாளர்களுக்கும், வேலையாட்களுக்கும், தொழிலாளர்களுக்கும் நியாயமான எல்லா நேரங்களிலும், அவசியமானவையும் தகுந்தவையுமான எல்லா வண்டிகளுடனும், வண்டில்களுடனும், விலங்குகளுடனும் வேறு வழிவகைகளுடனும் அந்தப் பிரதேச சபையின் இடப்பரப்பினிலுள்ள ஏதேனும் உளதான அல்லது முன்னைப்பட்ட பொதுவழியைச் சுவடு காணும், அளக்கும், ஆக்கும், வேலைசெய்யும், அதனைத் திறக்கும், மாற்றும், திருப்பும், பழுதுபார்க்கும், வெளியாக்கும், சீர்திருத்தும், வேலியடைக்கும் நோக்கத்துக்காக அல்லது சுவடு காண்பதற்கு, அளப்பதற்கு, ஆக்குவதற்கு அல்லது அதில் வேலைசெய்வதற்கு, அதனைத் திறப்பதற்கு, மாற்றுவதற்கு, திருப்புவதற்கு, பழுதுபார்ப்பதற்கு, வெளியாக்குவதற்கு, சீர்திருத்துவதற்கு அல்லது வேலியடைப்பதற்கு ஏதேனும் வழியில் உதவிசெய்யும் நோக்கத்துக்காக அல்லது அவற்றிலுள்ள அல்லது அவற்றுடன் எவ்வகையிலும் தொடர்புபட்ட ஏதேனும் பாலத்தை, வேலியை, வாய்க்காலை, அணைக்கட்டை அல்லது குழியைக் கட்டும், அகழும், பழுதுபார்க்கும், வெளியாக்கும் அல்லது சீர்திருத்தும் நோக்கத்துக்காக அல்லது அத்தகைய ஏதேனும் பொதுவழியை அடுத்து அல்லது பொதுவழிக்கு அருகில் உள்ள ஏதேனும் காணியில் அல்லது காணியிலிருந்து மேற்சொல்லப்பட்டவாறாக எவரேனும் அலுவலர் பயன்படுத்துவதற்காக அல்லது அவரது சேவையில் ஊழியத்திலமர்த்தப்பட்டுள்ள எவரேனும் வேலையாளுக்காக, எவையேனும் விலங்குகளுக்காக, வண்டிகளுக்காக, வண்டில்களுக்காக, ஆட்களுக்காக, அல்லது சாமான்களுக்காக அத்தகைய ஏதேனும் பொதுவழியின் மீது அல்லது அதற்கருகில் தேவைப்படும் எத்தகையவையுமான எவையேனும் குடியிருப்பறைகளை அல்லது கட்டிடங்களை நிருமாணிப்பதற்காக ஏதேனும் நீருக்காக, வெட்டுமரத்துக்காக, அடிக்கட்டைக்காக, கல்லுக்காக, சரளைக்கல்லுக்காக, களிமண்ணுக்காக, அல்லது எத்தகையவையுமான வேறெவையேனும் பொருட்களுக்காகத் தேடுதலும், தோண்டுதலும், வெட்டுதலும், கொண்டுசெல்லுதலும் அத்துடன் அத்துமீறுபவரொருவராகக் கருதப்படாமல் எவரேனும் ஆளினது காணிக்கூடாக அவற்றைக் கொண்டு செல்லுதலும் சட்டமுறையானதாதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய பொருட்கள் எவையும் ஏதேனும் வீட்டின், சாலையின், நுழைவழியின் அல்லது புற்றரையின் அல்லது அடைக்கப்பட்ட ஏதேனும் தோட்டத்தின், பெருந்தோட்டத்தின், வயலின் அல்லது மரச் சோலையின் மீது அல்லது அவற்றிலிருந்து, அவற்றின் சொந்தக்காரரின் சம்மதமின்றி, அயலிலுள்ள தரிசு நிலங்களில் அல்லது பொது அல்லது கைவிடப்பட்ட நிலங்களில் இருந்து போதியளவு பொருட்கள் வசதியாகப் பெறப்படமுடியாதிருந்தாலன்றி (இந்த விடயத்தில் அத்தகைய பொருட்களில் எவற்றையும் சொல்லப்பட்ட அலுவலர் வசதியாகப் பெறக்கூடிய இடத்திலிருந்து அவர் எடுக்கலாம்) தோண்டப்படுதல், வெட்டப்படுதல், அல்லது எடுத்துச் செல்லப்படுதல் ஆகாது :

ஆயின், அவ்வாறு எடுக்கப்படும் பொருட்கள் யாவற்றுக்கும், பொருட்களை எடுப்பதிலும் கொண்டுசெல்வதிலும் புரியப்பட்ட சேதத்துக்கும் நியாயமான நட்ட ஈடு அதன் சொந்தக்காரருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் :

ஆயின், மேலும் எந்தக் கற்குழியிலிருந்து அல்லது குழியிலிருந்து அத்தகைய எவையேனும் பொருட்கள் எடுக்கப்படக்கூடுமோ அந்தக் கற்குழியை அல்லது குழியை எவரேனும் ஆளுக்கு அல்லது விலங்குக்கு அது அபாயமேற்படுத்தாதவாறு அத்தகைய அலுவலர் அடைத்து விடுதல் அல்லது அதற்கு வேலியிடுதல் வேண்டும்.

**கட்டடங்களை நிறுவுவதற்கானதும் கால்நடைகளை வைத்திருப்பதற்கானதுமான தத்துவம் முதலியன..**

**40.** ஏதேனும் இடப்பரப்பின் பிரதேச சபையொன்றின் தகுந்த அலுவலருக்கு அந்த இடப்பரப்பில் உளதான அல்லது முன்னப்பட்ட ஏதேனும் பொதுவழியைச் சுவடுகாணும், அளக்கும், ஆக்கும், அதில் வேலைசெய்யும், அதைத்திறக்கும், மாற்றும், திருப்பும், பழுது பார்க்கும், வெளியாக்கும் அல்லது சீர்திருத்தும்போது அல்லது அவற்றிலுள்ள அல்லது அவற்றுடன் ஏதேனும் வழியில் தொடர்பு பட்ட ஏதேனும் பாலத்தை, வேலியை, வாய்க்காலை, அணைக்கட்டை அல்லது குழியைக் கட்டும், அகழும், பழுதுபார்க்கும் வெளியாக்கும் அல்லது சீர்திருத்தும்போது—

(அ) அவரால் ஊழியத்திலமர்த்தப்பட்ட சேவையாளர்களுக்கு, வேலையாட்களுக்கு, தொழிலாளர்களுக்கு, விலங்குகளுக்கு, வண்டிகளுக்கு அல்லது சாமான்களுக்கு வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது இடவசதியளிப்பதற்காக அதற்கருகாமையிலுள்ள அல்லது அண்மையிலுள்ள ஏதேனும் காணியின் மீது தற்காலிகக் கட்டிடங்களை அமைத்து நிறுவுதலும் ; அத்துடன்

(ஆ) அவரால் ஊழியத்திலமர்த்தப்படக்கூடியனவான அத்தகைய எல்லா விலங்குகளையும் அதற்கண்மையிலுள்ள அல்லது அருகாமையிலுள்ள காணிகள் எவற்றின் மீதும் முறையாகக் கட்டி அடைத்து வைத்திருத்தலும், அவசியமாகக் கூடியவாறுன அத்தகைய காலத்துக்கு அத்தகைய காணிகளின் மீது விலங்குகளை அவ்வாறு தொடர்ந்து வைத்திருத்தலும்,

சட்டமுறையானதாதல் வேண்டும் :

ஆயின், பயிர்ச் செய்கைக்கு உட்பட்டதான அல்லது அந்நோக்கத்துக்கெனக் கிடைக்கக்கூடியவையான தரிசு நிலங்கள் அல்லது பொதுவான அல்லது கைவிடப்பட்ட நிலங்கள் அயலில் இருக்கின்ற ஏதேனும் இடப்பரப்பில் அமைந்துள்ளதான ஏதேனும் காணியின் மீது அத்தகைய கட்டிடம் எதுவும் நிறுவப்படுதலாகாது அல்லது அத்தகைய விலங்கு எதுவும் வைத்திருக்கப்படுதலாகாது :

ஆயின், மேலும் காணிக்குச் செய்யப்பட்ட சேதம் எதற்குமாக நியாயமான நட்டஈடு அதன் சொந்தக்காரருக்கு எல்லா விடயங்களிலும் கொடுக்கப்படுதல் வேண்டும்.

அருகாமையி லுள்ள காணி மீது குப்பை வீசுவதற்கான தத்துவம்.

41. ஏதேனும் பிரதேச சபை இடப்பரப்பில் உள்ளதான அல்லது முன்னப்பட்ட ஏதேனும் பொதுவழியைச் சுவடுகாணுகையில், அளக்கையில், ஆக்குகையில், அதில் வேலை செய்கையில், அதைத் திறக்கையில், மாற்றுகையில், திருப்புகையில், பழுதுபார்க்கையில், வெளியாக்குகையில் அல்லது சீர்திருத்துகையில் அல்லது அவற்றிலுள்ள அல்லது அவற்றுடன் ஏதேனும் வழியில் தொடர்புபட்ட ஏதேனும் பாலத்தை, வேலியை, வாய்க்காலை, அணைக்கட்டை அல்லது குழியைக் கட்டுகையில், அகழுகையில், பழுதுபார்க்கையில், வெளியாக்குகையில், அல்லது சீர்திருத்துகையில், பொது வழிக்கருகாமையில் அல்லது அண்மையில் உள்ள எவையேனும் காணிகளின் மீது அத்தகைய ஏதேனும் வேலையமைப்பின் இடத்திலிருந்து அகற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய மண்ணை, குப்பைகூழத்தை அல்லது பொருட்களை எறிதல் இடப்பரப்பின் ஏதேனும் பிரதேச சபையின் தகுந்த அலுவலருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:

ஆயின், தகுந்த அலுவலரால் அத்தகைய ஏதேனும் காணியின் மீது எறியப்பட்ட மண், குப்பை கூழம் அல்லது பொருட்கள் யாவும் நியாயமான ஒரு காலத்துக்குள், அத்தகைய காணியிலிருந்து அவரினால் அகற்றிவிடப்படுதல் வேண்டும்.

தற்காலிக வீதியை அமைப்பதற்கான தத்துவம்.

42. பிரதேச சபையின் எல்லைகளுக்குள் உள்ளதான அல்லது முன்னப்பட்ட ஏதேனும் பொதுவழிக்கு அருகாமையிலுள்ள அல்லது அண்மையிலுள்ள நிலத்துக்கூடாகத் தற்காலிக வீதியொன்றை, அதன் மீது ஏதேனும் வேலையை அல்லது அதனுடன் எவ்வழியிலேனும் தொடர்புபட்ட ஏதேனும் வேலையை நிறைவேற்றும் போது அமைத்தல், பிரதேச சபையின் தகுந்த அதிகாரிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :

ஆயின், ஏதேனும் கட்டிடம் இருக்கும் நிலத்தின் மேல் அல்லது அடைக்கப்பட்ட தோட்டம் அல்லது சாலை ஒன்றின் மேல் அத்தகைய வீதி அமைக்கப்படுதலாகாது.

மரங்களை வெட்டுவதற்கான தத்துவம்.

43. பிரதேச சபையின் தகுந்த அலுவலருக்கு, பிரதேச சபை எல்லைகளுக்குள் உள்ள ஏதேனும் பொதுவழியில் வளர்கின்ற அல்லது பொதுவழியின் மீது தொங்குகின்ற அல்லது அதில் ஏதேனும் முட்டுக்கட்டையை ஏற்படுத்துகின்ற மரங்கள், புதர்கள் அல்லது பற்றைகள் யாவற்றையும் மரங்களின் இலைகள் அல்லது கிளைகள் அல்லது வேர்கள் யாவற்றையும் வெட்டி, அகற்றி, அருகாமையிலுள்ள அல்லது அயலிலுள்ள ஏதேனும் காணியின் மீது அவற்றை வைத்தலும், அந்த நோக்கத்துக்காக அவசியமாகக் கூடியவாறான அத்தகைய ஆட்களுடனும், விலங்குகளுடனும் சாதனங்களுடனும் ஏதேனும் காணிக்குட் பிரவேசித்து அத்தகைய மரங்களை, புதர்களை, பற்றைகளை, இலைகளை, கிளைகளை அல்லது வேர்களை வெட்டுவதற்கு, தறிப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லாக் காரியங்களையும் அங்கு செய்வதற்கு முற்படுதலும் சட்டமுறையானதாதல் வேண்டும் :

ஆயின், தகுந்த அலுவலரால் அத்தகைய ஏதேனும் காணியின் மீது வைக்கப்படும் மரங்கள், புதர்கள் அல்லது பற்றைகள் யாவும் மரங்களின் இலைகள், கிளைகள் அல்லது வேர்கள் யாவும் நியாய மான ஒரு காலத்துக்குள் அத்தகைய காணியிலிருந்து அவரால் அகற்றப்படுதல் வேண்டும்.

**வேலிகளைக் கட்டுவதற்கான தத்துவம்.**

**44.** பிரதேச சபையின் தகுந்த அலுவலருக்குப் பிரதேச சபையின் எல்லைகளுக்குள் உள்ள ஏதேனும் பொது வழிக்குப் பக்கத்தில் வேலி களை, புதர் வேலிகளை, நீர்வடிகால்களை, வடிகால்களை அல்லது வரப்புகளை, அவசியமானதாக இருக்க வேண்டுமென அவருக்குத் தோன்றும் போதிலெல்லாம், கட்டுதல் அல்லது அமைத்தல் சட்ட முறையானதாதல் வேண்டும். அத்துடன் அத்தகைய வேலிகளை, புதர்வேலிகளை, நீர்வடிகால்களை, வடிகால்களை அல்லது வரப்புகளை அடுத்துள்ள ஒவ்வொரு காணியினதும் சொந்தக்காரர் அல்லது இருப் பாட்சியாளர் அவற்றை நன்றாகவும் உறுதியாகவும் பழுதுபார்க்கப்பட்ட நிலையிலும் வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு வைத் திருப்பதற்கும் இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

**நீர்வடிகால்கள் முதலியவற்றை அமைத்து, திறந்துவைப்பதற் கும் வடிநீர்க் குழாய்கள் முதலியவற்றை இடுவதற்குமான தத்துவம்.**

**45.** பிரதேச சபையின் தகுந்த அலுவலர் பிரதேச சபை எல்லை களுக்குள் உள்ள பொதுவழிக்கூடாக இருக்கும் நீர்வடிகால்கள், பீலிகள், வடிகால்கள் அல்லது நீர்வழிகள் யாவற்றையும் அமைப்பதற்கும், பாதுகாப்பாக வைத்திருப்பதற்கும், துப்புர வாக்குவதற்கும், திறந்து வைத்திருப்பதற்குமான தத் துவத்தையும், மேலும் அத்தகைய பொதுவழிக்கு அல்லது முன்னைப்பட்ட பொதுவழிக்கு அடுத்துள்ள அல்லது அண்மையிலுள்ள எவையேனும் காணிகளில் அல்லது நிலங்களில் அல்லது காணிகளின் அல்லது நிலங்களினூடாக ஏதேனும் பொதுவழியின் அல்லது முன்னைப் பட்ட பொதுவழியில் பாதுகாப்புக்கு, பேணுகைக்கு, சீர்திருத்தத் துக்கு, பழுதுபார்த்தலுக்கு அல்லது நிருமாணத்துக்கு அவசியமான தான அத்தகைய வடிகால்களை, நீர்வழிகளை, வடிநீர்க் குழாய்களை, சுரங்கங்களை, திடல்களை அல்லது பாலங்களைச் செய்து இடுவதற்கான தத்துவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**கற்கள் முதலியவற்றை இடுவதற்கான தத்துவம்.**

**46.** பிரதேச சபையின் தகுந்த அலுவலர், பிரதேச சபையின் எல்லைகளுக்குள்ள ஏதேனும் பொது வழியின்மீது ஏதேனும் கற்குவியலை அல்லது சரளைக்கற்குவியலை அல்லது ஏதேனும் மரக்கட் டையை அல்லது எத்தகையதுமான ஏதேனும் பொருளை அல்லது சாமானை இடுவதற்கு அல்லது அத்தகைய வீதி பழுதுபார்க்கப்படும் காலத்தின்போதும், அத்தகைய பழுதுபார்த்தல்களைச் செய்வதற்கு இயலுமானதாக்குவதற்காக அல்லது அத்தகையவாறு அண்மையில் பழுதுபார்க்கப்பட்ட வீதிக்குச் சேதம் ஏற்படுவதனைத் தடுப்பதற்காக அவசியமாகக்கூடியவாறாக பழுதுபார்த்தல்கள் தொடங்கப்படுமுன்ன ரும், பழுதுபார்த்தல்கள் முடிவுற்றதன் பின்னருமான அத்தகைய காலத்துக்கும் அத்தகைய பொருளை அங்கிருக்க அனுமதிப்பதற்குத் தத்துவமுடையவராதல் வேண்டும்; ஆனால் அத்தகைய வீதியினூ டாகச் செல்லும் ஆட்களுக்கு அபாயம் அல்லது ஊறு ஏற்படுவதைத் தடுப்பதற்கான உரியதும் நியாயமானதுமான முற்காப்பை அவர் எடுத்தல் வேண்டும்.

## பொதுவழிகளினூடாகவுள்ள கட்டடங்கள்

ஒரு பொதுவழியினூடாக முன்னப்பட்ட கட்டடம் பற்றிய அறிவித்தல்.

**47.** (1) எதேனும் பிரதேச சபையினது எல்லைகளுக்குள்ள எதேனும் பொதுவழியினூடாக அந்த இடப்பரப்பின் பிரதேச சபைக்கு ஒரு பஞ்சாங்க மாத முன்னறிவித்தலை எழுத்தில் கொடுக்காது எதேனும் கட்டடத்தை, எல்லைச் சுவரை, வாசலை அல்லது வேலியைத் தொடங்குதல் அல்லது அத்தகைய எதேனும் கட்டடத்தை, எல்லைச் சுவரை அல்லது வாசலைத் தொடங்கும் அல்லது பழுதுபார்க்கும் நோக்கத்துக்காக அத்தகைய எதேனும் பொதுவழியின் மீது எதேனும் தற்காலிக வேலியை அல்லது அடைப்பை நிறுவுதல் எவரேனும் ஆளுக்குச் சட்டமுறையானதாதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவினால் விதித்துரைக்கப்பட்ட அறிவித்தலைக் கொடுப்பதற்கு அசட்டை செய்கின்ற அல்லது இந்த உட்பிரிவின்கீழ் பிரதேச சபையினால் அத்தகைய அறிவித்தலின்றி நிறுவப்பட்ட எதேனும் கட்டடத்தை, எல்லைச் சுவரை, வாசலை, வேலியை அகற்றி விடுமாறு எழுத்தில் அவர் தேவைப்படுத்தப்படும்போது அவ்வாறு அகற்றுவதற்கு அசட்டை செய்கின்ற ஆளெவரும், ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றினாலும், மேற்சொல்லப்பட்டவாறு அகற்றுவதற்கு அவர் தேவைப்படுத்தப்பட்டதன் பின்னர் அத்தகைய கட்டடத்தை, எல்லைச்சுவரை, வாசலை அல்லது வேலியை அங்கிருப்பதற்கு அவர் விட்டுவிடுகின்ற அல்லது அனுமதிக்கின்ற ஒவ்வொரு நாளுக்கும் இருபது ரூபாவை விஞ்சாத மேலதிகக் குற்றப்பணமொன்றினாலும் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவினால் விதித்துரைக்கப்பட்ட அறிவித்தலின்றித் தொடங்கப்பட்ட அல்லது நிறுவப்பட்ட எதேனும் கட்டடத்தை, எல்லைச் சுவரை, வாசலை வேலியை அல்லது அடைப்பை அகற்றுதலும் அல்லது அகற்றுவித்தலும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள செலவுதொகைகளின் அறவீட்டுக்கென 59 ஆம் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் அத்தகைய அகற்றுகைக்கான செலவுதொகைகளை அறவிடுதலும் பிரதேச சபைக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் அத்தகைய கட்டடம், எல்லைச்சுவர், வாசல், வேலி அல்லது அடைப்பு தொடர்பில் கொடுக்கப்பட்ட அறிவித்தலின் மீது பிரதேச சபையினால் நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படாதிருப்பது எது எவ்வாறிருப்பனும், பொதுவழியொன்றின் மீதான அத்துமீறுகையொன்றாக இருப்பதாக அடுத்துப்பின்னர் கண்டுபிடிக்கப்படக்கூடியதான அத்தகைய எதேனும் கட்டடத்தை, எல்லைச்சுவரை வாசலை, வேலியை அல்லது அடைப்பை அகற்றுவதற்காக அத்தகைய பிரதேச சபைக்கு இதனகத்துப்பின்னர் அளிக்கப்பட்ட, பிரதேச சபை எதனதும் தத்துவத்தை பாதிப்பதாக இதிலடங்கியுள்ள எதுவும் கருதப்படுதலாகாது.

தற்காலிக வேலிகளையும் அடைப்புகளையும் நிறுவுதல்.

**48.** (1) அதற்கென முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் பகிரங்க அலுவலர் பகிரங்க சேவைக்காக எதேனும் பொதுவழியின் எதேனும் பாகத்தைத் தற்காலிகமாகப் பயன்படுத்துவதிலிருந்து அவரைத் தடுப்பதாக அல்லது—

(அ) அத்தகைய அடைப்புகளின் நீளம், அகலம், உயரம் ;

(ஆ) பொதுவழியனூடாகச் செல்வதற்கு வண்டிகளுக்கும் வண்டில்களுக்கும் அல்லது படகுகளுக்கும் அனுமதிக்கப்படவுள்ள இடவசதி ; அத்துடன்

(இ) அத்தகைய உரிமத்தைப் பெறும் ஆளால் வேலி அல்லது அடைப்பு பேணப்படும் அல்லது தொடர்ந்து வைத்திருக்கப்படும் காலம் முழுவதிலும், ஒவ்வொரு நாளும் சூரியன் மறைவதற்கும் சூரிய உதயத்துக்கும் இடையில் வேலியின் அல்லது அடைப்பின் அல்லது அதனால் ஏற்படுத்தப்படும் ஏதேனும் முட்டுக்கட்டையின் சரியான அமைவிடத்தைத் தெளிவாகக் காட்டுவதற்குப் போதுமான வெளிச்சமொன்றை அத்தகைய ஆள் வெளிக்காட்டி வைத்தல்

ஆகியன பற்றிய நிபந்தனைகள் உட்பட பிரதேச சபை முறையானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நியதிகளினதும் நிபந்தனைகளினதும் மீது, பிரதேச சபை இடப்பரப்பில் வதிவோர் தமது வீடுகளையும் மற்றைய கட்டடங்களையும் கட்டுவது, உடைத்தெடுப்பது அல்லது பழுதுபார்ப்பது தொடர்பாக ஏதேனும் பொது வழியின் மீது தற்காலிக வேலிகளை அல்லது அடைப்புகளை நிறுவுவதற்காக அல்லது அந்த இடப்பரப்புக்குள் தற்காலிக அலங்காரங்களைச் செய்வதற்காக அவர்களுக்கு உரிமமொன்றை வழங்குவதிலிருந்து ஏதேனும் இடப்பரப்பின் பிரதேச சபையைத் தடுப்பதற்காக 47 ஆம் பிரிவில் அடங்கியுள்ள எதுவும் பொருள் கொள்ளப்படுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றை வைத்திருப்பவரும் அத்தகைய உரிமத்தின் நிபந்தனைகள் எவற்றினதும் மீறுகையொன்றைப் புரிகின்றவருமான ஒவ்வொருவரும், அத்துடன் அத்தகைய உரிமத்தின் நிபந்தனைகளினது தேவைப்பாடுகளுக்கிணங்க இடப்பட்டு வைத்திருக்கப்படும் எதனேனும் வெளிச்சத்தை அகற்றுகின்ற அல்லது அணைக்கின்ற ஆள் ஒவ்வொருவரும் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றினால் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றுக்குக்குற்றவாளியாதல் வேண்டும்.

49. வீடமைப்பு நகர சீர்திருத்தக் கட்டளைச்சட்டத்தில் அல்லது வேறுசட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் ஆளெவருக்கும் பின்வருவனவற்றைச் செய்தல் சட்டமுறையானதாதலாகாது :— **வீதிகள் நெறியிலும் கட்டடவரையறைகள்.**

(அ) ஏதேனும் பிரதேச சபை இடப்பரப்புக்குள் வாகனப் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படுவதும் அல்லது வாகனப் போக்குவரத்துக்கென முன்னப்பட்டதும், இச் சட்டத்தின்கீழ் அல்லது வீடமைப்பு, நகர சீர்திருத்தக் கட்டளைச்சட்டத்தின்கீழ் எந்த வீதி தொடர்பில் அகலத்தில் ஐம்பது அடிக்கு மேற்பட்ட பாதையொன்றுக்காக ஏற்பாடுசெய்யும் தெருஎல்லைக்கோடுகள் வரையறுக்கப்படவில்லையோ, அந்த வீதியாக இருப்பதுமான ஏதேனும் வீதியின் மத்தியிலிருந்து இருபத்தைந்து அடிகொண்ட வரம்பொன்றுக்குள் (இது இதனகத்

துப்பின்னர் " கட்டடவரம்பு " எனக் குறிப்பீடு செய்யப் படும்) எதேனும் கட்டடத்தை, எல்லேச்சுவரை அல்லது வாசலே நிறுவுதல் ;

ஆயின், எவ்வாருயினும், எக்காணியில் எல்லேச்சுவர் அல்லது வாசல் ஒன்று அமைந்திருக்கின்றதோ அக்காணி பகிரங்க நோக்கங்களுக்காகத் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் அத்தகைய எல்லேச் சுவர் அல்லது வாசல் தொடர்பில் நட்டஈடு எதுவும் செலுத்தப்படற்பாலதாகாதென வளவுகளின் சொந்தக்காரர்கள் பொறுப்பேற்பு ஒன்றை எழுதி நிறைவேற்றுதல் வேண்டுமென்ற நிபந்தனேயின்மீது அத்தகைய எல்லேச் சுவர் அல்லது வாசல் நிறுவப்படுவதை அதிகாரமளிப்பதற்கு பிரதேச சபை தத்துவமுடையதாதல் வேண்டும் ; அல்லது

(ஆ) பிரதேச சபையினுல் வழங்கப்படும் உரிம மொன்றின் அதிகாரத்தின் கீழன்றி, அத்தகைய எல்லேக்குள் அத்தகைய எதேனும் கட்டடத்தை, எல்லேச்சுவரை அல்லது வாசலே மீள நிறுவுதல் அல்லது அதற்கு சேர்மானங்கள் எவற்றையும் அமைத்தல் :

ஆயின் இவ்வுட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், பிரதேச சபையை அமைக்கும் தேதியன்று இருக்கும் எதேனும் கட்டடத்துக்கு, எல்லேச்சுவருக்கு அல்லது வாசலுக்குச் செய்யப்படும் எதேனும் பழுதுபார்த்தலுக்கு அல்லது பின்வரும் விடயத்தில், அதாவது—

(i) பாதசாரிகளுக்கு மாத்திரமே முன்னப்பட்டதும் அகலத்தில் இருபத்தைந்து அடிக்குக் குறையாததுமான எதேனும் தெருவின் விடயத்தில் ; அல்லது

(ii) குப்பை பெருக்கும் அல்லது மலசலமகற்றும் நோக்கங்களுக்காக அல்லது வேறு சிறப்பான சுகாதார நோக்கத்துக்காக மாத்திரமே முன்னப்பட்டதும் அகலத்தில் பத்து அடிக்குக் குறையாததுமான எதேனும் பின் ஒழுங்கையின் அல்லது வேறு சேவை இடைவெளியின் விடயத்தில்,

அத்தகைய தெரு, ஒழுங்கை அல்லது இடைவெளி, பிரதேச சபையினுல் வரையறுக்கப்பட்டிருக்குமிடத்து அல்லது அங்கீகரிக்கப்பட்டிருக்குமிடத்து ஏற்புடையதாதலாகாது.

இந்த உட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் நோக்கத்துக்காக "பழுதுபார்த்தல்கள்" என்பது மீள நிறுவும் அல்லது மீள நிருமாணிக்கும் அல்லது புதிய பாகம் எதனேயும் சேர்க்கும் எதேனும் வேலேயை உள்ளடக்குவதாகக் கருதப்படுதலாகாது.

கட்டட வரம்புவின் எல்லை வரையறுத்தல்.

**50.** (1) ஒவ்வொரு பிரதேச சபையும் அது அமைக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் மூன்றாண்டுகளுக்குள் அல்லது ஏதேனும் விடயத்தின் சிறப்பான சந்தருப்பங்களில் அமைச்சரால் அனுமதிக்கப்படக் கூடியவாறான அத்தகைய மேலுமொரு காலப்பகுதிக்குள் அல்லது அமைச்சரின் பணிப்பின்மீதும் அவர் அனுமதிக்கக்கூடிய அத்தகைய காலப்பகுதி ஏதேனும் இருப்பின் அத்தகைய காலப்பகுதிக்குள்ளும்—

(அ) 49 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு வீதியின் மேலும் அப்பிரிவால் விதித்துரைக்கப்பட்ட கட்டவரம்பை நிரந்தரமான குறிகளின் மூலம் எல்லைவரையறுத்தல்;

(ஆ) கட்டட வரம்பு அவ்வாறு எல்லைவரையறுக்கப்பட்டதான ஒவ்வொரு வீதியினதும் விடயத்தில் அத்தகைய வரம்பிற்குள் அமைந்திருக்கின்ற அல்லது நீட்டிக் கொண்டிருக்கின்ற கட்டடம், எல்லைச் சுவர் அல்லது வாசல் அல்லது அவற்றின் பாகம் ஒவ்வொன்றினதும் பெறுமதியை நிச்சயித்துப்பதிதல்; அத்துடன்

(இ) கட்டட வரம்பு எல்லைவரையறுக்கப்படாத ஏதேனும் வீதியின் விடயத்தில், ஏதேனும் மீள நிறுவுகையின் அல்லது சேர்ப்பின் நோக்கங்களுக்காக 49 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபையினால் உரிமமொன்று வழங்கப்பட்டதான கட்டடம், எல்லைச்சுவர் அல்லது வாசல் ஒவ்வொன்றினதும் பெறுமதியை நிச்சயித்துப் பதிதல்,

அதனது கடமையாகவிருத்தல் வேண்டும்.

(2) ஏதேனும் கட்டடத்தின், எல்லைச்சுவரின், அல்லது வாசலின் பெறுமதியானது (1) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக—

(அ) பிரதேச சபைக்கும் கட்டடத்தின், எல்லைச்சுவரின் அல்லது வாசலின் சொந்தக்காரருக்கும் அல்லது சொந்தக்காரர்களுக்கும் இடையிலான உடன்படிக்கை மூலம் நிருணயிக்கப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) உடன்படிக்கை மூலம் அவ்வாறு அது நிருணயிக்கப்படாதவிடத்து கட்டிடத்தின், எல்லைச்சுவரின் அல்லது வாசலின் சொந்தக்காரரால் அல்லது சொந்தக்காரர்களால் பெயர் குறித்து நியமிக்கப்படும் ஒருவரையும், பிரதேச சபையினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் மற்றவரையும் கொண்ட இரு நடுவர்களினாலான நடுத்தீர்ப்பால், அல்லது சொல்லப்பட்ட பெறுமதி பற்றி அத்தகைய நடுவர்கள் உடன்படாவிடின், இரு நடுவர்களாலும் கூட்டாகத் தெரிவு செய்யப்படும், ஒரு நடுநிலையாளரால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் கட்டடத்தின், எல்லைச்சுவரின் அல்லது வாசலின் அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தின் பெறுமதியை (2) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காகத் தீர்மானிக்கையில் பின்வரும் நெறிகள் பின்பற்றப்படுதல் வேண்டும்:—

(அ) எந்தக் கட்டடத்தை, எல்லைச்சுவரை அல்லது வாசலை அல்லது அவற்றின் பாகத்தை அகற்றுதல், எஞ்சியிருக்கும் பாகத்

தைப் பயனற்றதாக்குமோ, அந்தக் கட்டடம், எல்லைச்சுவர் அல்லது வாசல் அல்லது அவற்றின் பாகம் ஏதேனும் வீதியின் கட்டட வரம்புக்குள் அமைந்துள்ளவிடத்தும், அத்துடன் அக்காரணத்துக்காக வீதியை விசாலிக்கும் நேரத்தில் முழுக் கட்டிடத்தையும், எல்லைச் சுவரையும் அல்லது வாசலையும் அகற்றுவது அவசியமாகுமிடத்தும் முழுக் கட்டடத்தினதும், எல்லைச்சுவரினதும் அல்லது வாசலினதும் பெறுமதி தீர்மானிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய பெறுமதியானது, கட்டடவரம்பை எல்லைவரையறுக்கும் நேரத்தில், வளவுகளின் சந்தைப் பெறுமதிக்கும், அதாவது அவற்றுடன் இணைப்புற்றுள்ள காணியுடன் சேர்த்து கட்டடத்தின் எல்லைச் சுவரின் அல்லது வாசலின் சந்தைப் பெறுமதிக்கும் கட்டடத்தில், எல்லைச்சுவரில் அல்லது வாசலில் இருந்து தனிவேறானதாக அந்நேரத்தில் காணிக்குள்ள சந்தைப் பெறுமதிக்கும் இடைப்பட்ட வித்தியாசமாகவிருத்தல் வேண்டும் ;

(ஆ) கட்டடம், எல்லைச்சுவர் அல்லது வாசல் ஒன்றின் பாகமொன்று மாத்திரம் ஏதேனும் வீதியின் கட்டட வரம்புக்குள் அமைந்து, அத்தகைய பாகத்தைப் பிரித்து அல்லது அகற்றிவிடுவதன் பின்னர் எஞ்சியிருக்கும் பாகம் ஒன்றில் கட்டடத்தின், எல்லைச்சுவரின் அல்லது வாசலின் ஆரம்ப நோக்கத்துக்கு அல்லது சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட வேறேதேனும் நோக்கத்துக்கு மாற்றியமைக்கக்கூடியதாக இருக்குமிடத்து, கட்டட வரம்புக்குள் இருக்கும் பாகத்தின் பெறுமதி மாத்திரமே தீர்மானிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய பெறுமதியானது—

(i) கட்டடத்தின், எல்லைச்சுவரின் அல்லது வாசலின் அப்பாகத்தைப் பிரிப்பதற்காக அல்லது அகற்றுவதற்காக மதிப்பிடப்பட்ட செலவினதும் ; அத்துடன்

(ii) கட்டடமொன்றின் விடயத்தில், கட்டடவரம்பை எல்லைவரையறுத்த நேரத்தில் எந்த நோக்கத்துக்காகக் கட்டடம் பயன்படுத்தப்பட்டதோ அந்த நோக்கத்துக்காக அப்போதும் தொடர்ந்துமிருக்கும் கட்டடத்தின் பாகத்தை மாற்றியமைப்பதற்காகவும் அத்துடன் எல்லைச்சுவர் அல்லது வாசல் ஒன்றின் விடயத்தில், அவசியமாகக்கூடியவாறான அத்தகைய சேர்ப்புக்களை அல்லது பழுதுபார்த்தல்களை முடிப்பதற்காகவும் மதிப்பிடப்பட்ட செலவினதும்,

கூட்டுமொத்தமாக இருத்தல் வேண்டும்.

(iii) ஏதேனும் வீதியின் மீது கட்டட வரம்பை எல்லைவரையறுத்த நேரத்தில் ஏதேனும் கட்டிடத்தின், எல்லைச்சுவரின் அல்லது வாசலின் பெறுமதி, பிரதேச சபை அமைக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் கட்டிடத்தில், எல்லைச்சுவரில் அல்லது வாசலில் செய்யப்பட்ட ஏதேனும் மாற்றத்தினால் அல்லது

சீர்திருத்தத்தினால் அதிகரித்திருப்பதாகக் காணப் படுமிடத்து, அப்போது, மாற்றம் அல்லது சீர்திருத் தம் 49 ஆம் பிரிவின் கீழான உரிமையொன்றினால் அதிகாரமளிக்கப்பட்டிருக்கக்கூடும் என்பது எவ்வா றிருப்பினும், கட்டடத்தை, எல்லைச்சுவரை அல்லது வாசலைப் பழுதுபார்க்கப்பட்ட நல்ல நிலையொன்றில் வைத்துப் பேணுவதற்கு மாற்றம் அல்லது சீர் திருத்தம் அவசியமானதாக இருந்திருந்தாலன்றி, அதிகரிப்பின் தொகை கணக்கிலெடுக்கப்படுதலா காது.

(4) ஏதேனும் கட்டடத்தின் எல்லைச்சுவரின் அல்லது வாசலின் அல்லது அவற்றின் பாகத்தின் பெறுமதி தொடர்பில் (2) ஆம் உட்பிரிவின்கீழ், விடயத்திற்கேற்றவாறு ஆக்கப்பட்ட அல்லது செய்து கொள்ளப்பட்ட நடுக்கூற்று அல்லது உடன்படிக்கை ஒவ்வொன்றும் (3) ஆம் உட்பிரிவின் எந்தக் குறிப்பிட்ட பந்தி அல்லது பந்திகளுக்கிணங்க மேலே சொல்லப்பட்ட பெறுமதி நிருணயிக்கப் பட்டதோ அல்லது தீர்மானிக்கப்பட்டதோ, அந்த குறிப்பிட்ட பந்தியை அல்லது பந்திகளைக் குறித்துரைத்தல் வேண்டும்.

(5) இரண்டாம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு நிருணயிக் கப்பட்டதான அல்லது தீர்மானிக்கப்பட்டதான கட்டிட வாம்பிற்குள் அமைந்துள்ள கட்டம், எல்லைச்சுவர், அல்லதுவாசல் அல்லது அவற்றி றின் பாகம் ஒவ்வொன்றினதும் பெறுமதி, எந்த உடன்படிக்கைகள் அல்லது நடுக்கூற்றுக்கள் மூலம் அவ்வாறு பதியப்பட்ட பெறுமதி சரியென உறுதிப்படுத்தப்படக்கூடுமோ அந்த எல்லா உடன்படிக்கை களுடன் அல்லது நடுக்கூற்றுக்களுடன் சேர்த்து பிரதேச சபையின் அலுவலகத்தில் பதியப்படுதல் வேண்டும்.

(6) ஏதேனும் வீதியின் கட்டட வரம்பை எல்லைவரையறுக்கும் நோக்கத்துக்காகப் பிரதேச சபையின் எவரேனும் அலுவலருக்கு, சேவையாளருக்கு அல்லது வேலையாளுக்கு வீதியை அடுத்துள்ள ஏதேனும் தனியார் காணிக்குட் பிரவேசித்தலும், காணிக்கு இயன் றளவு ஆகக் குறைந்த சேதமே ஏற்படுகின்றதென்பதை உறுதிப் படுத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா முற்காப்புகளையும் எடுத்து, வசதியான இடங்களில், நிரந்தரமான குறிகளை நிறுவுதலும் சட்டமுறையானதாதல் வேண்டும். இவ்வாறு ஏற்படும் ஏதேனும் சேதத்துக்காகப் பிரதேச சபையால் நட்ட ஈடு செலுத்தப்படுதல் வேண்டும்.

(7) ஏதேனும் வீதியின் கட்டட வரம்பு, இப்பிரிவின்கீழ் எல்லை வரையறுக்கப்படுகின்றவிடத்து, வீதியினூடாக கட்டட வசதிகளைக் கொடுக்கும் நோக்கத்துக்காக அத்தகைய கட்டட வரம்புக்குள் உள் ளடக்கப்படாத வீதியின் ஏதேனும் பாகத்தை வாடகைக்கு விடுவதி லிருந்து அல்லது குத்தகைக்குக் கொடுப்பதிலிருந்து அல்லது ஏதே னும் பகிரங்க நோக்கத்துக்காக அத்தகைய ஏதேனும் பாகத்தைப் பயன்படுத்துவதிலிருந்து அல்லது பயன்படுத்த அனுமதிப்பதிலிருந்து பிரதேச சபையைத் தடுப்பதாக இச்சட்டத்தின் மற்றைய ஏற்பாடு களில் உள்ள எவையும் கருதப்படலாகாது.

(8) எந்த வீதி தொடர்பாக அகலத்தில் ஐம்பது அடிக்கு மேற்பட்ட பாதை வழியொன்றுக்காக ஏற்பாடு செய்யும் தெரு எல்லைக் கோடுகள் இச்சட்டத்தின் கீழ் அல்லது வீடமைப்பு, நகர சீர்திருத்தக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளனவோ அந்த ஏதேனும் வீதிக்கு அல்லது வீதியின் விடயத்தில் இப்பிரிவிலுள்ள எதுவும் ஏற்புடையதாகாது.

**49 ஆம் பிரிவின் கீழான எல்லா உரிமங்களுக்கும் இணைக்கப்பட வேண்டியதான நிபந்தனை.**

51. (1) ஏதேனும் வீதியின் கட்ட வரம்பிற்குள் இருக்கும் கட்டடம், எல்லைச்சுவர் அல்லது வாசல் அமைந்துள்ள காணி, வீதியை விசாலிக்கும் நோக்கத்துக்காக எந்நேரத்திலும் கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில், அத்தகைய கட்டடம், எல்லைச்சுவர் அல்லது வாசல் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான நட்டஈடு, 53 ஆம் பிரிவின் ஏற்பாட்டுக்கிணங்கத் தீர்மானிக்கப்படல் வேண்டும் என்பது அத்தகைய கட்டடம், எல்லைச்சுவர், வாசல் எதனையும் மீள நிறுவுவதற்காக அல்லது அவற்றுக்கு எதனையும் சேர்ப்பதற்காக 49 ஆம் பிரிவின்கீழ் பிரதேச சபையொன்றினால் வழங்கப்படும் உரிமமொன்றின் நிபந்தனையாகவிருத்தல் வேண்டும்.

(2) (அ) ஓராம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள விவரணத்தின் நிபந்தனையொன்றை உள்ளடக்கிய ஒவ்வோர் உரிமத்தினதும் அத்துடன் அந் நிபந்தனை எந்தக் காணி மற்றும் கட்டிடம், எல்லைச்சுவர் அல்லது வாசல் தொடர்பிலானதோ அந்தக் காணியினதும் கட்டிடத்தினதும், எல்லைச் சுவரினதும் அல்லது வாசலினதும் பூரண விவரங்கள், பிரதேச சபையின் அலுவலகத்தில் அந்நோக்கத்திற்கென வைத்திருக்கப்படவேண்டியதான இடாப்பொன்றில் பிரதேச சபையால் பதியப்படுதல் வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு காணி அத்துடன் கட்டிடம், எல்லைச்சுவர் அல்லது வாசல் தொடர்பில் அவ்வாறு செய்யப்பட்ட பதிவினதும் அத்துடன் அவை தொடர்பிலான உரிமத்தின் நிபந்தனையினதும் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றை காணிப் பதிவாளரின் அலுவலகத்தில் பதிவு செய்வித்தலும் வேண்டும். காணிப் பதிவாளர் எதுவித அறவீடோ தீர்வையோ இன்றி அத்தகைய எல்லாப் பிரதிகளையும் பதிவு செய்தல் வேண்டும்.

(ஆ) இவ்வுட்பிரிவின் கீழான ஏதேனும் பதிவு, பதிவு செய்யப்படுவதன் மேல், அத்தகைய பதிவில் தரப்பட்டுள்ள உரிமத்தின் நிபந்தனையானது, காணி அல்லது கட்டிடம் அல்லது எல்லைச் சுவர் அல்லது வாசல் அத்தகைய நிபந்தனையின் தாறபரியத்துக்கிணங்க ஏதேனும் நேரத்திலேனும் எவருடைய சொத்தாண்மைக்கு அல்லது ஆட்சியுடைமைக்கு வந்துசேரினும், அதனால் பயனுறுத்தப்பட்ட அத்தகைய காணியின் அல்லது கட்டிடத்தின் அல்லது எல்லைச் சுவரின் அல்லது வாசலின் மீது பிணிப்பதாதல் வேண்டும்.

(இ) பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள இடாப்பு, அலுவல்களைக் கொண்டு நடாத்துவதற்கென அலுவலகம் திறந்திருக்கும்போது எந்நேரத்திலும் அக்கறையுள்ள ஆளெவரும் பார்வையிடுவதற்கு அது கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) மோசடித் தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் இவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் பதிவுக்கு அல்லது பதிவொன்றின் பிரதிக்கு ஏற்புடையனவாதல் ஆகாது.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நிபந்தனைக் கமைவாக, ஏதேனும் கட்டிடத்தை, எல்லைச்சுவரை அல்லது வாசலை மீள நிறுவுவதற்கு அல்லது அதனுடன் சேர்ப்புகள் செய்வதற்கு வேறுவகையில் உரித்துடையவரான ஆளெவரும், 49 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட கட்டிட வரையறைக்குள்ளாக அத்தகைய கட்டிடத்தை, எல்லைச்சுவரை, அல்லது வாசலை மீள நிறுவுவதற்கான அல்லது அதற்குச் சேர்ப்புகள் செய்வதற்கான உரித்துடையவராதல் வேண்டும் :

ஆயினும், அவ்வாறு மீள நிறுவப்பட்ட அல்லது சேர்ப்புகள் செய்யப்பட்ட கட்டிடத்தின், எல்லைச் சுவரின் அல்லது வாசலின் பாகம் எதுவும் அத்தகைய மீள நிறுவுகையின் அல்லது சேர்ப்பின்மீது அதன் ஆரம்ப நிலையில் நீடித்திருந்ததைக் காட்டிலும் வீதியின் மையத்திற்கு அருகாக நீடித்தல் ஆகாது.

(4) கட்டிடமொன்று தொடர்பில் "மீள நிறுவுதல்" என்னும் சொல்லமைப்பு, கட்டிடத்தின் பாகமாக அமைகின்ற ஏதேனும் சுவரை அல்லது இடித்தழிக்கப்பட்டுள்ளதான அல்லது தரையோடு அல்லது தரையிலிருந்து ஐந்தடி தூரமொன்றுக்குள் வேறுவகையில் அழிக்கப்பட்டுள்ளதான கட்டிடத்திற்கான ஏதேனும் ஆதாரத்தை மீளப் புதுப்பித்தலை உள்ளடக்கும், ஆனால் பிரதேச சபையின் அபிப்பிராயப்படி சுவரை அல்லது ஆதாரத்தைப் பழுதுபார்த்தல் என நியாயமாகக் கருதப்படக்கூடியதான ஏதேனும் தொழிற்பாட்டை உள்ளடக்கமாட்டாது.

52. ஆளெவரும், 49ஆம் பிரிவின் எவையேனும் ஏற்பாடுகளுக்கு முரணாகப் பிரதேச சபையொன்றின் எல்லைகளுக்குள் ஏதேனும் கட்டிடத்தை, எல்லைச்சுவரை அல்லது வாசலை நிறுவினால் அல்லது மீள நிறுவினால் அல்லது ஏதேனும் கட்டிடத்திற்கு, எல்லைச் சுவருக்கு அல்லது வாசலுக்கு சேர்ப்பு எதனையும் செய்தால் அத்தகைய கட்டிடத்தை, எல்லைச் சுவரை அல்லது வாசலை எவரேனும் அலுவலர் மூலம் அல்லது சேவையாளர் மூலம் இடித்தழிப்பதற்கு அல்லது அகற்றுவதற்குப் பிரதேச சபை உரித்துடையதாதல் வேண்டும் என்பதுடன், அந்நோக்கத்துக்கெனப் பொதுவழியொன்றின்மீது ஏதேனும் தடையை அல்லது சேர்த்தெல்லையிடலை அல்லது உத்தேசிக்கப்பட்ட தடையை அல்லது சேர்த்தெல்லையிடலைத் தணிக்கும் அல்லது அகற்றும் நோக்கங்களுக்கென இப்பாகத்தால் பிரதேச சபையொன்றுக்கு உரித்தாக்கப்பட்டதான நுழைவதற்கும், நில அளவை செய்வதற்குமான அதே உரிமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அகற்றுவதற்கும், தணிப்பதற்கும், செலவுகளை அறவிடுவதற்குமான அதே தத்துவத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும். அத்துடன் அத்தகைய தடைகள் அல்லது சேர்த்தெல்லையிடல்கள் தொடர்பில் இப்பாகத்தின் எல்லா ஏற்பாடுகளும், அவை ஏற்புடையனவாகக் கூடியவாறான அளவுக்கு, அவசியமாகக் கூடியவாறான அத்தகைய திரிபுகளுடன் அதற்கிணங்க ஏற்புடையனவாதல் வேண்டும்.

*சட்டத்திற்கு முரணாக நிறுவப்படும் கட்டிடத்தை, எல்லைச்சுவரை அல்லது வாசலைக் கையாள்வதற்குப் பிரதேச சபைக்குள்ள தத்துவம்.*

கட்டிடத்தால் அபிவிருத்தி யடைந்த காணி தொடர்பில் நட்ட ஈட்டை மதிப்பீடு செய்வதற்கான நெறிகள்.

**53.** (1) வீதியொன்றின் மீது எல்லைக்குறியிடப்பட்ட கட்டிட எல்லைக்குள்ளாக அமைந்துள்ளதும் அந்தக் கட்டிட எல்லைக்குள்ளாக முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ ஏதேனும் கட்டிடத்தின் நிறுவுகை மூலம் அபிவிருத்தியடைந்துள்ளதுமான ஏதேனும் காணியானது, அவ் வீதியை விசாலிக்கும் நோக்கத்திற்கெனக் கொள்ளப் படுமிடத்து, அத்தகைய விடயத்தில் காணி கொள்ளல் சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான நட்டஈட்டைத் தீர்மானித்தலானது, அச்சட்டத்தில் அடங்கியிருப்பதற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும் பின்வரும் சிறப்பு ஏற்பாடுகளுக்கு அமைந்ததாக இருத்தல் வேண்டும் :—

(அ) பிரதேச சபை அமைக்கப்பட்ட தேதியின் பின்னர் எக்காலத்திலேனும் 49 ஆம் பிரிவுக்கு முரணாக நிறுவப்பட்டுள்ள அல்லது அப்பிரிவால் தேவைப்படுத்தப்பட்ட உரிமமின்றி மீள நிறுவப்பட்டுள்ள அல்லது அதற்கு ஏதுவும் சேர்க்கப்பட்டுள்ள ஏதேனும் கட்டிடம், எல்லைச்சுவர் அல்லது, வாசல் தொடர்பில் நட்டஈடு எதுவும் அனுமதிக்கப் படுதல் ஆகாது ;

(ஆ) காணியில் உள்ள கட்டிடங்கள் நீங்கலாகக் காணிக்குக் குறித்தொதுக்கப்படும் பெறுமதி கொள்ளப்படும் நோத்தில் அக் காணியின் சந்தைப் பெறுமதியாதல் வேண்டும் ;

(இ) காணியானது எவரேனும் ஓராளுக்கு அல்லது ஆட்கள் குழுவுக்குச் சொந்தமான எவையேனும் வளவுகளின் பகுதியொன்றாக மட்டுமே இருக்குமிடத்து—

(i) அத்தகைய வளவுகளின் எஞ்சிய பகுதி கொள்ளப் படவுள்ள கட்டிடத்தைப் போன்ற அதே இயல்பினதாக இருப்பின் அக்காணிக்குக் குறித்தொதுக்கப்படும் சந்தைப் பெறுமதி வீதி முகப்பொன்றைக் கொண்ட சுற்றயலில் உள்ள அதனை யொத்த காணியின் அப்போதைக்கான பெறுமதியில் அரைவாசியாதல் வேண்டும் ; அத்துடன்

(ii) அத்தகைய வளவுகளின் எஞ்சிய பகுதி (i) ஆம் உபபந்தியில் குறிப்பிடப்பட்ட நோக்கத்திற்குப்போதிய ஆழமுடையதாக இல்லாவிடில் அக்காணிக்குக் குறித்தொதுக்கப்படும் சந்தைப் பெறுமதி, வீதி முகப்பைக் கொண்டிருக்கின்ற சுற்றயலிலுள்ள அதனையொத்த காணியின் அப்போதைக்கான பெறுமதியாதல் வேண்டும் ;

(ஈ) அதே சொந்தக்காரருக்கு அல்லது சொந்தக்காரர்களுக்குச் சொந்தமான வேறு ஏதேனும் காணியின் அல்லது கட்டிடத்தின் பெறுமதியில், அக்காணியைக் கொள்ளுதல் செய்த பின்னர் மேற்கொள்ளப்படும் வீதி விசாலித்தல் அல்லது அதன்கண் அமைந்துள்ள ஏதேனும் கட்டிடம், எல்லைச்சுவர் அல்லது வாசலை இடித்தழித்தல் காரணமாக அதனின்றும் திரளுகின்ற சாத்தியக்கூறையுடைய ஏதேனும் அதிகரிப்பு கருத்திற்கொள்ளப்படுதல் வேண்டும் ;

(உ) கட்டிடத்தின் விடயத்திலாயினுஞ்சரி அல்லது காணியின் விடயத்திலாயினுஞ்சரி கொள்ளலின் கட்டாயத்தன்மை தொடர்பில் மேலதிக நட்டஈடு எதுவும் அனுமதிக்கப்படுதல் ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவின் (இ) (ii) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட விடயத்தில் சொந்தக்காரர் அவரது வளவுகள் முழுவதையும், பிரதேச சபை ஆரம்பத்தில் கொள்ளுதற்கு உத்தேசித்த பகுதி, அப்பந்தியின்கீழ் என்ன வீதப்படி விலைமதிப்பிடப்பட்டதோ அந்த வீதப்படி கொள்ளுமாறு பிரதேச சபையைத் தேவைப்படுத்தும் விருப்பத் தெரிவு உடையவராதல் வேண்டும்.

கட்டிட எல்லைக் குட்பட்ட காணியின் சொந்தக்காரருக் கென அத்துணை காணியைக் கொள்ளுதற்கு பிரதேச சபைக்குள்ள தத்துவம்.

**54.** பிரதேச சபையானது, வீதியொன்றின்மேல் எல்லைக்குறியிடப்பட்ட கட்டிட எல்லையினால் அவ்வீதியை மருவிக்கொண்டிருக்கின்ற ஏதேனும் காணியின் மீது கட்டிடம் கட்டும் உரிமை மட்டுப்படுத்தப்பட்டவரும் அக்காணியின்மீது கட்டிடமொன்றை நிறுவும் விருப்பமுடையவருமான எவரேனும் ஆளின் வேண்டுகோளின்பேரில், முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட அத்தகைய காணியின் பின்புறத்தில் அமைந்துள்ளதும், அத்தகைய மட்டுப்பாடு இல்லாவிடின் அவர் அனுபவித்திருக்கக்கூடிய அதே தன்மையினவான கட்டிட வசதிகளை அவருக்களிப்பதற்குப் போதியளவு பரப்பளவைக் கொண்டுள்ளதுமான ஏதேனும் காணியை அத்தகைய சொந்தக்காரருக்கென அவரது செலவில் கொள்ளலாம். அத்தகைய ஏதேனும் நோக்கத்திற்கெனத் தேவைப்படும் எல்லாக் காணிகளும் பகிரங்க நோக்கமொன்றிற்குத் தேவைப்படும் காணிகளாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன் 53 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய காணியின் விலைமதிப்பீட்டிற்கு ஏற்புடையனவாதல்வேண்டும்.

உரித்துறுதியைக் காண்பிக்குமாறு கோருவதற்குள்ள தத்துவம்.

**55.** (1) பிரதேச சபையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள ஏதேனும் பொது வழியில் அல்லது அத்தகைய வீதியை உடனடுத்துள்ளதும் அரசிற்குச் சொந்தமானதுமான ஏதேனும் கழிவு நிலத்தில் அல்லது வேறு நிலத்தில் ஏதேனும் கட்டிடம், அடைப்பு அல்லது தடுப்பு எழுப்பப்பட்டுள்ளது அல்லது செய்யப்பட்டுள்ளதென ஏதேனும் பிரதேச சபைக்குத் தோன்றுமிடத்து, அத்தகைய கட்டிடம், அடைப்பு அல்லது தடுப்பு எந்த வளவுகளில் எழுப்பப்பட்டுள்ளதோ அல்லது செய்யப்பட்டுள்ளதோ அந்த வளவுகளின் சொந்தக்காரரென உரிமை கோருகின்ற ஆளுக்குச் சேர்ப்பிக்கப்படும் எழுத்திலான அறிவித்தலின் மூலம், அத்தகைய ஆள் எந்த உறுதியின், ஆவணத்தின் அத்துடன் சாதனத்தின்மீது அத்தகைய உரிமைக் கோரிக்கையை ஆதாரமாகக் கொண்டாரோ அந்த உறுதி, ஆவணம், அத்துடன் சாதனம் ஒவ்வொன்றையும் காண்பிக்குமாறு கோருவது அப்பிரதேச சபைக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) பின்வரும் விடயங்கள் எவற்றிலும், அதாவது—

(அ) எவையேனும் வளவுகளின் இருப்பாட்சியாளர், அவரே சார்த்தப்பெற்ற சொந்தக்காரராக இல்லாதிருந்து, சார்த்தப்பெற்ற சொந்தக்காரரின் பெயர், வதிவிடம் தொடர்பில் முழுத் தகவலைக் கொடுக்குமாறு பிரதேச சபையால் கோரப்படுவதன் மேல் அவ்வாறு கொடுக்கத் தவறுகின்றவிடத்து ; அல்லது

(ஆ) எவையேனும் வளவுகளின் சார்த்தப்பெற்ற சொந்தக்காரர் அவ்வளவுகளுக்கு அவரது உரிமைக்கோரிக்கையை ஆதாரமாகக் கொண்டிருப்பதும் அவரது உடைமையிலிருப்பதுமான ஒவ்வோர் உறுதியையும் ஆவணத்தையும், சாதனத்தையும் காண்பிக்குமாறு கோரப்பட்டதன்பின்னர் பத்து நாட்களுக்குள்ளாக அவ்வாறு காட்ட மறுக்கின்ற விடத்து ; அல்லது

(இ) எவையேனும் வளவுகளின் சார்த்தப்பெற்ற சொந்தக்காரர், அத்தகைய ஏதேனும் உறுதியை, ஆவணத்தை அல்லது சாதனத்தை உடைமையில் கொண்டிராதவராயிருந்து, அது எந்த ஆளின் உடைமையில் இருக்கின்றதோ அந்த ஆளின் பெயர் அத்துடன் வதிவிடம் பற்றிய முழுத் தகவலையும், பிரதேச சபைக்குக் கொடுக்குமாறு கோரப்பட்டதன்மேல் அவ்வாறு கொடுக்கத்தவறுகின்ற விடத்து ; அல்லது

(ஈ) அத்தகைய ஏதேனும் உறுதியை, ஆவணத்தை அல்லது சாதனத்தை அவரது உடைமையில் வைத்திருக்கும் எவரேனும் ஆள், அதனைக் காண்பிக்குமாறு பிரதேச சபையால் எழுத்தில் கோரப்பட்டதன் பின்னர் பத்து நாட்களுக்குள்ளாக அதனைக் காட்ட மறுக்கின்றவிடத்து,

அவ்வாறு மறுக்கின்ற அத்தகைய இருப்பாட்சியாளர், சார்த்தப்பெற்ற சொந்தக்காரர் அல்லது ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

உறுதியைக் காண்பிக்குமாறு கோருதல், அதனை பரிசீலிப்பதற்கான தத்துவத்தையும் உள்ளடக்கும்.

56. (1) எந்த உறுதி, ஆவணம் அல்லது சாதனம் 55 ஆம் பிரிவின் கீழ் காட்டப்படவேண்டுமெனப் பிரதேச சபையொன்றினால் கோரப்படுகின்றதோ அந்த உறுதி, ஆவணம் அல்லது சாதனம் ஒவ்வொன்றும் அது எந்த வளவுகள் தொடர்பிலானதோ அந்த வளவுகளில் அல்லது பிரதேச சபை தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய வேறு இடத்தில் காட்டப்படுதல் வேண்டும் என்பதுடன் அதனைக் காண்பிக்குமாறு கோருவதற்கு அப்பிரிவினால் வழங்கப்பட்ட தத்துவமானது அத்தகைய உறுதிகளையும், ஆவணங்களையும் சாதனங்களையும் பரிசீலனை செய்வதற்கும் அவசியப்படக் கூடியவாறு அவற்றின் பிரதிகளை எடுப்பதற்குமான தத்துவத்தையும் உள்ளடக்குதல் வேண்டும்.

(2) ஏதேனும் உறுதியை, ஆவணத்தை அல்லது சாதனத்தைப் பரிசீலனை செய்வதற்கு அல்லது அதன் பிரதிகளை எடுப்பதற்குப் பிரதேச சபையால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளை அனுமதிப் பதற்கு மறுக்கின்ற அல்லது தவறுகின்ற ஒவ்வோராளும், தவறொன் றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

வளவுகளை நில அளவை செய்வதற்கான தத்துவம்.

**57.** பிரிவு 55 (1) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் விடயத்தில், ஏதேனும் பொது வழியின்மீது அல்லது ஏதேனும் பொது வழியை அடுத்துள்ள ஏதேனும் அரச காணியின்மீது சேர்த்தெல்லையிடுதல் உள்ளதா என ஆராய்ந்தறிவதை பிரதேச சபைக்கு இயலச் செய்வதற்கு அவசியமாகக் கூடியவாறு கட்டிடம், அடைப்பு அல்லது தடை எழுப்பப்பட்டுள்ள அல்லது செய்யப்பட்டுள்ள வளவுகளை நில அளவை செய்தலும் அத்துடன் அத்தகைய நில அளவையின் நோக்கத்திற்கென அத்தகைய வளவுகளினுள்ளேயும் அத்துடன் அவரது அபிப்பிராயப்படி உட்புகுதல் அவசியமானவையு மான அத்தகைய வேறு வளவுகளினுள்ளேயும் நுழைதல் அதற் கெனப் பிரதேச சபையால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக் குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

வெளிப்படையாக ஊடுருவல் செய்வதற்கான உரிமை உண்டெனபதை எண்பிக்கும் பொறுப்பு சொந்தக்காரர் மேலதாகும்.

**58.** (1) பிரதேச சபையின் கட்டுப்பாட்டின்கீழுள்ள ஏதேனும் பொது வழியின்கோடு தகுந்த அதிகாரமின்றி மாற்றப்பட்டுள்ளது அல்லது அளவு நிறுத்தப்பட்டுள்ளது அல்லது தடைசெய்யப்பட்டுள்ளது அல்லது சேர்த்தெல்லையிடப்பட்டுள்ளது என ஏதேனும் பிரதேச சபைக்குத் தோன்றும் பொழுதெல்லாம், பிரதேச சபையானது, எந்தக் காணியிலிருந்து அப்பொதுவழி திருப்பப்பட்டுள்ளதாக சார்த்தப்படுகின்றதோ அல்லது சந்தேகிக்கப்படுகின்றதோ, அல்லது எந்தப் பொதுவழியின்மீது அத்தகைய நிறுத்தம் அல்லது தடை அல்லது சேர்த்தெல்லையிடல் செய்யப்பட்டுள்ளதாகச் சார்த்தப்படு கின்றதோ அல்லது சந்தேகிக்கப்படுகின்றதோ அந்தக் காணியின் இருப்பாட்சியாளருக்கு, பிரதேச சபையின் பணிப்பின் மூலம் அவ்வளவுகளின் நில அளவையொன்று செய்யப்பட்டுள்ளதெனவும் அது, அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஓரிடத்தில் அத்தகைய இருப் பாட்சியாளரால் பார்வையிடப்படுவதற்குத் திறந்திருக்கின்றதெனவும் அத்துடன் அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்டதிலிருந்து ஒரு மாதத்திற் குள்ளாக அவரோ அல்லது அவரின் கீழ் உரிமைகோரும் ஆளோ அத்தகைய காணியின்மீதான அவரது உரித்துரிமையை நிலை நாட்டுவதற்கும் அத்தகைய ஏதேனும் தடை அல்லது சேர்த்தெல்லை யிடல் அகற்றப்படுவதைத் தடுப்பதற்கும் சட்ட நடவடிக்கை எடுத் தாலன்றி, பிரதேச சபையானது 59 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப் பட்ட முறையில் அதனை அகற்ற முற்படும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள்ளாகச் சட்டநடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படாவிடின் அல்லது எடுக்கப் பட்ட நடவடிக்கைகள் முறைப்படி தொடர்ச்சி பண்ணப்படாவிடின், 59 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு ஏதேனும் அத்தகைய தடையை அல்லது சேர்த்தெல்லையிடலை உடனடியாக அகற்றுவித்தல் பிரதேச சபையின் கடமையாதல் வேண்டும்.

(3) சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமிடத்து, எந்தக் காணியிலிருந்து ஏதேனும் பொது வழியின்கோடு மாற்றப்பட்டுள்ளதாக அல்லது திருப்பப்பட்டுள்ளதாகச் சார்த்தப்படுகின்றதோ அல்லது எந்தக் காணியின்மீது நிறுத்தம் அல்லது தடை அல்லது சேர்த்தெல்லையிடல் செய்யப்பட்டுள்ளதாகச் சார்த்தப்படுகின்றதோ அந்தக் காணிக்குச் சொந்தக்காரராக உரிமை கோரும் திறத்தவர், அத்தகைய காணிக்குள்ள அவரது உரித்தை எண்பித்தல் அவரது பொறுப்பாதல் வேண்டும்.

**தடைகளை அல்லது சேர்த்தெல்லையிடல்களை அகற்றுதல்.**

59. (1) பிரதேச சபையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள ஏதேனும் பொதுவழியைத் தடைசெய்கின்ற அல்லது அதன்மீது சேர்த்தெல்லையிடுகின்ற எவரேனும் ஆளுக்கு, தடையை அல்லது சேர்த்தெல்லையிடலை உடனடியாக அகற்றுமாறு அல்லது தணிக்குமாறு பிரதேச சபையால் அதன்பொருட்டு அதிகார மளிக்கப்பட்ட எவரேனும் ஆளின் மூலம் வாய்மூலமாக அல்லது எழுத்திலான அறிவித்தல் மூலம் கட்டளைகள் வழங்குதல் ஏதேனும் பிரதேச சபைக்குச் சட்டமுறையாதல் வேண்டும்; அத்துடன் எந்த ஆளுக்கு அத்தகைய கட்டளை வழங்கப்படுகின்றதோ அந்த ஆள் நியாயமானவொரு காலப் பகுதிக்குள்ளாக அதற்கு இணங்கியொழுக மறுத்தால் அல்லது அசட்டை செய்தால் அத்தகைய தடையில் அல்லது சேர்த்தெல்லையிடலில் நியாயமானவொரு காலப்பகுதிக்கு அத்தகைய அறிவித்தல் ஒட்டப்பட்டிருந்ததன்பின்னர் அத்தகைய கட்டளை கொடுக்கப்படவேண்டிய தகுந்த ஆள் யார் என்பது பற்றிய ஏதேனும் ஐயப்பாடு இருப்பின் அத்தகைய ஏதேனும் தடையை அல்லது சேர்த்தெல்லையிடலை உடனடியாக அகற்றுவிப்பது அல்லது தணிக்கச் செய்வது பிரதேச சபைக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் ஏதேனும் தடையை அல்லது ஊடுருவலை அகற்றும் அல்லது தணிக்கும் நோக்கத்திற்கென, அவசியமாகக் கூடியவாறான அத்தகைய உபகரணங்களுடனும் பொருட்களுடனும் அத்தகைய ஆட்களுடன் சேர்ந்தும் ஏதேனும் வீட்டினுள், தோட்டத்தினுள், அடைப்புக்குள் அல்லது வேறு வளவுகளுக்குள் பிரவேசிப்பதும் அத்துடன் அத்தகைய அகற்றுதலுக்கு அல்லது தணிப்புக்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் அல்லது வழி முறைகளையும் அதன்கண் செய்வதும் அல்லது எடுப்பதும் அல்லது செய்விப்பதும் அல்லது எடுப்பிப்பதும் பிரதேச சபைக்கு அல்லது பிரதேச சபையால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்குக் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(3) ஏதேனும் தடையை அல்லது சேர்த்தெல்லையிடலை அகற்றுவதில் அல்லது தணிப்பதில் பிரதேச சபையால் உறப்பட்ட செலவுகள், எந்த ஆள் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்றுக்கு இணங்கியொழுகத் தவறியதன் காரணமாக அத்தகைய செலவு உறப்பட்டதோ அந்த ஆளினால் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய செலவுகள், கேட்கப்பட்டதன் மீது அத்தகைய ஆளினால் செலுத்தப்படாதவிடத்து, அத்தகைய ஆள் வதியும் இடப்பரப்பின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவான் நீதியன்றத்திற்கு அப்பிரதேச சபையின் தவிசாளரால் சான்றுப் படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் நீதிமன்றத்தினால் விதிக்கப்படும் ஒரு குற்றப்பணம் என்றாற்

போன்று அதே முறையில் நீதிமன்றத்தால் அறவிடப்படுதலும் வேண்டும். அவ்வாறு அறவிடப்படும் எல்லாப் பணங்களும் நீதி மன்றத்தினால் பிரதேச சபை நிதியத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் தடையை அல்லது சேர்த்தெல்லையிடலை அகற்றுதல் அல்லது தணித்தல், அத்தகைய வளவுகளுக்கான உரித்தைப் பயனுறுத்தும் எல்லா உறுதிகளையும் ஆவணங்களையும் சாதனங்களையும் முறைப்படி காண்பித்த பின்னர் பயனுறுத்தப்பட்டிருக்குமிடத்தும் அத்துடன் அத்தகைய வளவுகள் எப்படியெனினும் அவற்றிற்கு உரிமைகோரும் திறத்தவரின் ஆதனமென நீதித் தீர்ப்புக் கூறப் பட்டிருக்குமிடத்தும், அதன் மூலம் ஏற்பட்ட எல்லா இழப்பிற்கும் ஊறுக்கும் பிரதேச சபையிடமிருந்து நட்டஈடு பெற அத்தகைய திறத்தவர் உரித்துடையவராதல் வேண்டும்; ஆனால் அத்தகைய வளவுகளின் சொந்தக்காரரென உரிமைகோருகின்ற திறத்தவர் அத்தகைய எல்லா உறுதிகளையும், ஆவணங்களையும் சாதனங்களையும் காண்பிக்க மறுத்தாலும், அல்லது அசட்டை செய்தாலும் அல்லது அத்தகைய உறுதிகளும் ஆவணங்களும் சாதனங்களும் அதன் பொருட்டு விண்ணப்பிக்கப்பட்ட பின்னர் பத்து நாட்களுக்குள்ளாகக் காண்பிக்கப்படாவிடினும், அத்தகைய ஏதேனும் பிரதேச சபை எப்படியெனினும் அத்தகைய கட்டிடத்தை, அடைப்பை அல்லது ஊடுருவலை அகற்றச் செய்வித்தாலும், அப்போது, அத்தகைய வளவுகள் அதன் சொந்தக்காரரென உரிமை கோருகின்ற திறத்தவரின் ஆதனம் என நீதித்தீர்ப்புக் கூறப்படுகின்ற சந்தருப்பத்தில் அதன் மூலம் விளைவிக்கப்படும் ஏதேனும் இழப்பிற்காக அல்லது ஊறுக்காக அத்தகைய திறத்தவர் ஏதேனும் நட்டஈடுபெற உரித்துடையவராதல் ஆகாது.

### பொது வழிகள் முதலியவற்றிற்கான ஊறுகள்

60. (i) ஏதேனும் பொது வழிக்குச் சொந்தமான அல்லது வீதியமைப்புப் பொருட்களைப் பெறுவதற்கெனத் திறக்கப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட ஏதேனும் குழியில் அல்லது குழியருகில் அல்லது கற்குழியில் அல்லது கற்குழி அருகில் நிறுவப்பட்ட மைல்கல், மைல்கம்பம், எல்லைக்குறியிடற்கல், எல்லைக் குறியிடற் கம்பம், விளக்குக் கம்பம், திசை குறிக்கம்பம் எதனையும் அல்லது பாலம், மதகு, மதில், வளைவு, சுவர், அணைக்கட்டு, வடிகால், மடை, விசைத்தடுப்பு, கரையமைப்பு, முட்டிடம், மணமேடு, ஆதாரம், கம்பம், சாய்தளம், அழியடைப்பு, சங்கிலி அல்லது வேலி எதனையும் வேண்டுமென்று அல்லது அசட்டையாக அழிப்பவரான, பிடுங்குகின்றவரான, உருவழிக்கின்றவரான, வீழ்த்துகின்றவரான, உடைக்கின்றவரான அல்லது ஊறு படுத்துகின்றவரான ; அல்லது மைல்கல், பாலம் முதலியவற்றை அழித்தல்.

(ii) ஏதேனும் பொதுவழி செம்மைப்படுத்தப்படும்போது அதன் பாவனையைத் தற்காலிகமாக, தடைசெய்வதற்கென அல்லது அதன் வழியே செல்லும் ஆட்களுக்கு ஆபத்து அல்லது ஊறு ஏற்படுவதைத் தடைசெய்வதற்கென எவரேனும் தகுதிவாய்ந்த அதிகாரியின் பணிப் பினால் அதன்மீது அல்லது அதில் போடப்பட்ட அல்லது நிறுவப்பட்ட

ஏதேனும், வேலியை, கம்பத்தை, கல்லை, மரக்குற்றியை அல்லது வேறு பொருளை வேண்டுமென்றும் அனுவசியமாகவும் அகற்று கின்றவரான ;

(iii) தகுதிவாய்ந்த அதிகாரியொருவரின் அனுமதியின்றி, ஏதேனும் பொது வழியிலிருந்து எவையேனும் கற்களை, சரளைக் கற்களை, மணலை அல்லது வேறு பொருளை அல்லது ஏதேனும் சேற்றை, அழுக்கை, ஒதுக்கப்பட்ட மணற் குவியலை அல்லது மண்ணைச் சேகரிக்கின்றவரான, குவிக்கின்றவரான அல்லது எடுத்துச் செல்கின்றவரான ;

(iv) பொது வழிக்கு ஊறு விளைவிக்கின்றதான அத்தகைய முறையில் ஏதேனும் யானையை, எருதை, குதிரையை, பன்றியை அல்லது வேறு விலங்கை அல்லது ஏதேனும் வாகனத்தை ஏதேனும் பொது வழியிலிருந்து அல்லது பொது வழிக்கப்பாலிருந்து அல்லது பொது வழிமீது அல்லது பொது வழிக்குள் இட்டுச்செல்கின்றவரான அல்லது செலுத்திச் செல்கின்றவரான அல்லது பொதுவழியை சேதப்படுத்துவதற்கு அத்தகைய விலங்கை அனுமதிக்கின்றவரான ;

(v) எவையேனும் பொது வழிகளையடுத்துள்ள ஏதேனும் காணியின் சொந்தக்காரராக அல்லது இருப்பாட்சியாளராகவிருந்து, அத்தகைய வீதியிலிருந்து அல்லது அதிலிருந்து தொடங்கும் ஏதேனும் பள்ளத்திலிருந்து அல்லது வடிகாலி லிருந்து அவரது காணி ஊடாக அல்லது அதற்குள்ளே செல்லும் நீர் தடை செய்யப்படுவதை அனுமதிக்கின்ற அல்லது ஏதேனும் நீர், அழுக்கு அல்லது வேறு பதார்த்தம் அல்லது பொருள் அத்தகைய காணியிலிருந்து அல்லது வீட்டிலிருந்து அத்தகைய ஏதேனும் பொது வழிக்குள் அல்லது பொதுவழிமீது பாய்வதற்கு அல்லது ஓடுவதற்கு அனுமதிக்கின்ற அல்லது அவரது வீட்டிற்கு அல்லது காணிக்கு எதிரே ஏதேனும் வடிகாலில் அழுக்கின் அல்லது குப்பையின் திரட்சி நீரின் ஓட்டத்தைத் தடைசெய்வதற்கு அனுமதிக்கின்றவரான; அல்லது

(vi) எவையேனும் பொது வழிகளின் ஏதேனும் வடிகால் அல்லது மதகு வழியாக அல்லது வடிகாலிலிருந்து அல்லது மதகிலிருந்து நீர் தடையின்றி ஓடுவதை முன்னரே பிரதேச சபையின் சம்மதத்தைப் பெறாமல் தமது காணியின் மீதான ஏதேனும் செயலின் மூலம் குழப்புகின்றவரான ;

(vii) எவையேனும் பொது வழியின்மீது அது சேதப்படும்படியாக ஏதேனும் மரத்தை, கல்லை அல்லது வேறு பொருளை சில்லுகள் பொருத்தப்பட்ட வண்டியொன்றின் மீதன்றி வேறு வகையில் எடுத்துச் செல்கின்றவரான அல்லது இழுத்துச் செல்கின்றவரான அல்லது சில்லுகள் பொருத்திய வண்டியொன்றின்மீது முழுவதும் அல்லது பகுதியளவில் ஏற்றிச் செல்லப்படும் ஏதேனும் மரம், கல் அல்லது வேறு பொருள் அத்தகைய பொதுவழியின்மீது இழுபடுவதை அல்லது தடம்படிவதை அனுமதிக்கின்றவரான ;

(viii) ஏதேனும் பொது வழிமீது அல்லது ஊடாக அணைக்கட்டு, குழி, வடிகால் அல்லது நீர்வழி எதனையும் செய்கின்றவரான அல்லது செய்விக்கின்றவரான அல்லது வேறு வகையில் அம்மேற்பரப்பை உடைக்கின்றவரான அல்லது ஊறுபடுத்துகின்றவரான ;

(ix) பிரதேச சபையின் அனுமதியின்றி அல்லது அத்தகைய அனுமதியின் நியதி, நிபந்தனைகளுக்கிணங்கவன்றி வேறுவகையில் ஏதேனும் பொது வழியில், பொது வழி நெடுகே அல்லது அதன் கீழே அல்லது மேலே நிரந்தரமாகவாயினுஞ்சரி, தற்காலிகமாகவாயினுஞ்சரி கம்பம், தூண், விளக்கு, கம்பி, குழாய், அழிய டைப்படுகள் அல்லது வேறு பொறி, பொருள் அல்லது கட்டுவேலை எதனையும் நிறுவுகின்றவரான, அமைக்கின்றவரான நாட்டுகின்றவரான அல்லது நிர்மாணிக்கின்றவரான ; அல்லது

(x) ஏதேனும் பொது வழியின் பக்க வடிகாலின் வெளிப்புற விளிம்பின்மேல் நீட்டிக்கொண்டிருக்கின்றவாறு அல்லது தற்காலிக ஆதாரங்களின் வழிமுறைகளால் அவரது வீட்டிற்குச் சேர்ப்புகளை இணைக்கின்றவரான அல்லது பொதுவழியொன்றின் ஏதேனும் பாகத்தின்மீது அல்லது அதன் பக்க வடிகாலின் மீது ஏதேனும் விவரணத்தினவான பொருட்களை அல்லது பண்டங்களை வெளிக்காட்டி வைக்கின்றவரான அல்லது அவரது குடிமனைக்கு முன்னால் வண்டிகளில் ஏற்ற அல்லது அவற்றினின்று இறக்கச் செய்விக்கின்றதன் மூலம் பக்க வடிகாலுக்கு ஏதேனும் வகையில் ஊறுவிளைவிக்கின்றவரான, ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

ஏதேனும் விலங்கின் மீது அல்லது வாகனத்தின் மீது ஏறிச் செல்லுதலை அல்லது அதனை ஓட்டிச்செல்லுதலைத் தடை செய்தல்.

61. புதிய பொது வழியொன்று நிர்மாணிக்கப்பட்டதன் மீது அல்லது உளதாம் பொது வழியொன்றுக்கு ஏதேனும் பழுதுபார்த்தல் நிறைவேற்றப்பட்டதன் மீது அப்பொதுவழியின் மீது அல்லது அதிலிருந்து புலப்படக்கூடியவாறு வெளிக்காட்டி வைக்கப்படும் அறிவித்தல் மூலம், நிர்மாண வேலை அல்லது பழுதுபார்த்தல் நிறைவாக்கப்பட்ட பின்னர் ஒரு மாதத்தை விஞ்சாத குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப்பகுதிக்கு அப் பொது வழியூடாக ஏதேனும் விலங்கின் மீது அல்லது வாகனத்தின்மீது ஏறிச் செல்வதை அல்லது அதனை ஓட்டிச்செல்வதைத் தடைசெய்தல் அத்தகைய பொது வழியினமீது கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் பிரதேச சபைக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும், அத்துடன் அத்தகைய அறிவித்தலுக்கு முரணாக ஏதேனும் செயலைச் செய்கின்ற ஒவ்வோராளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல். ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

*காணிச் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் அவரது வீட்டிற்குச் செல்லும் வடிகால்கள் மீது பாலம் முதலியன அமைப்பதற்குக் கட்டுப்பட்டவராதல்.*

62. எந்தப் பொதுவழியின் பக்கத்தில் வடிகாலொன்று ஆக்கப்பட்டுள்ளதோ அல்லது தோண்டப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் பொது வழியை அடுத்துள்ள ஏதேனும் வீட்டின் அல்லது எவையேனும் வளவுகளின் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு அத்தகைய பொது வழியிலிருந்து அத்தகைய வீட்டிற்கு அல்லது வளவுக்குச் செல்வதற்கான அணுகுவழி தேவைப்பட்டால், அவ்வடிகாலின்மீது, பிரதேச சபை திருப்தியுறும் வகையில் ஒரு பாலத்தை, மேடையை அல்லது வளைவமைப்பதற்குக் கட்டுப்பட்டவராதல் வேண்டும், அத்துடன் எந்த விடயத்திலும் அத்தகைய வடிகாலின் நீளத்தின் மூன்றடிக்குக் குறையாமல் மூடுதல் வேண்டும்; அத்துடன் அவ்விதம் அமைந்துள்ள ஏதேனும் வீட்டிற்கு அல்லது வளவுகளுக்கு அத்தகைய பாலம், மேடை அல்லது வளைவு ஏற்பாடு செய்யப்படவேண்டுமெனப் பிரதேச சபை திருப்தியுறுவதன் மீது அத்தகைய பாலத்தை, மேடையை அல்லது வளைவை உடனடியாக நிருமாணிக்க வேண்டும் என அவ்வீட்டின் அல்லது வளவுகளின் சொந்தக்காரரை அல்லது இருப்பாட்சியாளரைக் கோருவதும் அத்துடன் நியாயமான ஒரு காலப்பகுதிக்குள்ளாக அவர் அவ்வாறு செய்யத் தவறினால் அவ்வேலையைச் செய்வித்தலும் அத்துடன் அதற்கான செலவுகளை அவற்றை அறவிடுவதற்கென 59 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் அறவிடுவதும் அப்பிரதேச சபைக்குக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

*பொதுவழிக்கு ஊறுவிளைவிக்கின்றவாறான அத்தகைய விதத்தில் மரங்களை வளரவிடுதல்.*

63. எவையேனும் வளவுகளின் சொந்தக்காரராக அல்லது இருப்பாட்சியாளராக இருப்பவரும் அத்தகைய வளவுகளின்மீது ஏதேனும் பொது வழிக்கு ஊறுவிளைவிக்கின்றவாறான அத்தகைய விதத்தில், அத்தகைய ஊறைத்தணிப்பதற்கு அவசியமான வழிமுறைகளை எடுக்குமாறு பிரதேச சபை அவருக்கு அறிவித்தலைச் சேர்ப்பித்து, அந்நோக்கத்திற்கென அவ்வறிவித்தலில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நியாயமான காலப்பகுதி முடிவுற்றதன் பின்னரும் ஏதேனும் மரத்தை வளரவிடுகின்றவருமான ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளி ஆதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய ஏதேனும் விடயத்தில் தவறுளர் அவசியமான வழிமுறைகளை எடுக்கத் தவறுகையில் தவறுளர் எந்த நீதிவான் முன்னிலையில் குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்றாரோ, அந்த நீதிவான் அத்தகைய வழிமுறைகள் பிரதேச சபையால் எடுக்கப்படுதல் வேண்டும் எனப் பணிக்கலாம் என்பதுடன் அதற்கான செலவுகள் 59 ஆம் பிரிவில் அதன்கண் குறிப்பிடப்பட்ட செலவுகளை அறவிடுதற்கென அதில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் அறவிடப்படுதலும் வேண்டும்.

*அயலிலுள்ள காணியைத் துப்பரவு செய்தல், அதற்கு வடிகால் அமைத்தல் அல்லது அதனை திறத்தல் மூலம் பொது வழியைச் சேதப்படுத்துதல்.*

64. (1) ஏதேனும் பொதுவழியின் சுற்றயலிலுள்ள ஏதேனும் காணியைப் பொதுவழிக்கு ஊறுவிளைவிக்கின்ற அல்லது நீரின் அல்லது வண்டலின் ஏதேனும் வெளிப்பாய்ச்சல் அல்லது அதிகரித்த வெளிப்பாய்ச்சல் காரணமாக அதனைச் சேதப்படுத்துகின்ற சாத்தியக் கூறு உள்ளவாறாக துப்பரவாக்கல், அதற்கு வடிகாலமைத்தல் அல்லது அதனைத் திறத்தல் போன்ற எவையேனும் தொழிற்பாடுகளைப் பொறுப்பேற்க உத்தேசிக்கும் ஒவ்வோராளும்—

(அ) உத்தேசிக்கப்பட்ட அவரது தொழிற்பாடுகளைப் பற்றி பிரதேச சபைக்கு எழுத்தில் அறிவித்தல் கொடுப்பதும் ; அத்துடன்

(ஆ) பிரதேச சபையால் எடுக்கப்படக்கூடியவாறான அத்தகைய வழிமுறைகளுடன் மேலதிகமாக, அத்தகைய பொது வழிக்கு அத்தகைய ஊறு ஏற்படுவதை அல்லது அத்தகைய பொது வழியின் நிலைமையில் ஏற்படும் சேதத்தைத் தடைசெய்வதற்கு நியாயமானதாகக் கூடியவாறான அத்தகைய வழிமுறைகளை அவரது சொந்தச் செலவில் எடுப்பதும்,

அவரது கடமையாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் தொழிற்பாடுகளுள் எதனையும், அவ்வுட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட அறிவித்தலைக் கொடுக்காமல் பொறுப்பேற்கின்ற அல்லது வேறுவகையில், அதன் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதலில் தவறுகை புரிகின்ற ஆளெவரும் அத்தகைய தொழிற்பாடுகளினால் விளைந்த ஏதேனும் சேதத்திற்கும் அத்துடன் அத்தகைய தொழிற்பாடுகளின் விளைவாக ஏற்படக்கூடிய அல்லது எதிர் நோக்கப்படக்கூடிய ஏதேனும் சேதத்தைத் தடுக்கின்ற அல்லது நிவர்த்தி செய்கின்ற நோக்கத்திற்காகப் பிரதேச சபையினால் உறப்பட்ட எவையேனும் செலவுகளுக்கும் பொறுப்பாதல் வேண்டும் என்பதுடன், ஏதேனும் அத்தகைய சேதத்தின் அல்லது செலவின் தொகையானது, 59 ஆம் பிரிவில், அதன்கண் குறிப்பிடப்பட்ட செலவுகளை அறவிடுவதற்கென ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் அறவிடவும்படலாம்.

## பொது வழிகளில் தொல்லைகள் முதலியன

65. (1) ஏதேனும் பிரதேச சபையொன்றின் எல்லைகளுக்குள்ளார் ஏதேனும் யானையை, எருதை, எருமையை, குதிரையை, வெள்ளாட்டை, செம்மறியாட்டை அல்லது வேறு விலங்கை, அது ஏதேனும் பொதுவழியின் மேல் அல்லது பொது வழிக்குள் செல்லும் வகையில் அவிழ்த்துவிடுகின்ற அல்லது அவிழ்த்துவிட அனுமதிக்கின்ற அல்லது ஏதேனும் விவரணத்தைச் சேர்ந்த ஏதேனும் விலங்கை அது எந்த வண்டியைச் சேர்ந்துள்ளதோ அந்த வண்டியில் பொருட்களை ஏற்றுவதற்கு அல்லது அதனின்று இறக்குவதற்குத் தேவைப்படும் காலப்பகுதியின் போது அத்தகைய விலங்கு அவ்வாறு கட்டப்பட்டு அல்லது கட்டிவைக்கப்பட்டிருந்தாலன்றி, ஏதேனும் பொதுவழியின் மீது அல்லது பொது வழிக்குள் வருவதற்கு அதனை அனுமதிக்கின்றதான ஏதேனும் முறையில் அதனைக் கட்டுகின்ற அல்லது கட்டிவைக்கின்ற அல்லது அதனைக் கட்டுவதற்கு அல்லது கட்டிவைப்பதற்கு அனுமதிக்கின்ற ஒவ்வோராளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும் : தவறுகள்.

ஆயின், ஏதேனும் பொது வழியின்மீது அல்லது பொதுவழியில் அத்தகைய விலங்கு எதுவும் காணப்படுமிடத்து அல்லது ஏதேனும் பொதுவழிமீது அல்லது பொதுவழிக்குள் வரக்கூடியவாறான அத்த

கைய விதத்தில் கட்டப்படுமிடத்து அல்லது கட்டிவைக்கப்படுமிடத்து, அத்தகைய விலங்குகள் அதன் சொந்தக்காரரினால், முறைகை அவர் நீதிமன்றத்தைத் திருப்திப்படுத்தினாலன்றி, விடயத்திற்கேற்ப அவிழ்த்து விடப்பட்டுள்ளதாக, அவிழ்த்துவிட அனுமதிக்கப்பட்டுள்ளதாக அல்லது கட்டப்பட்டுள்ளதாக அல்லது கட்டிவைக்கப்பட்டுள்ளதாக அல்லது கட்டுவதற்கு அல்லது கட்டிவைக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) பிரதேச சபையொன்றின் எல்லைகளுக்குள் ஏதேனும் வீதியில் அல்லது கால்வாயில் கட்டப்பட்டிருக்கின்ற, அலைந்து திரிகின்ற, பதுங்கியிருக்கின்ற அல்லது புரளுகின்ற நிலையில் காணப்படும் ஏதேனும் பன்றியின் சொந்தக்காரர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பது ரூபாவை விஞ்சாததொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய ஏதேனும் வீதியில் அல்லது கால்வாயில் கட்டப்பட்டிருக்கின்ற, அலைந்து திரிகின்ற, பதுங்கியிருக்கின்ற அல்லது புரளுகின்ற நிலையில் ஏதேனும் பன்றியைக் காணக்கூடிய ஆளெவரும் அதனைக் கைப்பற்றுதல், சுடுதல், அல்லது வேறு வகையில் அழித்தல் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய ஆள் விரும்பினால் அத்தகைய பன்றியை எவரேனும் சமாதான அலுவலரிடம் அல்லது பொலிசு அலுவலரிடம் எடுத்துச் செல்லலாம்; அத்துடன் அத்தகைய அலுவலர் உடனடியாக அப் பன்றியை விற்று அத்தகைய விற்பனையின் வருவாயை அத்தகைய ஆளுக்குச் செலுத்துதல் வேண்டும்.

(3) பிரதேச இடப்பரப்பொன்றின் எல்லைகளுக்குள்ளாக—

(அ) பொது வழியின் பயன்பாட்டை தடைசெய்வதற்கெனத் திட்டமிடப்பட்டவொரு முறையில் ஏதேனும் வீதியின்மீது அல்லது அதன் பக்கத்தில் எவையேனும் பாய்களை, ஆடைகளை, அல்லது எத்தன்மையினவான எவையேனும் பதார்த்தங்களைத் தொங்கவிடுகின்றவரான அல்லது வேறுவகையில் வெளிக்காட்டிவைக்கின்றவரான ;

(ஆ) ஏதேனும் பொது வழியின்மீது ஏதேனும் வண்டியை அல்லது வேறு வண்டிலை, அத்தகைய வண்டி அல்லது வண்டில் தற்செயலாக அங்கு பழுதடைந்திருந்தாலன்றி, எவையேனும் எருதுகள் அல்லது குதிரைகள் அல்லது வேறு விலங்கு அதனுடன் இணைக்கப்படாமல் அல்லது சேணமிடப்படாமல் விட்டுவைக்கின்றவரான அல்லது விட்டுவைக்க அனுமதிக்கின்றவரான அத்துடன் அத்தகைய விடத்தின் விடயத்தில், அதனை அப்புறப்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியதை விட நீண்டவொருகாலப்பகுதிக்கு விட்டுவைக்கின்றவரான அல்லது விட்டுவைக்க அனுமதிக்கின்றவரான ;

(இ) ஏதேனும் வாகனத்தை, வாகனங்கள் கட்டளைச்சட்டத்தால் அல்லது மோட்டார் வாகனச் சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட விளக்குகளை அதனுடன் பொருத்தாமல் சூரியன் மறைந்தபின்னர் கால் மணி நேரத்திற்கும் சூரிய உதயத்திற்கு முன்னர் கால்மணி நேரத்திற்கும் இடையில் ஏதேனும் பொதுவழியில் தரித்திருக்க அனுமதிக்கின்றவரான ;

(ஈ) ஏதேனும் கால்வாயில் ஏதேனும் வள்ளத்தை அல்லது வத்தையை அத்தகைய கால்வாயின் பயன்பாட்டை தடை செய்கின்றவாறு விட்டுவைக்கின்றவரான ;

(உ) ஏதேனும் பொதுவழியின்மீது, ஆற்றின் மீது அல்லது கால்வாயின்மீது அல்லது பொதுவழியில், ஆற்றில் அல்லது கால்வாயில் எவையேனும் கற்களை, செங்கற்களை மிதவையை, மரத்தை, மணலை, சுண்ணும்பை, சாணத்தை, வைக்கோலை, அழுக்கை அல்லது ஏதேனும் குழியின் அல்லது வடிகாலின் வழித்தல்களை அல்லது வேறு பொருளை அல்லது பண்டத்தை வைக்கின்றவரான அல்லது எறிகின்றவரான அத்துடன் அத்தகைய பொருளை அல்லது பண்டத்தை அப்புறப்படுத்துவதற்கு முற்றுக அவசியப்படக்கூடியவாறுன அத்தகைய காலப்பகுதிக்குத் தவிர, அது அங்கிருப்பதனை அனுமதிக்கின்றவரான ;

(ஊ) ஏதேனும் வீதியில் மரம்,. பலகைவகைகள், இரும்பு அல்லது வேறு பொருட்களுடன் ஏதேனும் வண்டியை அல்லது வேறு வண்டிலை, அத்தகைய ஏதேனும் பொருட்களின் இரண்டு முனைகளுள் ஒன்று சில்லுகளுக்கு அல்லது அவற்றின் பக்கங்களுக்கு அப்பால் நீண்டிருக்கும் வகையில் இட்டுச் செல்கின்றவரான அல்லது செலுத்துகின்றவரான ;

(எ) ஏதேனும் பொதுவழியின் மேல் அல்லது பொது வழியில் ஏதேனும் கட்டிடத்தை, தளமேடையை, செடிவேலியை, நீர்வடிகாலை அல்லது வேலியை அல்லது வேறு தடையைச் செய்வதன் மூலம் அல்லது செய்விப்பதன் மூலம் ஏதேனும் பொது வழியின்மீது சேர்த்தெல்லையிடுகின்றவரான ;

(ஏ) ஏதேனும் வண்டியை அல்லது வேறு வண்டிலை அது ஒரு குன்றை நோக்கி அல்லது குன்றிலிருந்து கீழ் நோக்கி அல்லது மேட்டு நிலம்நோக்கி அல்லது மேட்டு நிலத்திலிருந்து கீழ் நோக்கிச் செல்கையில் அதனைத் தடுத்து அல்லது நிறுத்தி வைத்திருந்தபின்னர், அத்தகைய வண்டியை அல்லது வண்டிலைத் தடுத்து அல்லது நிறுத்திவைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கல், வெட்டு மரம் அல்லது வேறு பொருள் ஏதேனும் பொது வழியில் இருக்கச் செய்கின்றவரான அல்லது இருப்பதற்கு அனுமதிக்கின்றவரான அல்லது நிலைத்திருக்கச் செய்கின்றவரான அல்லது நிலைத்திருக்க அனுமதிக்கின்றவரான ;

(ஐ) வேறு எவரேனும் ஆளை அல்லது அவரது பராமரிப்பின் கீழுள்ள ஏதேனும் வண்டிலை, வள்ளத்தை, வத்தையை அல்லது வேறு ஊர்தியை ஏதேனும் பொதுவழி ஊடாகக் கடந்து செல்வதினின்று ஏதேனும் முறையில் வேண்டுமென்றே தடைசெய்கின்றவரான,

ஆளொவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

7—எ 094616 (12/86)

(4) பிரதேச சபை இப்பரப்பொன்றின் எல்லைகளுக்குள்ளாக அதன் வசதியான கடற்செலவைத் தடைசெய்யும் வகையில் அல்லது ஏதேனும் வழியில் அதில் தலையிடும் வகையில் ஏதேனும் அடைப்பை அல்லது வேலியை அல்லது வேறு தடையை வைக்கின்ற அல்லது நிர்மாணிக்கின்ற ஒவ்வோராளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும். அவ்வாறு வைக்கப்பட்ட அல்லது தொடர்ந்து செய்யப்பட்ட ஏதேனும் அத்தகைய அடைப்பை, வேலியை அல்லது தடையை பிறங்கச் செய்விப்பதும் அல்லது வேறுவகையாக அழிப்பதும் அத்துடன் அதற்கான செலவை 59 ஆம் பிரிவில் அதன் கண் குறிப்பிடப்பட்ட செலவுகளை அறவிடுவதற்கென ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் அறவிடுவதும் பிரதேச சபைக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

**கட்டப்படாத கால்நடைகளைக் கைப்பற்றுதல்.**

66. (1) பிரதேச சபைத்தவிசாளரால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஆளெவரும், பிரதேச சபையின் எல்லைக்குள்ளாக ஏதேனும் பொதுவழிமீது அல்லதுபொது வழியருகில் கட்டப்பட்ட, கட்டிவைக்கப்பட்ட அல்லது அலைந்து திரியும் நிலையில் அவரால் காணப்படும் ஏதேனும் எருதை, எருமையை, குதிரையை, வெள்ளாட்டை, செம்மறியாட்டை அல்லது பன்றியை, அத்தகைய விலங்கு எந்த வண்டியை அல்லது படகைச் சேர்ந்ததோ அந்த வண்டியிலிருந்து அல்லது படகிலிருந்து சாமான்கள் இறக்கப்படும்பொழுது அல்லது அதில் ஏற்றப்படும்பொழுது அந்த வண்டியில் அல்லது படகில் கட்டப்பட்டிருந்தாலன்றி அல்லது கட்டிவைக்கப்பட்டிருந்தாலன்றி, கைப்பற்றுதலும் அத்துடன் அவ்வாறு கைப்பற்றப்பட்ட ஒவ்வொரு விலங்கையும் அந்தநோக்கத்துக்கெனப் பிரதேச சபையால் தாபிக்கப்பட்ட பட்டியில் வைப்பதும் அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் கைப்பற்றப்பட்ட விலங்கு எதுவும், அந்த விலங்கு எந்த ஆளினால் கைப்பற்றப்பட்டிருக்கக் கூடுமோ அந்த ஆளின் பயன்பாட்டுக்கென தீர்மானத்தின் மூலம் பிரதேச சபையால் காலத்துக்குக் காலம் நிர்ணயிக்கப்படக் கூடியவாறான அத்தகைய கொடுப்பனவின்மீதும், அத்துடன் விலங்கு, பட்டியில் வைக்கப்பட்டிருக்கக் கூடியதான ஒவ்வொரு நாளுக்கும் பிரதேச சபையால் தீர்மானத்தின் மூலம் நிர்ணயிக்கப்படக்கூடியதான அத்தகைய மேலதிக பணத்தொகைக் கொடுப்பனவின்மீதும் தவிர, அதன் சொந்தக்காரரிடம் ஒப்படைக்கப்படுதல் ஆகாது.

(3) ஆளெவரும் விலங்கு கைப்பற்றப்பட்டதன் பின்னர் பத்து நாட்களுக்குள்ளாக பட்டியில் வைக்கப்பட்டுள்ள விலங்கிற்கு உரிமை கோராவிடில் அல்லது (2) ஆம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட வருமதிகளைச் செலுத்தாவிடில் அதனைப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதும் அத்துடன் விலங்கைக் கைப்பற்றிய ஆளுக்கு, தீர்மானத்தின் மூலம் பிரதேச சபையால் காலத்துக்குக் காலம் நிர்ணயிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையையும், பட்டியில் விலங்கின் கட்டுக்காவலுக்கும் பேணலுக்கும் எனத் தீர்மானம் மூலம் பிரதேச சபையால் காலத்துக்குக்காலம் நாளொன்றுக்கெனத் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதத்தில் கணிக்கப்பட்ட பணத்தொகையையும் செலுத்திய பின்னர் அத்தகைய விற்பனை வருவாய்களின் ஏதேனும் மீதியை வைப்பில் வைத்திருப்பதும்,

அத்துடன் விற்பனைத் தேதியிலிருந்து ஓராண்டைக்கொண்டவொரு காலபகுதிக்குள்ளாக அதற்கு உரித்தான ஆளெவரும் அத்தகைய மீதிக்கு உரிமை கோராமலும் அதன் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளாமலும் இருப்பின் அத்தகைய மீதியை பிரதேச சபை நிதியத்திற்கு செலுத்துவதும் பிரதேச சபைக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் ஏற்பாடுகள், 1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விலங்குகள் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இச்சட்டம் எந்தப் பிரதேச சபை இடப்பரப்பிற்கு ஏற்புடையதாகின்றதோ அந்தப் பிரதேச சபை இடப்பரப்பு ஒவ்வொன்றிலும் பயனுறுவனவாதல் வேண்டும்.

*கால்நடைகளைக் கைப்பற்று வோருடன் தலையிடல்.*

**67.** ஏதேனும் விலங்கை 66 ஆம் பிரிவின் கீழ் அல்லது 65 ஆம் பிரிவின் (2) ஆம் உடபிரிவின்கீழ் கைப்பற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளின் சட்டமுறையான கட்டுக்காவலிலிருந்து அப்புறப்படுத்துகின்ற அல்லது அவரது தத்துவங்களை அல்லது கடமைகளைப் பிரயோகிக்கையில் அல்லது நிறைவேற்றுகையில் அத்தகைய ஆளைத் தொந்தரவுசெய்கின்ற அல்லது தடைசெய்கின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

## பொது வழிகளின் சிறப்புப் பயன்பாடு

*சிறப்பான நோக்கங்களுக்கென பகிரங்கப் பொதுவழிகளைப் பயன்படுத்துவதற்கு அதிகாரமளிப்பதற்கு, பிரதேச சபைக்குள்ள தத்துவம்.*

**68.** ஏதேனும் பிரதேச சபை காலத்துக்குக் காலம், தனியாகவாயினுஞ்சரி, வேறேதேனும் பிரதேச சபையுடன் கூட்டாகவாயினுஞ்சரி, அதற்கெனவுள்ள ஏதேனும் சிறப்பான சட்டவாக்கத்தின் நியதிகளுக்கமைய, (இதனகத்துப் பின்னர் "ஊக்குநர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) எவரேனும் ஆளுடன், அல்லது ஆட்கள் குழுவுடன் அல்லது சட்டத்தால் அமைத்துருவாக்கப்பட்ட ஆட்கள் குழுவுடன் அல்லது உள்ளூரதிகார சபையுடன், வாயுவின், மின்வலுவின், நீரின், அல்லது (திராம் வண்டிச் சேவை ஒன்றல்லாத அல்லது வேறேதேனும் பகிரங்க வாகனத் தொடர்புச் சேவையல்லாத) ஏதேனும் பகிரங்க சேவையின் அல்லது ஏதேனும் தனிப்பட்ட தொழில் முயற்சியின் அல்லது குறிக்கோளின் வழங்குகையினது நோக்கத்துக்காக அத்தகைய ஊக்குநருக்கு அதிகாரமளிப்பதற்கும், அல்லது பிரதான பொதுவழிகள் தவிர்ந்த, பிரதேச சபையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பொது வழிகளைப் பயன்படுத்துவதற்கும் அல்லது பொதுவழிகள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் முன்னங்கீகாரத்துடன் பொதுவழிகளை அத்தகையவாறு பயன்படுத்துவதற்கும் அத்துடன் அத்தகைய பகிரங்க சேவையை அல்லது அத்தகைய தொழில் முயற்சியை அல்லது குறிக்கோளைப் பயனுள்ள வகையில் தாபிக்கும் அல்லது பேணும் அல்லது திரிபுபடுத்தும் அல்லது அபிவிருத்தி செய்யும் நோக்கத்திற்கு பிரதேச சபையின் அபிப்பிராயப்படி அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா வேலைகளையும் நிறைவேற்றுவதற்கும் அத்துடன் அதன்மீது அல்லது அதன் கண் அத்தகைய எல்லா நிறுவுகைகளையும் பொறிகளையும் அமைப்பதற்கும் அல்லது பேணுவதற்கும் என உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்ளலாம்.

துணைவிதிகள்.

69. (1) அறுபத்தெட்டாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின் நோக்கத்துக்காகவும், உடன்படிக்கையானது எந்தப் பகிரங்க சேவை அல்லது ஏதேனும் தனியார் தொழில்முயற்சி அல்லது குறிக்கோள் தொடர்பிலானதோ அந்த ஏதேனும் பகிரங்க சேவை அல்லது தனியார் தொழில் முயற்சி அல்லது குறிக்கோள் தொடர்பாகப் பொது மக்களும், பிரதேச சபையும் ஊக்குநர்களும் தத்தமது உரிமைகளையும் கடப்பாடுகளையும் அனுட்டிப்பதை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காகவும், பிரதேச சபையானது (அதற்கென ஏதேனும் சிறப்பான சட்டவாக்கத்திஞல் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்ற அளவில், தவிர) பின்வருவன தொடர்பாகத் துணைவிதிகளை ஆக்கலாம்:—

(அ) ஊக்குநர்களுக்கும் அவர்களது முகவர்களுக்கும் சேவையாளர்களுக்கும் அல்லது வேலையாளர்களுக்கும் அல்லது பிரதேச சபையின் முகவர்களுக்கும் சேவையாளர்களுக்கும் அல்லது வேலையாளர்களுக்கும், துணைவிதிகளில் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய—

(i) பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் பொது வழியின் நிலத்தையும், உடைகல்லையும் நடைபாதையையும் உடைப்பதற்கு ;

(ii) அத்தகைய பொது வழியினுள்ளேயுள்ள அல்லது அதன் கீழுள்ள எவையேனும் கழிவுநீர் வடிகால்களை, வடிகால்களை, அல்லது சுரங்கங்களைத் திறந்து உடைப்பதற்கு ;

(iii) ஏதேனும் கம்பத்தை, தூணை, விளக்கை கம்பியை, குழாயை, அழியடைப்பை அல்லது வேறு பொறித்தொகுதியை, பொருளை அல்லது வேலைகளை அத்தகைய பொது வழியில், பொது வழியினூடே, கீழே அல்லது மேலே நிரந்தரமாக வாயினுஞ்சரி, தற்காலிகமாகவாயினுஞ்சரி, நிறுவுவதற்கு, அமைப்பதற்கு அல்லது இடுவதற்கு ;

(iv) வேறேதேனும் பகிரங்க சேவையின் நோக்கத்திற்காக அத்தகைய பொது வழியிலுள்ள அல்லது அதற்கருகிலுள்ள ஏதேனும் பகிரங்க இணைப்பின், கம்பியின் அல்லது வேறு கருவியின் அல்லது பொறித் தொகுதியின் நிலையை மாற்றுவதற்கு,

அதிகாரமளித்தல் ;

(ஆ) சொல்லப்பட்ட துணைவிதிகளிஞல் அளிக்கப்பட்ட தத்துவங்களை நிறைவேற்றுகையில் இயன்றவரை ஆகக்குறைந்த சேதத்தைச் செய்யுமாறும் அத்துடன் அத்தகைய தத்துவங்களை நிறைவேற்றுகையில் செய்யப்படக்கூடியதான ஏதேனும் சேதத்திற்கு நட்டஈடு செய்யுமாறும் ஊக்குநர்களைத் தேவைப்படுத்துதல் ;

(இ) அத்தகைய துணைவிதிகளின் கீழ் எந்த வேலையை நிறைவேற்றுவதற்கு ஊக்குநர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கக்கூடுமோ அந்த ஏதேனும் வேலையை வசதியான வேகத்துடன் நிறைவுசெய்யுமாறும் அத்தகைய துணைவிதிகளைப் பின்பற்றி எந்தப் பொது வழியை, கழிவுநீர் வடிகாலை, வடிகாலை, சுரங்கத்தை அல்லது ஏதேனும் பொறித்தொகுதியை அல்லது கருவியை அகற்றுவதற்கு, மாற்றுவதற்கு அல்லது அதில் தலையிடுவதற்கு அவர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கக்கூடுமோ அந்த ஏதேனும் பொது வழியை, கழிவுநீர் வடிகாலை, வடிகாலை, சுரங்கத்தை அல்லது ஏதேனும் பொறித்தொகுதியை அல்லது கருவியை மீள நிருமாணிக்குமாறும், செம்மையாக்குமாறும் அல்லது புனரமைக்குமாறும் தேவைப் படுத்துதல் ;

(ஈ) ஊக்குநர்களின் தொழிற்பாடுகளினால் ஏற்படுத்தப்படும் எல்லா அழுக்குகளையும் அப்புறப்படுத்தி எடுத்துச்செல்லுமாறும் அது தொடர்பில் பொது மக்களின் பாதுகாப்பிற்கான தகுந்த முற்பாதுகாப்புகளைச் செய்விக்குமாறும் தேவைப்படுத்துதல் ;

(உ) இப்பிரிவின்கீழ் ஏதேனும் துணைவிதியால் அதிகாரமளிக்கப்பட்ட எவையேனும் தொழிற்பாடுகளில் ஏதேனும் தலையீட்டை அல்லது அவற்றுக்கான தடைகளை விலக்குதல்.

(2) பிரதேச சபைக்கு உரித்தாக்கப்படாத ஏதேனும் கட்டிடத்தின அல்லது காணியின் சொந்தக்காரர்களினதும் இருப்பாட்சியாளர்களினதும சம்மதத்தை முதலில் பெற்றுக்கொள்ளாமல் அத்தகைய ஏதேனும் கட்டிடத்தில் அல்லது காணியில் நுழைவதற்கு அல்லது அக்கட்டடத்தின்மீது அல்லது காணியின் மீது ஏதேனும் பொருளை அல்லது பொறித்தொகுதியை நிறுவுவதற்கு அல்லது வைப்பதறகு அல்லது ஏதேனும் வேலையை நிறைவேற்றுவதற்கு இப்பிரிவின் கீழான துணைவிதியெதுவும் தத்துவமளித்தல் அல்லது அதிகாரமளித்தல் ஆகாது.

70. (1) அயலிலுள்ள பொதுவழிகளைப் பேணுவதறகான சராசரிச்செலவைக் கவனத்திற்கொண்டு ஏதேனும் பிரதேச சபை கட்டுப்பாடு செலுத்தும் ஏதேனும் பொது வழியின்மீது மிதமிஞ்சிய பாரம் எதுவும் செல்வதனால் அல்லது ஏதேனும் அசாதாரணமான வாகனுதிகள் கடந்து செல்வதால் விளைவிக்கப்பட்ட அல்லது விளைவிக்கும் சாத்தியமுடைய சேதம் காரணமாக அப்பொது வழியைப் பேணுவதில் அசாதாரணமான செலவுகள் பிரதேச சபையினால் உறப்பட்டிருக்கலாமென அச்சபைக்குத் தோன்றுமிடத்து, பிரதேச சபையானது அத்தகைய மிதமிஞ்சிய பாரத்திலிருந்து அல்லது அசாதாரணமான வாகனுதிகளிலிருந்து எழுகின்ற அல்லது எழும் சாத்தியமுடைய சேதம் காரணமாகப் பிரதேச சபையினால் உறப்பட்டுள்ளதென தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றின் திருப்திக்கு எண்பிக்கப்படக்கூடியவாறான அத்தகைய செலவுகளின் தொகையை, எந்த ஆளின் கட்டளையினால்

அசாதாரணமான வாகனுதிகளினால் விளைவிக்கப்படும் செலவுகள்.

அல்லது கட்டளையின் விளைவாக அத்தகைய பாரம் அல்லது வாகனுதிகள் கொண்டுசெல்லப்பட்டனவோ அல்லது விளைவிக்கப்பட்டனவோ அந்த எவரேனும் ஆளிடமிருந்து அறவிடுவதற்கு உரித்துடையதாதல் வேண்டும், அல்லது அத்தகைய மிதமிஞ்சிய பாரத்திற்கு அல்லது அசாதாரணமான வாகனுதிகளுக்கு ஒருவருக்கு மேறபட்ட ஆட்கள் பொறுப்புள்ளவர்களாயிருக்குமிடத்து நீதிமன்றத்தின் அபிப்பிராயப் படி நியாயமாக அவருக்குக் குறித்துதொதுக்கபபடக் கூடியவாறாக அவ்வாறு உறப்பட்ட செலவுகளில் அத்தகைய விகிதாசாரத்திலான தொகையை அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் அறவிடலாம்.

(2) இப்பிரிவின்கீழ் பிரதேச சபையொன்றினால் எந்த ஆளுக்கெதிராக செலவுகள் அறவிடப்படற்பாலனவாக அல்லது அறவிடப் படக்கூடியனவாக இருக்கின்றனவோ அந்த ஆளெவரும், அத்தகைய பாரம் அல்லது வாகனுதிகள் தொடர்பாக நட்டஈடு என்ற வகையில் பிரதேச சபைக்குக் கொடுப்பனவு செய்வதற்கென பிரதேச சபையுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்ளலாம்; அத்துடன் அத்தகைய உடன்படிக்கைக்கிணங்க கொடுப்பனவு செய்யப் படுமிடத்து, அத்தகைய ஆளுக்கெதிராக இப்பிரிவின் கீழ் வழக்கு நடவடிக்கைகள் எவையும் தொடரப்படுதலோ அல்லது கொண்டு நடாத்தப்படுதலோ ஆகாது.

(3) இப்பிரிவின் கீழ் எவையேனும் செலவுகளை அறவிடுவதற்கான வழக்கு நடவடிக்கைகள், அத்தகைய செலவுகள் உறப்பட்ட நேரத்திலிருந்து பன்னிரண்டு மாதங்களுக்குள்ளாக ஆரம்பிக்கப்படுதல் வேண்டும், அல்லது உறப்பட்ட எவையேனும் செலவுகள், நீண்டகாலப் பகுதிக்கானதாகவிருக்கும் ஏதேனும் குறிப்பிட்ட ஒப்பந்தத்தின் அல்லது வேலையின் விளைவானவையாக இருக்குமிடத்து, ஒப்பந்தம் அல்லது வேலை நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் ஆறு மாதங்களுக்குப் பிந்தாமல் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்.

## அலுவலர்கள் முதலியோரின் தத்துவங்களும், கடமைகளும், பொறுப்புகளும்

*பகிரங்க வேலைகள் அவற்றிற்குப் பொறுப்பான எந்த அலுவலர்களினால் நிறைவேற்றப்படுதல் வேண்டுமோ, அந்த அலுவலர்களுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்கள்.*

**71.** பிரதேச சபையொன்றின் எல்லைகளுக்குள்ளிருக்கும் பிரதான பொது வழிகளைத் தவிர்ந்த வேறெல்லாப் பொது வழிகள் தொடர்பிலும் பிரதேச சபையின் தவிசாளரும் அதற்கென அவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எல்லா ஆட்களும் இப்பாகம் ஏற்புடையதாகவுள்ள வேலையமைப்புகளுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்களுக்கு இப்பாகத்தினால் அளிக்கப்படும் பல்வேறு தத்துவங்களையும் அதிகாரங்களையும் தாமாகவோ தமது சேவையாளர்கள் மூலமாகவோ வேலையாட்கள் மூலமாகவோ தமது தொழிலாளர்கள் மூலமாகவோ பிரயோகித்தல் வேண்டும் என்பதுடன் பிரயோகிக்கவும் செய்யலாம்.

முறையான அலுவலர்களால் செய்யப்பட்ட அளப்பனவுகள் முடிவான சான்றாதல்.

**72.** பிரதேச சபையினால் அல்லது அதன் பணிப்பின் மூலம் அல்லது பிரதேச சபையானது எந்த அதிகாரசபையை அடுத்துறு கின்றதோ அந்த ஏதேனும் அதிகாரசபையினால் அல்லது அதன் பணிப்பின்மீது தயாரிக்கப்படும் ஏதேனும் வரைபடம் அல்லது நில அளவைப்படம் இப்பாகத்தின் கீழான ஏதேனும் வழக்கு நடவடிக் கையில் சான்றாகக் காண்பிக்கப்படின், அத்தகைய வரைபடம் அல்லது நில அளவைப்படம், பிரதேச சபையின் உரிமைக்கோரிக்கை சம் பந்தப்பட்டுள்ள அளவுவரை, அத்தகைய உரிமைக்கோரிக்கையை எதிர்க்கும் திறத்தவரினால் மாறாக எண்பிக்கப்பட்டாலொழிய, அதன் கண் காட்டப்பட்டுள்ள நிகழ்வுகளின் முடிவான சான்றாகக் கருதப் படுதலும் அவ்வாறாகக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களினால் ஆதனத்திற்கு விளைவிக்கப்படும் சேதத்துக்கு நட்டஈடு.

**73.** இப்பாகம் ஏற்புடையதாகவுள்ள வேலையமைப்புகளுக்குப் பொறுப்பாகவிருக்கும் அலுவலர்களுக்கு இப்பாகத்தினால் அளிக்கப் படும் தத்துவங்களுள் அல்லது அதிகாரங்களுள் எதுவும் ஏதேனும் பிர தேச சபையின் தவிசாளரினால் அல்லது அவரது அதிகாரத்தின் மூலம் பிரயோகிக்கப்படுகின்றமை காரணமாக ஏதேனும் நட்டத்தை அல்லது சேதத்தை அடைகின்ற ஆள் ஒவ்வொருவரும் (நட்டம் அல்லது சேதம், அத்தகைய ஆளின்செயலினால், தவறுகையினால் அல்லது அசட்டையினால் உறப்படுகின்றவிடத்தன்றி) அத்தகைய நட் டத்திற்கான அல்லது சேதத்துக்கான நட்டஈட்டைப் பெறுவதற்கென நட்டஈட்டுக் கோரிக்கை எழுந்தபின்னர் மூன்றுமாதங்கள் முடிவடை யுமுன்னர் எந்நேரத்திலேனும் பிரதேச சபைக்கு விண்ணப்பம்செய் வாராயின், அவர் அதனைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும். மேற்கூறப்பட்ட காலப்பகுதிக்குள்ளாக அத்தகைய ஆளெவரும் விண்ணப்பம் செய்யத் தவறுகின்றவிடத்து, ஏற்பட்ட தாகச் சார்த்தப்பட்ட நட்டத்திற்கான அல்லது சேதத்திற்கான அவ ரது கோரிக்கைக்கு அனுமதி மறுக்கப்படுதல்வேண்டும் என்பதுடன் அத்தகைய நட்டஈட்டை அறவிடுவதிலிருந்து அவர் தடைசெய்யப் படுதலும் வேண்டும்.

நடுத்தீர்ப்பு.

**74.** எழுபத்துமூன்றும் பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் நட்டஈட்டுத்தொகை பற்றி, பிரதேச சபைக்கும் உரிமை கோருபவருக்குமிடையே, எக்காரணத்துக்காகவேனும் உடன்பாடு இல் லாதிருக்குமிடத்து, அத்தகைய தொகையானது இரு நடுத்தீர்ப்பா ளர்களினால் தீர்மானிக்கப்படலாம். இவர்களுள் ஒருவர் பிரதேச சபையினாலும் மற்றையவர் உரிமை கோருபவராலும் பெயர் குறித்து நியமிக்கப்படுதல்வேண்டும். இரு நடுத்தீர்ப்பாளர்களாலும் உடன் பாடு காணப்பட முடியாதிருப்பின் அவர்கள் நடுவரொருவரை நிய மித்தல் வேண்டும் என்பதுடன் பிரதேச சபையினாலும் உரிமை கோருபவரினாலும் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட ஆற்றுப்படுத்துகையின் நியதிகளின்படி விடயத்திற்கேற்ப, நடுத்தீர்ப்பாளர்களின் அல்லது நடுவரின் நடுத்தீர்ப்பு இறுதியானதாகவிருத்தலும் வேண்டும்.

அலுவலர்களும ஒப்பந்தக்காரர் களும் இரவில் பொதுவழிகளில் கற்கள் முதலிய வற்றை விட்டு வைத்தல்.

**75.** ஏதேனும் பொதுவழியின்மீது வேலையமைப்பதற்குப் பொறுப்பாகவுள்ள பிரதேச சபையொன்றின் எவரேனும் அலுவலர் அல்லது ஏதேனும் பிரதேச சபையுடனான ஒப்பந்தமெதனையும் பின் பற்றி ஏதேனும் பொது வழியின்மீது வேலையெதற்கும் பொறுப்பாக வுள்ள பிரதேச சபையொன்றின் அலுவலர் எவரும் அப்பொது வழியின்மீது ஏதேனும் கற்குவியலை, சரளைக்கற்குவியலை, குப்பைக் குவியலை அல்லது எத்தகையதுமான வேறெந்தப்பொருளையும் விட்டு வைப்பின் அல்லது விட்டுவைக்கச்செய்யின், அத்துடன் அப்பொது வழியினூடாகச் செல்லும் எவரேனும் ஆளுக்கு அபாயம் அல்லது சேதம் ஏற்படக்கூடியவகையில் (அத்தகைய ஏதேனும் அபாயத்தை அல்லது சேதத்தைத் தடுப்பதற்கு முறையானவையும் நியாயமான வையுமான எல்லா முற்காப்புகளும் அவரால் எடுக்கப்படாமல்) இர வில் அத்தகைய குவியலை அங்கு விட்டு வைக்க அனுமதிப்பின் அத்தகைய அலுவலர் அல்லது ஆள் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றினால் தண்டிக்கப்படற்பாலதான தவறொன் றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

குறித்த சில விடயங்களில் தவிர வீதி அலுவலர் அல்லது வீதி ஒப்பந்தக்காரர் குற்றப்பணத் திற்கு ஆளாத லாகாது.

**76.** எழுபத்தைந்தாம், 218 ஆம் பிரிவுகளில் ஏற்பாடு செய்யப் பட்டவாறு தவிர, இப்பாகத்தில் அடங்கியுள்ளது எதுவும் ஏதேனும் பொது வழியின்மீது ஏதேனும் வேலையமைப்புக்குப் பொறுப்பாக வுள்ள பிரதேச சபையொன்றின் எவரேனும் அலுவலரை அல்லது பிரதேச சபையின் கீழுள்ள எவரேனும் ஒப்பந்தக்காரரை, அத்த கைய அலுவலர் தமது பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதில் அவரால் செய்யப்பட்ட, அல்லது அத்தகைய ஒப்பந்தக்காரர் தமது ஒப்பந்தத்தை அவசியமாக நிறைவேற்றுவதில் அல்லது புரிவதில் அவரால் செய்யப்பட்ட எச்செயலுக்காகவும் இப்பாகத்தின் கீழான ஏதேனும் குற்றவழக்குத் தொடுப்புக்கு அல்லது குற்றப்பணத்துக்கு ஆளாதலாகாது.

பொலிச அலுவலர்களும் கிராம சேவை உத்தியோகத்தர் களும் இப்பாகத் தின் ஏற்பாடுகளை வலியுறுத்தல் வேண்டும்

**77.** பொலிசுப் படையிலுள்ள எல்லா அலுவலர்களும் எல்லாக் கிராமசேவை அலுவலர்களும், அவர்கள் முறையே எந்த இடப் பரப்புகளுக்கென நியமிக்கப்பட்டுள்ளார்களோ அந்த இடப்பரப் புகளுக்குள்ளாக இப்பாகத்திற்கெதிரான எல்லாத் தவறுகளை யும் தடுப்பதில் உதவுதலும் துணைபுரிதலும் பொதுவில் அவர்களது கடமையாதல் வேண்டும்.

## பாகம் IV

## பொதுச் சுகாதாரம் தொடர்பிலான தத்துவங்களும் கடமைகளும்

### பொதுச் சுகாதாரம்

பிரதேச சபையானது பொதுவான, பகிரங்கச் சுகாதார அதிகார சபை யாதல் வேண்டும்.

**78.** **(1)** வேறேதேனும் அதிகாரசபைக்கு சட்டத்தினால் பொறுப் பிக்கப்பட்ட தத்துவங்களுக்கும் பொறுப்புடைமைகளுக்கும் அமைவாக, பிரதேச சபையானது அதன் எல்லைகளுக் குள்ளாகப் பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்துதல், உறுதிப்படுத் துதல் ஆகிய நோக்கத்திற்காக பொது நிருவாக அதிகார சபையா தல் வேண்டும் என்பதுடன், அந்நோக்கத்திற்கென இச்சட்டத்தினு

லும் தொல்லைகள் கட்டளைச்சட்டத்திலுலும், வீடமைப்பு, நகரச் சீர் திருத்தக் கட்டளைச்சட்டத்திலும் அதற்கென அப்போது வலுவிலுள்ள எழுத்திலான வேறேதேனும் சட்டத்திலும் அதற்குக் குறித்தொதுக்கப்படுகின்றவாறான அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் பிரயோகிப்பதற்கு உரித்துடையதாதலும் வேண்டும்.

(2) பிரதேச சபையானது, பொதுச் சுகாதாரம் தொடர்பான கருமங்களில் இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்படும் அல்லது குறித்தொதுக்கப்படும் அல்லது அதன்மீது சுமத்தப்படும் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றைப் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும், புரிவதிலும் அவ்விடப்பரப்பிற்குள்ளிருக்கும் சுகாதார மருத்துவ அலுவலருடனான கலந்தாலோசனையுடன் செயலாற்றுதல் வேண்டும். அத்தகைய எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் பிரதேச சபைக்கு ஆலோசனையளித்தலும் பொதுச் சுகாதாரம் தொடர்பான வழிமுறைகளை அவ்விடப்பரப்பில் நிறைவேற்றுவதனை மேற்பார்வை செய்து நெறிப்படுத்துதலும் சுகாதார மருத்துவ அலுவலரின் கடமையாதல் வேண்டும்.

### வடிகாலமைப்பு

79. பிரதேச சபையானது, பிரதேச சபைக்குரிய இடப்பரப்பின் ஏதேனும் இடப்பரப்பினுள் பயனுறுதியுள்ள வடிகாலமைப்புக்கு அவசியமானதெனத் தோன்றக்கூடியனவான அத்தகைய பகிரங்கப் பிரதான வடிகால்களை அல்லது வேறு வடிகால்களையும் கழிவுநீர் வடிகால்களையும் வடிநீர்களையும் காலத்துக்குக்காலம் செய்விக்கலாம், மாற்றலாம் அல்லது விஸ்தரிக்கலாம் என்பதுடன், அவசியமானால் பிரதேச சபையானது ஏதேனும் வீதியினூடாக, வீதிக்குக் குறுக்காக அல்லது கீழாக அல்லது வீதியொன்றுக்கென அமைக்கப்பட்ட அல்லது முன்னைப்பட்ட ஏதேனும் இடத்திற்கு ஊடாகவும் குறுக்காகவும் அல்லது கீழாகவும் அல்லது வீதிகள் எவற்றிற்கும் கீழேயுள்ள ஏதேனும் அடிநிலைக்கிடங்கிற்கு அல்லது நிலவறைக்கு ஊடாகவும் குறுக்காகவும் அல்லது கீழாகவும் அத்துடன் (அதற்கென எழுத்திலான நியாயமான அறிவித்தலின் பின்னர்) எத்தகையதுமான மூடப்பட்ட அல்லது வேறு காணிகள் எவற்றிற்குள்ளும், ஊடாகவும் அல்லது கீழாகவும், கூடியவரை குறைந்தளவு சேதத்துடனும் புரியப்படும் ஏதேனும் சேதத்துக்கு முழு நட்டஈடு செலுத்தியும் அவற்றை எடுத்துச் செல்லலாம்.

*பிரதேச சபை பகிரங்க வடிகால்களை அமைத்தல்.*

80. (1) பிரதேச சபையானது, பகிரங்க வடிகால்கள், மதகுகள், பீலிகள், வடிநீர் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும், அது பொருத்தமானதாகக் காணும் வகையில் காலத்துக்குக்காலம் பேணுதல், பெருப்பித்தல், மாற்றுதல், மேல் வளைவு கட்டுதல் அல்லது வேறு வகையில் மேம்படுத்துதல் வேண்டும் என்பதுடன் அவற்றுள் பயனற்றது அல்லது தேவையற்றதென அது கருதுகின்றவாறான அத்தகையதை இடைநிறுத்தலாம், மூடிவிடலாம் அல்லது அழிக்கலாம்; ஆனால் அத்தகைய செயலினால் தொல்லை எதுவும் உருவாக்கப்படுதலாகாது.

*வடிகால்களைச் செம்மையாக்கவும் மாற்றவும் இடைநிறுத்தவும் பிரதேச சபைக்குள்ள கடமை*

(2) ஏதேனும் வடிகால், மதகு, பீலி அல்லது வடிநீர் இடைநிறுத்தப்பட்டதன், மூடப்பட்டதன், அழிக்கப்பட்டதன் அல்லது மாற்றப்பட்டதன் காரணமாக, ஆளெவரும் அதனைச் சட்டமுறையாகப் பயன்படுத்தும் வாய்ப்பை இழக்குமிடத்து, பிரதேச சபையானது முறையான ஊக்கத்துடன் அதற்கான பயனுறுதியுள்ள மாற்றீடொன்றை ஏற்பாடு செய்தல் வேண்டும்.

**மழைநீரும், வடிகால் கழிவும் வெளியேற்றப்படுவதற்கு முட்டுக்கட்டையிடுதல்.**

81. எந்த இயற்கையான நீர்வழியினுள், கால்வாயினுள், ஏரியினுள், சகதியினுள் அல்லது அதன் ஏதேனும் பாகத்தினுள் மழைநீர் அல்லது வடிகாற் கழிவு இதுவரை வெளியேற்றப்பட்டுள்ளதோ, அந்த ஏதேனும் நீர்வழி, கால்வாய், ஏரி, சகதி அல்லது அதன் ஏதேனும் பாகம் அத்தகைய மழை நீரை அல்லது வடிகாற்கழிவைப் பெறுவதற்குத் திறந்துவைத்திருக்கப்படுதல் வேண்டுமென, பிரதேச சபையொன்று ஒரு தீர்மானத்தின் மூலம் தீர்மானித்துள்ளபோதெல்லாம், பிரதேச சபையிடமிருந்து அத்தீர்மானம் பற்றிய எழுத்திலான அறிவித்தலொன்றைப் பெற்றதன் பின்னர், அத்தகைய மழைநீர் அல்லது வடிகாற்கழிவு தங்குதடையின்றிச் செல்வதற்கு முட்டுக்கட்டையிடுகின்றவாறான அல்லது அதனோடு தலையிடுகின்றவாறான அத்தகையதொரு முறையில் அத்தகைய ஏதேனும் நீர்வழியை, கால்வாயை, ஏரியை அல்லது சகதியை நிரப்புகின்ற அல்லது நிரம்பிய நிலையில் தொடர்ந்திருக்க அனுமதிக்கின்ற எவரேனும் ஆள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும் :

ஆயின்—

(அ) அத்தகைய இயற்கையான நீர்வழியின், கால்வாயின், ஏரியின், அல்லது சகதியின் சொந்தக்காரர், அத்தகைய மழைநீரை அல்லது வடிகாற் கழிவைப் பெற்றுக்கொண்டு செல்வதற்குத் தவிசாளரின் அபிப்பிராயத்தில் போதுமானதும் பொருத்தமானதுமாக இருக்கக்கூடியதான அத்தகைய வேறு கால்வாயை அல்லது வடிகாலை முதலில் ஏற்பாடு செய்யின், அத்தகைய இயற்கையான நீர்வழியை கால்வாயை, ஏரியை அல்லது சகதியை நிரப்பலாம் ; அத்துடன்

(ஆ) பிரதேச சபையானது, அத்தகைய வேறு கால்வாயை அல்லது வடிகாலை ஏற்பாடு செய்வதற்கான செலவு தொகைக்குப் பகுதியளவில் அல்லது முழுமையாக உதவுதொகையளிக்கலாம்.

**வடிகால்களின் பொதுவான கட்டுப்பாடு.**

82. (1) ஏதேனும் பிரதேச சபை இடப்பரப்பிலுள்ள ஒவ்வொரு தனிப்பட்ட வடிகாலும், அவ்விடப்பரப்பின் பிரதேச சபையினது மேற்பார்வையின் கீழும் கட்டுப்பாட்டின் கீழும் இருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வடிகாலானது எந்தக் காணியை அல்லது கட்டடத்தைச் சேர்ந்துள்ளதோ அல்லது எந்தக் காணியின் அல்லது

கட்டடத்தின் பயன்பாட்டிற்கென நிருமாணிக்கப்பட்டதோ, அந்தக் காணியின் அல்லது கட்டடத்தின் சொந்தக்காரர்களின் செலவிலும் கட்டணங்களின் பேரிலும் பிரதேச சபை தேவைப்படுத்தக்கூடிய வாறுகக் கட்டியமைக்கப்படுதலும் திருத்தியமைக்கப்படுதலும் பழுது பார்க்கப்படுதலும் அல்லது தகுந்த நிலேயில் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

(2) அத்தகைய ஏதேனும் வடிகால் எந்தக் காணியை அல்லது கட்டடத்தைச் சேர்ந்துள்ளதோ அந்தக் காணியின் அல்லது கட்டடத்தின் சொந்தக்காரர் எழுத்திலானவோர் அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறுன அத்தகைய முறையில் அவ்வடிகாலே மாற்றியமைக்கும்படி, பழுதுபார்க்கும்படி அல்லது நன்னிலேயில் வைத்திருக்கும்படி பிரதேச சபையினுல் அதன் சார்பில் எழுத்திலான அறிவித்தலொன்று சேர்ப்பிக்கப்பட்டபின்னர் எட்டு நாட்களின் போது அவ்வாறு செய்யாது அசட்டையாக இருப்பின், பிரதேச சபையானது, தேவைப்படுத்தப்பட்டவாறு அத்தகைய வடிகாலே மாற்றியமைக்கச் செய்யலாம், பழுதுபார்க்கச் செய்யலாம் அல்லது நன்னிலேயில் வைத்திருக்கச் செய்யலாமெனபதுடன் அது தொடர்பில் பிரதேச சபையினுல் உறப்படும் செலவுகள் சொந்தக்காரரினுல் செலுத்தப்பட்டு, இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்படுகின்றவாறுக அறவிடப்படற்பாலனவாதலும் வேண்டும்.

**83.** ஏதேனும் பிரதேச சபையின் எல்லேகளுக்குள், முதலிலே பெறப்பட்டதான பிரதேச சபையின் எழுத்திலான சம்மதமின்றி, பகிரங்க சாக்கடைகள் அல்லது வடிகால்கள் எதனுள்ளும் இட்டுச் செல்கின்ற ஏதேனும் வடிகாலே அமைக்கின்ற அல்லது அமைப்பிக்கின்ற எவரும் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றினுல் தண்டிக்கப்படற்பாலதான தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமெனபதுடன், பிரதேச சபையானது, அவ்வாறு அமைக்கப்படும் வடிகாலே உடைத்தழிக்கும்படி, மாற்றியமைக்கும்படி, மீளமைக்கும்படி, அல்லது தகுதியானதென எண்ணக்கூடியவாறுக வேறுவகையில் கையாளும்படி செய்யலாம் ; அத்துடன் பிரதேச சபையினுல் அது தொடர்பில் உறப்படும் செலவுகள் எல்லாம் தவறுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்படும் ஆளினுல் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்படுகின்றவாறுக அறவிடப்படற்பாலனவாதலும் வேண்டும்.

*அதிகாரமளிக்கப்படாத வடிகால் களேப் பகிரங்க வடிகால்களுக்குள் செலுத்துவதற்கான தண்டம்.*

**84.** ஏதேனும் பிரதேச சபையின் எல்லேகளுக்குள் பிரதேச சபையினது எழுத்திலான சம்மதமின்றி, பகிரங்க வடிகால், சாக்கடை, மதகு, நீரோடை அல்லது நீர்வழி எதற்கும் மேலாகப்புதிய கட்டடமெதுவும் நிறுவப்படலாகாது என்பதுடன் ஏதேனும் கட்டடம் அவ்வாறு நிறுவப்படுமிடத்து, பிரதேச சபையானது அதனே வீழ்த்தச் செய்யலாம் அல்லது தகுதியானதென அது எண்ணக்கூடியவாறுக வேறுவகையில் கையாளும்படி செய்யலாம் ; அத்துடன் அது தொடர்பில் பிரதேச சபையினுல் உறப்படும் செலவுகள், தவறுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்படும் ஆளினுல் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்படுகின்றவாறுக அறவிடப்படற்பாலனவாதலும் வேண்டும்.

*பிரதேச சபையின சம்மதமின்றி வடிகால்கள் முதலியன மீது கட்டடங்கள் நிறுவப்படலாகாது.*

**மலசலகூடங்கள்**

*மலசலகூட வசதி தொடர்பில் பிரதேச சபைக்குள்ள கடமை.*

85. பின்வருவன, பிரதேச சபையின் கடமைகளாதல் வேண்டும்:-

(அ) அத்தகைய இடப்பரப்பினுள் உள்ள எல்லா வீடுகளுக்கும், கட்டிடங்களுக்கும் காணிகளுக்கும், போதியதும் தகுந்தது மான மலசலகூட வசதி ஏற்பாடுசெய்யப்படுவதை உறுதிப் படுத்துவதற்கான பயன்தரும் வழிவகைகளை எடுத்தல் ;

(ஆ) அதன் எல்லைகளுக்குள்ளான பகிரங்கப் பார்வை இடங்களி லெல்லாம் அவசியமானவாறான அத்தகைய பகிரங்க மல சலகூட வசதியை ஏற்பாடு செய்தல் ; அத்துடன்

(இ) அதன் எல்லைகளுக்குள் உள்ள பகிரங்க மற்றும் தனிப்பட்ட மலசலகூட வசதியெல்லாம் தகுந்த நிலையிலும் நிலைமை யிலும் பேணப்படுகின்றதென்பதை உறுதிப்படுத்துதல்.

*மேலதிக மலசலகூடங்களை நிர்மாணித்தல்.*

86. (1) ஒவ்வொரு மலசலகூடமும், நீர்மலகூடமும் அல்லது குளியலறையும், அல்லது மேலதிக மலசலகூடமும் நீர்மலகூடமும் அல்லது குளியலறையும் ஏதேனும் வீட்டுடன் அல்லது கட்டடத்துடன் அல்லது காணியுடன் சேர்ந்ததாயிருத்தல் வேண்டும் அல்லது அதற் கென ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும் எனப்பிரதேச சபை அபிப் பிராயப்படும் ஏதேனும் விடயத்தில், பிரதேச சபையானது, அத்த கைய வீட்டின் அல்லது கட்டடத்தின் அல்லது காணியின் சொந்தக் காரருக்குச் சேர்ப்பிக்கப்படும் எழுத்திலான அறிவித்தல் மூலம், அவ்வறிவித்தல் சேர்ப்பிக்கப்படுவதிலிருந்து முப்பது நாட்களுக்குள், அத்தகைய அறிவித்தலில் அடங்கியுள்ள தேவைப்பாட்டுக்கிணங்க அத் தகைய மலசலகூடத்தை, நீர்மலகூடத்தை அல்லது குளியலறையை நிருமாணிக்கச் செய்யுமாறு அத்தகைய சொந்தக்காரரைத் தேவைப் படுத்தலாம்.

(2) சொல்லப்பட்ட முப்பது நாட்காலப்பகுதிக்குள் (1) ஆம் உட்பிரி வின்கீழ் தமக்குச் சேர்ப்பிக்கப்படும் ஏதேனும் அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கிணங்கியொழுகத் தவறும் அல்லது அதில் அசட்டையாகவிருக்கும் சொந்தக்காரர் ஒவ்வொருவரும் தவறொன் றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் இருநூற்றைம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு ஆளாதலும்வேண்டும்.

*மலசலகூடங்களை ஏற்பாடு செய்வதற்குத் தொழிலாளர்களின் தொழில் தருநருக்குள்ள கடமை.*

87. (1) பிரதேச சபையானது பெருமளவினரான வேலையாட் களை அல்லது தொழிலாளர்களை ஊழியத்திற்கமர்த்தும் எவரேனும் ஆள்மீது சேர்ப்பிக்கப்படும் எழுத்திலான அறிவித்தல் மூலம் —

(அ) அவ்வறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத் தகைய காலத்தினுள் அத்தகைய ஆட்களினால் தொழிலுக் கமர்த்தப்படும் தொழிலாளர்களினது அல்லது வேலையாட் களினது எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, பிரதேச சபைக்கு அவசியமெனத் தோன்றக்கூடியவாறான அத்த கைய எண்ணிக்கையினவான மலசலகூடங்களையும், நீர் மலகூடங்களையும், சலகூடங்களையும் ஏற்பாடு செய்யும்படி, அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தலாம் ; அத்துடன் இருபாலரான ஆட்களும் ஊழியத்துக்கமர்த்தப்பட்டுள்ள

அல்லது ஊழியத்துக்கமர்த்தப்பட முன்னைப்பட்டுள்ள அல்லது வருகை தந்துள்ள ஏதேனும் விடயத்தில் ஒவ்வொரு பாலாருக்கும் தகுந்ததும் தனியானதுமான வசதியை ஏற்பாடு செய்யும்படி அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தலாம் ; அத்துடன்

(ஆ) சுகாதாரத்துக்கொத்ததொரு நிலைமையிலும் தகுந்த நிலையிலும் அதனைப் பேணச் செய்யும்படி அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அறிவித்தல் சேர்க்கப்படும் எவரேனும் ஆள் அத்தகைய மலசலகூடங்களையும் நீர்மலசுகூடங்களையும், சலகூடங்களையும் ஏற்பாடுசெய்து பேணுவதற்கு அல்லது அவற்றைச் சுகாதாரத்துக்கொத்த நிலைமையில் அல்லது தகுந்தநிலையில் பேணுவதற்குத் தவறுமிடத்து அல்லது அசட்டையாக இருக்குமிடத்து, பிரதேச சபையானது, அத்தகைய மலசலகூடங்களும், நீர்மலசுகூடங்களும், சலகூடங்களும், நிருமாணிக்கப்பட அல்லது சுகாதாரத்துக்கொத்த நிலைமையில் அல்லது தகுந்த நிலையில் பேணப்படச் செய்யலாமென்பதுடன், அது தொடர்பில் பிரதேச சபையினால் உறப்படும்செலவுகள் மேற்சொல்லப்பட்ட ஆளினால் செலுத்தப்படுதலும் வேண்டும் : அத்துடன் தவறுகைபுரியப்படும் விடயத்தில், இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்படுகின்றவாறாக அவை அறவிடப்படற்பாலனவாதலும் வேண்டும்.

(3) அறிவித்தலில் குறித்துரைக்கப்படும் காலத்தினுள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தமக்குச் சேர்ப்பிக்கப்படும் ஏதேனும் அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகத்தவறும் அல்லது அசட்டையாகவிருக்கும் ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இருநூற்றைம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

88. (1) எந்த வீட்டில் அல்லது கட்டடத்தில் அல்லது காணியில் மலசலகூடமொன்று அமைந்துள்ளதோ அந்த ஏதேனும் வீட்டின் அல்லது கட்டடத்தின் அல்லது காணியின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் அத்தகைய மலசலகூடமானது அயலில் வதியும் அல்லது அவ்வழியே செல்லும் ஆட்களுக்குத் தெரியாத வகையில் அதைப் போதுமானதொரு கூரையினாலும், சுவரினாலும், அல்லது வேலியினாலும் அடைத்தல் வேண்டுமென்பதுடன் ஏதேனும் திறந்த மலசல கூடத்தை அல்லது தெருப்புறமாகத் திறக்கும் ஒரு கதவை அல்லது பொறிக்கதவை உடைய ஒரு மலசலகூடத்தை வைத்திருத்தல் அத்தகைய எவரேனும் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்குச் சட்டமுறையானதாதலாகாது.

தனிப்பட்ட மலசலகூடத்தை அடைப்பதில் அசட்டையாக இருத்தல்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எதற்கும் இணங்கியொழுகத் தவறுகின்றவரான அல்லது அதன் மீறுகையைப் புரிகின்றவரான ஏதேனும் வீட்டின் அல்லது கட்டடத்தின் அல்லது காணியின் சொந்

தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் அத்தகைய மீறுகை தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் ஐம்பது ரூபா கொண்ட குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும் :

ஆயின், பிரதேச சபையானது, அதன் தற்றுணிபின்படி, ஏதேனும் திறந்த மலகூடம் அல்லது ஏதேனும் தெருப்புறமாகத் திறக்கும் ஈரு கதவை அல்லது பொறிக்கதவையுடைய ஏதேனும் மலசலகூடம் எலவே உள்ளவிடத்தும் அத்துடன் தொல்லையொன்றை உருவாக்காத விடத்தும், தகுதியென அது எண்ணக்கூடிய வாறான அத்தகைய காலப்பகுதிக்கு அத்தகைய மலசலகூடம் தொடர்ந்திருப்பதை அனுமதிக்கலாம்.

மலசலகூடங்களின் பொதுவான கட்டுப்பாடு.

89. (1) ஏதேனும் பிரதேச சபை எல்லைக்குள் உள்ள எல்லா மலசலகூடங்களும், மலசலக் குழிகளும், பிரதேச சபையின் மேற்பார்வையின் கீழும் கட்டுப்பாட்டின் கீழும் இருத்தல் வேண்டுமென்பதுடன், மலசலகூடங்கள் எந்த வீடுகளை, கட்டடங்களை, அல்லது காணிகளைச் சேர்ந்துள்ளனவோ அல்லது எந்த வீடுகளின்; கட்டடங்களின் அல்லது காணிகளின் பயன்பாட்டிற்கென நிருமாணிக்கப்பட்டனவோ அல்லது பேணப்பட்டனவோ அந்தந்தச் சொந்தக்காரர்களின் செலவிலும் கட்டணங்களின் பேரிலும், பிரதேச சபை தேவைப்படுத்துகின்றவாறாக மாற்றியமைக்கப்படுதலும் பழுதுபார்க்கப்படுதலும், அல்லது தகுந்த நிலையில் வைத்திருக்கப்படுதலும் வேண்டும். அல்லது ஏதேனும் மலசலகூடம் நீரடைப்பு மலசலகூடமாக மாற்றப்படலாம்.

(2) ஏதேனும் மலசலகூடம் அல்லது மலசலக் குழி எந்த வீட்டை, கட்டடத்தை அல்லது காணியைச் சேர்ந்துள்ளதோ அந்த ஏதேனும் வீட்டின், கட்டடத்தின் அல்லது காணியின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர்,பிரதேச சபையினால் அந்நோக்கத்திற்கென எழுத்திலான அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்டதன்பின்னர் ஒரு மாதத்தின்போது அல்லது அறிவித்தலினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு காலப்பகுதியினுள் பிரதேச சபையினால் தேவைப்படுத்தப்படும் முறையில் மலசலகூடத்தை அல்லது மலசலக்குழியை மாற்றியமைப்பதற்கும், பழுதுபார்ப்பதற்கும், நன்னிலையில் வைப்பதற்கும் அல்லது அத்தகைய மலசலகூடத்தை ஒரு நீரடைப்பு மலசலகூடமாக மாற்றுவதற்கு அசட்டையாகவிருப்பின், பிரதேச சபையானது,தேவைப்படுத்தப்படும் முறையில், அத்தகைய மலசலகூடத்தை அல்லது மலசலக்குழியை மாற்றியமைக்க, பழுதுபார்க்க அல்லது நன்னிலையில் வைக்கச் செய்யலாம் ; அத்துடன் அது தொடர்பில் பிரதேச சபையால் உறப்படும் செலவுகள் சொந்தக்காரரினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்படுகின்றவாறாக அறவிடப்பட்டற்பாலனவாதலும் வேண்டும்.

பிரதேச சபையின பணிப்புக்களுக்கு அல்லது துணை விதிகளுக்கு முரணுக மலசலகூடங்கள் முதலியவற்றை அமைக்கின்ற அல்லது மாற்றியமைக்கின்ற ஆட்களுக்கான தண்டம்.

90. பிரதேச சபையின் எல்லைகளுக்குள்ளாக எவரேனுமாள்—

(அ) பிரதேச சபையினது பணிப்புக்களுக்கு முரணுக, அல்லது இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் துணைவிதியின் ஏற்பாடுகளுக்கு முரணுக ஏதேனும் மலசல கூடத்தை அல்லது மலசலக்குழியை நிருமாணிப்பாராயின்; அல்லது

(ஆ) அகற்றப்படவேண்டுமென அல்லது மூடப்படவேண்டுமென பிரதேச சபையினுல் கட்டளையிடப்பட்டுள்ள ஏதேனும் மலசல கூடத்தை அல்லது மலசலக்குழியைத் தொடர்ந்து பயன் படுத்துவாராயின்,

அத்தகைய ஆள் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன் றினுல் தண்டிக்கப்படற்பாலதான தவறென்றுக்குக் குற்றவாளி யாதல் வேண்டும்.

மலசலகூடங்களைச் சோதனையிடுதல் முதலியன.

91. (1) பிரதேச சபை அல்லது அந்நோக்கத்திற்கெனப் பிரதேச சபையினுல் அதிகாரமளிக்கப்படும் எவரேனும் அலுவலர் இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கு அமைவாக அதன் எல்லைகளுக்குள் உள்ள ஏதேனும் மலசலகூடத்தை அல்லது மலசலகூடக்குழியைச் சோதனை யிடலாம் என்பதுடன், அந்நோக்கத்திற்காக எந்நேரத்திலும் அவசிய மானவாறுன அத்தகைய உதவியாளர்களுடனும் வேலையாளர்களுட னும் ஏதேனும் வீட்டினுள், கட்டடத்தினுள் அல்லது காணியினுள் பிரவேசித்து அத்தகைய பிரதேச சபை அல்லது அலுவலர் தகுதியென எண்ணக்கூடியவிடத்து, ஆகக் குறைந்தளவு சேதத்தைச் செய்து நிலத்தைத் திறக்கவும் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான ஏதேனும் சோதனையின்மேல், ஏதே னும் மலசலகூடம் அல்லது மலசலக்குழி நன்னிலையிலும் நல்ல நிலை மையிலும் இருக்கவில்லையென அல்லது இச்சட்டத்தின் அல்லது இதன் கீழ் ஆக்கப்படும் துணைவிதிகளின் ஏற்பாடுகளை எம்முறையிலேனும் மீறி அல்லது பிரதேச சபையின் பணிப்புக்கு முரணுக பிரதேச சபை அமைக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் நிருமாணிக்கப்பட்டுள்ளதெனத் தோன்றுமாயின், அத்தகைய சோதனைக்கான செலவுகள் அத்தகைய மலசலகூடம் அல்லது மலசலக்குழி எந்த ஆளுக்குச் சொந்தமோ அந்த ஆளினுல் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்படுகின்றவாறுக அறவிடப்படற்பாலனவாதலும் வேண்டும்.

(3) ஏதேனும் மலசலகூடம் அல்லது மலசலக்குழி தகுந்த நிலையி லும் நிலைமையிலும் உள்ளதெனவும், இச்சட்டத்தின் அல்லது இதன் கீழாக்கப்படும் துணைவிதிகளின் ஏற்பாடுகளை அல்லது பிரதேச சபையின் பணிப்புக்களை மீறி நிருமாணிக்கப்படவில்லையெனவும் காணப்படின், பிரதேச சபை அல்லது பிரதேச சபையின் அதிகாரமளிக்கப்பட்ட அலு வலர், கூடிய விரைவில் நிலத்தை மூடச் செய்து சரிப்படுத்தச் செய்ய லாமென்பதுடன், அதனுல் உறப்படும் செலவுகள் அவ்விடயத்தில் பிரதேச சபையினுல் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டும்.

மலசலகூடத்தை அகற்றும்படி அல்லது மலசலக் குழியை மூடிவிடும்படி பணிப்பதற்குப் பிரதேச சபைக்குள்ள தத்துவம்.

**92.** (1) ஒரு பிரதேச சபை அல்லது அந்நோக்கத்துக்காக பிரதேச சபையினால் அதிகாரமளிக்கப்படும் எவரேனும் அலுவலர் எழுத்திலான அறிவித்தல் மூலம், பிரதேச சபையின் அல்லது அவ்வலுவலரின் அபிப்பிராயப்படி கட்டமைப்பில் குறைபாடுடையதான அல்லது எந்த நோக்கத்திற்கென அமைக்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்குப் பொருத்தமற்றதான அல்லது தொல்லையொன்றை உருவாக்கக் கூடியதான ஒரு மலசலகூடம் அல்லது மலசலக்குழி அமைந்துள்ளதும் பிரதேச சபையின் எல்லைகளுக்குள் உள்ளதுமான ஏதேனும் வீட்டின், கட்டடத்தின் அல்லது காணியின் சொந்தக்காரரை அல்லது இருப்பாட்சியாளரை அம்மலசலகூடத்தை அல்லது மலசலக் குழியைப் பழுது பார்க்கும்படி அல்லது அகற்றும்படி அல்லது அதற்குப்பதிலாக மண் மலசலகூடத்தைப் பதிலீடு செய்யும்படி தேவைப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அதற்கென அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்டபின்னர் ஒருமாதகாலப்பகுதிக்கு, அல்லது அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு காலப்பகுதியினுள் எவரேனும் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் அறிவித்தல் தொடர்பிலான மலசலகூடத்தை அல்லது மலசலக்குழியைப் பழுது பார்ப்பதற்கு, மாற்றியமைப்பதற்கு, மீளநிருமாணிப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு அல்லது அதற்காக மண்மலசலகூடமொன்றைப் பதிலீடு செய்வதற்கு அசட்டையாகவிருப்பின் அவர் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றினால் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

(3) பிரதேச சபை அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் (2)ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட மலசலகூடத்தை அல்லது மலசலக் குழியை பழுதுபார்க்க, மாற்றியமைக்க, மீள நிருமாணிக்க அல்லது அகற்றி அதற்காக மண்மலசலகூடமொன்றைப் பதிலிடச் செய்யலாம் என்பதுடன் அது தொடர்பில் பிரதேச சபையினால் அல்லது அந்த அலுவலரினால் உறப்படும் செலவுகள் சொந்தக்காரரினால் செலுத்தப்படுதல் வேண்டும் ; அத்துடன் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்கின்றவாறாக அவை அறவிடப்படற்பாலனவாதலும் வேண்டும்.

### மலசலமகற்றுதலும் குப்பையகற்றுதலும்

மலசலமகற்றுதலும் குப்பையகற்றுதலும் தொடர்பில் பிரதேச சபைக்குள்ள கடமை.

**93.** நியாயமானவாறு செயன்முறைக்குகந்ததாயிருக்கும் அளவுக்கு பிரதேச சபையானது பின்வருவனவற்றுக்காக அதன் எல்லைகளுக்குள் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் அதன் கடமையாதல் வேண்டும். :—

(அ) நடைபாதைகள் உட்பட , தெருக்களைக் தகுந்த முறையில் பெருக்குதலும் சுத்திகரித்தலும், எல்லாத் தெருக்குப்பையையும் சேகரித்தலும் அகற்றுதலும் ;

(ஆ) எல்லா வீட்டுக் குப்பையையும் தகுந்த காலங்களில் முறையாக அகற்றுவதை உறுதிப்படுத்தலும், எல்லா மலசலகூடங்களையும் தகுந்த காலங்களில் முறையாகச் சுத்திகரித்தலும் வெறுமையாக்குதலும் ; அத்துடன்

(இ) எல்லாத் தெருக் குப்பையையும், வீட்டுக் குப்பையையும், மலத்தையும் தகுந்த முறையில் அழித்தொழித்து விடுதலும்.

94. இப்பாகத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஏதேனும் பிரதேச சபையினால் சேகரிக்கப்பட்ட எல்லாத் தெருக்குப்பையும் வீட்டுக் குப்பையும், மலமும் அல்லது இதையொத்த வேறு கழிவுப் பொருளும் பிரதேச சபைக்குச் சொந்தமாக இருத்தல் வேண்டுமென்பதுடன் பிரதேச சபையானது அத்தகைய எல்லாக் கழிவுப் பொருளையும் விற்பதற்கு அல்லது அழித்தொழித்துவிடுவதற்கு முழுத்தத்துவமும் உடையதாதல் வேண்டும். சேகரிக்கப்பட்ட எல்லாக் குப்பையும் பிரதேச சபைக்குச் சொந்தமாக இருத்தல் வேண்டும்.

95. பிரதேச சபை ஒவ்வொன்றும், இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அகற்றப்பட்ட எல்லாத் தெருக் குப்பையையும் வீட்டுக் குப்பையையும் மலத்தையும் அல்லது இதையொத்த வேறு பொருளையும் தகுந்த முறையில் கையாண்டு தீர்ப்பதற்கு வசதியானவையும் அந்நோக்கத்துக்காக அல்லது இச்சட்டத்தின் வேறு நோக்கங்களுள் எதற்காகவும் தேவைப்படும் எல்லா வாகனங்களையும் விலங்குகளையும் கருவிகளையும் வேறு பொருட்களையும் காலத்திற்குக் காலம் ஏற்பாடு செய்தல் வேண்டுமென்பதுடன் இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, அகற்றப்பட்ட அத்தகைய குப்பை, மலம் அல்லது இதையொத்த கழிவுப்பொருள் எதுவும் தொல்லையொன்றை ஏற்படுத்துகின்றவாறாக அல்லாத அத்தகையவொரு வழியில் கையாண்டு தீர்ப்பதனை வலியுறுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா வழிவகைகளையும் முற்காப்புகளையும் எடுத்தலும் வேண்டும். குப்பையை அழித்தொழித்துவிடுவதற்கும் சாதனத்தை வைத்திருப்பதற்குமான இடங்கள்.

## சுகாதாரத்துக்கொவ்வாத கட்டடங்கள்

96. பிரதேச சபை எல்லைகளுக்குள்ளான வீடுகள் அல்லது கட்டடங்கள், இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளினால் தேவைப்படுத்தப்படுகின்றவாறாக அத்தகைய சுகாதாரத்துக்கொத்த நிலைமையில் வைத்திருக்கப்படுகின்றனவென உறுதிப்படுத்தும் நோக்குடன், பிரதேச சபையின் எல்லைகளுக்குள்ளான ஒவ்வொரு பாகத்தையும் காலத்துக்குக் காலம் மேற்பார்வை செய்வித்தலும், அத்துடன் அந்த இடப்பரப்பினுள் அத்தகைய ஏற்பாடுகளை வலியுறுத்துவதற்காக அவசியமான எல்லா வழிவகைகளையும் மேற்கொள்ளலும் பிரதேச சபையின் கடமையாதல் வேண்டும். சுகாதாரத்துக்கொவ்வாத கட்டடங்கள் தொடர்பில் பிரதேச சபைக்குள்ள கடமை.

97. (1) ஏதேனும் கட்டடம் அல்லது கட்டடங்களின் தொகுதி, தொற்றுநோய் ஏற்பட்டமை காரணமாக அல்லது அத்தகைய கட்டடங்கள் நெருக்கடியாகவுள்ள முறைகாரணமாக அல்லது வடிகாலமைப்பு இல்லாமை காரணமாக அல்லது குப்பையகற்றுகையின் செயன்முறைக்கொவ்வாத தன்மை காரணமாக அங்குள்ள அல்லது அயலிலுள்ள குடிமக்களின் உடனலத்திற்கு ஆபத்து ஏற்படக்கூடிய சாத்தியமுள்ளதென பிரதேச சபை திருத்திப்படும் போதெல்லாம், பிரதேச சபையானது, அவற்றின் சொந்தக்காரர்களுக்கு அல்லது இருப்பாட்சியாளர்களுக்கு அல்லது அதன் விருப்பத்தெரிவின் பேரில் அத்தகைய கட்டடங்கள் நிருமாணிக்கப்பட்டுள்ள காணியின் சொந்தக்காரருக்கு ஓர் அறிவித்தலைச் சேர்ப்பித்தல் வேண்டும் ; அத்தகைய ஆபத்தைத் தவிர்ப்பதற்கு பிரதேச சபை அவசியமெனக் கருதக்கூடியவாறாக அத்தகைய கட்டடத்தை மாற்றியமைத்தல் உட்பட அத்தகைய தொழிற்பாடுகளை அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள் நிறைவேற்றுமாறு பிரதேச சபை தேவைப்படுத்துதல் வேண்டும். உளதாயுள்ள கட்டடங்கள் தொடர்பில் பிரதேச சபைக்குள்ள கடமை.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்ட சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் ஒருவர் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் அத்தகைய தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு மறுக்கும் அல்லது அதில் அசட்டையாகவிருக்கும் ஏதேனும் விடயத்தில், அதற்கெனப் பிரதேச சபையால் அதிகாரமளிக்கப்படும் எவரேனும் அலுவலர் அத்தகைய ஆபத்தைத் தடுப்பதற்கு அவசியமெனப் பிரதேச சபை கருதக்கூடியவாறாக கட்டடங்களைத் தகர்த்துவிடச் செய்யலாம், அல்லது அது தொடர்பிலான அத்தகைய தொழிற்பாடுகளைப் புரிவிக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் எவையேனும் கட்டடங்கள் தகர்த்துவிடப்படுமிடத்து, பிரதேச சபை அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒவ்வொரு கட்டடத்திற்குமுரிய பொருட்கள் தனித்தனியாக விற்கப்படும்படி (அத்தகைய விற்பனையைச் செய்ய முடியுமாயின்) செய்தல் வேண்டும் என்பதுடன் அவ்விற்றுவரவுகள் கட்டடத்தின் சொந்தக்காரருக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும், அல்லது சொந்தக்காரர் எவர் என்பது அறியப்படாதிருப்பின் அல்லது உரித்து பிணக்கிலிருப்பின், அத்தகைய விற்றுவரவுகளின் கொடுப்பனவுக்கென அதற்குரித்துடைய ஆள் தகுதிவாய்ந்த நீதிமன்ற மொன்றில் கட்டளையைப் பெறும்வரை அவ்விற்றுவரவுகள் பிரதேச சபையினால் வைப்பில் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

வீடுகள் மிதமிஞ்சி நெருக்கமாயிருத்தல்.

98. ஏதேனும் வீட்டில் மிதமிஞ்சிய ஆட்கள் இருப்பதனால், அதன் இருப்பாட்சியாளர்களின் அல்லது அயலிலுள்ளவர்களின் உடனலத்திற்கு அபாயம் அல்லது பங்கம் ஏற்படக்கூடிய சாத்தியம் உண்டெனவும், இருப்பாட்சியாளர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பத்தினராகவுள்ளனரெனவும் பிரதேச சபைக்குத்தோன்றும் போதெல்லாம் பிரதேச சபையானது, அத்தகைய மிதமிஞ்சுகையைத் தணிப்பதற்கு நீதிவானொருவர் முன்னிலையில் வழக்கு நடவடிக்கைகளை எடுக்கச் செய்தல் வேண்டுமெனப்பதுடன் நீதிவான் அதன் மேல் தகுதியானதென அவர் எண்ணுகின்றவாறான அத்தகைய கட்டளையை ஆக்குதலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய மிதமிஞ்சுகையை அனுமதிக்கின்ற ஆட்கள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமெனப்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், அத்தகைய கட்டளைத் தேதிக்குப்பின்னர், அத்தகைய மிதமிஞ்சுகை தொடர்ந்திருக்கும் ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

வீடுகளைச் சோதனையிடவும் வெள்ளையடிக்கவும் பிரதேச சபைக்குள்ள தத்துவம்.

99. பிரதேச சபையினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், சூரியன் உதித்தபின்னும் சூரியன் மறைவதற்குமிடையே எந்நேரத்திலும் ஏதேனும் வீட்டினுள் அல்லது கட்டடத்தினுள் பிரவேசித்துச் சோதனையிடுதலும், அத்தகைய வீடு அல்லது கட்டடம் திருப்தியற்ற நிலைமையிலுள்ளது என அவர் காணுமிடத்து, எழுத்திலான கட்டளையொன்றின் மூலம் அது முழுவதும் அல்லது அதன் பாகம் உடனடியாக உட்புறமும் வெளிப்புறமும் வெள்ளையடிக்கப்பட அல்லது வேறுவகையில் சுத்திகரிக்கப்படப் பணித்தலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய வீட்டின் அல்லது கட்டடத்தின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர், கட்டளையானது அவரிடம் சேர்ப்பிக்கப்பட்ட நேரத்திலிருந்து ஏழு நாட்களினுள் அத்தகைய பணிப்புக்கிணங்கி

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்ட சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் ஒருவர் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் அத்தகைய தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு மறுக்கும் அல்லது அதில் அசட்டையாகவிருக்கும் ஏதேனும் விடயத்தில், அதற்கெனப் பிரதேச சபையால் அதிகாரமளிக்கப்படும் எவரேனும் அலுவலர் அத்தகைய ஆபத்தைத் தடுப்பதற்கு அவசியமெனப் பிரதேச சபை கருதக்கூடியவாறாக கட்டடங்களைத் தகர்த்துவிடச் செய்யலாம், அல்லது அது தொடர்பிலான அத்தகைய தொழிற்பாடுகளைப் புரிவிக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் எவையேனும் கட்டடங்கள் தகர்த்துவிடப்படுமிடத்து, பிரதேச சபை அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒவ்வொரு கட்டடத்திற்குமுரிய பொருட்கள் தனித்தனியாக விற்கப்படும்படி (அத்தகைய விற்பனையைச் செய்ய முடியுமாயின்) செய்தல் வேண்டும் என்பதுடன் அவ்விற்றுவரவுகள் கட்டடத்தின் சொந்தக்காரருக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும், அல்லது சொந்தக்காரர் எவர் என்பது அறியப்படாதிருப்பின் அல்லது உரித்து பிணக்கிலிருப்பின், அத்தகைய விற்றுவரவுகளின் கொடுப்பனவுக்கென அதற்குரித்துடைய ஆள் தகுதிவாய்ந்த நீதிமன்ற மொன்றில் கட்டளையைப் பெறும்வரை அவ்விற்றுவரவுகள் பிரதேச சபையினால் வைப்பில் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

வீடொன் மிதமிஞ்சி நெருக்கமாவிருத்தல்.

98. ஏதேனும் வீட்டில் மிதமிஞ்சிய ஆட்கள் இருப்பதனால், அதன் இருப்பாட்சியாளர்களின் அல்லது அயலிலுள்ளவர்களின் உடனலத்திற்கு அபாயம் அல்லது பங்கம் ஏற்படக்கூடிய சாத்தியம் உண்டெனவும், இருப்பாட்சியாளர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பத்தினராகவுள்ளனரெனவும் பிரதேச சபைக்குத்தோன்றும் போதெல்லாம் பிரதேச சபையானது, அத்தகைய மிதமிஞ்சுகையைத் தணிப்பதற்கு நீதிவானொருவர் முன்னிலையில் வழக்கு நடவடிக்கைகளை எடுக்கச் செய்தல் வேண்டுமென்பதுடன் நீதிவான் அதன் மேல் தகுதியானதென அவர் எண்ணுகின்றவாறான அத்தகைய கட்டளையை ஆக்குதலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய மிதமிஞ்சுகையை அனுமதிக்கின்ற ஆட்கள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், அத்தகைய கட்டளைத் தேதிக்குப்பின்னர், அத்தகைய மிதமிஞ்சுகை தொடர்ந்திருக்கும் ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

வீடுகளைச் சோதனையிடவும் வெள்ளை அடிக்கவும் பிரதேச சபைக்குள்ள தத்துவம்.

99. பிரதேச சபையினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், சூரியன் உதித்தபின்னும் சூரியன் மறைவதற்குமிடையே எந்நேரத்திலும் ஏதேனும் வீட்டினுள் அல்லது கட்டடத்தினுள் பிரவேசித்துச் சோதனையிடுதலும், அத்தகைய வீடு அல்லது கட்டடம் திருப்தியற்ற நிலைமையிலுள்ளது என அவர் காணுமிடத்து, எழுத்திலான கட்டளையொன்றின் மூலம் அது முழுவதும் அல்லது அதன் பாகம் உடனடியாக உட்புறமும் வெளிப்புறமும் வெள்ளையடிக்கப்பட அல்லது வேறுவகையில் சுத்திகரிக்கப்படப் பணித்தலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய வீட்டின் அல்லது கட்டடத்தின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர், கட்டளையானது அவரிடம் சேர்ப்பிக்கப்பட்ட நேரத்திலிருந்து ஏழு நாட்களினுள் அத்தகைய பணிப்புக்கிணங்கி

யொழுகாமல் அசட்டையாகவிருப்பின் பிரதேச சபையானது வேலையைச் செய்விக்கலாமென்பதுடன், அதனால் உறப்படும் செலவுகள் சொந்தக்காரரினால் செலுத்தப்படுதலும் வேண்டும்; அத்துடன் தவறுகை புரியப்படும் விடயத்தில், இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்படுகின்றவாறாக அவை அறவிடப்படற்பாலனவாதலும் வேண்டும்.

## தொல்லைகள்

தொல்லைகளைச் சோதனையிடல்.

**100.** இச்சட்டத்தினால் அல்லது வேறேதேனும் சட்டவாக்கத்தினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் தணித்தலைத் தேவைப்படுத்துகின்றனவான எத்தொல்லைகள் உள்ளனவென்பதை நிச்சயிப்பதற்கும், அத்தகைய தொல்லைகளைத் தவிர்ப்பதற்காக இச்சட்டத்தின் அல்லது அத்தகைய வேறு சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளை வலியுறுத்துவதற்குமான நோக்குடன் பிரதேச சபை அதன் இடப்பரப்பைக் காலத்திற்குக் காலம் சோதனையிடுவித்தல் பிரதேச சபையின் கடமையாதல் வேண்டும்.

தனிப்பட்ட வளவுகளிலுள்ள உடனலத்துக் கொவ்வாத இடங்குகளைத் தூர்ப்பதற்கான தத்துவம்.

**101.** (1) ஏதேனும் பிரதேச சபையின் எல்லைக்குள் உள்ள ஏதேனும் தனிப்பட்ட கிடங்கு அல்லது தாழ்ந்த சதுப்பு நிலம் அல்லது ஏதேனும் கழிவு நீர் அல்லது தேங்கிய நீர் உடனலத்திற்கு ஊறுவிளைவிப்பதாக அல்லது அயலவர்களுக்கு அருவருப்பானதாக உள்ளதெனப் பிரதேச சபைக்குத் தோன்றுமிடத்து பிரதேசசபையானது எழுத்திலான அறிவித்தல் மூலம் அத்தகைய கிடங்கை அல்லது சதுப்புநிலத்தைச் சுத்திகரிக்குமாறு அல்லது தூர்க்குமாறு அல்லது அத்தகைய கழிவுநீரை அல்லது தேங்கிய நீரை வடியவிடுமாறு அல்லது அகற்றுமாறு அந்தக் காணியின் சொந்தக்காரரைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான அறிவித்தல் சேர்ப்பிக்கப்படும் எவரேனும் சொந்தக்காரர் அதில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள், அவ்வறிவித்தலுக்கிணங்கியொழுக மறுப்பின் அல்லது அசட்டையாகவிருப்பின், பிரதேச சபையின் தவிசாளர் அல்லது அலுவலர்களும் வேலையாளர்களும் காணியினுள் பிரவேசித்து (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட நோக்கங்கள் எவற்றிற்காகவும் அவசியமான எல்லாச் செயல்களையும் செய்யலாமென்பதுடன், அதனால் உறப்படும் செலவுகள் காணிச் சொந்தக்காரரினால் செலுத்தப்படுதலும் வேண்டும்; அத்துடன் தவறுகை புரியப்படும் விடயத்தில், இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்படுகின்றவாறாக அவை அறவிடப்படற்பாலனவாதலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட காணி, ஒருவருக்கு மேறபட்ட ஆட்களினால் சொந்தமாக வைத்திருக்கப்படுமிடத்து, அவ்வுட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட செலவுகள் பிரதேச சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விகிதாசாரங்களில் அத்தகைய காணியில் அத்தகைய சொந்தக்காரர்களுக்குள்ள அக்கறையைக் கருத்திற்கொண்டு அப்பல்வேறு சொந்தக்காரர்களிடையே பங்கிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர்களிடமிருந்து அறவிடப்படற்பாலனவாதலும் வேண்டும்.

விலங்கறு மனைகளுக்கு உரிமம் வழங்கல்.

102. (1) பிரதேச சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டதான இடமொன்றல்லாத ஏதேனும் பிரதேச சபையின் எல்லைக்குள்ளான இடமெதுவும், அவ்விடத்தை விலங்கறுமனையொன்றாகப் பயன்படுத்துவதற்கான உரிமமொன்றைத் தமது தற்றுணிபில் தாம் அவசியமெனக் கருதுமிடத்து, காலத்திற்குக் காலம் வழங்குவதற்கு, இடைநிறுத்தி வைப்பதற்கு அல்லது கைமீட்பதற்கு இத்தால் தத்துவமளிக்கப்பட்டுள்ளவரான பிரதேச சபையின் தலைவரிடமிருந்து உரிமமொன்று பெறப்பட்டிருந்தாலொழிய, விலங்கறுமனையொன்றாகப் பயன்படுத்தப் படலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் உரிமமளிக்கப்படாததும் (பிரதேச சபையினால் ஏற்பாடுசெய்யப்பட்ட இடமொன்று தவிர்ந்ததும்) அல்லது அது தொடர்பில் அளிக்கப்பட்ட உரிமம் இடைநிறுத்தப்பட்டு அல்லது ஒழிக்கப்பட்டிருப்பதுமான ஏதேனும் இடத்தை விலங்கறு மனையொன்றாகப் பயன்படுத்தும் ஆளொவ்வொருவரும், அறுநூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றினாலும் அத்துடன் அத்தகைய விலங்கறுமனையைப் பயன்படுத்தாது விட்டுவிடுமாறு தேவைப்படுத்தித் தவிசாளரினால் அவருக்கு அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்டபின்னர் தவறு தொடர்ந்து புரியப்படும் நாளொவ்வொன்றுக்கும், ஐந்நூறு ரூபாவை விஞ்சாத மேலதிகக் குற்றப்பணமொன்றினாலும் தண்டிக்கப்படற்பாலதான அத்தகைய தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

குழந்தையால் தொல்லை.

103. பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட வயதையுடைய குழந்தை எதனையும் தன் கவனிப்பில் அல்லது கட்டுக்காப்பில் வைத்திருந்து, தெரு எதனிலும் அல்லது தெரு எதற்குப் பக்கத்திலும் அத்தகைய குழந்தை தொல்லை ஒன்றினைப் புரிவதிலிருந்து தடுக்காது தவறுபவரான ஆள் ஒவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியானவராதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்துக்கு ஆளானவராதலும் வேண்டும்.

பகிரங்க குளிக்கும் இடங்கள்.

104. (1) பிரதேச சபையானது, பகிரங்க அறிவித்தல் மூலம் அந்நோக்கத்திற்கென ஒதுக்கப்படாததான ஏதேனும் பகிரங்க இடத்தில் அல்லது அறிவித்தலில் குறித்துரைக்கப்படாத வேறு நேரங்களில் அல்லது ஆட்களால் விலங்குகள் குளிப்பாட்டப்படுவதனையும் அல்லது ஆடைகள் கழுவப்படுவதனையும், அத்துடன் பகிரங்க இடத்திலுள்ள நீர் பயன்படுத்தப்படாது கெடுப்பதாக அல்லது உபயோகமற்றதாக்குவதாக தீர்ப்பாக்கும் வகையான ஏதேனும் எல்லா வேறு செயல்களைச் செய்வதனை அல்லது குளிக்கும் அல்லது கழுவும் இடத்தினைப் பயன்படுத்தும் ஆட்களுக்கு வசதிக்குறைவினை அல்லது எரிச்சலூட்டும் வகையாகச் செய்யும் தன்மையான செயலைத் தடைசெய்யலாம். அத்தகைய அறிவித்தலானது, சிங்கள, தமிழ் அத்துடன் ஆங்கில மொழிகளில் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் குறைந்தது ஒரு சிங்கள, தமிழ், ஆங்கில செய்திப்பத்திரிகையில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவுக்கு முரணாக குளிப்பவரான, கழுவுபவரான அல்லது ஏதேனும் செயலைச் செய்பவரான ஆள் ஒவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியானவராதல் வேண்டும் என்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கும் ஆளானவராதல் வேண்டும்.

நீர்த்தேக்கம் அல்லது நீர் வசதி வேலைகளுக்குள் பாய்வதான அருவிகளின் தீம்பு.

105. ஏதேனும் பிரதேச சபைக்குச் சொந்தமான நீர் வசதி வேலைகளின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் நீர்த்தேக்கத்தினை அல்லது அது அத்தகைய நீர்த்தேக்கத்தினுள் பாய்வதான அல்லது அத்தகைய நீர்த்தேக்கத்திற்கு ஊட்டம் தருவதான அருவி அல்லது நீர்வழி எதனிலும் குளிப்பவரான அல்லது அவற்றுள் எவையேனும் ஆடைகளை அல்லது வேறு சாமான்களைக் கழுவுபவரான அல்லது அவற்றினுள் ஏதேனும் அழுக்கு, குப்பை அல்லது அசுத்தப்பொருள் ஓடிப்போகுமாறு செய்பவரான அல்லது வேறு ஏதேனும் வகையில் தீம்பை அல்லது அசுத்தத்தை ஏற்படுத்துபவரான அல்லது அவ்வாறு ஏற்படுவதனை அனுமதிப்பவரான ஆள் ஒவ்வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியானவராதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றுக்கும் ஆளானவராதல் வேண்டும். அத்துடன் தொடர் தவறொன்றின் விடயத்தில், அதற்காக குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்பின் அல்லது தவறு தொடர்பாக கவனத்தை ஈர்த்துக்கொள்ளும் எழுத்திலான அறிவித்தல் சபையிலிருந்து வழங்கப்பட்ட தேதியின்பின் தவறு தொடரும் ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபாவை விஞ்சாத மேலதிகக் குற்றப்பணத்திற்கும் ஆளானவராதல் வேண்டும்.

தொழிற்சாலைகளால் ஏற்படுத்தப்படும் தீம்பு.

106. (1) பிரதேச சபை இடப்பரப்பினுள், சூழ் வட்டாரத்தின் சுகாதாரத்திற்கு ஊறுசெய்யும் வகையில் அல்லது பங்கம் விளைவிக்கும் வகையில் ஏதேனும் தொழிற்சாலையினைச் செயற்படுத்தும் அல்லது செயற்படுமாறு செய்விக்கும் ஆள் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியானவராதல் வேண்டும்.

(2) நீதிவான் ஒருவர் சுருக்க விசாரணை ஒன்றன் பின் (1) ஆம் உட்பிரிவின்கீழான தவறொன்றுக்கு ஆள் ஒருவரை குற்றவாளி எனத் தீர்ப்பளிக்குமிடத்து, அத்தகைய தொழிற்சாலையால் ஏற்படுத்தப்பட்ட தீம்பின் அளவைப்பொறுத்து—

(அ) அத்தகைய தொகையானது நீதிவான் ஒருவர் அவரது சாதாரண நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் விதிப்பதான தொகையினைவிட அதிகமானதாக இருப்பது எப்படியிருப்பினும், அத்தகைய தொழிற்சாலையானது எத்தகைய வளவுகளில் அமைந்துள்ளதோ அத்தகைய வளவுகள் தொடர்பாக இச்சட்டத்தினது அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்டதான ஏதேனும் துணைவிதியினது ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றுக்குச் செலுத்தற்பாலதான கட்டணத்தின் இரண்டு மடங்கான தொகைக்குச் சமமான குற்றப்பணம் ஒன்றினை அத்தகைய ஆள் செலுத்தவேண்டும் எனவும் அத்துடன் அவ்வாறு அறவிடப்பட்டதான தொகையானது பிரதேச சபை நிதியத்திற்குச் செலுத்தப்பட வேண்டும் எனவும், அல்லது

(ஆ) அத்தகைய தொழிற்சாலையின் செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும், எனவும் கட்டளையிடலாம்.

ஆளினது அல்லது ஆதனத்தினது பாதுகாப்புக்கு ஊறுவிளைப்பதான மரங்கள் அல்லது மரக் கிளைகள், அடிமரங்கள் அல்லது பழங்கள் தொடர்பாக பிரதேச சபைத் தவிசாளருக்குள்ள தத்துவம்.

**107.** (1) ஏதேனும் பிரதேச சபையின் இடப்பரப்பில் ஏதேனும் மரம் அல்லது மரமொன்றின் ஏதேனும் கிளை, அடிமரம், பழம் அல்லது வேறு பாகம், ஏதேனும் கட்டடத்திற்குச் சேதம் விளைவிக்கும் சாத்தியமுள்ளவிடத்து அல்லது ஏதேனும் கட்டடத்தில் குடியிருப்பவர்களுக்கு அல்லது ஏதேனும் பகிரங்கப் பொதுவழியால் போய் வருபவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் நிலையில் உள்ளவிடத்து, அத்தகைய இடப்பரப்பினது பிரதேச சபையின் தவிசாளரானவர், அத்தகைய மரமானது எக்காணியில் இருக்கிறதோ அக்காணியின் சொந்தக்காரருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு வழங்கப்படும் எழுத்திலான அறிவித்தல் மூலம் அந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்திற்குள்ளாக, அத்தகைய சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் அத்தகைய மரத்தினை அல்லது அத்தகையமரத்தினது கிளை, அடிமரம், பழம் அல்லது வேறு பாகம் ஆகியனவற்றை கட்டிப் பத்திரப்படுத்துமாறு அல்லது வெட்டி வீழ்த்தி அகற்றுமாறு தேவைப்படுத்தலாம்.

(2) பிரதேச சபைத் தவிசாளர் ஒருவரிடமிருந்து (1) ஆம் உட்பிரிவின் கீழ் அறிவித்தல் ஒன்று சேர்ப்பிக்கப்பட்டவரான ஆள் ஒவ்வொருவரும், அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டதான காலத்துக்குள்ளாக அத்தகைய அறிவித்தலில் உள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய காலத்துக்குள்ளாக அத்தகைய தேவைப்பாடுகளை அத்தகைய ஆள் இணங்கியொழுகுவதில் மறுக்கும் அல்லது இணங்கியொழுகுவதில் கவலையீனமாக இருக்கும் பட்சத்தில், தவிசாளர் அல்லது அத்தகைய தவிசாளரால் எழுத்தில் அதிகாரம் வழங்கப்பட்டவரான எவரேனும் அலுவலர் அல்லது வேலையாள் அத்தகைய அறிவித்தலில் குறிப்பீடு செய்யப்பட்டதான காணியினுள் பிரவேசிக்கலாம் என்பதுடன், அத்தகைய அறிவித்தலால் அத்தகைய ஆள் எதனைச்செய்யவேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்டாரோ அதனைச் செய்யலாம், அத்துடன் அதனால் உறப்பட்டதான செலவுகள் அத்தகைய ஆளிடமிருந்து அத்தகைய பிரதேச சபைக்கு உரித்தான கடனொன்று என்றாற் போன்று அறவிடவும் படலாம்.

பிரிவு 104, பிரிவு 105, அத்துடன் பிரிவு 106 என்னும் பிரிவுகளின் நோக்கங்களுக்காக, "தீழ்ப்பு" என்பது,பகிரங்க சுகாதாரம் ஒவ்வொரு விவரணத்தினதுமான விலங்குகள், பறவைகள், வனவிலங்கு ஜீவராசிகள், மீன் அல்லது நீர்வாழ் உயிரினங்கள் அல்லது தாவரங்கள் என்பனவற்றிற்கு ஆபத்தான அல்லது ஆபத்தாகும் வகையான சாத்தியங்களை கொண்டதான நிலைமையை ஏற்படுத்தும் வகையில் ஏதேனும் நன்மைபயப்பதான பயன்பாட்டை மாற்றும் தன்மையில் கழிவுகளை அகற்றுதல், வெளிப்படுத்துதல் அல்லது குவித்தல் செய்தல்மூலம் சூழலினது ஏதேனும் பாகத்தின் பௌதீக, வெப்ப, இரசாயன, உயிரியல் அல்லது கதிர்த்தொழிற்பாட்டு இயல்புகளின் நேரடியான அல்லது மறைமுகமான மாற்றம் எனப் பொருளாகும்.

## பொதுப் பயன்பாட்டுச் சேவைகள்

பொதுப் பயன்பாட்டுச் சேவைகளைத் தாபிப்பதற்குப் பிரதேச சபைக்குள்ள தத்துவம்

**108.** பிரதேச சபையொன்று அதன் எல்லைகளுக்குள், ஒன்றில் தனியாக அல்லது வேறேதேனும் உள்ளூரதிகாரசபையுடன், அல்லது வேறெவரேனும் ஆளுடன் ஒன்றிணைந்து, அத்தகைய இடப்பரப்பில் வசிக்கும் அல்லது அங்குவரும் ஆட்களின் நன்மைக்காகப் பின்வரும் பயன்பாட்டுச் சேவைகளைத் தாபித்துப் பேணிவரலாம் :—

(அ) நீர்வழங்கல் ;

(ஆ) தெருக்கள், பொதுவிடங்கள், பொது கட்டடங்கள் ஆகியவற்றுக்கு வெளிச்சமிடுதல் ;

(இ) மின்வெளிச்சம் அல்லது மின்வலு வழங்குதல் ;

(ஈ) சந்தைகள் ;

(உ) வாடி வீடுகள் ;

(ஊ) பகிரங்கக் குளியல் தொட்டிகளும் குளியல் இடங்களும் ;

(எ) மலசலகூடங்களுக்கான குந்துதகடுகளை உற்பத்தி செய்தலும் கொள் விலையில் வழங்குதலும் ;

(ஏ) ஏழைமக்களுக்கு வீட்டு இடவசதியை ஏற்பாடு செய்தல்;

(ஐ) இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாட்டின் கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் தாபிக்கும்படி, பேணும்படி அல்லது ஏற்பாடு செய்யும்படி பிரதேச சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள வேறேதேனும் விதத்தினதான பகிரங்க சேவை.

பொதுப் பயன்பாட்டுச் சேவைகளுக்கான செலவுகளைக் கொடுத்துத் தீர்க்கும் முறை

**109.** தாபித்துப் பேணும்படி 108 ஆம் பிரிவினால் அல்லது அப்பிரிவின்கீழ் பிரதேச சபையொன்றுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஏதேனும் பொதுப்பயன்பாட்டுச் சேவையைத் தாபித்துப் பேணும் நோக்கத்திற்காகப் பிரதேச சபையானது—

(அ) பிரதேச சபையின் வருவாயிலிருந்து சம்பந்தப்பட்ட எவையேனும் செலவுகளுக்கு ஏற்பாடு செய்யலாம் ; அல்லது

(ஆ) அமைச்சரின் அனுமதிக்கமைவாகவும் துணைவிதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வரையறைகளுக்கும் விலக்களிப்புகளுக்கும் அமைவாகவும் அத்தகைய சேவையினால் நன்மைபெறும் இடப்பரப்பின் மீது விசேட வீதவரியொன்றை விதிக்கலாம் ; அல்லது

(இ) அச்சேவையை வழங்குவதற்காக அத்தகைய சேவையினால் நன்மை பெறும் வளவுகளின் சொந்தக்காரர்களுடன் அல்லது இருப்பாட்சியாளர்களுடன் ஒப்பந்தம் செய்யலாம் என்பதுடன், துணைவிதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறாக அத்தகைய சேவை தொடர்பில் அத்தகைய வீதவரிகளை அறவிட்டு வசூலிக்கலாம், அல்லது

(ஈ) அத்தகைய சேவையிலிருந்து நன்மைபெறும் ஆட்களிடமிருந்து நியாயமானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய கட்டணங்களை அறவிடலாம் ; அல்லது

(உ) பிரதேச சபையுடன் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையைப் பின்பற்றி, அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் உரிமத்தின்கீழ் அத்தகைய பகிரங்க சேவையெதுவும் எவரேனும் ஊக்குவோன் அல்லது ஊக்குவோர் மூலமாகத் தாபிக்கப்பட்டுப் பேணப்படுமிடத்து, பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறாக, அத்தகைய சேவையிலிருந்து நன்மைபெறும் ஆட்களிடமிருந்து அத்தகைய கட்டணங்களை அறவிடும்படி அத்தகைய ஊக்குவோனுக்கு அல்லது ஊக்குவோருக்கு அதிகாரமளிக்கலாம்.

**நீர்ச் சேவைக்கான அல்லது மலசலமகற்றற் சேவைக்கான விசேட வீதவரியின் உச்சஎல்லை.**

**110.** ஒரு பிரதேச சபையினால் தாபிக்கப்பட்டுப் பேணிவரப்படும் நீர்ச் சேவையினால் அல்லது மலசலமகற்றற் சேவையினால் நன்மை பெறும் இடப்பரப்பின்மீது அப்பிரதேச சபையினால் விதிக்கப்படும் விசேட வீதவரியொன்று அத்தகைய இடப்பரப்பினுள் அமைந்துள்ள எல்லாக் கட்டடங்களினதும் காணிகளினதும் ஆண்டுப் பெறுமதியின் ஒன்பது சதவீதத்தை விஞ்சுதலாகாது.

**அரச ஆதனம் தொடர்பில் விசேட வீதவரிகளுக்கான பொறுப்பு.**

**111.** (1) ஏதேனும் பிரதேசசபை இடப்பரப்பின் எல்லைகளினுள் அமைந்துள்ளதும் அரசின் ஆதனமாகவுள்ளதுமான ஏதேனும் காணி அல்லது கட்டடம் அரசினால் அளிக்கப்பட்ட ஏதேனும் குத்தகையின் அல்லது அனுமதிச் சீட்டின்கீழ் எவரேனும் ஆளினால் இருப்பாட்சி கொள்ளப்படுமிடத்து, அல்லது வைத்திருக்கப்படுமிடத்து, அத்தகைய காணி அல்லது கட்டடம் 109 ஆம் பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட ஏதேனும் விசேட வீதவரி தொடர்பில் வரிமதிக்கப்படுவதற்கு உட்பட்டதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆள் அத்தகைய காணி அல்லது கட்டடம் தொடர்பில் விதிக்கப்படற்பாலதான விசேட வீதவரியைச் செலுத்துவதற்கு ஆளாதலும் அதனைச் செலுத்துதலும் வேண்டும்.

(2) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதுவும், வெளிப்படையானதாயினும் சரி, உட்கிடையானதாயினும் சரி, அரசுடன் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின்கீழ் அல்லது ஒப்பந்தத்தின்கீழ் அல்லது அரசிடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் அனுமதிச்சீட்டின்கீழ் அவ்வாதனத்தை இருப்பாட்சி கொள்ளும் அல்லது வைத்திருக்கும் எவரேனுமாளிடமிருந்து வருமதியாகவிருக்கக்கூடிய ஏதேனும் விசேட வீதவரியை அறவிடுவதற்காக கைப்பற்றப்படுதலோ அல்லது விற்கப்படுதலோ ஆகாது.

**விசேட வீதவரிகளை மதிப்பிடுதலும் அறவிடுதலும்.**

**112.** நூற்று ஒன்பதாம் பிரிவின் கீழான ஒவ்வொரு விசேட வீதவரியும், 159 ஆம் பிரிவினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மதிப்பிடப்படுதலும் விதிக்கப்படுதலும், தவறுகையின் விடயத்தில் சுருக்கமுறையில் அறவிடப்படுதலும் வேண்டும்.

**113.** பிரதேச சபையொன்று, சொந்தக்காரரின் வறுமைகாரணமாக 109 ஆம் பிரிவின்கீழ் விதிக்கப்படும் ஏதேனும் விசேட வீத வரியிலிருந்து ஏதேனும் ஆதனத்திற்கு தீர்மானத்தின்மூலம் சிறப்பாக விதிவிலக்களிக்கலாம். *தீர்மானத்தின் மூலம் விசேட வீதவரியிலிருந்து விலக்களிப்பு.*

## நீர் வழங்கல்

**114.** பிரதேசசபையொன்று அமைச்சரின் அங்கீகாரத்துடனும் அதன் எல்லைகளுக்கு அருகாமையிலுள்ள ஏதேனும் இடப்பரப்பின் உள்ளூரதிகாரசபையினது சம்மதத்துக்கமையவும், அத்தகைய ஏதேனும் அருகாமையிலுள்ள இடப்பரப்பில் அமைந்துள்ள எவையேனும் வளவுகளின் சொந்தக்காரருடன் அல்லது இருப்பாட்சியாளர்களுடன் அத்தகைய வளவுகளுக்கு ஏதேனும் பொதுப் பயன்பாட்டுச் சேவையை வழங்குவதற்காக ஒப்பந்தம் செய்யலாம் என்பதுடன் அத்தகைய வழங்கல் தொடர்பில் வீதவரிகளை அறவிட்டு வசூலிக்கலாம். *அருகாமையிலுள்ள வளவுகளுக்கான வழங்கல்.*

**115.** இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் எந்தப் பொதுப் பயன்பாட்டுச் சேவையைத் தாபித்துப் பேணுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றதோ அந்தப் பொதுப்பயன்பாட்டுச் சேவை எதனையும் தாபித்துப் பேணிவரும் நோக்கங்களுக்காக, பிரதேச சபையெதுவும் ஏதேனும் ஒப்பந்தத்தைச் செய்யலாமென்பதுடன், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய நோக்கங்களுக்குத் தேவைப்பட்ட எல்லா வளவுகளையும் எந்திரத்தொகுதியையும், துணைக்கருவிகளையும் கொள்வனவு செய்யலாம், குத்தகைக்கெடுக்கலாம், வாடகைக் கெடுக்கலாம், நிருமாணிக்கலாம் அல்லது பேணிவரலாம் ; அத்துடன் அதற்கென அவசியமாக இருக்கக்கூடியவாறான அத்தகைய எல்லா வேலைகளையும் கருமங்களையும் காரியங்களையும் செய்து நிறைவேற்றலாம். *பிரதேச சபைகளின் பொதுவான தத்துவங்கள்.*

**116.** பிரதேச சபை, அதன் எல்லைகளுக்குள் அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தினுள் இருக்கும் வாசிகளின் நன்மைக்காக பகிரங்க நீர்வழங்கலொன்றைத் தாபித்துப் பேணிவருமிடத்து, விடயத்துக் கேற்றவாறு, அத்தகைய இடப்பரப்பிலுள்ள அல்லது அதன் பாகத்திலுள்ள எந்த வளவுகள் தொடர்பில் பிரதேசசபை விசேட நீர்வீத வரியை விதிக்கின்றதோ, அந்த வளவுகளின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் தமது குடும்பத்தினரது அல்லது வளவுகளில் இருப்பாட்சிகொள்ளும் தமது வாடகைக் குடியிருப்பாளர்களினது அல்லது வேறு ஆட்களினது வீட்டுத்தேவைகளுக்காகப் பகிரங்கத் தெருக்குழாய்களிலிருந்து நீர்வழங்கலொன்றை மேலதிக இறுப்பின்றிப் பெறுவதற்கு உரித்துடையவராதல்வேண்டும். *வீதவரி செலுத்துநர்கள் வீட்டுப் பாவனைக்காகப் பகிரங்க நீர்க்குழாயிலிருந்து இலவச நீர் வழங்குகைக்கு உரித்துடையோராதல்.*

**" வீட்டுத் தேவைகள் " என்பதன் பொருள்.**

**117.** வீட்டுத் தேவைகளுக்கான நீர்வழங்கலொன்று, குதிரைகள், கால்நடைகள், அல்லது வாகனங்கள் விற்பனைக்கு அல்லது வாடகைக்கு வைத்திருக்கப்படுமிடத்து அத்தகைய குதிரைகளுக்கான, கால்நடைகளுக்கான, அல்லது வாகனங்களைக் கழுவுவதற்கான நீர் வழங்கலொன்றை அல்லது ஏதேனும் வியாபாரத்திற்கான, உற்பத்திக்கான அல்லது தொழிலுக்கான அல்லது அலங்கார நீர்ச்சுனைகளுக்கான அல்லது நீச்சல் குளிப்பிடங்களுக்கான அல்லது ஏதேனும் அலங்கார அல்லது பொறிமுறைத் தேவைக்கான அல்லது நீர்ப்பாசனத் தேவைகளுக்கான நீர்வழங்கலொன்றை உள்ளடக்காது.

**தனியார் சேவைக்கான ஒப்பந்தம்.**

**118.** பிரதேச சபையொன்று அப்பிரதேச சபைக்கும், வீட்டுத் தேவைகள் அல்லாத நோக்கங்களுக்காக நீர்வழங்கலை விரும்பும் ஆட்களுக்குமிடையே உடன்பாடு செய்து கொள்ளப்படக்கூடியவாறான அல்லது அதற்கெனத் துணைவிதிகளினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய அளவுகளிலும் அத்தகைய நியதி நிபந்தனைகளின் மீதும், வீட்டுத் தேவைகள் அல்லாத நோக்கங்களுக்காக நீர்வழங்கலாம் அல்லது வீட்டுத் தேவைகளுக்காக எவையேனும் அளவுகளுக்குத் தனிப்பட்ட நீர்ச்சேவையொன்றை அனுமதிக்கலாம்.

## சந்தைகள்

**கிராம முறைச் சந்தைகள் தொடர்பில் பிரதேச சபைக்குள்ள தத்துவம்.**

**119.** ஒரு பிரதேச சபையானது அதன் எல்லைகளுக்குள் உள்ள வாசிகளின் சேவைக்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாக் கிராம முறைச் சந்தைகளையும் அப்பிரதேச சபை இடப்பரப்பினுள் தாபித்துப் பேணிவருதலும், அத்தகைய முறைச்சந்தைகளின் தகுந்த ஒழுங்குபடுத்துகை, மேற்பார்வை அத்துடன் கட்டுப்பாடு என்பவற்றை ஏற்பாடு செய்தலும், அப்பிரதேச சபைக்குச் சட்டமுறையானதாதல்வேண்டும்.

**ஒரு தனிப்பட்ட முறைச்சந்தைக்கு உரிமமொன்று தேவைப்படுமிடத்து ஏற்புடையன வான ஏற்பாடுகள்.**

**120.** தனிப்பட்ட முறைச்சந்தையொன்றைத் தாபித்துப் பேணுவதற்காக, பிரதேச சபையொன்றினால் வழங்கப்படும் உரிமமொவ்வொன்றும் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைந்ததாதல் வேண்டும்:—

(அ) கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று அல்லது அதன் பின்னர் அளிக்கப்பட்ட தனிப்பட்ட முறைச்சந்தையொன்றுக்கான உரிமமொவ்வொன்றும், அத்தகைய தனிப்பட்ட முறைச்சந்தைக்குப் பதிலாகக் கிராம முறைச்சந்தையொன்றைத் தாபித்தல் பொதுமக்கள் நலனுக்காகவுள்ளதெனப் பிரதேச சபை எந்த நேரத்திலும் முடிவு செய்யின், அதற்கெனத் தத்துவமளிக்கப்பட்ட அதிகாரி அத்தகைய தனிப்பட்ட முறைச்சந்தையின் உரிமத்தைப் புதுப்பிக்க மறுக்கலாம் என்பதுடன், அத்தகைய தனிப்பட்ட முறைச்சந்தைச் சொந்தக்காரர் அத்தகைய மறுப்புத் தொடர்பில் ஏதேனும் நட்டஈட்டுக்கு உரித்துடையவராதலுமாகாது என்ற நிபந்தனையின் மீதாதல் வேண்டும்;

(ஆ) அதற்கெனத் தத்துவமளிக்கப்பட்ட அதிகாரி இப்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட தேதியன்று அல்லது அதன்பின்னர் ஏலவே உள்ளதாயுள்ள அல்லது உத்தேசிக்கப்பட்டுள்ள கிராம முறைச்சந்தைகளும், தனிப்பட்ட முறைச்சந்தைகளும் இடப்பரப்பின் தேவைகளுக்குப் போதிய முறையில் ஏற்பாடு செய்கின்றனவென அவர் திருப்திப்படின், தனிப்பட்ட முறைச் சந்தைக்கான உரிமமொன்றை வழங்க அல்லது புதுப்பிக்க மறுக்கலாம்.

121. (1) ஏதேனும் தனிப்பட்ட முறைச்சந்தை, ஒன்றில்—

(அ) நடாத்தாது விடப்படுதல், அல்லது

(ஆ) பிரதேச சபையினால் கையேற்கப்பட்டு தனிப்பட்ட முறைச் சந்தையொன்றாகப் பேணப்படுதல்,

பொதுமக்கள் நலனுக்காகவுள்ளதெனப் பிரதேச சபையொன்று திருப்திப்படுமிடத்து, அப்பிரதேச சபையானது, இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க நட்டஈட்டு கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும் என்பதற்கமைய, ஒன்றில் அம்முறைச்சந்தையை நடாத்தாது விடும்படி பணிக்கலாம் அல்லது அதனைக் கையேற்று ஒரு பகிரங்கமுறைச் சந்தையாகப் பேணிவரலாம்.

**தனிப்பட்ட முறைச்சந்தைகளை நடாத்தாது விட்டமைக்கான நட்டஈடு.**

(2) ஏதேனும் தனிப்பட்ட முறைச் சந்தையை நடாத்தாது விடும்படி பிரதேச சபையொன்றினால் பணிக்கப்படுமிடத்து, உடன்படிக்கை மூலம் வேறுவகையாகத் தீர்க்கப்பட்டிருந்தாலொழிய, செலுத்தப்படற்பாலதான நட்டஈடு, இச்சட்டத்தின்கீழான முறைச் சந்தையாகப் பயன்படுத்தப்படின், வளவுகளின் பெறுமதிக்கும், முறைச் சந்தையொன்றாகவல்லாது அதே இடப்பிரதேசத்திலுள்ள இதையொத்த வளவுகள் மிக அனுகூலமான முறையில் வேறெந்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றனவோ அல்லது பயன்படுத்தப்படக்கூடுமோ அந்த நோக்கங்களுக்காக அதே வளவுகள் பயன்படுத்தப்படின் அவற்றின் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசமாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஏதேனும் நோக்கத்துக்காக முறைச்சந்தைக்கெனப் பயன்படுத்தப்பட்ட கட்டடங்களை இசைவாக்கியமைக்கான செலவு தொடர்பிலான படியொன்றுடனதாகவிருத்தலும் வேண்டும்.

(3) ஏதேனும் தனிப்பட்ட முறைச் சந்தை ஒரு பகிரங்க முறைச் சந்தையாகப் பேணப்படுவதற்கெனப் பிரதேச சபையொன்றினால் கையேற்கப்படுமிடத்து, செலுத்தப்படற்பாலதான நட்டஈடானது இச்சட்டத்தின் கீழான தனிப்பட்ட முறைச் சந்தையொன்றாகப் பயன்படுத்தப்படும்போது வளவுகளின் பெறுமதியாகவிருத்தல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் கீழான முறைச் சந்தையொன்றாகப் பயன்படுத்தப்பட்ட வளவுகளின் பெறுமதியை மதிப்பிடுகையில், அதே சுற்றுடலில் பகிரங்க முறைச் சந்தையொன்று அல்லது புதிய தனிப்பட்ட முறைச் சந்தையொன்று தாபிக்கப்படும் சந்தருப்பத்தில் அத்தகைய வளவுகளின் பெறுமதியில் ஏற்படும் சாத்தியமுடைய தேய்மானம் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

துணை விதிகளை ஆக்குவதற்கான தத்துவம்.

122. (1) பிரதேச சபை ஒவ்வொன்றும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராதவையும் இசைவற்றனவல்லாது, இச்சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படக்கூடிய வாறான அல்லது தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அல்லது இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகித்தல், கடமைகளை நிறைவேற்றுதல் ஆகிய நோக்கங்களுக்கு அவசியமானவையெனப் பிரதேச சபைக்குத் தோன்றக்கூடியவாறானவையுமான அத்தகைய துணைவிதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குவதற்கும் அத்துடன் அவ்வாறு ஆக்கப்பட்ட எவையேனும் துணைவிதிகளைத் திருத்துவதற்கும், வேறுபடுத்துவதற்கும், அல்லது இல்லா தொழிப்பதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) ஏதேனும் பிரதேசசபையினால் ஆக்கப்படும் துணைவிதியொன்று, அதன் மீறுகை எதற்குமானதொரு குற்றப்பணத் தண்டனைக்கு ஏற்பாடு செய்யலாம்; அத்தகைய குற்றப்பணம் அத்தகைய மீறுகையாக அமைகின்ற ஏதேனும் ஒரு செயலுக்கு அல்லது செய்யாமைக்கு எழுநூற்றைம்பது ரூபாவை விஞ்சாதிருத்தல் வேண்டும் என்பதுடன், தொடர்ச்சியான மீறுகையொன்றின் விடயத்தில், தகுதி வாய்ந்த நியாயாதிக்கம் கொண்ட நீதிமன்றமொன்றினால் அதற்காக அளிக்கப்பட்ட குற்றத்தீர்ப்பொன்றின் பின்னர் அல்லது அத்தகைய மீறுகைக்குக் கவனத்தை ஈர்க்கின்றதான தவிசாளரிடமிருந்து அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வேறு அலுவலரிடமிருந்து எழுத்திலான அறிவித்தலொன்று சேர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் மீறுகை தொடர்கின்றதான நாளொவ்வொன்றுக்குமான மேலதிகக் குற்றப்பணமொன்று, இருநூற்றைம்பது ரூபாவை விஞ்சாதிருத்தல் வேண்டும்.

(3) (அ) நூற்றிருப்பத்தியாறும் பிரிவின் (ix) ஆம் பந்தியின் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் துணைவிதிகளை எவரேனும் ஆள் மீறுகின்றவிடத்தும், அத்துடன் அத்தகைய ஆள் இப்பிரிவின் கீழ் முன்பு குற்றத்தீர்ப்பளிக்கப்படாதவிடத்தும் தவிசாளரானவர், தவறாளியினால் அவ்வாறு வேண்டப்பட்டால், இப்பிரிவின் கீழ் அத்தகைய தவறுக்கு விதிக்கப்படற்பாலதான ஆகக்கூடுதலான குற்றப்பணத்தின் நாலிலொருபங்குக்குச் சமமானதொரு பணத்தொகைக்கு அத்தகைய தவறை இணக்குதல் வேண்டும். அத்துடன் எவரேனும் அத்தகைய தவறாளிக்கு எதிராகக் குற்றவழக்கொன்றுபதிவுசெய்யப்பட்டிருக்குமிடத்து தவிசாளரானவர், நீதிமன்றத்தின் சம்மதத்துடன் தீர்ப்புக்கு முன்பு எந்நேரத்திலும் அத்தகைய தவறினை இணக்குதல் வேண்டும்.

(ஆ) ஏராம் உட்பிரிவின் கீழ் தவிசாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பணத்தொகை எதுவும், பிரதேச சபை நிதியத்தின் வரவில்வைக்கப்படுதல்வேண்டும்.

துணை விதிகளை அங்கீகரித்தலும் வெளியிடுதலும்.

123. (1) இச்சட்டத்தின் கீழான துணைவிதி எதுவும் அத்துடன் ஏதேனும் துணைவிதியின் திருத்தம், வேறுபடுத்துகை அல்லது இல்லா தொழிப்பு எதுவும், அது அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு அத்தகைய அங்கீகாரம் பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படும்வரை பயனுடையதாதல் ஆகாது.

(2) இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படும் துணைவிதி ஒவ்வொன்றும் (1) ஆம் உட்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட அறிவிப்புடன் சேர்த்து கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**124.** இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படும் எல்லாத் துணைவிதிகளின் பிரதிகளும், அவை எந்தப் பிரதேச சபைக்குத் தொடர்புடையனவோ, அந்தப்பிரதேச சபையின் அலுவலகத்திலும் ஆணையாளரின் அலுவலகத்திலும் வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவை பரிசோதனைக்காகக் கிடைக்கக் கூடியனவாக வைத்திருக்கப்படுவதுடன் பொதுமக்களுக்கு விற்கப்படுவதற்காகக் கிடைக்கத்தக்கனவாக இருத்தலும் வேண்டும்.

துணைவிதிகளின் பிரதிகளை வழங்கல்.

**125.** இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படும் துணைவிதி ஒவ்வொன்றும் 123 ஆம் பிரிவின்கீழ் அது பற்றிய வெளியீட்டின் பின்னர் வசதியானளவு விரைவாக அத்தகைய துணைவிதி அனுமதிமறுக்கப்படல் ஆகாது என்ற பிரேரணை மூலம் பாராளுமன்றத்தின் முன் கொணரப்படுதல் வேண்டுமென்பதுடன், பாராளுமன்றத்தின் தீர்மானத்தின் மூலம் இல்லாதொழிக்கவும்படலாம் அல்லது திருத்தவும் படலாம். பாராளுமன்றத்தினால் துணைவிதியொன்று இல்லாதொழிக்கப்பட்டமை அல்லது திருத்தப்பட்டமை பற்றிய அறிவிப்பு உடனடியாகக் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் ; அத்துடன் அத்தகைய இல்லாதொழிப்பு அல்லது திருத்தம் அத்தகைய வெளியீட்டுத் தேதியிலிருந்து பயனுறுதல் வேண்டும். ஆனால் அத்தேதிக்கு முன்னர் அத்துணை விதியின்கீழ் செய்யப்பட்டிருக்கக்கூடியதான எதற்கும் அல்லது தொடரப்பட்டிருக்கக்கூடியனவான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளுக்குப் பங்கமின்றியிருத்தல் வேண்டும்.

துணைவிதிகள் அனுமதி மறுப்புக்கு அல்லது திருத்தத்திற்கு அமைவாதல் வேண்டும் என்பது.

**126.** இப்பாகத்தின்கீழ் துணைவிதிகளை ஆக்குவதற்கு ஏதேனும் பிரதேச சபைக்குள்ள தத்துவங்கள், அதனால் அளிக்கப்படும் தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, பின்வரும் எல்லா நோக்கங்களுக்காகவும், அல்லது அவற்றுள் ஏதேனும் நோக்கத்திற்காகவும் அல்லது அவை தொடர்பிலும் துணைவிதிகளை ஆக்குவதற்கான தத்துவத்தை உள்ளடக்குதல் வேண்டும் :—

துணைவிதிகளின் விடயப் பொருள்.

(i) பின்வருவன உட்பட கூட்டங்களும் நடவடிக்கை முறையும் —

(அ) சாதாரண கூட்டங்கள் கூட்டப்படவேண்டிய கால இடைவெளிகள் ;

(ஆ) விசேட கூட்டங்கள் ;

(இ) கூட்டமொன்றைக் கூட்டும் முறை ;

(ஈ) கூட்டங்களை நடாத்துதல் ;

(ii) பின்வருவன உட்பட அலுவலர்களும் சேவையாளர்களும் —

(அ) பதவிகளை அல்லது உத்தியோகங்களை உருவாக்குதல் ;

(ஆ) பிரதேச சபைச் சேவையில் 1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் உள்ளூராட்சிச் சேவைப் பதவிகள் அல்லாத பதவிக்களுக்கான அல்லது உத்தியோகங்களுக்கான நியமனங்கள்,

(இ) உட்பந்தி (ஆ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட பதவிகளுக்கான அல்லது உத்தியோகங்களுக்கான நியமனங்களுக்கு அவசியமானவையான தகைமைகள்,

(ஈ) உள்ளூராட்சிச் சேவை உறுப்பினர்களல்லாதவர்களான பிரதேசசபை அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்குமான சம்பளங்கள், படிகள், அத்துடன் ஊதியம் என்பவற்றின் கொடுப்பனவு,

(உ) இறந்த அலுவலர்களதும் அல்லது சேவையாளர்களதும் விதவைக்கு, பிள்ளைகளுக்கு, கிட்டிய உறவினருக்கு அல்லது தங்கிவாழுநர்களுக்கு ஓய்வூதியங்களை அல்லது பணிக்கொடைகளை ஏற்பாடு செய்தல்,

(ஊ) உட்பந்தி (ஈ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நன்மைக்காகச் சகாயநிதியமொன்றைத் தாபித்தலும் ஒழுங்குபடுத்துதலும்,

(எ) உட்பந்தி (ஈ) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் வராமலிருப்பதற்கு அனுமதி வழங்குதல் ;

(iii) எந்த வரி அறவீட்டிற்கு வேறேதேனும் வெளிப்படையான ஏற்பாடு செய்யப்படவில்லையோ, இச்சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான அந்த விதிப்பும் அத்துடன் அத்தகைய ஏதேனும் வரியின் நோக்கத்திற்காகத் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான எல்லா விபரத்திரட்டுக்களையும் தகவலையும் அளித்தலும்;

(iv) பின்வருவன உட்பட, கடன்கள்—

(அ) பிணைப்பொறுப்புக்களை நிறைவேற்றும் விதமும் முறையும் ;

(ஆ) ஒழித்துக்கட்டுவதற்கான ஒழுங்குகள் ,

(இ) பிணைப்பொறுப்புக்களை மீளக் கொடுக்கும் விதமும் ஒழுங்கும் ,

(ஈ) ஏதேனும் கடனின் நிபந்தனைகளும் முற்பணமாகச் செலுத்தப்பட்ட பணத்தொகைகளின் ஒதுக்கீடும் ;

(v) பின்வருவன உட்பட, வீதவரிகளையும் விதிப்பனவுகளையும் சுமத்துதல், விதித்தல் அத்துடன் அறவிடுதல்—

(அ) கட்டடங்கள், காணிகள், சிறுமனைகள் என்பவற்றின் வரிமதிப்பீடு ,

(ஆ) அத்தகைய வரிமதிப்பீட்டு நோக்கங்களுக்குத் தேவைப்படுத்தப்படும் விபரத் திரட்டுக்களையும் தகவலையும் அளித்தல்,

(இ) ஆட்சேபனைகளைக் கேட்டலும், தீர்மானித்தலும்,

(ஈ) பிரதேசசபையின் நிருவாக எல்லைகளுக்குள் அமைந்துள்ள அசைவற்ற ஆதனத்தின் மீதான ஈடுகளையும், ஈடுபெறுநர்களினது முகவரிகளையும் பிரதேச சபை அலுவலகத்தில் பதிவு செய்தலும், அத்தகைய பதிவுக்கான கட்டணங்களை விதித்தலும் அறவிடுதலும்,

(உ) வீதவரிகளை, வரிகளை அல்லது விதிப்பனவுகளை மீள அறவிடுவதற்கெனக் கைப்பற்றப்பட்ட அசைவற்ற ஆதனத்தின் விற்பனை பற்றி, பதிவு செய்யப்பட்ட அத்தகைய ஈடு பெறுநர்களுக்கு எழுத்திலான அறிவித்தலை அஞ்சலிலிடுதல் ;

(vi) பின்வருவன உட்பட, காணியும் ஆதனமும்—

(அ) அம்பலங்கள், மடங்கள், திறந்தவெளிகள், அத்துடன் பகிரங்க பொழுது போக்கிடங்கள் என்பவற்றை ஏற்பாடுசெய்தல், ஒழுங்குபடுத்துதல் அத்துடன் முகாமைசெய்தல்,

(ஆ) தரிசு அல்லது பகிரங்கக் காணியைக் கவனித்தல்

(இ) பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அல்லது அதன் கட்டுப்பாட்டின்கீழுள்ள அசைவற்ற ஆதனத்தைப் பேணுதலும் முகாமை செய்தலும்,

(ஈ) பொது மேய்ச்சல்நிலங்களை கவனித்தல், ஒழுங்குபடுத்தல், ஏற்பாடுசெய்தல் என்பனவும் அத்துடன் அவற்றிற் கான கட்டணங்களை விதித்தலும்,

(உ) காணிகள் தனியொருவருக்குச் சொந்தமாயினுஞ் சரி, பகிரங்கக் காணியாயினுஞ்சரி, அவற்றிற்கு எல்லைகளையும் வேலிகளையும் அமைத்துப் பேணிக் காத்தல்,

(ஊ) ஏதேனும் பகிரங்க சேவையின் நோக்கத்திற்கெனப் பேணப்படும் எவையேனும் கம்பிகளுக்கு அல்லது கருவிகளுக்கு அல்லது அவற்றின் ஆதாரங்களுக்குச் சேதத்தைத் தடுக்கும் அல்லது அவற்றிலுள்ள குறைகளைப் பழுது பார்க்கும் அல்லது நிவர்த்திசெய்யும் நோக்கத்திற்கெனத் தனியார் காணிகளுட் பிரவேசித்தலுக்கு அதிகாரமளித்தல் ;

(vii) பின்வருவன உட்பட, வீதிகளும் பொதுவழிகளும்—

(அ) இடப்பரப்பில் உள்ள புதிய வீதிகள், பாதைகள் என்பவற்றின், சீராக்கல், வரிசையாக்கல், அகலம் அத்துடன் நிருமாணம்,

(ஆ) வீதிகளையும் பொதுவழிகளையும் துப்புரவாக்குதல், அவற்றிற்கு நீர் தெளித்தல், அத்துடன் ஒளியூட்டுதல்,

(இ) வாகனங்களின் நிறையையும் வேகத்தையும் வரையறுத்தல் உட்பட வீதிகளிலும் பாதைகளிலும் வாகனங்களின் பாவனையும், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதலும், எந்தப் பாலத்தின் மீது, வீதியின்மீது அல்லது பாதையின் மீது அல்லது எந்த இடத்தில் வாகனங்களின் பாவனை பொதுமக்களுக்கு அபாயத்தை ஏற்படுத்தக்கூடுமோ அல்லது அத்தகைய பாலத்தை, வீதியை அல்லது பொதுவழியைச் சேதப்படுத்தக்கூடிய சாத்தியமிருக்கக்கூடுமோ, அந்தப் பாலம், வீதி அல்லது பாதை எதன் மீதும் அல்லது அந்த இடத்தில் வாகனங்களின் பாவனையைத் தடுத்தல் அல்லது மட்டுப்படுத்தல்,

(ஈ) வீதிகளில் அல்லது பொதுவழிகளில் ஊர்வலங்களையும் கூட்டங்கூடுதலையும் அத்துடன் இசை அரங்காடலையும் ஒழுங்குபடுத்துதல்,

(உ) தடைகள், எல்லைகூட்டங்கள், முன்னீட்சிகள் அத்துடன் வீதிகள், பொதுவழிகள் என்பவற்றுடனான வேறு தலையீடுகள் என்பவற்றைத் தடுத்தலும், தணித்தலும், மேற்பார்வைசெய்தலும் அத்துடன் ஒழுங்குபடுத்தலும்,

(ஊ) ஏதேனும் தெருவின்மீது அல்லது தெருவில் நீண்டிருக்கும் வண்ணம் விளம்பரப்பலகைகளினதும் வேறு தற்காலிகக் கட்டமைப்புகளினதும் அல்லது எவ்வகையினதான எந்த அலங்காரத்தினதும் நிறுவுகையும், அது தொடர்பிலான எவையேனும் அனுமதிப்பத்திரங்களுக்காகக் கட்டணங்களை இறுத்தல், பிரதேச சபையால் நிறுவப்பட்ட விளம்பரப் பலகைகளின் பாவனைக்கான கட்டணங்களை இறுத்தல் என்பனவும்,

(எ) வீதிகளிலும் பொதுவழிகளிலும் அல்லது அவற்றிற்கருகில் கட்டடம், மற்றும் ஏனைய தொழிற்பாடுகளிலிருந்து விளையும் அபாயங்களிலிருந்து பொதுமக்களைப் பாதுகாத்தல்,

(ஏ) பிரதேச சபை இடப்பரப்புக்குள்ளாக நிறுத்தும் இடங்களை ஏற்பாடு செய்வதன்மூலமும் அத்தகைய இடங்களில் மோட்டார் வாகனங்களை நிறுத்துவதற்கென விதித்துரைக்கப்பட்ட கட்டணங்களைச்சேகரிப்பதன்மூலமும் அத்தகைய மோட்டார் வாகனங்களை நிறுத்துவதைக் கட்டுப்படுத்தல் ஒப்பந்தம் :

ஆயின், இவ்வுப்பந்தியின் ஏற்பாடுகள் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மோட்டார் வாகனங்கள் தொடர்பில் ஏற்புடையனவாகா ;

(viii) பின்வருவன உட்பட, கட்டடங்கள், கட்டடத்தொழிற்பாடுகள் அத்துடன் கட்டு வேலைகள்—

(அ) இத்தலைப்பின் கீழான துணைவிதிகள் எந்த இடப்பரப்புகளுக்கு ஏற்புடையனவாக வேண்டுமோ அந்த இடப்பரப்புகளை வரையறுத்துக்கூறுதல் ;

(ஆ) நிலையுறுதியை உறுதிப்படுத்தல், தீவிபத்தைத் தடுத்தல், சுகாதாரத்தைப் பாதுகாத்தல் என்பவற்றின் நோக்கத்திற்காகப் புதியகட்டடங்களின் பொருட்களை ஒழுங்குபடுத்துதல்,

(இ) தங்குதடையற்ற காற்றோட்டத்திற்கு வசதியளிப்பதற்கும், அதனை உறுதிப்படுத்துவதற்கும் குப்பையகற்றுவதற்கு வசதியளிப்பதற்கும் ஏதேனும் கட்டடத்தை அல்லது கட்டடத் தொகுதியைச் சுற்றி விடப்படவேண்டிய இடைவெளி,

(ஈ) கதவு, யன்னல்களின் பரிமாணங்கள், தரை மட்டம், கூரையின் உயரம், பொதுக்காற்றோட்டம், அத்துடன் வடிகாலமைப்பு,

(உ) புதிய கட்டடங்களுக்கான அல்லது ஏலவேயுள்ள கட்டடமாற்றங்களுக்கான வரைபடங்களைப் பரிசோதித்துக் கவனத்துட்கொள்வதற்குக் கட்டணங்களை விதித்தல்,

(ஊ) மலசலகூடங்களின் எண்ணிக்கையும் தன்மையும் ,

(எ) கட்டமைப்பின் அத்திவாரமும், நிலையுறுதியும்,

(ஏ) கட்டட முகப்பின் கோடு ;

(ix) பின்வருவன உட்பட, பொதுச் சுகாதாரமும் வாழ் வசதிகளும்—

(அ) வடிகாலமைப்பு,

(ஆ) மலசலமகற்றுதலும், குப்பையகற்றுதலும் அதற்கான கட்டண விதிப்பனவும்,

(இ) வடிகால்கள், மலசலகூடங்கள், அழுக்குநீர்க்குழிகள், சாம்பர்க்குழிகள், சுகாதார மலசலகூடங்கள், சாதனங்கள் என்பவற்றைச் சோதனையிடுதல், ஒழுங்குபடுத்துதல், பேணுதல் அத்துடன் சுத்தம் செய்தல்,

(ஈ) பகிரங்க சுகாதார மலசலகூடங்களை ஒழுங்குபடுத்துதலும் முகாமை செய்தலும்,

(உ) உறையகங்களையும், சிறுகுடிமனைக் கட்டிடங்களையும் ஒழுங்குபடுத்தலும், மேற்பார்வை செய்தலும், சோதனை செய்தலும் அத்துடன் கட்டுபபடுத்தலும்,

(ஊ) இசைத்தட்டுப் பெட்டிகள், ஒலிபெருக்கிகள், ஒலிபெருக்கிச் சாதனங்கள் அத்துடன் தன்னியக்கமாக அல்லதுபொறிமுறையாக ஒலியை உற்பத்தியாக்கும் அல்லது மீள உற்பத்தியாக்கும் பிற கருவிகள் என்பனவற்றின் தொழிற்பாட்டை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும் உட்பட தொல்லைகளைத் தணித்தல்,

(எ) உடல் நலத்துக்கு ஒவ்வாத உணவுப் பொருட்களை அல்லது பான வகைகளைக் கைப்பற்றுதலும், இழப்பித்தலும், அகற்றுதலும், அழித்தலும், அத்துடன் அவற்றின் விற்பனையை அல்லது விற்பனைக்காக அவை வெளிக்காட்டி வைக்கப்படுதலைத் தடைசெய்தலும்,

(ஏ) பாண்சாலைகள், உணவகங்கள், ஹோட்டல்கள், சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் தேநீர், கோப்பிக் கடைகள் என்பனவற்றை ஒழுங்குபடுத்தலும், மேற்பார்வை செய்தலும், சோதனை செய்தலும் அத்துடன் கட்டுப்படுத்தலும்,

(ஐ) பாற்பண்ணைகளையும் பாலின் விற்பனையையும் ஒழுங்குபடுத்தலும், மேற்பார்வைசெய்தலும், சோதனை செய்தலும் அத்துடன் கட்டுப்படுத்தலும்,

(ஒ) இறைச்சி, கோழி இறைச்சி, மீன், பழம், மரக் கறிகள் அல்லது மனித நுகர்வுக்கான அழுகத்தக்கபிற உணவுப் பொருட்கள் என்பவற்றின் விற்பனைக்குப் பயன் படுத்தப்படும் (சந்தைகள் தவிர்ந்த) கடைகளையும் இடங்களையும் சோதனை செய்தல், ஒழுங்கு படுத்தல், அத்துடன் கட்டுப்படுத்துதல் உட்பட உணவுப் பொருட்களை விற்றலும், அத்துடன் உடன் இறைச்சி, உடன் மீன் அல்லது உயிருள்ள விலங்குகள் என்பனவற்றின் விற்பனைக்குப் பயன் படுத்தப்படும் கடைகளுக்கும் இடங்களுக்கும் உரிமமளித்தலும்,

(ஓ) தீங்கு விளைவிப்பனவென அல்லது அபாயகரமான வையென பிரதேச சபையினால் கருதப்படும் தொழில்களை ஒழுங்குபடுத்தலும், மேற்பார்வை செய்தலும், சோதனை செய்தலும், அத்துடன் கட்டுப்படுத்தலும்,

(ஔ) தும்பு மட்டைகளை ஊறவைப்பதற்காக பகிரங்க ஏரிகளிலும், ஆறுகளிலும், கடலேரிகளிலும் மற்றும் பொங்கு முகங்களிலும் வேலியிடப்பட்ட பட்டிகளின் பரிமாணங்களையும் பயன்பாட்டையும் ஒழுங்குபடுத்தலும் அத்தகைய பட்டிகளின் பயன் பாட்டிற்காக கட்டணங்களை இறுத்தலும்,

(க) வடிசாலைகளையும் வாயுப்பான உற்பத்திச்சாலைகளை யும் ஒழுங்கு படுத்தலும், மேற்பார்வை செய்தலும் சோதனை செய்தலும், கட்டுப்படுத்தலும், அத் துடன் அவற்றிறகு உரிமம் அளித்தலும்,

(ங) பிரதேச சபையினது எல்லைகளினுள் உள்ள சொந்தக் காரர்களையும் இருப்பாடசியாளர்களையும் அவர்களது காணிகளைக் களைகளும், குப்பைகூளங்களும் இல்லா மல் வைத்திருக்குமாறும், அவர்களது வாழிட வளவுகளைத் துப்புரவாகவும் சுகாதார நிலைமை யிலும் வைத்திருக்குமாறும் கட்டாயப்படுத்துதல்,

(ச) மலேரியாவைத் தடுத்தலும், நுளம்புகளையும், நோய் காவும் பூச்சிகளையும் அழித்தலும்,

(ஞ) குளங்கள், தடாகங்கள், திறந்த குழிகள், கழிவுப் பொருட்குழாய்கள், வடிகால்கள் அத்துடன் ஏதே னும் வடிகாலமைப்பு நீர், அசுத்தம், நீர், கசிபொருள் அல்லது தீங்குவிளைவிக்கும் இயல் பினதான அல்லது சுகாதாரத்துக்குக் கெடுதி யானதாக விருக்கும் சாத்தியம் கொண்டதான பொருளைக் கொண்டுள்ள அல்லது அவற்றைச் சேகரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் இடங்கள், என்பவற்றை வடித்தலும், துப்புரவாக்குதலும், மூடிவிடுதலும் அல்லது நிரப்புதலும் ,

(ட) வீடுகள், வாழிடங்கள் மற்றும் கூட்டம்கூடும் இடங்கள் அல்லது வழி பாட்டிடங்கள் என்பவற்றின் சொந் தக்காரர்களினாலும் அல்லது இருப்பாட்சியாளர் களினாலும் அத்துடன் அவற்றின் காப்பையும், கட்ட ளையையும் உடைய ஆட்களினாலும் அவை துப்பு ரவாக்கபபடுதலும், தூய்மையாக்கப்படுதலும், காற்றோட்ட வசதியிடப்படுதலும் அத்துடன் தொற்றுநீக்கியைக்கொண்டு துப்புரவாக்கப்படு தலும்,

(ண) கொள்ளைநோய், தொற்றுநோய் அல்லது தொடு நோய் என்பவற்றைத் தடுத்தல் அல்லது குறைத் தலும் · அத்தகைய நோய்கள் நிலவுகின்றபோது இறந்தவர்களை விரைவாகப் புதைத்துவிடுதலும்,

(த) பகிரங்க குளிக்கும் இடங்கள், விலங்குகளையும் உடுப்புகளையும் கழுவுவதற்கான இடங்கள் என்பவற்றைத் தாபித்தல், பேணுதல், ஒழுங்குபடுத்தல் என்பன உட்பட கழுவுதலும் குளித்தலும்,

(ந) கைத்தொழிற் கழிவுகளை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும்,

(ப) பொதுச் சுகாதாரத்தைப் பேணிக்காத்தலும் தொல்லைகளை அடக்குதலும்,

(x) (அ) கொண்டுதிரிந்து விற்போர்களை மேற்பார்வை செய்தல் அல்லது கட்டுப்படுத்தல்,

(ஆ) அத்தகைய மேற்பார்வை அல்லது கட்டுப்பாட்டு நோக்கங்களுக்காக உரிமங்களை வழங்குதலும், அத்தகைய உரிமங்களுடன் இணைக்கப்படவேண்டிய நிபந்தனைகளும்,

(இ) விதித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளில் உரிமங்களை மறுத்தல்,

(ஈ) ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பொருளின் விற்பனையை அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட இடத்தில் அல்லது இடப்பரப்பில் பொருட்களின் விற்பனையை ஒழுங்குபடுத்துதல் அல்லது தடை செய்தல்

உட்பட, கொண்டு திரிந்து விற்போர்கள் ;

(xi) (அ) ஆடு மாடு, குதிரைகள், செம்மறியாடுகள், வெள்ளாடுகள், பன்றிகள் என்பவற்றை அடைத்தலும் பட்டியடைத்தலும் ;

(ஆ) தொழுவங்களில் இருப்பாட்சிகொள்வதற்கான இறுப்புக்களையும், விலங்குகளைப் பிடித்தடைத்து வைத்திருப்பதற்கான செலவுத் தொகையையும் நிர்ணயித்தல், விதித்தல், அறவிடுதல் என்பன உட்பட அலைந்துதிரியும் ஆடுமாடுகளும், வெள்ளாடுகளும், பன்றிகளும் ;

(இ) விலங்குகளிடையே கொள்ளைநோய்களைக் கட்டுப்படுத்தலும், விலங்குகளுக்கான தனிப்படுத்து நிலையங்களைப் பேணுதலும் ஒழுங்குபடுத்தலும், அத்துடன் அதில் இருப்பாட்சி கொள்வதற்கான கட்டணங்களை விதித்தலும், கால்நடைகளுக்கும் நாய்களுக்கும் நோய்த்தடுப்பூசி ஏற்றுவதற்கும் தொற்றுநோய் தடைசெய்வதற்குமான வசதிகளை ஏற்பாடுசெய்தலும்,

(ஈ) ஆடுமாடு, குதிரைகள், செம்மறியாடுகள், வெள்ளாடுகள் என்பவற்றின் சாணத்தின் சேகரிப்பையும் விற்பனையையும் அத்துடன் ஏதேனும் பிரதேச சபையின் எல்லைகளினுள் உள்ள ஏதேனும் இடத்திலிருந்து அத்தகைய எல்லைக்கு வெளியேயுள்ள ஏதேனும் இடத்துக்கு அத்தகைய சாணத்தை அகற்றுதலையும், ஒழுங்குபடுத்தலும், கட்டுப்படுத்தலும்,

(உ) வேட்டை விலங்குகளையும் காட்டுப் பறவைகளையும் பாதுகாத்தலும் பேணிக்காத்தலும் ,

(ஊ) அலைந்து திரியும் நாய்களை அழித்தல் ,

(எ) (பிரதேச சபையின் அபிப்பிராயப்படி அவசியமற்ற வேதனையையும் அல்லது துன்பத்தையும் விளைவிக்கும் சாத்தியம் கொண்ட ஏதேனும் முறையில் உயிருள்ள விலங்குகளை விற்பனைக்காக வெளிக்காட்டிவைத்திருப்பதை மட்டுப்படுத்தல் உட்பட,) விலங்குகளுக்குக் கொடுமை செய்வதைத் தடுத்தல்,

(ஏ) ஆடுமாடுகளுக்கான கொட்டில்கள், காலாக்கள், ஆடுமாடுகளுக்கான இரவுத் தங்கிடங்கள் மற்றும் நிறுத்திடங்கள் என்பவற்றை ஒழுங்குபடுத்தலும் மேற்பார்வை செய்தலும் அத்துடன் அவற்றிற்கான அமைவிடத்தைக் கட்டுப்படுத்தலும்,

(ஐ) விலங்கறுமனைகளை ஒழுங்குபடுத்தலும், மேற்பார்வை செய்தலும், சோதனை செய்தலும், கட்டுப்படுத்தலும், அவற்றைப் பயன்படுத்துவதற்காகக் கட்டணங்களை விதித்தலும் அறவிடுதலும் ,

(ஒ) இறந்த விலங்குகளின் உடல்களை அப்புறப்படுத்துதல் , அத்துடன்

(ஓ) விலங்குகளுக்குக் குறியிடல் ;

(xii) பின்வருவன உட்பட, பகிரங்க அல்லது தனியார் சந்தைகளும் முறைச் சந்தைகளும் :

(அ) அவற்றைத்தாபித்தலும் பேணுகையும் சீராக்குதலும்,

(ஆ) ஆங்கு விற்கப்படும் பொருட்களின் விலைகளை ஒழுங்குபடுத்தல் உட்பட, அவற்றை ஒழுங்குபடுத்தலும், மேற்பார்வை செய்தலும், சோதனை செய்தலும் கட்டுப்படுத்தலும் ;

(இ) அவற்றின் மலசலகூட வேலையும் தோட்டித்தொழிலும் அத்துடன் அவை சம்பந்தமான தொல்லைகளைத் தடுத்தலும் ;

(ஈ) வாகனப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தலும் சந்தைகளினுள்ளும் அவற்றை உடனடுத்துள்ள அயற்புறத்திலும் ஒழுங்கைப் பேணிக்காத்தலும் ;

(உ) சந்தை வளவுகளில் மலசலகூடங்கள், விலங்கறுமனைகள், நீர்வழங்கல், வெளிச்சமிடுதல் என்பவற்றை ஏற்பாடுசெய்தல், சோதனைசெய்தல், அத்துடன் கட்டுப்படுத்தல்,

(ஊ) சிறுகடைகளை, சாலைகளை, ஆசனங்களை அல்லது இடவசதிகளைக் குறித்தொதுக்குதல் ;

(எ) உணவைச் சோதனை செய்தலும் உடல்நலத்துக்கொவ்வாத உணவுப் பொருட்களைக் கைப்பற்றுதலும்,

(ஏ) ஏதேனும் உணவுப் பொருளின் அல்லது உணவுப் பொருட்களின் அறிமுகத்தை அல்லது விற்பனையைத் தடைசெய்தலுக்கு நற்காரணம் இருக்கும் விடயங்களில், அவற்றை அவ்வாறு தடைசெய்தல்,

(ஐ) எவையேனும் பொருட்களின் விற்பனையை முழுமையாகத் தடை செய்தல் அல்லது விசேட உரிமங்கள் மூலம் மட்டுப்படுத்தல் அத்துடன் அத்தகைய விசேட உரிமங்களுக்கான கட்டணங்களை விதித்தல்,

(ஒ) தீப்பற்றுதலுக்கு எதிரான பாதுகாப்பினை ஏற்பாடு செய்தல்,

(ஓ) ஏதேனும் சந்தையை அல்லது முறைச் சந்தையைத் தற்காலிகமாக மூடுதல்,

(ஔ) சந்தைக் காப்பாளர்களும் பிற ஊழியர்களும் தத்தமது கடமைகளை முறையாகப் புரிதல்,

(க) பகிரங்கச் சந்தையொன்றின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் வளவுகளை அல்லது அதிலுள்ள கட்டிடங்களைப் பயன்படுத்துவதற்காகக் கட்டணங்களையும் அல்லது வாடகைகளையும் நிர்ணயித்தலும், அறவிடுதலும், அத்துடன் அத்தகைய எவையேனும் கட்டணங்களை அல்லது வாடகைகளைச் சேகரிப்பதற்கான உரிமையைக் குத்தகைக்கு விடுதலும்,

(ங) பகிரங்கச் சந்தை ஒவ்வொன்றுக்கும் சந்தை இடப்பரப்பொன்றை வெளிப்படுத்தலும், பகிரங்கச் சந்தை தவிர்ந்த ஏதேனும் இடத்திலுள்ள அத்தகைய இடப்பரப்பினுள் தனியார் சந்தைகளுக்கு அல்லது சந்தை இடவசதியின் விற்பனைக்கு உரிமமளித்தல், அதனை மட்டுப்படுத்துதல் அல்லது தடைசெய்தல்,

(ச) தனியார் சந்தைகளுக்கு அல்லது முறைச் சந்தைகளுக்கு உரிமமளித்தலும், உரிமத்தின் நிபந்தனைகளும், அதுதொடர்பில் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்களும்,

(ஞ) தனியார் சந்தைகளில் அல்லது முறைச் சந்தைகளில் இடவசதி, வடிகாலமைப்பு, வீதிகள், காற்றிடை வெளிகள், சாதனம், சுகாதார தேவைகள் என்பன தொடர்பில் அவதானிக்கப்படவேண்டிய நியமங்கள்,

(ட) தனியார் சந்தை அல்லது முறைச்சந்தை வளவுகளின் அல்லது வளவுகளுக்கண்மையில் உளதாயுள்ள கட்டிடங்களைப் புதுப்பித்தல், மாற்றஞ்செய்தல் பெருப்பித்தல் அத்துடன் சீராக்குதல் என்பதுடன், பிரதேச சபைக்கு அறிவித்தல் கொடுத்த பின்னரும், பிரதேச சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய வரைபடங்களுக்கிணங்கவும் புதிய கட்டிடங்களை நிறுவுதல்,

(xiii) பின்வருவன உட்பட, நீர் வழங்கலும் நீர் வேலைகளும்—

(அ) சமுதாய கிணறுகள், பீலிகள், நீரூற்றுக்கள் அல்லது வீட்டுப் பாவனையின் நோக்கங்களுக்காக நீர் வழங்குவதற்கான பிற நீரடை இடங்கள் என்பவற்றை ஏற்பாடுசெய்தல், ஒழுங்குபடுத்தல், பாதுகாத்தல் அத்துடன் பேணுதல்,

(ஆ) குளிப்பதற்கென அல்லது விலங்குகளையும், ஆடைகளையும் வேறு பொருட்களையும் கழுவுவதற்கென பிரதேச சபையால் ஒதுக்கப்பட்ட ஏதேனும் வகையான நீரடை இடங்களை ஒழுங்குபடுத்துதலும் பேணுதலும் ,

(இ) பொதுமக்களின் சுகாதாரத்தையும் காப்பையும் பாதுகாத்தலுக்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய முறையில் தனியார் கிணறுகளின் நிர்மாணத்தையும் பேணலையும் ஒழுங்குபடுத்தல் ,

(ஈ) பிரதேச சபையால் தாபிக்கப்பட்ட அல்லது பேணப்படும் எவையேனும் நீர் வேலைகளிலிருந்து நீர் வழங்கலை ஒழுங்குபடுத்துதலும், கட்டுப்படுத்துதலும், பாதுகாத்தலும், பேணுதலும்,

(உ) பகிரங்க அல்லது தனியார் பாவனைக்கென வழங்கப்பட்ட நீர் விரயமாக்கப்படுவதனையும், தவறுகப் பயன்படுத்தப்படுவதனையும், தகாதமுறையில் பயன்படுத்தப்படுவதனையும் அல்லது அழுக்கடையச் செய்யப்படுவதையும் தடுத்தல்,

(ஊ) முறையே நீரை எடுத்துச் செல்வதற்கும், விநியோகிப்பதற்கும், ஒழுங்குபடுத்துவதற்கும் அத்துடன் களஞ்சியப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படவுள்ள குழாய்கள், வாயில்கள், வில்கள், தொட்டிகள், கழிவுக்கலங்கள், நீர் மலகூடங்கள் அத்துடன் வேறு கருவிகள், கொள்கலன்கள் என்பவற்றின் அல்லது அவற்றுள் எவற்றினதும் பயன்பாட்டை நெறிப்படுத்தலும், அவற்றின் அளவு, தன்மை, வலிமை, பொருட்கள், அத்துடன் ஏற்பாட்டு முறை, நிலை, மாற்றம் அப்புறப்படுத்துதல், புதுப்பித்தல், அவற்றைப் பழுதுபார்த்தல் என்பவற்றை விதித்துரைத்தலும்,

(எ) நிலக்குழாய்கள்மூலம் பகிரங்க நீர் வழங்கலையும் அவற்றின் பயன்பாட்டையும் ஒழுங்குபடுத்துதல்;

(ஏ) தனியார் சேவைகள்மூலம் நீர்வழங்கலையும் பயன் படுத்தப்படவுள்ள பொருட்கள், இணைப்புகள் என் பவற்றையும் ஒழுங்குபடுத்துதல்;

(ஐ) அளவைமூலம் நீர் வழங்கலையும், அத்தகைய நோக்கத்துக்காக அல்லது அது சம்பந்தமாகப் பயன் படுத்தப்படும் பொருட்கள், மானிகள், கருவிகள், இணைப்புக்கள் என்பனவற்றையும் ஒழுங்குபடுத்து தல்;

(ஒ) எந்த நியதி நிபந்தனைகளுக்கமைய வீட்டுப்பாவனை யின் நோக்கங்களுக்கென அல்லது வீட்டுப்பாவனை யின் நோக்கங்களுக்கல்லாத வேறு நோக்கங் களுக்கு நீர் வழங்கப்படுமோ, அந்த நியதி நிபந் தனைகளையும் அவ்விதம் வழங்கப்படும் நீருக்கான விலையையும் ஒழுங்குபடுத்துதல் ;

(ஓ) நீர் வழங்கலுக்கென கொடுக்குமதியாகவுள்ள பணங் களை அறவிடுவதற்குரிய நடவடிக்கைமுறையை விதித்துரைத்தல் ;

(ஔ) பிரதேச சபைக்கு அவசியமானதெனத் தோன்றக் கூடியவாறாக நீர் வேலைகளிலிருந்து வழங்கப்படும் நீர்வழங்கலுடன் அல்லது நீர் வழங்கலின் கட்டுப் பாட்டுடன் தொடர்புடைய பிறநோக்கம் ஒவ்வொன் றும்;

(XIV) பகிரங்க சேவைகளைத் தாபித்தல், பேணுதல், தொழிற் படுத்துதல், வழங்குதல் என்பவற்றிற்கும், அவற்றுடன் சம்பந்தப்பட்ட இறுப்புகளை விதிப்பதற்கும், அறவிடு வதற்கும், அத்துடன் சேதத்திற்கெதிராகவும், போட்டிக்கெதிராகவும் அவற்றைப் பாதுகாப்பதற்கும் அவசியமான எல்லாக் கருமங்களும் உட்பட, பகிரங்க சேவைகள்;

(XV) பாணின் நிறையும் அல்லது பரிமாணமும், அத்துடன் அதன் உற்பத்தி, தரம் என்பவற்றை ஒழுங்குபடுத்தலும்;

(xvi) நிறுவைகள், அளவைகள் என்பவற்றை ஒழுங்குபடுத்து தல் ;

(xvii) கள்இறக்கலுடன் சம்பந்தப்பட்ட விபத்துக்களைத் தடுத்த லும், அந்த நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படும் கயிறு களினதும் பிற கருவிகளினதும் காலாகாலச் சோதனையும்;

(xviii) விற்றுவக்குகளையும் பொறிகளையும் செயற்படுத்துவ தனால் ஏற்படும் விபத்துக்களைத் தடுத்தல்;

(xix) கிணறுகளுக்கும் குழிகளுக்கும் வேலியமைத்தல் ;

(xx) பகிரங்கப் பாதைகளில் அல்லது வீதிகளில் சூதாடல், சேவற்சண்டை, வண்டிச்சவாரி என்பவற்றைத் தடுத்தல்;

(xxi) பகிரங்கப் பாதைகளில் அல்லது வீதிகளில் அல்லது பகிரங்க இடங்களில் ஒழுங்கீனமான நடத்தை, அல்லது தேவையில்லாமல் நடமாடுதல், தகாத பேச்சுப் பேசுதல் என்பவற்றைத் தடுத்தல் ;

(xxii) பதினாறு வயதிற்குக் குறைந்த ஆண்களுக்கு அல்லது பெண்களுக்கு ஏதேனும் விவரணத்தினதான மதுசாரத்தை அல்லது வேறு போதையூட்டும் மதுபானத்தை அல்லது எவ்வினத்தினதுமான பனை மரத்திலிருந்து பெறப்பட்ட கள்ளை அல்லது கரும்பின் நெரித்த சாற்றை விற்பனை செய்வதைத் தடுத்தல் ;

(xxiii) சிகையலங்காரச் சலூன்களையும் சிகைத்தொழிலாளர் கடைகளையும் ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், சோதித்தல், அத்துடன் கட்டுப்படுத்தல் ;

(xxiv) பிலியட் விளையாட்டிடங்களை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வைசெய்தல், சோதித்தல், அத்துடன் கட்டுப்படுத்தல்;

(xxv) உலைகளை ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை செய்தல், சோதித்தல், அத்துடன் கட்டுப்படுத்தல் ;

(xxvi) கரையோர மீன்பிடித்தலுக்கான தடைகளை அகற்றுதல்;

(xxvii) மீன்பிடித் தொழிலாளர்களுக்கான நலன்புரி வசதிகள்;

(xxviii) ஆட்களுக்குத் தரகர்களாக உரிமமளித்தல் ;

(xxix) பணம் கடன் கொடுக்கும் தொழிலைக் கொண்டு நடாத்தும் ஆட்களுக்கு உரிமமளித்தல் ;

(xxx) ஏதேனும் பொதுவழியிலிருந்து கட்புலனாகக்கூடியவாறாக வெளிப்படுத்தி அல்லது வெளிக்காட்டி வைக்கப்பட்டனவான விளம்பரங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும் அத்துடன் அவ்வாறு வெளிப்படுத்தி அல்லது வெளிக்காட்டிவைக்கப்பட்ட விளம்பரங்கள் தொடர்பில் கட்டணங்களை இறுத்தலும் ;

**127.** சுடுகாடுகள், இடுகாடுகள் கட்டளைச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் நோக்கத்துக்கென, பிரதேச சபை ஒவ்வொன்றும், பிரதேச சபையின் எல்லைகளினுள், அக்கட்டளைச்சட்டத்தின்கீழ் தகுந்த அதிகாரியாகவிருத்தல் வேண்டும்.

*சுடுகாடுகள், இடுகாடுகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரதேச சபை தகுந்த அதிகாரியாக விருத்தல்.*

**128.** பிரதேச சபையொன்றின் நோக்கங்களுக்குத் தேவைப்படும் ஏதேனும் காணி அல்லது கட்டிடம் ஒரு பகிரங்க நோக்கத்திற்கான தெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பிரதேச சபைக்காக அரசாங்கத்தினால் காணி கொள்ளல் சட்டத்தின்கீழ் கொள்ளப்படலாம்.

*காணிகளையும் கட்டிடங்களையும் கட்டாயமாகக் கொள்ளல்.*

## பாகம் V

## நிதி

பிரதேச சபை நிதியம்.

**129.** (1) பிரதேச சபை ஒவ்வொன்றும் அதன் பொதுவான நிதிசார் நோக்கங்களுக்கென பிரதேச சபை நிதியமொன்றைத் தாபித்தல் வேண்டும்.

(2) பிரதேச சபை நிதியத்துக்குள் பின்வருவன செலுத்தப்படற்பாலனவாதல் வேண்டும் :—

(அ) முதலாம் அட்டவணையில் வரிசைப்படுத்தப்பட்ட குற்றப்பணங்களும் தண்டப்பணங்களும் ;

(ஆ) இரண்டாம் அட்டவணையில் வரிசைப்படுத்தப்பட்ட எல்லா முத்திரைத்தீர்வைத் தொகைகளும் ;

(இ) அமைச்சரால் ஆக்கப்படும் ஏதேனும் சிறப்பு ஒதுக்கீட்டிற்கமைய, அமைச்சரால் பிரதேச சபைக்குக் குறித்தொதுக்கப்பட்ட பொதுவான அல்லது சிறப்பான எல்லா மானியக் கொடைகளும் ;

(ஈ) சபைக்குக் கிடைக்கப்படற்பாலதான வருவாயானது சபையினது உத்தேச செலவினத்துக்குச் சமமானதென்பதை உறுதிப்படுத்துவதற்காக அமைச்சரினால் பிரதேச சபைக்குக் குறித்தொதுக்கப்பட்ட எவையேனும் சிறப்பு மானியக் கொடைகள் ;

(உ) இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் அதிகாரத்தின்கீழ் விதிக்கப்படும் எல்லா வீத வரிகளும், வரிகளும், தீர்வைகளும், கட்டணங்களும் அத்துடன் வேறு இறுப்புகளும் ;

(ஊ) பிரதேச சபையின் விற்பனைகளால், குத்தகைகளால் அல்லது வேறு கொடுக்கல் வாங்கல்களினால் தேறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் ;

(எ) பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் ஆதனத்திலிருந்து அல்லது ஏதேனும் பகிரங்க சேவையை நிருவகித்தமையிலிருந்து பிரதேச சபையினால் பெறப்பட்ட எல்லா வருவாயும் ;

(ஏ) ஏதேனும் நீக்கம் செய்யப்பட்ட சட்டவாக்கத்தினைப் பின்பற்றி அல்லது பின்பற்றியதாகக் கருதி பிரதேச சபையானது எந்த உள்ளூர் அதிகாரசபையின் வழியுரிமையாளராக வந்துள்ளதோ அந்த ஏதேனும் அதிகார சபைக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் வருவாய்மூலத்திலிருந்து பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஐ) பாராளுமன்றத்தினால் தீர்மானத்தின்மூலம் அல்லது வேறு வகையாகப் பிரதேச சபைக்குக் காலத்துக்குக்காலம் ஒதுக்கீடுசெய்யப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் அத்துடன் எல்லா வருவாய் மூலங்களும் ;

(ஔ) பிரதேச சபை இச்சட்டத்தின்கீழ் அதனது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அதனுல் கடனுகப்பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஓ) பிரதேச சபை அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகிக்கும்போது அதற்கு வேறுவகையில் திரளும் எல்லாப் பணத்தொகைகளும்.

**130.** பிரதேச சபையொன்றினுல் பெறப்பட்டனவும் பிரதேச சபை நிதியத்துக்குச் செலுத்தப்படற்பாலனவுமான எல்லாப் பணங்களும் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் வைப்பிலிடப்படல் வேண்டுமென்பதுடன், " பிரதேச சபை நிதியம் " எனத் தலைப்பிடப்பட்ட கணக்கொன்றுக்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும். *பிரதேச சபையால் பெற்றுக் கொள்ளப்படும் பணங்கள் வங்கியில் வைப்பிலிடப் படல் வேண்டும்.*

இப்பிரிவில் " அங்கீகரிக்கப்பட்ட வங்கி " என்பது, எந்த வங்கியில் ஏதேனும் பிரதேச சபையின் பணங்கள் வைப்பிலிடப்படலாமோ அந்த ஒரு வங்கி என கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சரால் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒரு வங்கி என்று பொருளாகும்.

**131.** பிரதேச சபை நிதியத்தின் பாகமெதுவும் நம்பிக்கைப்பொறுப்புக் கட்டளைச்சட்டத்தின் 20 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட பிணைப் பொறுப்புக்கள் எவற்றிலும் பிரதேச சபையொன்றினுல் முதலீடு செய்யப்படலாம். *பிரதேச சபை நிதியத்தின் பாகம் எதனையும் முதலீடு செய்வதற்குள்ள தத்துவம்.*

**132.** பிரதேச சபை ஒவ்வொன்றினுலும் தாபிக்கப்பட்ட பிரதேச சபை நிதியத்திலிருந்து பின்வருவன செலுத்தப்படல் வேண்டும் :— *பிரதேச சபை நிதியத்தின் பயன்பாடு.*

(அ) இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் சட்டவாக்கத்தின் கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் துணைவிதி அல்லது விதி என்பவற்றின்கீழ் அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும் அதன் கடமைகளையும் பணிகளையும் புரிகையிலும் நிறைவேற்றுகையிலும் பிரதேச சபையால் உறப்பட்ட எல்லாச் செலவுகளும் ;

(ஆ) வேலையாளர் நட்டஈட்டுக் கட்டளைச்சட்டத்தின்கீழான ஏதேனும் பொறுப்புத் தொடர்பில் பிரதேச சபையினுல் செலுத்தப்படற்பாலனவான எல்லாப் பணத்தொகைகளும் ;

(இ) பிரதேச சபை ஒவ்வொன்றுக்கும் சொந்தமான, சார்ந்த அல்லது அதற்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் ஆதனத்தின் காப்புறுதிக்கான அல்லது வேலையாளர் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டத்தின்கீழ் அத்தகைய பிரதேச சபையினுல் உறப்படக் கூடிய ஏதேனும் பொறுப்புக்கெதிரான காப்புறுதிக்கான கட்டுப்பணமாக பிரதேச சபையால் செலுத்தப்படற்பாலனவான எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஈ) ஒரு விபத்தின் காரணமாக அல்லது பிரதேச சபையால் பயன்படுத்தப்படும் ஏதேனும் எந்திரத் தொகுதியில், பொறித் தொகுதியில் அல்லது சாதனத்தில் உள்ள குறைபாடு காரணமாக அல்லது மூன்றும் திறத்தவரின் அதிகாரமளிக்கப்படாத அல்லது சட்டமுறையற்ற தலையீடு காரணமாக இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின் கீழ் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் பிரதேச சபைக்கு அல்லது அதன் அலுவலர்களுக்கு அல்லது சேவையாளர்களுக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களுள் எதனையும் பிரயோகிக்கையில் விளைந்ததென முறைமூலமாக ஏற்றிக்கூறப்படக்கூடியனவான சூழ்நிலைகளில் ஊறுபாடுகளை அடைகின்றவர்களான, அல்லது வேறேதேனும் சேதமுறுகின்றவர்களான அல்லது சொல்லப்படுகின்றவர்களான (பிரதேச சபையின் சேவையாளர்கள் தவிர்ந்த) எவரேனும் ஆட்களுக்கு அல்லது எவரேனும் ஆட்களின் தங்கிவாழுநர்களுக்குத் தண்ணளிக் கொடுப்பனவுகள் என்ற வகையாக வழங்குவதற்குப் பிரதேச சபை முடிபுசெய்யும் எல்லாப் பணத் தொகைகளும் ;

(உ) எந்த ஆட்களினால் செலுத்தப்பட்டனவோ அந்த ஆட்களுக்கு மீளளிப்பதற்கு பிரதேச சபையானது ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டதாயுள்ளவையும் அல்லது தேவைப்படுத்தப்பட்டதாயுள்ளவையும், சபையால் பெற்றுக்கொள்ளப்பட்டவையுமான எல்லாப் பணத் தொகைகளும் ;

(ஊ) மழை, வெள்ளம், தீ, புயற்காற்று, புவிநடுக்கம், பஞ்சம் அல்லது கொள்ளைநோய் என்பன காரணமாக ஏற்பட்ட இடுக்கண் நிவாரணத்திற்கான அத்தகைய தருமங்களின் அல்லது அத்தகைய வழிகளின் நோக்கங்களுக்காக பிரதேச சபையால் உறப்படும் அமைச்சரால் அங்கீகரிக்கப்படக்கூடிய வாறான, எல்லாச் செலவுகளும் ;

(எ) தீயணைப்புப் படையொன்றைப் பேணுதலிலும் தீயினின்று உயிரையும் ஆதனத்தையும் பாதுகாத்தலிலும் பிரதேச சபையால் உறப்படும் எல்லாச் செலவுகளும் ;

(ஏ) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிப்பதற்கு, பேணுவதற்கு அல்லது ஏற்பாடு செய்வதற்கு பிரதேச சபை அதிகாரமளிக்கப்பட்டுள்ளதான எந்தவகைப் பகிரங்க சேவையையும் தாபித்தலிலும் பேணுதலிலும் பிரதேச சபையினால் உறப்படும் எல்லாச் செலவுகளும்;

(ஐ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வரையறைகளுக்கு அமைவாக, பிரதேச சபையின் சேவையாளர்களின் நலனுக்காக அல்லது சுகயீனம், கடன்பட்ட நிலைமை அல்லது இடுக்கண் ஆகிய விடயங்களில் பிரதேச சபையின் அலுவலர்களுக்கு அல்லது சேவையாளர்களுக்கு நிவாரணம் அல்லது உதவி அளிக்கும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஏதேனும் நிதியத்திற்காக அல்லது செயற்றிட்டத்திற்காக பிரதேச சபையால் வாக்களிக்கப்பட்ட எல்லா உதவு தொகைகளும் ;

(ஒ) ஏதேனும் ஆண்டில் பிரதேச சபையால் உறப்படக்கூடியவாறான கூட்டு மொத்தத்தில் ஆயிரம் ரூபாவை விஞ்சாதவையான அத்தகைய செலவுகளும், அத்துடன் குடியியல் வரவேற்புகளை அல்லது பொதுமக்கள் அக்கறைகொண்டுள்ள எவையேனும் வைபவங்களை அல்லது விழாக்களைக் கொண்டாடுதல் அல்லது அனுட்டித்தல் அல்லது ஏதேனும் மத, தரும, பண்பாட்டு, சுகாதார, பொழுதுபோக்கு அல்லது கல்விசார் நோக்கங்கள் என்பன சம்பந்தமாக அமைச்சரின் எழுத்திலான முன்னனுமதியுடன் பிரதேச சபையினால் உறப்படக்கூடியவாறான அத்தகைய வேறு செலவுகளும் ;

(ஓ) பிரதேச சபையால் வாக்களிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் ஆண்டில் கூட்டு மொத்தத்தில் ஆயிரம் ரூபாவை விஞ்சாத அத்தகைய உதவுதொகைகளும், அத்துடன் பொதுக் களியாட்டங்களின், அல்லது பொழுதுபோக்குகளின் செலவு தொடர்பாக அல்லது எவையேனும் நல்நிலையங்களுக்கு அல்லது எவையேனும் கல்விசார், அறிவியல், தரும, அல்லது நலன்புரி நிறுவனங்கள் என்பவற்றுக்கான ஆதாவு தொடர்பாக அமைச்சரின் எழுத்திலான முன்னனுமதியுடன் சபையினால் வாக்களிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு உதவுதொகைகளும் ;

(ஔ) அவர்களது கடமைகளைப் புரிகையில் அவர்களால் உறப்பட்ட செலவுகளை மீளளித்தல் என்றவகையாக பிரதேச சபையின் தவிசாளர், துணைத்தவிசாளர், உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் என்போருக்கான உணவு, பயணப்படிகள் தொடர்பில் பிரதேச சபையால் செலுத்தப்படற்பாலனவான எல்லாப் பணத்தொகைகளும் ;

(க) உள்ளூராட்சியின் மேம்பாடு, ஒழுங்குபடுத்துகை அல்லது தாபிதம் என்பவற்றிற்காக உள்ளூர் அதிகாரசபைகளின் ஏதேனும் இணைப்பின் செலவு தொடர்பாக அமைச்சரால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லா உதவு தொகைகளும் ;

(ங) உள்ளூராட்சி தொடர்பிலான கருமங்களைச் சீர்தூக்கிப் பார்ப்பதற்கென உள்ளூர் அதிகாரசபைகளின் உறுப்பினர்களது அல்லது அலுவலர்களது ஏதேனும் கூட்டத்திற்கு அல்லது மாநாட்டிற்கு வருகை தரும் பிரதேச சபை உறுப்பினர்களின் அல்லது அலுவலர்களின் பயணச் செலவுகளைச் சமாளிப்பதற்குச் சபையால் வாக்களிக்கப்பட்ட எல்லாப் பணத் தொகைகளும் ;

(ச) இச்சட்டத்தினால் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினால் செயலாளர்மீது சுமத்தப்பட்ட எவையேனும் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அத்துடன் ஏதேனும் கடமையைப் புரிகையில் பிரதேச சபையின் செயலாளரினால் அல்லது அவரின் சார்பில் உறப்பட்ட எல்லாச் செலவுகளும் ;

(ஞ) இச்சட்டத்தின்கீழ் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் துணை விதி, விதி அல்லது ஒழுங்குவிதி என்பவற்றின் கீழ் பிரதேச சபை அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையிலும் அதன் பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றுகையிலும் பிரதேச சபையால் அல்லது பிரதேச சபையின் சார்பில் பிரதேச சபையின் தவிசாளரினால் அல்லது செயலாளரினால் அல்லது வேறெவரேனும் அலுவலரினால் உறப்பட்ட எல்லாச் செலவுகளும் ; அத்துடன்

(ட) இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் பிரதேச சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப் பட்ட எல்லாப் பணத்தொகைகளும்.

*பிரதேச சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்படுவதற்கான கட்டளைகள், காசோலைகள் முதலியன.*

133. பிரதேச சபை நிதியத்திலிருந்து பணங்கள் கொடுப்பனவு செய்யப்படுவதற்கான எல்லாக் கட்டளைகளும் அல்லது காசோலைகளும், உதவி ஆணையாளரின் அங்கீகாரத்துக்கு அமைவாக, அந்நோக்கத்திற்கெனப் பிரதேச சபையால் விசேடமாக அதிகாரமளிக்கப்பெற்ற இரண்டு அலுவலர்களினால் கையொப்பமிடப்படுதல் வேண்டும். எந்த வங்கியில் நிதியம் தாபிக்கப்பட்டுள்ளதோ அந்த வங்கி அவ்வாறு கையொப்பமிடப்பட்டனவானவையும் சொல்லப்பட்ட நிதியத்திற்கெதிரானவையுமான எல்லாக் கட்டளைகளையும் அல்லது காசோலைகளையும் செலுத்தலாம்.

## வீதவரிகளும் வரிகளும்

*வீதவரிகளும் ஏக்கர் வரியும்.*

134. (1) பிரதேச சபை ஒவ்வொன்றும், அமைச்சரின் அங்கீகாரத்துக்கு அமைவாக, உதவி ஆணையாளரின் அங்கீகாரத்துடன், பிரதேச சபையால் கட்டடமைந்த இடப் பிரதேசங்கள் என வெளிப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் அமைந்துள்ளவையான ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் அல்லது அசைவற்ற ஆதனத்தின் எவையேனும் இனங்களின் ஆண்டுப் பெறுமானத்தின்மீது வீதவரி ஒன்றை விதித்து அறவிடலாம்.

(2) பிரதேச சபையானது, விடயத்திற்கேற்றுற்போன்று அத்தகைய இடப் பிரதேசங்களின் அல்லது அத்தகைய பாகங்களின் அபிவிருத்தி மட்டத்தினைக் கருத்திற்கொண்டு, கட்டடமைந்த வெவ்வேறு இடப் பிரதேசங்களுக்கு அல்லது அவற்றின் பாகங்களுக்கு வெவ்வேறு வீதவரிகளை விதிக்கலாம்.

(3) பிரதேச சபையானது, அமைச்சரின் அங்கீகாரத்துக்கு அமைவாக, ஏதேனும் பிரதேச சபையின் எல்லைகளினுள் அமைந்துள்ளதும் ஏதேனும் வகையான நிரந்தர அல்லது கிரமமான பயிர்ச்செய்கையின் கீழானதுமான ஒவ்வொரு ஹெக்டேயர் காணிமீதும் கீழே தரப்பட்டுள்ள வீதவரிகளை விஞ்சாதவோர் ஏக்கர் வரியை விதித்து அறவிடலாம்—

| காணியின் பரப்பளவு | வீதவரி ஆண்டொன்றுக்கு ரூ. ச. |
|---|---|
| அத்தகைய பரப்பளவு ஐந்து ஹெக்டெயர்ளுக்குக் குறைவாக ஆனால் ஒரு ஹெக்டேயருக்குக் குறையாமல் இருக்குமிடத்து .. | 50 |
| அத்தகைய பரப்பளவு ஐந்து ஹெக்டேயர்களாக அல்லது அதற்கு மேலாக இருக்குமிடத்து ஒவ்வொரு ஹெக்டேயருக்கும் .. | 10 |

ஆயின், பிரதேச சபையானது, முறையாக வரையறுக்கப்பட்டு பரப்பளவில் ஐந்து ஹெக்டேயர்களுக்குக் குறைந்ததான ஓர் ஆதனமாக அமைகின்ற காணியின் பிரிக்கப்பட்ட பகுதி எதன்மீதும், அது கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அந்த வரியை விதித்து அறவிடும் நோக்கத்திற்காக விசேட இடப்பரப்பொன்றாக அமைச்சரால் வெளிப்படுத்தப்பட்ட இடப்பரப்பொன்றில் அமைந்திருந்தாலன்றி, ஏக்கர் வரியொன்றை விதித்தலாகாது :

ஆயின், மேலும், பிரதேச சபையானது, எந்தச் சுற்றுடல்கள் வீதவரியொன்றை விதிப்பதற்காகக் கட்டடமமைந்த சுற்றுடல்கள் என வெளிப்படுத்தப்பட்டுள்ளனவோ அந்தச் சுற்றுடல்களில் அமைந்துள்ளதான ஏதேனும் காணிமீது ஏக்கர் வரியொன்றை விதித்தலாகாது.

(4) கட்டடமொன்று, அது அமைந்திருக்கின்றதான காணியின் பயிர்ச்செய்கையுடன் சம்பந்தப்பட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான நோக்கங்களுக்காக அல்லது அந்தக் காணியின் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ளவரான எவரேனும் ஆளினால் அல்லது ஆட்களினால், வதிவிட நோக்கங்களுக்காக முற்றாக அல்லது பிரதானமாகப் பயன்படுத்தப்படுமிடத்தும், அந்தக் காணிமீது ஏக்கர் வரியொன்று விதிக்கப்பட்டுச் செலுத்தப்படுமிடத்தும், அந்தக் காணி, கட்டடமமைந்த இடப் பிரதேசத்துக்குள் அமைந்திருக்கின்றதென்பது எப்படியிருப்பினும், அக்கட்டடத்தின்மீது வீதவரி எதுவும் அறவிடப்படுதலாகாது.

(5) பிரதேச சபையானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் ஆண்டுக்காக ஏதேனும் வீதவரியை அல்லது (3) ஆம் உட்பிரிவின் கீழ் ஏக்கர் வரியொன்றை விதிக்கையில், முற்போந்த ஆண்டின் போது வலுவிலிருந்ததான அதே வரியை மாற்றமின்றி விதிப்பதற்குத் தீர்மானிக்கின்ற விடத்து, அத்தகைய வீதவரியை அல்லது ஏக்கர் வரியை விதிப்பதற்கும் அறவிடுவதற்கும் அமைச்சரின் அங்கீகாரம் தேவைப்படுத்தலாகாது.

(6) இப்பிரிவின்கீழான அத்தகைய வீதவரியானது அல்லது ஏக்கர் வரியானது, பிரதேச சபை பணிக்கக்கூடியவாறான அத்தகைய தவணைப் பணங்களிலும் அத்தகைய காலங்களிலும் செலுத்தப்படற் பாலதாதல்வேண்டும்.

(7) பிரதேச சபை ஒவ்வொன்றும், ஏதேனும் ஆண்டு வீத வரி அல்லது ஏக்கர் வரி, அந்த ஆண்டின் சனவரி முப்பத்தோராம் நாளன்று அல்லது அதன் முன்னர் செலுத்தப்பட்டால், அத்தகைய வீத வரித்தொகையின் அல்லது ஏக்கர் வரியின் பத்து நூற்றுவீதக் கழிவீட்டை அனுமதித்தல் வேண்டும், அல்லது அத்தகைய வீதவரி யானது அல்லது வரியானது தவணைப்பணங்களில் செலுத்தப்படற் பாலதாகவுள்ளவிடத்து, எந்தக் காலப்பகுதிக்கு அத்தகைய வீதவரி அல்லது வரி போமதியாகவுள்ளதோ அந்தக்காலப்பகுதியின் முதலா வது மாதத்திற்குள் அத்தகைய தொகை செலுத்தப்பட்டால், போமதி யாகவுள்ள அத்தகைய வீதவரியின் அல்லது வரியின் தவணைப் பணத்தொகையின் ஐந்து நூற்றுவீதக் கழிவீட்டை ஒரு பிரதேச சபையானது அனுமதித்தல் வேண்டும்.

*பிரதேச சபையால் விதிக்கப்பட்ட வீதவரியினின்று அல்லது ஏக்கர் வரியினின்று விலக்களித்தல்.*

135. பின்வருவன ஏதேனும் வீதவரியிலிருந்து அல்லது ஏக்கர் வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும் :—

(அ) பொது மதவழிபாட்டு இடத்தின் மதகுருவின் வாழிடமாக ஒதுக்கப்பட்ட எவையேனும் அத்தகைய கட்டடங்களும் அவற் றோடு சேர்ந்த காணியும் உட்பட அத்தகைய பொது மதவழி பாட்டு நோக்கத்திற்காக முற்றாக அல்லது பிரதானமாகப் பயன்படுத்தப்படும் எல்லாக் காணிகளும் அல்லது கட்டடங் களும் ;

(ஆ) அரசாங்கத் திணைக்களமொன்றினால் அங்கீகாரமளிக்கப்பட்டன வும் அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்டனவுமான பண்பாட்டு, சமூக, மத அல்லது தரும நோக்கங்களுக்காக முற்றாக அல்லது பிரதானமாகப் பயன்படுத்தப்படுகின்றவையும் அத் துடன் காணிகள் அல்லது கட்டிடங்கள் அத்தகைய நிறு வனங்களால் சொந்தமாக வைத்திருக்கப்பட்டுள்ளவிடத்து அத்தகைய எல்லாக் காணிகளும் அல்லது கட்டடங்களும் ;

(இ) கட்டணம் அறவிடப்படாத கல்வி நிறுவனங்களால் அல்லது எந்தக் கல்வி நிறுவனங்களுக்கு அரச நிதிகளிலிருந்து மானியக்கொடைகள் அளிக்கப்படுகின்றனவோ அல்லது எந்நிறுவனங்களுக்கு அத்தகைய மானியக்கொடை முன்னர் அளிக்கப்பட்டு ஆனால் தற்போது அளிக்கப்படுகின்ற தில்லையோ அந்த நிறுவனங்களால் முற்றாக அல்லது பிரதானமாகப் பயன்படுத்தப்படும் எல்லாக் காணிகளும் அல்லது கட்டடங்களும் ;

(ஈ) சுடுகாடுகள், இடுகாடுகள் கட்டளைச்சட்டத்தின்கீழ் பிரகடனப் படுத்தப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட எல்லா இடுகாட்டு, சுடுகாட்டு நிலங்களும்;

(உ) பிரதேச சபையின் தீர்மானமொன்றினால் சொந்தக்காரரின் ஏழ்மை என்ற ஏதுவின்மீது விசேடமாக விலக்களிக்கப் பட்டனவான எல்லா ஆதனங்களும்.

*அரச ஆதனத்தை வரிமதிப்பீடு செய்தல்.*

136. அரசுக்கு சொந்தமானவையும் அரசினால் ஆளெவருக்கும் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடப்பட்டவையும் ஏதேனும் பிரதேச சபையின் எல்லைகளினுள் உள்ளவையுமான எல்லா வீடுகளும், கட்டடங்களும், காணிகளும் அத்துடன் சிறுமனைகளும் 134 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்படற்பாலதான வீதவரி அல்லது வீதவரிகள் அல்லது ஏக்கர் வரி தொடர்பில் வரி மதிப்பீடு செய்யப்படுவதற்கு உட்படுதல் வேண்டு மென்பதுடன், அத்தகைய எவையேனும் வளவுகளின் குத்தகைக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் ஒவ்வொருவரும், அவ்வாறு வைத்திருக்கப்பட்ட அல்லது இருப்பாட்சி செய்யப்பட்ட வீடு, கட்டடம், காணி அல்லது சிறுமனை தொடர்பில் விதிக்கப்படற்பாலதான வீத வரியை அல்லது வீதவரிகளை அல்லது ஏக்கர் வரியை பிரதேச சபைக்குச் செலுத்துவதற்கு ஆளாதலும் அவற்றைச் செலுத்துதலும் வேண்டும்.

*அரச ஆதனம் கைப்பற்றி விற்பனை செய்யப்படுவதற்கு உட்படுதலாகாது.*

137. அசைவுள்ளதாயினுஞ்சரி அசைவற்றதாயினுஞ்சரி அரசின் ஆதனம் எதுவாயினும் அரசுடனான அல்லது அரசிலிருந்து, ஒன்றில் வெளிப்படையான அல்லது உட்கிடையான ஏதேனும் உடன்படிக்கை, ஒப்பந்தம், அல்லது அனுமதிப்பத்திரம் என்பவற்றின்கீழ், அரச ஆதனமாகவுள்ள ஏதேனும் வீட்டை, கட்டடத்தை, காணியை அல்லது சிறுமனையை வைத்திருக்கின்ற, இருப்பாட்சி செய்கின்ற அல்லது துய்க்கின்ற எவரேனும் ஆளிடமிருந்து போமதியாக இருக்கக்கூடிய ஏதேனும் வீதவரியை அல்லது வீதவரிகளை, வரியை அல்லது வரிகளை அறவிடுவதற்காகக் கைப்பற்றப்படுவதற்கோ அல்லது விற்கப்படுவதற்கோ உட்படுதலாகாது.

*வரிமதிப்பீட்டிற்காக ஆதனத்தைப் பிரித்தல் அல்லது ஒன்று திரட்டுதல்.*

138. (1) பிரதேச சபை, காலத்துக்குக்காலம் வரிமதிப்பீட்டு நோக்கத்திற்காக அத்துடன் அதற்காகப் போதிய ஏது இருக்கும் போதிலெல்லாம், ஏதேனும் பிரதேச சபையின் எல்லைகளினுள் உள்ள ஏதேனும் வீட்டை, கட்டிடத்தை, காணியை அல்லது சிறுமனையைப் பிரிக்கலாமென்பதுடன், எவையேனும் தனியான வீடுகள், கட்டிடங்கள், காணிகள் அல்லது சிறுமனைகள் எவற்றையேனும் ஒன்று திரட்டலாம் ; அத்துடன் இச்சட்டத்தின்கீழ் விதிக்கப்படற்பாலதான ஏதேனும் வீதவரி அல்லது வீதவரிகள் தொடர்பில் அத்தகைய பிரிக்கப்பட்ட பகுதி ஒவ்வொன்றையும் தனியாகவும், அத்தகைய ஒன்று திரட்டப்பட்ட வளவுகள் ஒவ்வொன்றையும் முழுமையாகவும் வரிமதிப்பீடு செய்யலாம் :

ஆயின், அத்தகைய ஏதேனும் ஒன்றுதிரட்டுதலின் விடயத்தில் ஒன்று திரட்டப்பட்ட வளவுகள், எந்தப் பல்வேறு வீடுகள், கட்டிடங்கள் காணிகள், அல்லது சிறுமனைகள் என்பன சேர்ந்து அத்தகைய வளவுகள் அமைக்கப்பட்டனவோ அந்தப் பல்வேறு வீடுகள், கட்டிடங்கள், காணிகள் அல்லது சிறுமனைகள் என்பவற்றின் கூட்டுமொத்த ஆண்டுப் பெறுமானத்தில் வரிமதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

(2) பிரதேச சபையானது, அத்தகைய பிரிவு அல்லது ஒன்று திரட்டுகை பற்றி இருப்பாட்சியாளர் ஒவ்வொருவருக்கும், அவர் அத்தகைய ஒவ்வொரு வீட்டினதும், கட்டிடத்தினதும், காணியினதும் அல்லது சிறுமனையினதும் உரிமையாளராக, கூட்டுரிமையாளராக அல்லது வாடகைக் குடியிருப்பாளராக இருப்பினுஞ்சரி அறிவித்தல் கொடுக்கச் செய்தல் வேண்டும்.

(3) அவ்வாறு கையாளப்பட்ட எவையேனும் வளவுகளின் வரிமதிப்பீடு செய்யப்பட்ட ஆண்டுப் பெறுமானமானது, அத்தகைய பிரிவு அல்லது ஒன்று திரட்டுகை காரணமாக எந்த ஆண்டில் பிரிவு அல்லது ஒன்று திரட்டுகை செய்யப்பட்டதோ அந்த ஆண்டுக்காக அதிகரிக்கப்படுதலோ அல்லது குறைக்கப்படுதலோ ஆகாது.

விலைமதிப்பீட்டு நோக்கங்களுக்கான விபரத் திரட்டு.

139. (1) வீதவரியிடப்படக்கூடியதான ஏதேனும் வீட்டின், கட்டிடத்தின், காணியின் அல்லது சிறுமனையின் ஆண்டுப் பெறுமானத்தை வரிமதிப்பீடு செய்வதற்கு அல்லது எக்கர்வரி நோக்கங்களுக்காக ஏதேனும் பயிரிடப்பட்ட காணியின் பரப்பளவை வரிமதிப்பீடு செய்வதற்குப் பிரதேச சபையை இயலச் செய்யும் பொருட்டு பிரதேச சபையானது, அத்தகைய வீட்டின், கட்டிடத்தின், காணியின் அல்லது சிறுமனையின் சொந்தக்காரரையும் இருப்பாட்சியாளரையும் அவற்றின் வாடகை அல்லது ஆண்டுப்பெறுமானம், அல்லது பரப்பளவு பற்றிய விவரத்திரட்டைக் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தலாமென்பதுடன், அதே நோக்கத்துக்காக பிரதேச சபையால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஆளெவரும், சூரியன் உதித்தபின்னும் சூரியன் மறைவதற்கும் இடையில் எந்நேரத்திலும் அத்தகைய வீடு, கட்டிடம், காணி அல்லது சிறுமனை என்பவற்றுள் புகுதலும், அவற்றைச் சோதித்தலும் அளவீடு செய்தலும் அவருக்குச் சட்டமுறையானதாதலும் வேண்டும்.

(2) ஏதேனும் புதிய கட்டிடம் கட்டிமுடிக்கப்பட்டமை அல்லது எலவே இருந்த ஏதேனும் கட்டடத்திற்கு ஏதேனும் பகுதி சேர்க்கப்பட்டமை என்பன பற்றி அத்தகைய பூர்த்தியாக்கலின் அல்லது சேர்த்தலின் பின்னர் பதினான்கு நாட்களுக்குள் பிரதேச சபைக்கு எழுத்தில் அறிவிப்பது கட்டிடமமைந்த சுற்றாடலில் உள்ள ஏதேனும அசைவற்ற ஆதனச் சொந்தக்காரரின் கடமையாதல் வேண்டும்.

(3) (அ) இதனகத்துக் குறித்துரைக்கப்பட்டுள்ள விவரத்திரட்டை எந்நாளன்று கொடுத்துதவுமாறு அவர் தேவைப்படுத்தப் படுகின்றாரோ அந்நாளிலிருந்து ஏழு நாட்களுக்குள் அவ்வாறு கொடுத்துதவத் தவறுகின்றவரான அல்லது அசட்டையாக இருக்கின்றவரான; அல்லது

(ஆ) தெரிந்துகொண்டு பொய்யான அல்லது செம்மையற்ற விவரத் திரட்டை அளிக்கின்றவரான; அல்லது

(இ) மேற்சொல்லப்பட்டவாறாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளை அத்தகைய ஏதேனும் வீட்டினுள், கட்டிடத்தினுள், காணியினுள் அல்லது சிறுமனையுள் புகுவதனை அல்லது அவற்றைச் சோதித்தலை அல்லது தேவைப் படின் அவற்றை அளவீடுசெய்தலைத் தடங்கல் செய்கின்றவரான, தடையாக விருக்கின்றவரான அல்லது தடுக்கின்றவரான ; அல்லது

(ஈ) இரண்டாம் உட்பிரிவுக்கு இணங்கியொழுகத் தவறுகின்றவரான,

ஆளொவ்வொருவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஆயிரம்ரூபாவை விஞ்சாதவொரு குறறப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும்.

140. (1) புதிய வரிமதிப்பீடொன்றைத் தயாரிப்பதற்காக, ஏதேனும் பிரதேச சபை எல்லைகளினுள் உள்ள வீடு, கட்டிடம், காணி, அத்துடன் சிறுமனை என்பன ஒவ்வொன்றினதும் ஆண்டுப்பெறுமானம் பிரதான விலைமதிப்பீட்டாளரால் அல்லது உதவி ஆணையாளரின் அங்கீகாரத்துடன் பிரதேச சபையால் நியமிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் அல்லது ஆட்களினால் வரிமதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். ஆதனங்களின் ஆண்டுப் பெறுமானத்தை வரிமதிப்பீடு செய்தல்.

(2) ஏக்கர் வரியின் நோக்கங்களுக்காக பயிர்செய்யப்படும் காணிகள் எல்லாவற்றினதும் பரப்பளவை நிச்சயப்படுத்திக்கொள்ளும் நோக்கத்திற்காக, பிரதேச சபை ஒவ்வொன்றும் ஓர் ஆளை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களை, வரிமதிப்பீட்டாளர்களாக நியமிப்பதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

(3) பயிர்செய்யப்படும் காணியின் ஆண்டுப் பெறுமானத்தை அல்லது பரப்பளவை வரிமதிப்பீடுசெய்யும் அல்லது சரிபார்க்கும் நோக்கத்திற்காக, சூரியன் உதித்தபின்னும், சூரியன் மறைவதற்குமிடையிலான எந்நேரத்திலும் ஏதேனும் கட்டிடத்துள் அல்லது காணியுள் புகுதலும் அதன் ஆண்டுப் பெறுமானத்தை அல்லது பரப்பளவை நிச்சயப்படுத்திக்கொள்வதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் அதனகத்துச் செய்தலும் அல்லது செய்வித்தலும் பிரதான விலைமதிப்பீட்டாளருக்கு அல்லது (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவுகளின்கீழ் பிரதேச சபையினால் நியமிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு அல்லது ஆட்களுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

141. (1) ஒரு வரிமதிப்பீட்டு நிரல் அல்லது ஏக்கர் நிரல் செய்து முடிக்கப்பட்டதன்மேல், பிரதேச சபையானது, அது பற்றியும் வரிமதிப்பீட்டு நிரல் அல்லது ஏக்கர் நிரல் எங்கே சோதிக்கப்படலாம் என்பது பற்றியும் பகிரங்க அறிவித்தல் ஒன்றைக் கொடுக்கச் செய்தல் வேண்டும். வரிமதிப்பீட்டு நிரலும் ஏக்கர் நிரலும்.

(2) ஆளெவரும், அத்தகைய வரிமதிப்பீட்டு நிரலில் அல்லது ஏக்கர் நிரலின் பகுதியெதனையும் கட்டணமின்றிச் சோதிப்பதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(3) பிரதேச சபையானது, வரிமதிப்பீடு செய்யப்பட்ட வீட்டின், கட்டிடத்தின், காணியின் அல்லது சிறுமனையின் அல்லது பரப்பளவு சரிபார்க்கப்பட்டதான பயிர்செய்யப்படும் காணியின் இருப்பாட்சியாளர் ஒவ்வொருவர் மீதும், அவர் சொந்தக்காரராயினுஞ்சரி, வாடகைக் குடியிருப்பாளராயினுஞ்சரி, வளவுகளுக்கு ஆண்டுப் பெறுமானத்தின் வரிமதிப்பீடு அல்லது பரப்பளவு சரிபார்ப்புப் பற்றிய அறிவித்தலொன்றை சேர்ப்பிக்கச்செய்தல் அல்லது அவாது வளவுகளில் விட்டுவைக்கச்செய்தல் வேண்டும். சொல்லப்பட்ட அறிவித்தலானது பொருளளவில் மூன்றும் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் இருத்தல் வேண்டும். அத்தகைய அறிவித்தல், மேலும், வரிமதிப்பீட்டுக்கெதிரான அல்லது சரிபார்ப்புக்கெதிரான எழுத்திலான ஆட்சேபனைகள், அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்தல் வேண்டும்.

(4) பிரதேச சபையானது "ஆட்சேபனைப் புத்தகம்" என அழைக்கப்பட வேண்டிய புத்தகமொன்றை வைத்திருக்கச் செய்தல் வேண்டுமென்பதுடன், ஒரு வரிமதிப்பீட்டிற்கெதிரான அல்லது சரிபார்ப்புக்கெதிரான ஆட்சேபனை ஒவ்வொன்றும் அதனகத்துப் பதியப்படச் செய்தலும் வேண்டும். பிரதேச சபையானது, ஒவ்வோர் ஆட்சேபனையாளருக்கும் வீட்டின், கட்டிடத்தின், காணியின் அல்லது சிறுமனையின் அல்லது பயிர் செய்யப்படும் காணியின் சொந்தக்காரர் அல்லது இருப்பாட்சியாளர் ஒவ்வொருவருக்கும், ஆட்சேபனைகள் எந்தத் தேதியில், எந்த இடத்தில், எந்நேரத்தில் நுண்ணாய்வு செய்யப்படும் என்பதுபற்றிய எழுத்திலான அறிவித்தலைக்கொடுக்கச் செய்தல் வேண்டும்.

(5) அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும், பிரதேச சபையானது, ஆட்சேபனையாளர், சொந்தக்காரர், இருப்பாட்சியாளர் அல்லது அங்கு சமூகமளிக்கக்கூடியவர்களான அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் என்போர்களின் முன்னிலையில் ஆட்சேபனைகளை நுண்ணாய்வு செய்வித்தல் வேண்டும். அத்தகைய நுண்ணாய்வு நியாயமான காரணத்துக்காகக் காலத்துக்குக் காலம் ஒத்திவைக்கப்படலாம்.

(6) வரிமதிப்பீடொன்றுக்கெதிரான அல்லது சரிபார்ப்புக்கெதிரான ஆட்சேபனை எதுவும் முடிவுசெய்யப்படும்போது, பிரதேச சபையானது, அதன்மீதான முடிபை ஆட்சேபனையாளர், சொந்தக்காரர், இருப்பாட்சியாளர் என்போருக்கு அறிவிக்கச்செய்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய முடிவானது ஆட்சேபனைப் புத்தகத்தில் குறிப்பிடப்படுதலும், அவசியமான திருத்தமெதுவும் விடயத்திற்கேற்றுற்போன்று வரிமதிப்பீட்டு நிரலில் அல்லது ஏக்கர் வரி நிரலில் செய்யப்படுதலும் வேண்டும்.

(7) எந்த வரிமதிப்பீட்டுக்கெதிராக ஆட்சேபனை எதுவும் எழுப்பப்படவில்லையோ அந்த வரிமதிப்பீடு ஒவ்வொன்றும், விடயத்திற்கேற்றுற்போன்று எக்காலப்பகுதிக்கு அத்தகைய வரிமதிப்பீடு நிரல் அல்லது ஏக்கர் நிரல் தொடர்ந்து வலுவிலிருக்கின்றதோ அக்காலப்பகுதிக்கு இறுதியானதாதல் வேண்டும்.

வரிமதிப்பீடு முதலியவற்றிற்கெதிராக ஆட்சேபனை தெரிவிக்கும் விடயத்தில் நடவடிக்கை முறை.

142. (1) ஏதேனும் வீட்டின், கட்டிடத்தின், காணியின், அல்லது சிறுமனையின் வரிமதிப்பீடு தொடர்பாக அல்லது பயிரிடப்பட்ட காணியின் பரப்பளவு பற்றிய சரிபார்ப்புத்தொடர்பாக 141 ஆம் பிரிவின் கீழான முடிவினால் இன்னலுறுகின்றவரான ஆள் ஒவ்வொருவரும் அத்தகைய வீட்டின், கட்டிடத்தின், காணியின், அல்லது சிறுமனையின் ஆண்டுப்பெறுமானத்தின்மீதான வீதவரியின் அல்லது வீதவரிகளின் தொகையானது அல்லது ஒன்று திரட்டுகையின் விடயத்தில் அவ்வாறு ஒன்றுதிரட்டப்பட்ட வீடுகளின், கட்டிடங்களின், காணிகளின் அல்லது சிறுமனைகளின் ஆண்டுப் பெறுமானத்தின்மீதான வீதவரியின் அல்லது வீதவரிகளின் தொகையானது, அல்லது சரிபார்க்கப்பட்ட பரப்பளவின்மீதான ஏக்கர் வரியின் தொகையானது ஆயிரத்து ஐந்நூறு ரூபாவை விஞ்சாது விட்டால், முடிபுபற்றிய அறிவித்தல் பெற்றுக் கொள்ளப்பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குள், எந்த இடத்தில் அத்தகைய வீடு, கட்டிடம், காணி அல்லது சிறுமனை அல்லது அத்தகைய பயிரிடப்பட்ட காணி அமைந்துள்ளதோ அந்த இடத்தில் நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றத்திலும், அத்தகைய தொகையானது ஆயிரத்து ஐந்நூறு ரூபாவை விஞ்சுகின்றவிடத்து, அத்தகைய நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள மாவட்ட நீதிமன்றத்திலும் அத்தகைய முடிபை ஆட்சேபித்து வழக்கொன்றைத் தொடுக்கலாம்.

(2) இப்பிரிவின்கீழான ஏதேனும் வழக்கின் விளக்கத்தின்மீது, வழக்காளியானவர், வரிமதிப்பீட்டுக்கான அல்லது சரிபார்ப்புக்கான அவரது எழுத்திலான ஆட்சேபனையில் குறிப்பிடப்படாத ஏதேனும் ஆட்சேபனை எதுபற்றிய சான்று எதையும் எடுத்துக்கூற அனுமதிக்கப்படுதலாகாது.

(3) குடியியல் வழக்குகளைக் கேட்டுத் தீர்மானிப்பதற்காக அப்போதைக்கு வலுவிலுள்ள சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கிணங்க, அத்தகைய நீதிமன்றம் ஒவ்வொன்றும் அத்தகைய வழக்கைக் கேட்டுத் தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய நீதிமன்றத்தின் முடிபு எல்லா விடயங்களிலும் மேன் முறையீட்டு நீதிமன்றத்திற்குச் செய்யப்படும் மேன்முறையீட்டுக்கு அமைந்ததாக விருத்தலும் வேண்டும்.

(4) அத்தகைய மேன்முறையீடு ஒவ்வொன்றும், விடயத்திற்கேற்றுப் போன்று நீதிவான் நீதிமன்றமொன்றின் அல்லது மாவட்ட நீதிமன்றமொன்றின் ஏதேனும் தீர்ப்பு, தீர்வை, அல்லது கட்டளை என்பவற்றிலிருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடுகள் செய்தலை ஒழுங்குபடுத்துகின்ற எழுத்திலான சட்டமெதனதும் ஏற்பாடுகளினால் ஆளப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் வரிமதிப்பீட்டுக்கு அல்லது சரிபார்ப்புக்கு எதிரான ஏதேனும் ஆட்சேபனை பதிவு எதுவும் அல்லது அத்தகைய வழக்குத் தொடுப்பு அல்லது அதனகத்தான மேன்முறையீடேதுவும், அத்தகைய வீதவரி அல்லது வீதவரிகள் அல்லது வரிமுழுவதையும் அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தை அறவிடுதலை நிறுத்தி வைத்தலாகாது என்பதுடன், சேகரிக்கப்பட்ட மிகை ஏதேனுமிருப்பின்,

அது, ஆட்சேபனை மீதான முடிபுக்கு அல்லது மேன்முறையீடு செய்யப்படாவிட்டால் அத்தகைய நீதவான் நீதிமன்றத்தின் அல்லது மாவட்ட நீதிமன்றத்தின், அல்லது மேன்முறையீடு செய்யப்பட்ட விடயத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முடிபுக்கு இணங்கத் திருப்பியனுப்பப்படுதலும் வேண்டும்.

ஆண்டுப் பெறுமதியைப் பாதிக்கும் ஆதனத்துக்குரிய மாற்றங்கள் செய்ததன் மேல் மதிப்பீட்டைப் பிரித்தல், முதலியன.

143. (1) ஏதேனும் வீட்டின், கட்டிடத்தின், காணியின் அல்லது சிறுமனையின் அல்லது பயிரிடப்பட்ட காணியொன்றின் அல்லது பரப்பொன்றின் ஆண்டுப் பெறுமானத்தைப் பாதிக்கின்றதான அமைப்புமாற்றங்கள், அவைதொடர்பான வரிமதிப்பீடு அல்லது சரிபார்ப்பு முற்போந்த பிரிவின் பயனைக்கொண்டு இறுதியானதாக வந்தபின்னர் செய்யப்படுமிடத்து, ஒரு பிரதேச சபையானது, முற்போந்த பிரிவுகளில் அடங்கியுள்ளவை ஏதும் எவ்வாறிருப்பினும், அத்தகைய வரைவுகளுக்காக, புதியவரிமதிப்பீடொன்றை அல்லது சரிபார்ப்பை எந்த நேரத்திலும் தயாரிக்கலாம்.

(2) அத்தகைய புதிய வரிமதிப்பீடு அல்லது சரிபார்ப்பு ஒவ்வொன்றும் எந்தமாதத்தில் விடயத்திற்சேர்ந்ததோ அல்லது அது வரிமதிப்பீட்டு நிரலில் அல்லது ஏககாலவ நிரலில் பதியப்பட்டதோ, அந்தந்த மாதத்தைத் தொடர்ந்துவரும் மாதத்தின் முதலாவது நாளிலிருந்து வலுவுக்கு வருதல் வேண்டும் :

ஆயின், எப்போதும், அத்தகைய புதிய வரிமதிப்பீடு அல்லது சரிபார்ப்பு, இயலுமானவரை முந்தியபிரிவுகளால் விதித்துரைக்கப்பட்ட முறையில் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அதனகத்துக் குறிப்பீடு செய்யப்பட்ட ஆட்சேபனைகள், புலனாய்வுகள், வழக்குகள், அத்துடன் மேன்முறையீடுகள் என்பவற்றிற்கு அமைவானதாகவிருத்தலும் வேண்டும்.

குறித்த சில விடயங்களில் வரிமதிப்பீட்டைப் பிரித்தல் அல்லது வீதவரிகளைச் சரிபார்த்தல்.

144. பிரதேச சபையானது, ஏதேனும் வரிமதிப்பீட்டை அல்லது சரிபார்ப்பை, அது தகுதியெனக் கருதுகின்றவாறு அதனை அதிகரிப்பதன்மூலம் அல்லது குறைப்பதன் மூலம் அதற்கென போதிய ஏதுக்கள் இருக்கின்றனவென பிரதேச சபை திருப்திப்பட்டால் எந்த நேரத்திலும் மீளாய்வு செய்வதற்கும் எந்தத்தேதியில் மீளாய்வு செய்யப்பட்ட வரிமதிப்பீடு அல்லது சரிபார்ப்பு வலுவுக்கு வருதல் வேண்டுமோ அந்தத் தேதியை நிருணயிப்பதற்கும், தத்துவத்தையும் அத்துடன் அதிகாரத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

குடியிருப்பு இல்லாத விடயத்தில் வீதவரிகளைக் குறைத்தல்.

145. (1) தளபாடங்களைக் கொண்டுள்ள ஒரு கட்டடம் தவிர்ந்த ஏதேனும் கட்டடம் வாடகைக் குடியிருப்புக்கு விடப்படாதிருப்பின் அல்லது அவ்வாறு தொடர்ந்து விடப்படாதிருப்பின், எந்தக் காலப் பகுதியின்போது அத்தகைய கட்டடம் வாடகைக் குடியிருப்புக்கு விடப்படாது அல்லது தொடர்ந்து அவ்வாறு இருக்கின்றதோ அந்தக் காலப்பகுதிக்கு அத்தகைய கட்டடம் தொடர்பாகச் செலுத்தப்படற்பாலதான வீதவரிகளின் விகிதாசாரமான குறைப்பு அனுமதிக்கப்படலாம்.

(2) தளபாடங்களைக் கொண்டதாயும், தளபாடமிடப்பட்ட கட்டடமொன்றாக வாடகைக்கு விடப்படுவதற்கு முன்னப்பட்ட கட்டடமொன்று எனப் பிரதேச சபையுடன் பதிவுசெய்யப்பட்டதாயுமுள்ள ஏதேனும் கட்டடம் வாடகைக் குடியிருப்புக்கு விடப்படாது அல்லது அவ்வாறு தொடர்ந்து இருப்பின் எந்தக் காலப்பகுதிக்கு அத்தகைய கட்டடம் வாடகைக்குடியிருப்புக்கு விடப்படாது அல்லது தொடர்ந்து அவ்வாறு இருக்கின்றதோ, அந்தக் காலப்பகுதிக்கு அத்தகைய கட்டடம் தொடர்பாக செலுத்தப்படற்பாலதான வீதவரிகளின் அரைவாசியினதான விகிதாசாரக் குறைப்பு அனுமதிக்கப்படலாம்.

(3) எந்தக் காலப்பகுதிக்கு (1) ஆம் (2) ஆம் பிரிவுகளின்கீழான குறைப்பொன்று அனுமதிக்கப்பட்டதோ அந்தக் காலப்பகுதியானது ஏதேனும் கட்டடம் தொடர்பில் எந்த நாளன்று அதன் வாடகைக்கு குடியிருப்பில்லாமை பற்றிய எழுத்திலான அறிவிப்பைப் பிரதேச சபை பெற்றுக்கொண்டதோ அந்த நாளன்று தொடங்கி, எந்தத் தேதியன்று அது மீண்டும் இருப்பாட்சி செய்யப்படுகின்றதோ, அந்தத் தேதியன்று முடிவுறுதலும் வேண்டும் ;

ஆயின், சொல்லப்பட்ட காலப்பகுதியானது, மீள்வாடகைக் குடியிருப்புச் செய்யப்பட்டு மூன்று நாட்களுக்குள் அது பற்றிப் பிரதேசசபைக்கு அறிவித்தல் கொடுக்கப்படாதுவிட்டால், மீள்வாடகைக் குடியிருப்புத் தேதிக்கு ஒரு மாதத்துக்கு முன்னரானதொரு தேதியன்று முடிவுறுதல் வேண்டும். இவ்வுட்பிரிவின்கீழான அறிவித்தல் ஒவ்வொன்றும், எந்த முகவரிக்கு அதிலிருந்து எழுகின்ற தொடர்புகள் யாவும் அஞ்சலில் அனுப்பப்படலாமோ அந்த முகவரியொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழான குறைப்புக்கான ஏதேனும் உரிமைக்கோரிக்கை தொடர்பாக, எந்தக் காலப்பகுதியின்போது ஏதேனும் கட்டடம் வாடகைக் குடியிருப்புக்கு விடப்படாது அல்லது அவ்வாறு தொடர்ந்து இருக்கின்றதோ அந்தக் காலப்பகுதி குறித்து பிணக்கொன்று எழும்போது, அதன் மீதான பிரதேச சபையின் முடிவு பற்றிய எழுத்திலான அறிவிப்பொன்று, (3) ஆம் உட்பிரிவின்கீழ் தரப்பட்ட முகவரிகளுள், கடைசி முகவரிக்கு அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டுமென்பதுடன், எந்தத் தேதியன்று அத்தகைய முடிவு அஞ்சலில் அனுப்பப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து ஏழுநாட்களுக்குள், அதனை மீளாய்வு செய்வதற்கான எழுத்திலான விண்ணப்பமொன்று பிரதேச சபைக்கு முன்வைக்கப்பட்டாலன்றியும், அத்துடன் அத்தகைய முடிவானது அதன் விளைவாக பிரதேச சபையால் மீளாய்வு செய்யப்பட்டாலன்றியும் அத்தகைய முடிவு இறுதியானதாதல் வேண்டும்.

**146.** (1) பிரதேச சபையொன்று, பொதுவாக அல்லது சிறப்பாக அமைச்சரால் பணிக்கப்படும்போது மாத்திரமே ஒரு புதிய வரிமதிப்பீட்டை அல்லது சரிபார்ப்பைத் தயாரித்தல் வேண்டும். ஏதேனும் பிரதேச சபை இடப்பரப்பிலுள்ள புதிய சேவைகளுக்கான ஏற்பாடு அல்லது ஏலவே இருந்த சேவைகளின் மேம்பாடு என்பவைவற்றைக் கருத்திற்கொண்டு ஏதேனும் பிரதேச சபை இடப்பரப்பிலுள்ள எல்லா

முன்னைய மதிப்பீடுகளை அல்லது சரிபார்த்தல்களை ஏற்றுக்கொள்ளுதல்.

அல்லது ஏதேனும் வகுப்பினதான அல்லது இனத்தைச் சார்ந்த அசைவற்ற ஆதனம் தொடர்பாக ஒரு புதிய வரிமதிப்பீட்டினை அல்லது சரிபார்ப்பினைத் தயாரிக்கும்படி பணிக்கலாம். அமைச்சரின் பணிப்புகளின்மீது ஒரு புதிய வரிமதிப்பீடு அல்லது சரிபார்ப்பு நிறைவேற்றப்படும்போது தவிர, சபையானது முற்போந்த ஆண்டுக்கான வரிமதிப்பீட்டை அல்லது சரிபார்ப்பை குறித்தசில விடயங்களில் அவசியமானவையெனக் கருதப்படக்கூடியவாறான அத்தகைய மாற்றங்களுடன், அடுத்துவரும் ஆண்டுக்கான வரிமதிப்பீடாக அல்லது சரிபார்ப்பாக இசைவாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

(2) வரிமதிப்பீடு அல்லது சரிபார்ப்புப் பற்றிய அறிவித்தல் விதித்துரைக்கப்பட்ட முறையில் கொடுக்கப்படுதல் வேண்டும்.

வரிகளையும் உரிமத் தீர்வைகளையும் விதிப்பதற்குப் பிரதேச சபைக்குள்ள தத்துவம்.

**147.** (1) பிரதேச சபையொன்று பின்வரும் வரிகள், உரிமத்தீர்வைகள் என்பனவற்றுள் எதனையும் பிரதேச சபை இடப்பரப்பின் எல்லைகளுக்குள் விதிக்கலாம் அத்துடன் அறவிடலாம். அதாவது—

(அ) வாகனங்கள், விலங்குகள் மீதான வரி ;

(ஆ) பிரதேச சபையால் வழங்கப்பட்ட உரிமங்கள் தொடர்பிலான ஒரு தீர்வை ; அத்துடன்

(இ) அமைச்சரால் அங்கீகாரம் அளிக்கப்பட்டதும், பாராளுமன்றத்தின் தீர்மானத்தினால் உறுதிப்படுத்தப்பட்டதுமான வேறேதேனும் வகையான வரி.

(2) பிரதேச சபையானது இப்பிரிவின்கீழ் ஏதேனும் ஆண்டுக்கு ஏதேனும் வரியை விதிக்கையில், முற்போந்த ஆண்டின்போது வலுவிலிருந்ததைப்போன்ற அதேவரியை மாற்றமின்றி அறவிடுவதற்குத் தீர்மானிக்கின்றவிடத்து, அத்தகைய வரியை விதிப்பதற்கும் அறவிடுவதற்கும் அமைச்சரின் அங்கீகாரம் தேவைப்படுத்தப்படுதலாகாது.

வாகனங்கள், விலங்குகள் மீதான வரி.

**148.** (1) எந்த வாகனங்கள், விலங்குகள் மீதான வரியை விதிப்பதற்கு 147 ஆம் பிரிவால் பிரதேச சபை அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அந்த வாகனங்கள் விலங்குகள் மீதான வரியானது நான்காம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள எல்லா வாகனங்கள், விலங்குகள் தொடர்பிலானதும், ஏதேனும் பிரதேச சபை இடப்பரப்பின் எல்லைகளுக்குள் அந்த அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் பயன்படுத்தப்படுவதும் அல்லது பயன்படுத்தப்படவேண்டியதுமான ஆண்டுவரியாதல் வேண்டும்.

(2) பின்வருவன தொடர்பில், வாகனங்கள் அத்துடன் விலங்குகள் மீதான வரி அறவிடப்படற்பாலதாதலோ அல்லது செலுத்தப்படற்பாலதாதலோ ஆகாது :—

(அ) அரசினது அல்லது பிரதேச சபையினது ஆதனமாகவுள்ள ஏதேனும் வாகனம் அல்லது விலங்கு ; அல்லது

(ஆ) அத்தகைய வாகனங்களின் நனவோக்க விற்பனையாளரினால் விற்பனைக்காக வைத்திருக்கப்படுவதும் அத்துடன் வேறு ஏதேனும் நோக்கத்துக்குப் பயன்படுத்தப்படாததுமான வாகனங்கள் ; அல்லது

(இ) வாகனங்கள் கட்டளைச்சட்டத்தின் 3ஆம் பிரிவின்கீழ் உரிமத் தீர்வைக்கு அமைவான அல்லது மோட்டார் வாகனங்கள் தொடர்பில் அப்போதைக்கு வலுவிலிருக்கின்ற ஏதேனும் சட்டவாக்கத்தின்கீழ் ஒரு வரிக்கு அமைவான வாகனங்கள்.

(3) வாகனங்கள், விலங்குகள் மீதான வரியானது, பிரதேச சபையால் கட்டளையிடப்படக்கூடியவாறான அல்லது துணைவிதிகளால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று, ஆண்டுதோறும் முன்னதாகவே செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

(4) பிரதேச சபையின் எல்லைகளுக்குள்ளாக வரியொன்றுக்குட்பட்டதான வாகனங்களையும் விலங்குகளையும், முப்பது நாட்களுக்கும் பயன்படுத்துவதற்கு வைத்திருந்தவுடன் அதனை உடைமையில் வைத்திருந்த அல்லது கட்டுக்காப்பில் வைத்திருந்த அல்லது அதன் கட்டுப்பாட்டைக் கொண்டிருந்த ஒவ்வோர் ஆளினாலும் வாகனங்கள், விலங்குகள் மீதான வரி செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும். ஆனால் முப்பது நாட்களுக்குக் குறைவாகத் தம் உடைமையில் வைத்திருந்த ஏதேனும் வாகனம் அல்லது விலங்கு தொடர்பில் இப்பிரிவின்கீழ் ஆளெவரும் வரி செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

(5) ஆளெவரும் சொத்தாண்மைக் கைமாற்றம் காரணமாக, எந்த ஆண்டில் சொத்தாண்மை கைமாற்றப்பட்டதோ அந்த ஆண்டுக்கு எந்த வாகனம் அல்லது விலங்கு மீது ஏற்கனவே வரி செலுத்தப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் வாகனம் அல்லது விலங்குமீது வரி செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

(6) இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் வரிக்குட்பட்டதான ஏதேனும் வாகனம் அல்லது விலங்கு, ஒன்றுக்கு மேற்பட்ட பிரதேச சபை எல்லைகளுக்குள் பயன்படுத்தப்படுகின்றவிடத்து அல்லது பயன்படுத்தப்பட முன்னப்படுகின்றவிடத்து, அத்தகைய வாகனம் அல்லது விலங்கு எந்தப் பிரதேச சபை எல்லைகளினுள், பிரதானமாகப் பயன்படுத்தப்படுகின்றதோ அல்லது பயன்படுத்தப்பட முன்னப்படுகின்றதோ, அந்தப் பிரதேச சபை எல்லைகள் தொடர்பிலான அத்தகைய ஒரு வரிக்கு மாத்திரமே உட்பட்டதாதல் வேண்டுமென்பதுடன், எந்த எல்லைகளுக்குள் அத்தகைய ஏதேனும் வரிக்குட்பட்டதான ஏதேனும் வாகனம் அல்லது விலங்கு பிரதானமாகப் பயன்படுத்தப்படுகின்றதோ அல்லது பயன்படுத்தப்பட முன்னப்படுகின்றதோ, அந்த எல்லைகள் பற்றிய பிரச்சினையெதுவும் எழுமாயின், பிரச்சினையானது உதவி ஆணையாளரால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(7) இப்பிரிவின் கீழ் அறவிடற்பாலதான வரியைச் செலுத்துவதற்கு ஆளான எவரேனும் ஆள், கோரப்பட்ட பின்னர் ஏழுநாட்களுக்குள் அத்தகைய வரியைச் செலுத்தத் தவறினால், பிரதேச சபையின் செயலாளர் அத்தவறுகையை, அத்தகைய பிரதேச சபை எந்த இடப்பரப்பிற்கு அமைக்கப்பட்டுள்ளதோ அந்த இடப்பரப்பின் மீது நியாயாதிக்கமுள்ள நீதிவான் நீதிமன்றத்துக்கு அறிக்கையிடுதல் வேண்டும் என்பதுடன், நீதிமன்றமானது, அத்தகைய தொகை, நீதிவானொருவர் தமது சாதாரண நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் விதிக்கக்கூடிய குற்றப்பணத்தொகையைவிடக் கூடியதாகவிருப்பினும், அது நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் ஒன்று என்றுற்போன்று, போமதியாகவுள்ள தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தலும் வேண்டும், அத்துடன் அவ்வாறு அறவிடப்பட்ட தொகை பிரதேச சபை நிதியத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

குறித்த சில உரிமத்தீர்வைகளை அறவிடுவதற்கு பிரதேச சபைக்குள்ள தத்துவம்.

149. இச்சட்டத்தில் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட எதேனும் துணைவிதியில் விவரிக்கப்பட்ட எவையேனும் நோக்கங்களுக்காக எவையேனும் வளவுகளை அல்லது இடத்தைப் பயன்படுத்துவதனை அதிகாரமளிப்பதான பிரதேச சபையால் வழங்கப்பட்ட எதேனும் உரிமம் தொடர்பில் 147 ஆம் பிரிவின்கீழ் பிரதேச சபை விதிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டதான உரிமத் தீர்வையானது, பிரதேச சபையால் காலத்திற்குக்காலம், அவ்வாறு உரிமமளிக்கப்பட்ட வளவுகளின் ஆண்டுப்பெறுமதிக்கிணங்கவும், அத்தகைய உரிமம் அத்தகைய வளவுகளை எதேனும் வியாபார நோக்கத்திற்குப் பயன்படுத்துவதனை அதிகாரமளிக்குமிடத்து பின்வருபவையாவன;—

(அ) அத்தகைய வளவுகளின் ஆண்டுப்பெறுமதி ;

(ஆ) அத்தகைய வியாபாரத்தின் மொத்த விற்பனை வரவு ;

(இ) அத்தகைய வியாபாரத்தால் சம்பாதிக்கக்கூடிய இலாபம் ; அத்துடன்,

(ஈ) அத்தகைய வியாபாரப் போக்கில் வழங்கப்படும் பொருள்களின் அல்லது சேவைகளின் அடிப்படைத் தன்மை,

என்பனவற்றைக் கருத்தில்கொண்டும் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்

ஆயின், அத்தகைய வளவுகளின் ஆண்டுப் பெறுமதி, கீழே தரப்பட்டுள்ள நிரை I இல் உள்ள எதேனும் விடயப் பொருளின் எல்லைகளுக்குள் அடங்குமிடத்து, ஆகக்கூடிய தீர்வை, நிரை II இலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ள பணத்தொகையை விஞ்சுதலாகாது :

| நிரை I | நிரை II ரூபா |
|---|---|
| ஆண்டுப்பெறுமானம் ரூபா 750/- ற்கு மேற்படாதவிடத்து .. | 500 |
| ரூ. 750/- இற்கு மேற்பட்டு ரூ. 1,500/- இற்கு மேற்படாதவிடத்து .. | 750 |
| ரூ. 1,500/- இற்கு மேற்படுமிடத்து .. .. | 1,000 |

ஆயின், மேலும் அத்தகைய எவையேனும் வளவுகள் ஒரு விடுதியகம், உணவுச்சாலை, அல்லது உறையகம் என்பவற்றின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுவதுடன் அத்தகைய விடுதியகம், உணவுச்சாலை அல்லது உறையகம், 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உல்லாசப் பிரயாண அபிவிருத்திச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையுடன் பதிவுசெய்யப்பட்டுமிருக்குமிடத்து, அல்லது சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருக்குமிடத்து, அவ்வாறு அறவிடப்படும் தீர்வையானது உரிமத் தீர்வை அறவிடப்படும் ஆண்டுக்கு நேர்முந்திய ஆண்டில் விடுதியகத்தின், உணவுச்சாலையின் அல்லது உறையகத்தின் பெறுதொகைகளுக்கிணங்க அறவிடப்படுதல் வேண்டும். அத்துடன் அப்பெறுதொகைகளின் ஒரு வீதத்தை விஞ்சுதலுமாகாது. அத்தகைய விடுதியகம், உணவுச்சாலை அல்லது உறையகம் அதன் முதலாவது ஆண்டுத் தொழிற்பாட்டில் இருக்குமாயின், அத்தகைய வளவுகளின் ஆண்டுப் பெறுமதிக்கிணங்கத் தீர்மானிக்கப்பட்டு அறவிடப்படவேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக விடுதியகம், உணவுச்சாலை, அல்லது உறையகம் என்பன தொடர்பில் "பெறுதொகைகள்" என்பது, அந்த விடுதியகம், உணவுச்சாலை அல்லது உறையகம் தொடர்பாக அல்லது அந்த விடுதியகத்தினை, உணவுச்சாலையினை அல்லது உறையகத்தினைக் கொண்டு நடாத்துவதில் புரிந்த சேவைகளுக்காகச் செய்து கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளற்பாலதான மொத்தத்தொகை எனப் பொருளாகும்.

**150.** (1) பிரதேச சபையொன்று தீர்மானத்தின் மூலம் ஏதேனும் பிரதேச சபையின் எல்லைகளுக்குள் கொண்டுநடாத்தப்படும் ஏதேனும் வியாபாரம் மீது ஒருவரியை விதிக்கலாம், அத்துடன் அறவிடலாம். குறித்த சில வியாபாரங்கள் மீதான வரி.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் அறவிடப்படும் வரியானது எந்த வளவுகளுக்குள் அந்த வியாபாரம் கொண்டு நடாத்தப்படுகின்றதோ அந்த வளவுகளின் ஆண்டுப் பெறுமானத்திற்கிணங்க பிரதேச சபையால் தீர்மானிக்கப்படும் ஓர் ஆண்டு வரியாதல் வேண்டும் :

ஆயின், அத்தகைய வளவுகளின் ஆண்டுப் பெறுமானம் கீழே தரப்பட்டுள்ள நிரை I இல் உள்ள ஏதேனும் வியப்பொருளின் எல்லைகளுக்குள் அடங்குமிடத்து, அறவிடப்படும் வரி நிரை IIஇல் தரப்பட்டுள்ள பணத்தொகையை விஞ்சுதலாகாது :

| நிரை I | | நிரை II |
|---|---|---|
| ஆண்டுப் பெறுமானம் ரூ. 750/- இனை விஞ்சாத விடத்து | ரூபா. | 500 |
| ரூபா 750/- இனை விஞ்சி, ஆனால் .. | | |
| ரூபா 1,500/-ஐ விஞ்சாத விடத்து .. .. | ரூபா. | 750 |
| ரூபா 1,500/-ஐ விஞ்சுகின்றவிடத்து .. | ரூபா | 1,000 |

ஆயின், மேலும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் துணைவிதியின்கீழ், எந்த வியாபாரத்திற்கு உரிமமொன்று அவசியமாகின்றதோ அந்த ஏதேனும் வியாபாரம் தொடர்பாக அத்தகைய வரி அறவிடப்படுதலோ அல்லது செலுத்தப்படுதலோ ஆகாது.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அறவிடப்படும் வரியானது, பிரதேச சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அல்லது துணைவிதியால் விதித்துரைக்கப்பட்ட அத்தகைய தேதியன்று, அத்தகைய வியாபாரத்தைக் கொண்டு நடாத்துகின்ற ஆளினால் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

(4) இட்பிரிவின் கீழ் அறவிடற்பாலதான வரியைச் செலுத்துவதற்கு ஆளான எவரேனும் ஆள், கேட்கப்பட்டபின், ஏழு நாட்களுக்குள் அத்தகைய வரியைச் செலுத்தத் தவறினால், பிரதேச சபையின் செயலாளர், எந்த இடப்பரப்பில் அத்தகைய சபை அமைந்துள்ளதோ அந்த இடப்பரப்பின்மீது நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள நீதிவான நீதிமன்றத்துக்கு அத்தகைய தவறுகைபற்றி அறிக்கையிடுதல் வேண்டும். நீதிமன்றம் அத்தகைய தொகை, நீதிவானொருவர் தமது சாதாரணமான நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் விதிக்கக்கூடிய குற்றப்பணத்தொகையை விடக் கூடியதாக இருப்பினும், அது நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் என்றாற்போன்று போமதியாகவுள்ள தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு அறவிடப்பட்ட தொகை பிரதேச சபை நிதியத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

**பல வியாபாரங்கள் கொண்டு நடாத்தப்படுமிடத்து தீர்வையை அல்லது வரியினைத் தீர்மானித்தல்.**

**151.** பிரதேச சபை ஒன்று 149 ஆம் பிரிவின்கீழான உரிமம் ஒன்று தொடர்பில் தீர்வை ஒன்றினை, அல்லது 150 ஆம் பிரிவின் கீழான வியாபாரம் ஒன்றன்மீதான வரி ஒன்றினை விதித்து அறவிடத் தீர்மானிக்குமிடத்தும் கொண்டுநடாத்தப்படும் வியாபாரமானது அதே வளவுகளில் கொண்டுநடாத்தப்படும் வேறு பல வியாபாரங்களில் ஒன்றாக இருக்குமிடத்தும், பிரதேச சபையானது, அத்தகைய வியாபாரத்தின் நோக்கங்களுக்காக இருப்பாட்சி செய்யப்படும் வளவுகளின் இடப்பரப்பின் ஒதுக்கீடுசெய்யப்படும் ஆண்டுப் பெறுமதியின் அடிப்படையில் அத்தகைய தீர்வையினை அல்லது வரியினைத் தீர்மானித்தல் வேண்டும்.

**குறித்த சில தொழில்கள், உயர் தொழில்கள் என்பன மீதான வரி.**

**152.** (1) பிரதேச சபையொன்று, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் துணைவிதியின்கீழ் அத்தகைய பிரதேச சபையின் எல்லைகளுக்குள் உரிமமெதுவும் அவசியமல்லாததான அல்லது 150 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் வரி செலுத்தப்படற்பாலதல்லாததான தொழில் எதனையும் கொண்டு நடாத்துகின்ற ஒவ்வோர் ஆள்மீதும், எந்த ஆண்டில் அத்தகைய

வரியானது செலுத்தப்படற்பாலதோ அந்த ஆண்டுக்கு முற்போந்த ஆண்டுக்கான தொழில் எடுப்பனவுகளுக்கிணங்க, கீழே தரப்பட்டுள்ள வீதங்களை விஞ்சாத அத்தகைய வீதங்களிலான வரியொன்றைத் தீர்மானத்தின் மூலம் ஆண்டுதோறும் விதித்து அறவிடலாம்:—

| நிரை I | | நிரை II ரூபா |
|---|---|---|
| ஆண்டிற்கான தொழில் எடுப்பனவுகள்— | | |
| ( i ) ரூபா 6,000 இனை விஞ்சாதவிடத்து | .. .. | இல்லை |
| ( ii ) ரூபா 6,000 இனை விஞ்சி ஆனால் ரூபா 12,000 இனை விஞ்சாதவிடத்து | .. .. | 90 |
| ( iii ) ரூபா 12,000 இனை விஞ்சி ஆனால் ரூபா 18,750 இனை விஞ்சாதவிடத்து | .. .. | 180 |
| ( iv ) ரூபா 18,750 இனை விஞ்சி ஆனால் ரூபா 75,000 இனை விஞ்சாதவிடத்து | .. .. | 360 |
| ( v ) ரூபா 75,000 இனை விஞ்சி ஆனால் ரூபா 150,000 இனை விஞ்சாதவிடத்து | .. .. | 1,200 |
| ( vi ) ரூபா 150,000 இனை விஞ்சுகின்றவிடத்து | .. .. | 3,000 |

ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள், நிலையான இடங்களில் தொழில் கொண்டுநடாத்தாதவர்களான அல்லது அத்தகைய தொழிலின் நோக்கங்களுக்காக பகிரங்க வீதிகளில் அல்லது வேறு பகிரங்க இடங்களில் தங்களைத் தாபிக்காத பயணவிற்பனையாளர்களுக்கு ஏற்புடையனவாதலாகாது.

(2) பிரதேச சபை ஒன்று, பிரதேச சபை இடப்பரப்புக்குள்ளாக, ஏதேனும் உயர் தொழிலைச் செய்பவரான ஆள் ஒவ்வொருவர் மீதும், ஆண்டுதோறும், அமைச்சரினால் ஒழுங்குவிதிமூலம் பிரதேச சபை ஆகக்கூடிய தொகையாக விதித்து அறவிடலாம் என்று குறித்துரைக்கப்பட்டதான தொகையை விஞ்சாத ஒரு தொகையினை வரியொன்றாக தீர்மானத்தின்மூலம் அவ்வாறு விதித்து அறவிடலாம்.

(3) ஓராம் அல்லது (2) ஆம் உட்பிரிவுகளின் கீழ் செலுத்தப்படற்பாலதான வரியானது, பிரதேச சபையால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான, அல்லது துணைவிதியால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் அறவிடற்பாலதான வரியைச் செலுத்துவதற்கு ஆளான எவரேனும் ஆள், கோரப்பட்டபின் ஏழுநாட்களுக்குள் அத்தகைய வரியைச் செலுத்தத் தவறினால், பிரதேச சபையின் செயலாளர், எந்த இடப்பரப்பிறகென அத்தகைய பிரதேச சபை அமைக்கப்பட்டுள்ளதோ அந்த இடப்பரப்பின்மீது நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றத்துக்கு அத்தகைய தவறுகைபற்றி அறிக்கையிடுதல் வேண்டும். நீதிமன்றம், அத்தகைய தொகை நீதிவானொருவர் தமது சாதாரணமான நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் விதிக்கக்கூடிய குற்றப்பணத்தொகையை விஞ்சுவதாக விருப்பினும், அது நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட குற்றப்பணம்

என்றுற் போன்று, வருமதியாகவுள்ள தொகையை அறவிடுவதற்கு முற்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு நீதிமன்றத்தால் அற விடப்பட்ட தொகை பிரதேச சபை நிதியத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக—

(அ) "தொழில்" என்பது ஏதேனும் வியாபாரம் அல்லது உற் பத்தியாளர் ஒருவரின் அல்லது ஏதேனும் கொடுக்கல் வாங்கல் அல்லது அளிக்கப்பட்ட சேவைகள் என்பன தொடர் பில் தரகு அல்லது கட்டணங்கள்பெறும் எவரேனும் ஆளின் தொழில் அல்லது தனித்த ஒப்பந்தகாரரொருவரின் தொழில் என்பனவற்றை உள்ளடக்குகின்றது ; ஆனால், தனிப்பட்ட முறைச் சந்தையொன்றில் பொருட்களை, பண்டங் களை அல்லது சரக்குகளை விற்பனை செய்யும் தான்புரி தொழிலை அல்லது அரச நிதிகளிலிருந்து மானியக் கொடைகள் கொடுக்கப்படுகின்றதான அல்லது முன்பு மானி யக்கொடைகள் கொடுக்கப்பட்டு தற்போது கொடுக்கப்படாத தான ஏதேனும் கல்வித் தாபனத்தை அல்லது பாடசாலை யைப் பேணும் தான்புரி தொழிலை உள்ளடக்காது ; அத் துடன்

(ஆ) ஏதேனும் தொழில் தொடர்பாக "எடுப்பனவுகள்" என்பது அந்தத் தொழில் தொடர்பாக செய்து கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களிலிருந்து அல்லது அந்தத் தொழிலைக் கொண்டு நடாத்துகையில் புரியப்பட்ட சேவைக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்படற்பாலதான மொத்தத்தொகை என்று பொருளாகும் ; அத்துடன்

(i) ஒரு நிதியுதவியளிப்பவர், பணக்கடன் கொடுப்போர் அல்லது அடைவு பிடிப்பவர் என்பவர்களின் விடயத் தில் கடன்களாக அவரால் கொடுக்கப்படும் பணங் கள், அத்தகைய கடன்கள்மீது அவரால் பெறப்பட்ட அல்லது பெறப்படற்பாலதான வட்டி, அத்தகைய கடன்கள் தொடர்பில் கட்டணங்களாக அல்லது வேறு விதிப்பனவுகளாக அவரால் பெறப்பட்ட பணத் தொகைகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றது ;

(ii) ஏலவிற்பனையாளரொருவரின் விடயத்திலும், அத் துடன் (iii) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒரு தரகரின் அல்லது தரகு முகவரின் விடயத்திலும்—

(அ) அவரால் விற்பனை செய்யப்பட்ட அல்லது அவற்றின் விற்பனையில் அவர் கையாளாக விருந்து காணிகள் தொடர்பில் அத்தகைய விற்பனை சம்பந்தமாக அவரால் செய்யப்பட்ட எவையேனும் கொடுக்கல் வாங்கல்களுக்காக அல்லது அளிக்கப்பட்ட சேவைகளுக்காக அவரால் பெறப்பட்ட அல்லது பெறப்படற்பாலன வான தரகுகள் அல்லது கட்டணங்கள் என் பனவற்றை உள்ளடக்குகின்றது ;

(ஆ) அவரால் விற்பனை செய்யப்பட்ட அல்லது அவற்றின விற்பனையில் அவர் கையாளாக விருந்து எவையேனும் பண்டங்கள் தொடர்பில் அத்தகைய பண்டங்களின் கொள்வனவுகார ரால் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படற் பாலதான மொத்தத் தொகையை உள்ளடக்கு கின்றது ;

(iii) (அ) இலங்கையில் வதிபவரல்லாத எவரேனும் ஆளின் சார்பில் அந்த வதிவற்ற ஆளின் எவையேனும் பண்டங்களை விற்பனை செய்கின்றவரான அல்லது பண்டங்களின் விற்பனை யில் கையாளாகவிருக்கின்றவரான ; அல்லது

(ஆ) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட எவையேனும் பண்ட களின் ஏற்றுமதியாளர் ஒருவர் சார்பில் செயலாற்றுகின்ற வரான ; அல்லது

(இ) இலங்கையில் தொழிலொன்றைக் கொண்டு நடாத்தும் வேறு எவரேனும் ஆளின் சார்பில், அந்த வேறு ஆளின் தொழில் ஏடுப்பனவுகளில் அவற்றின் விற்பனையிலுலான மொத்த விற்றுவரவு உள்ளடக்கப்படுவதான பண்டங் களாகிய எவையேனும் பண்டங்களை இலங்கையில் விற்பனை செய்வதில் கையாளாகவிருக்கின்றவரான,

(பங்குத் தரகர் ஒருவர் அல்லது உற்பத்தித் தரகர் ஒருவர் தவிர் ந்த) எவரேனும் தரகரின் அல்லது தரகு முகவரின் விடயத் தில், அவ்வாறான விற்பனையில், செயலாற்றுகையில் அல்லது அவ்வாறான விற்பனையில் கையாளாக இருப்பது தொடர்பில் அவரால் செய்யப்பட்ட எவையேனும் கொடுக்கல் வாங்கல் கள் தொடர்பில் அல்லது அவரால் புரியப்பட்ட சேவைகள் தொடர்பில் அத்தகைய தரகருக்கு அல்லது தரகு முகவருக் குக் கிடைக்கப்பெறும் அல்லது கிடைக்கப்பெறற்பாலன வான தரகுகளை அல்லது கட்டணங்களை உள்ளடக்குகின்றது; அத்துடன் பங்குத் தரகர் ஒருவரின் அல்லது உற்பத்தித் தரகர் ஒருவரின் விடயத்தில், அவரால் செய்யப்பட்ட எவை யேனும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் அல்லது அளிக்கப்பட்ட சேவைகள் தொடர்பில் அத்தகைய தரகருக்கு அல்லது தரகு முகவருக்குக் கிடைக்கப்பெறும் அல்லது கிடைக்கப்பெறற்பாலனவான தரகுகளை அல்லது கட்டணங் களை உள்ளடக்குகின்றது ; அத்துடன்

(iv) ஏதேனும் கல்வித் தாபனத்தை அல்லது பாடசாலையைக் கொண்டு நடாத்தும் ஓர் ஆளின் விடயத்தில், அத்தகைய கல்வித் தாபனத்தை அல்லது பாடசாலையைக் கொண்டு நடாத்துவதில் அவருக்குக் கிடைக்கப்பெறறதும் அல்லது

கிடைக்கப்பெறற்பாலதானதும், கல்வித் தாபனத்தின் அல்லது பாடசாலையின் பண முதலீட்டிலிருந்து பெறப்பட்ட இலாபங்கள் தவிர்ந்ததுமான மொத்தத் தொகையை உள்ளடக்குகின்றது ; ஆனால் மூலதனச் சொத்துக்களின் விற்பனைமூலம் கிடைக்கப்பெற்ற அல்லது கிடைக்கப்பெறற்பாலதான ஏதேனும் தொகையை உள்ளடக்காது.

**அபிவிருத்தி செய்யப்படாத காணியின் மீதான வரி.**

153. (1) பிரதேச சபையொன்றின் இடப்பரப்பின் எல்லைகளினுள் அமைந்துள்ள ஏதேனும் காணி, கட்டட நோக்கங்களுக்கு அல்லது நிரந்தரமான அல்லது கிரமமான பயிர்ச்செய்கை நோக்கங்களுக்குப் பொருத்தமானதாகவிருக்கின்றவிடத்து, அல்லது அத்தகைய காணியானது அத்தகைய ஏதேனும் நோக்கத்துக்கெனப் பிரதேச சபையின் அபிப்பிராயப்படி நியாயமானதாகவுள்ள செலவில் அபிவிருத்தி செய்யப்படக்கூடியதாகவிருந்து—

(அ) அத்தகைய காணியின்மீது கட்டடம் எதுவும் கட்டியெழுப்பப்படாதிருக்கின்றவிடத்து ; அல்லது

(ஆ) உள்ளபடியாக கட்டடங்களை அடக்கியுள்ள அத்தகைய காணியின் பரப்பளவானது அத்தகைய காணியின் முழுப் பரப்பளவிற்கும் பிரதேச சபையினால் தீர்மானத்தின் மூலம் விதித்துரைக்கப்பட்ட விகிதாசாரத்தைவிடக் குறைந்தவொரு விகிதாசாரத்தைக் கொண்டிருக்குமிடத்து ; அல்லது

(இ) அத்தகைய காணி கிரமமான அல்லது நிரந்தரமான பயிர்ச்செய்கைக்கு உள்ளாக்கப்படாதிருக்கின்றவிடத்து,

பிரதேச சபையானது, அத்தகைய காணியின் மூலதன இடவமைவுப் பெறுமதியின் இரண்டு சதவீதத்தை விஞ்சாதவொரு வரியை அத்தகைய காணியின் சொந்தக்காரரிடமிருந்து ஆண்டுதோறும் அறவிடுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் 135 ஆம், 136 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள், (1) ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்படும் காணியின் மூலதன இடவமைவுப் பெறுமதி பற்றிய மதிப்பீடு ஒவ்வொன்றும் தொடர்பில், அவசியமான திரிபுகளுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக, “மூலதன இடவமைவுப் பெறுமதி” என்பது, ஏதேனும் காணியைத் தொடர்புறுத்திப் பயன்படுத்தப்படும்போது, அக்காணியானது, ஈடுகள், குத்தகைகள், வில்லங்கங்கள் அல்லது வேறு பொறுப்புக்கள் யாவுமின்றி திறந்த சந்தையில் விற்கப்படுமாயின், அக்காணிக்கு, அதன்மீதுள்ள எல்லாக் கட்டடங்களும் நீங்கலாக, என்ன சாத்தியமான விலை செலுத்தப்படக்கூடுமோ அந்தச் சாத்தியமான விலை என்று பொருளாகும்.

**154.** (1) பிரதேச சபையொன்றின் எல்லைகளுக்குள் அமைந்துள்ள ஏதேனும் காணி பகிரங்க ஏலவிற்பனை மூலமாகவோ, வேறுவகையிலோ ஏல விற்பனையாளர் அல்லது தரகர் அல்லது அவரது சேவையாளர் அல்லது முகவர் மூலமாக விற்கப்படுகின்றவிடத்து, விற்பனையாளர் அல்லது அத்தகைய ஏலவிற்பனையாளர் அல்லது தரகர் அல்லது அவரது சேவையாளர் அல்லது முகவர், அத்தகைய காணி விற்பனையின் விற்றுவரவுகளிலிருந்து அத்தகைய விற்றுவரவுத் தொகையின் ஒரு சதவீதத்திற்குச் சமமானவொரு வரியைப் பிரதேச சபைக்குச் செலுத்துதல் வேண்டும்.

குறித்த சில காணி விற்பனைகள் மீதான வரி.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் செலுத்தப்படற்பாலதான வரியானது, கோரப்பட்டதிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் செலுத்தப்படாவிடின் பிரதேச சபையின் செயலாளர், அத்தகைய தவறுகைபற்றி அத்தகைய பிரதேச சபை எந்த இடப்பரப்பிற்கென அமைக்கப்பட்டுள்ளதோ அந்த இடப்பரப்பின்மீது நியாயாதிக்கமுள்ள நீதிவான் நீதிமன்றத்துக்கு அறிக்கை செய்தல் வேண்டும் என்பதுடன், நீதிமன்றமானது வருமதியாகவுள்ள தொகையை அது நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்று என்றுற்போன்று, அத்தகைய தொகை நீதிவானொருவர் தமது சாதாரண நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் விதிக்கக்கூடிய குற்றப்பணத்தொகையை விஞ்சுவதாகவிருப்பினும் கூட அறவிட முற்படுதலும் வேண்டும். நீதிமன்றத்தினால் அவ்வாறு அறவிடப்பட்ட தொகை பிரதேச சபை நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

**155.** இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் வீதவரி அல்லது எவையேனும் வீதவரிகள் எந்த வீடு, கட்டடம், காணி அல்லது குடிமனை தொடர்பில் விதிக்கப்படலாமோ, அந்த வீட்டில், கட்டடத்தில், காணியில் அல்லது குடிமனையில் அல்லது வீட்டின்மீது, கட்டடத்தின்மீது, காணியின்மீது அல்லது குடிமனையின்மீது காணப்படும் அசைவுள்ள ஆதனம் எதுவும், கைப்பற்றுகைக்கு நேர்முந்திய இரு காலாண்டுகளுக்கும் அப்பாற்பட்ட அத்தகைய வீதவரியின் அல்லது வீதவரிகளின் நிலுவைகளுக்காக, அத்தகைய இரு காலாண்டுகளுக்கும் அப்பாற்பட்ட நிலுவைகள் திரண்டு வருமதியாக வரும் நேரத்தில், சொல்லப்பட்ட வீட்டின், கட்டடத்தின், காணியின் அல்லது குடிமனையின் சொந்தக்காரராக அல்லது கூட்டுச் சொந்தக்காரராகவிருந்த எவரேனும் ஆளுக்கு அத்தகைய அசைவுள்ள ஆதனம் சொந்தமாகவிருந்தாலொழிய, அல்லது சொல்லப்பட்ட கடைசியாகக் கூறப்பட்ட நிலுவைகள் திரண்டு வருமதியாக வந்த நேரத்தில் அத்தகைய வீட்டில், கட்டடத்தில், காணியில் அல்லது குடிமனையில் இருப்பாட்சி செய்த எவரேனும், ஆளுக்கு, அத்தகைய அசைவுள்ள ஆதனம் சொந்தமானதாகவிருந்தாலொழிய பிரதேச சபையினால் கைப்பற்றப்படுதல் ஆகாது.

வீதவரிகள் முதலியன தொடர்பில் அசைவுள்ள ஆதனம், கைப்பற்றுதலிலிருந்து விலக்களிக்கப்பட்டிருத்தல்.

போமதியான வாடகையிலிருந்து செலுத்தப்படும் தொகைகளைக் கழித்தல்.

156. ஏதேனும் வீட்டின், கட்டடத்தின், காணியின் அல்லது குடிமனையின் சொந்தக்காரராக, அல்லது கூட்டுச் சொந்தக்காரராக இல்லாதிருந்து மேற்சொல்லப்பட்டவாறு அவரது ஆதனம் கைப்பற்றப்பட்டிருக்கின்றவரான அல்லது அத்தகைய கைப்பற்றுகையைத் தவிர்ப்பதற்காக அல்லது கைப்பற்றுகையின் பின்னர், அத்தகைய ஆதனத்தின் விற்பனையைத் தவிர்ப்பதற்காக, அத்தகைய வீடு, கட்டடம், காணி, அல்லது குடிமனை தொடர்பில் வருமதியான வீதவரி அல்லது வீதவரிகள் தொகையையும் செலவுத்தொகையையும் செலுத்தியிருக்கின்றவரான அவ்வீட்டின், கட்டடத்தின், காணியின் அல்லது குடிமனையின் இருப்பாட்சியாளர், தம்மால் அவ்வாறு செலுத்தப்பட்ட தொகையை, சொல்லப்பட்ட வீட்டின், கட்டடத்தின், காணியின் அல்லது குடிமனையின் பேரில் தம்மிடமிருந்து அதன் சொந்தக்காரருக்கு அல்லது சொந்தக்காரர்களுக்குச் செல்மதியான வாடகையிலிருந்து கழித்துக் கொள்ளலாம்; அவ்வாறு செலுத்தப்பட்ட தொகைக்கான பிரதேச சபையின் பற்றுச்சீட்டானது, அதேபோன்ற வாடகைத் தொகைக்கான முழுமையான கடன்விடுவிப்பு ஒன்றெனக் கருதப்படுதல் வேண்டும் :

ஆயின், இதனகத்து அடங்கியுள்ள எதுவும், குத்தகை அல்லது வேறு உடன்படிக்கை நியதிகளின்படி, அத்தகைய வீதவரியை அல்லது வீதவரிகளைச் செலுத்தற்குப் பிணிக்கப்பட்டு ஆளாகியுள்ளவரான எவரேனும் இருப்பாட்சியாளரினால் வாடகையிலிருந்து அத்தகைய கழிவு எதுவும் செய்யப்படுவதனைப் பாதித்தல் ஆகாது.

பெயர் முதலியவற்றில் உள்ள பிழை காரணமாக மதிப்பீடு முதலியன குறை காணப்படவோ பாதிக்கப்படவோ ஆகாது.

157. இச்சட்டத்தின் அதிகாரத்தின் கீழான ஏதேனும் வீதவரி அல்லது வரி பற்றிய மதிப்பீடு, மதிப்பு, அல்லது சரிபார்த்தல் எதுவும் அதற்கான விற்பனவு அல்லது கொடுப்பனவு எதுவும், அத்துடன் கைப்பற்றுகை அல்லது விற்பனை எதுவும், அவ்வீதவரியை அல்லது வரியைச் செலுத்தற்காளாகியுள்ள எவரேனும் ஆளின் பெயரில் உள்ள ஏதேனும் பிழை காரணமாக, அல்லது அவ் வீதவரிக்கு அல்லது வரிக்கு உட்பட்ட ஏதேனும் ஆதனத்தின் அல்லது பொருளின் விவரணத்தில் உள்ள ஏதேனும் பிழை காரணமாக, அல்லது மதிப்பீட்டுத் தொகையில் அல்லது சரிபார்த்தற் தொகையில் அல்லது கைப்பற்றுகை, விற்பனை மாதிரியில் உள்ள ஏதேனும் பிழை காரணமாகக் குறை காணப்படுதலோ பாதிக்கப்படுதலோ ஆகாது ; அத்துடன் இச்சட்டத்தின் கீழான அல்லது அதன் கீழாக்கப்பட்ட ஏதேனும் துணைவிதியின் கீழான வழக்கு நடவடிக்கைகள் எவையும் இச்சட்டத்தின் அல்லது அத்தகைய துணைவிதியின் ஏற்பாடுகள் தேவைப்படுத்திய படிவத்தில் இல்லை என்பதற்காக நீதிமன்றத்தினால் தள்ளிவைக்கப்படுதல் ஆகாது.

வீதவரியையும் வரியையும் அறவிடுவதற்கான எழுத்தாணை.

158. (1) இச்சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வீதவரித் தொகை அல்லது அதன் கீழ் விதிக்கப்பட்ட ஏதேனும் வரித்தொகை பிரதேச சபை பணிக்கக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள் பிரதேச சபை அலுவலகத்திற்குச் செலுத்தப்படாவிடின், செயலாளரினால் ஒப்பமிடப்பட்ட எழுத்தாணையொன்று, அதனகத்து பெயர் குறிப்பிடப்பட்ட பிரதேச சபையின் எவரேனும் சேகரிப்பாளருக்கு அல்லது வேறு அலுவலருக்கு—

(அ) ஏதேனும் வீதவரி அல்லது ஏக்கர் வரி செலுத்தப்படாத விடயத்தில், அத்தகைய வீதவரியையும் அல்லது ஏக்கர் வரியையும் அதனை அறவிடுவதற்கான செலவுத் தொகை

யையும், எந்த வளவுகளின் பேரில் அத்தகைய வீதவரி அல்லது ஏக்கர் வரி வருமதியாகவுள்ளதோ அந்த வளவுகளின் சொந்தக்காரரது எல்லாமும் தனித்தனியானதுமான அசைவுள்ள ஆதனத்தையும், அத்தகைய வளவுகளில் அல்லது வளவுகளின் மீது காணப்படுகின்ற அசைவுள்ள ஆதனம் எத்தன்மைத்தானவருக்குச் சொந்தமானதாயினுஞ்சரி அந்த எல்லா அசைவுள்ள ஆதனத்தையும், அத்துடன் எந்த அசைவற்ற ஆதனத்தின் பேரில் அத்தகைய வீதவரி அல்லது ஏக்கர் வரி வருமதியாகவுள்ளதோ அந்த அசைவற்ற ஆதனத்தையும் கைப்பற்றி விற்பனை செய்வதன் மூலம் அறவிடும்படி அவரைப் பணித்து ; அத்துடன்

(ஆ) வேறேதேனும் வரி செலுத்தப்படாத விடயத்தில், அத்தகைய வரியையும் அதை அறவிடுவதற்கான செலவுத் தொகையையும், அத்தகைய வரிகள் எந்த ஆதனத்தின் பேரில் வருமதியாகவுள்ளதோ அந்த ஆதனத்தையும் தவறுகையாளரின் எல்லாமும் தனித்தனியுமான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தையும் கைப்பற்றி விற்பனை செய்வதன்மூலம் அறவிடும்படி அவரைப் பணித்து

வழங்கப்படுதல் வேண்டும்.

(2) வரிவிலக்கு அளிக்கப்பட வேண்டியதான தொகை கணிசமானதாக இல்லையென அல்லது அறவிடப்படற்பாலதானதன்றென அல்லது அதற்கு ஆளானவரான ஆளின் ஏழ்மை காரணமாக அது பதிவழிக்கப்பட வேண்டியதென பிரதேச சபையொன்றுக்குத் தோன்றினால், அப்பிரதேச சபை, தீர்மானம் மூலம், ஏதேனும் வீதவரியின் அல்லது வரியின் முழுமைக்கெனவும் அல்லது ஏதேனும் பாகத்துக்கெனவும் அத்துடன் அவ்வீதவரியை அல்லது வரியை அறவிடும் நோக்கத்துக்காக உறப்பட்ட எவையேனும் செலவுத் தொகைகளுக்கெனவும் வரிவிலக்கு அளிக்கலாம் ; அத்துடன் அத்தகைய ஏதேனும் தீர்மானம் நிறைவேற்றப்படுகின்ற எவ்விடயத்திலும் (1) ஆம் உட்பிரிவின் கீழான எழுத்தாணை எதுவும் வழங்கப்படுதலாகாது என்பதுடன், வழங்கப்பட்டிருக்கக் கூடியதான அத்தகைய எழுத்தாணை எதுவும் மீள அழைக்கப்படுதலும் வேண்டும்.

159. (1) சபையினால் வாடகைக்கு விடப்படும் ஏதேனும் வளவுக்கு வாடகையாக வருமதியான தொகை, அது வருமதியாக வந்த பின்னர் பதினான்கு நாட்களுக்குள் சபை அலுவலகத்துக்குச் செலுத்தப்படாதுவிடின், அத்தகைய தொகையையும் அறவீட்டுக்கான செலவுத் தொகையையும் அதன் எல்லையினுள் அமைந்துள்ளதும் வாடகைக் குடியிருப்பாளருக்குச் சொந்தமானதுமான அசைவுள்ள, பிரதேச சபைக்கு வருமதியான வாடகையையும், கட்டணங்களையும் அறவிடுவதற்கான எழுத்தாணை.

அசைவற்ற எல்லா ஆதனத்தையும் கைப்பற்றி விற்பனை செய்வதன் மூலமும் அத்துடன் வாடகை எந்த வளவுக்கு வருமதியாகவுள்ளதோ அந்த வளவுகளில் அல்லது வளவுகளின் மீது காணப்படுவதும் எத்தகையவருக்கும் சொந்தமானதுமான எல்லா அசைவுள்ள ஆதனத்தையும் கைப்பற்றி விற்பனை செய்வதன் மூலமும் அறவிடும்படி செயலாளர் அவரால் ஒப்பமிடப்பட்ட எழுத்தாணை மூலம் அதனகத்துப் பெயர் குறிப்பிடப்பட்ட பிரதேச சபையின் அலுவலருக்கும் அவரது உதவியாளர்களுக்கும் அதிகாரமளித்தல் அவரது கடமையாதல் வேண்டும்.

(2) வியாபாரம் ஒன்று கொண்டுநடாத்தப்படுகின்ற வளவுகளிலிருந்து கழிவுபொருள் எதனையும் அகற்றுவதற்கான கட்டணங்களாக வருமதியான தொகை, கோரப்பட்ட பின்னர் பதினைந்து நாட்களுக்குள் பிரதேச சபை அலுவலகத்துக்குச் செலுத்தப்படாதுவிடின், அத்தகைய தொகையையும் அறவீட்டுக்கான செலவுத் தொகையையும், அதன் எல்லைகளினுள் அமைந்துள்ளதும் தவறுகையாளருக்குச் சொந்தமானதுமான அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தைக் கைப்பற்றி விற்பனை செய்வதன் மூலம் அறவிடும்படி, செயலாளர் எழுத்தாணை மூலம் அதனகத்துப் பெயர் குறிப்பிடப்பட்ட சபையின் அலுவலரொருவருக்கும் அவரது உதவியாளர்களுக்கும் அதிகாரமளிக்கலாம்.

**ஆதனத்தைக் கைப்பற்றுவதற்கான மட்டுப்பாடுகள்.**

**160.** இதன்கீழ் தரப்பட்ட ஏதேனும் வகுப்பினதான அல்லது விவரணத்தினதான ஆதனம் எதுவும், இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் எழுத்தாணையை நிறைவேற்றுகையில் கைப்பற்றப்படுதலோ அல்லது விற்பனை செய்யப்படுதலோ ஆகாது—

(அ) எந்த ஆளின் ஆதனம் கைப்பற்றப்படவேண்டுமோ அந்த ஆளின் அல்லது அவரின் மனைவியினதும் பிள்ளைகளினதும் தேவையான ஆடையணிகளும் படுக்கைகளும் படுக்கைக் கட்டுகளும் சமையல் பாத்திரங்களும் ;

(ஆ) அத்தகைய ஆளின் வியாபாரத்தின் அல்லது தொழிலின் கைக்கருவிகள், கலங்கள், அத்துடன் அத்தகைய ஆள் கமக்காரரொருவராக இருக்குமிடத்து அத்தகையவராக வாழ்க்கைத் தொழிலைச் செய்ய அவரை இயலச்செய்வதற்கு நியாயமாக அவசியமானவாறான உழவுத்தொழில் கருவிகளும் அத்தகைய கால்நடைகளும், விதைத்தானியமும் ; அத்துடன்

(இ) ஐந்நூறு ரூபாப் பெறுமதிவரை அத்தகைய ஆளின் உயர் தொழிலை அல்லது தொழிலைக் கொண்டுநடாத்துவதற்குத் தேவையான உயர்தொழில் சாதனங்களும் நூலகப் புத்தகங்களும்.

161. இப்பாகத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் எழுத்தாணையின் கீழ் அறவிடப்படவேண்டியதென அதிகாரமளிக்கப்பட்ட அறவீட்டுச் செலவுத்தொகை, பின்வரும் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் :— செலவுத் தொகைகளின் அளவுத் திட்டம்.

(அ) (i) போமதியான வரியின் அல்லது வாடகைத் தொகையின்மீது பத்து சதவீத ;

(ii) வெற்று நிலங்கள் மீதும் வதிவிடவளவுகள் மீதும் போமதியான வீதவரித் தொகைமீது பதினைந்து சதவீத; அத்துடன்

(iii) வெற்றுநிலங்களும் வதிவிட வளவுகளும் தவிர்ந்த ஏனைய ஆதனங்களின்மீது போமதியான வீதவரித் தொகைமீது இருபது சதவீத,

விதிப்பனவொன்று எழுத்தாணை வழங்கலுக்கான செலவுத் தொகை தொடர்பில் விதிக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) எழுத்தாணையின்கீழான கைப்பற்றுகையின் பின்னர் பண்டங்கள் அகற்றப்படும் ஏதேனும் விடயத்தில் எழுத்தாணையின் கீழ் அறவிடப்படவேண்டிய வீதவரித்தொகையின் வரித் தொகையின், வாடகைத்தொகையின் அல்லது கட்டணத் தொகையின் பத்து சதவீத விதிப்பனவொன்று விதிக்கப்படலாம் என்பதுடன தடுத்து வைக்கும் காலத்தில் பாதுகாப்பான கட்டுக்காப்பில் அத்தகைய பண்டங்களை வைத்திருப்பதற்கு நாளொன்றுக்கு இருபத்தைந்து சதத்தை விஞ்சாத மேலுமொரு விதிப்பனவை விதித்தலும் வேண்டும்; எவ்வாறாயினும் ஒருமாத காலத்திற்கு மேலாக தடுத்துவைத்தல் தொடர்பில் அத்தகைய விதிப்பனவு எதுவும் விதிக்கப்படுதலாகாது ;

(இ) அசைவற்ற ஆதனத்தின் கைப்பற்றுகை விடயத்தில் அல்லது கைப்பற்றுகையின் பின்னர் கைப்பற்றிய பண்டங்கள் அகற்றப்படாதவிடத்து, நாளொன்றுக்கு மூன்று ரூபாவை விஞ்சாத விதிப்பனவொன்று ஆதனத்தை அல்லது பண்டத்தை உடைமையில் கொண்டுள்ள ஆளொருவரை வைத்திருப்பதற்றென விதிக்கப்படுதல் வேண்டும் ;

(ஈ) கைப்பற்றப்பட்ட ஆதனம் விற்பனைக்கென விளம்பரப்படுத்தப்பட்டு ஆனல் வருமதியாகவுள்ள வீதவரிகள், வரிகள், வாடகைகள் அல்லது கட்டணங்கள், அத்துடன் செலவுத் தொகைகள் விற்பனைக்கு முன்னர் செலுத்தப்பட்டதன் காரணமாக விற்பனை எதுவும் இடம்பெறாதுள்ள ஏதேனும் விடயத்தில், எழுத்தாணையின்கீழ் அறவிடப்படவுள்ள வீதவரித் தொகையின், வரித்தொகையின், வாடகைத்தொகையின் அல்லது கட்டணத்தொகையின் பத்துசதவீதத்திலான விதிப்பனவு ஒன்று விதிக்கப்படலாம் ;

(உ) அசைவற்ற ஆதனத்தின் கைப்பற்றுகை விடயத்தில் எழுத்தாணையின்கீழ் அறவிடப்படவுள்ள ஏதவரித் தொகையின், வரித்தொகையின், வாடகைத்தொகையின் அல்லது கட்டணத் தொகையின் பத்து சதவீதத்திலான விதிப்பனவு ஒன்று கைப்பற்றுகை அறிவித்தல் வழங்கப்படுவதற்கான செலவுத் தொகை தொடர்பில் விதிக்கப்படலாம் ; அத்துடன்

(ஊ) விற்பனையொன்று இடம்பெறுமிடத்து, விற்பனையிலான விற்றுவரவுகளின் இரண்டரை சதவீதத்தை விஞ்சாத விதிப்பனவு ஒன்று, விற்பனைக்கான செலவுத்தொகை தொடர்பில் விதிக்கப்படுதல் வேண்டும்.

**ஆதனத்தின் கைப்பற்றுகை.**

**162.** (1) பிரிவுகள் 160, 161 ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இப்பாகத்தின் கீழ், ஏதேனும் ஆதனத்தைக் கைப்பற்றி விற்பனை செய்வதற்கான எழுத்தாணை வழங்கப்பட்டிருக்கின்றவரான சேகரிப்பாளர் அல்லது வேறு அலுவலர் இயலுமானவரையில் இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க அத்தகைய ஏதேனும் கைப்பற்றுகையைப் பயனுறுத்துதல் அவரது கடமையாதல் வேண்டும்.

(2) காணப்படக்கூடியதும் சேகரிப்பாளரின் அல்லது வேறு அலுவலரின் அபிப்பிராயப்படி அறவிடப்படற்பாலதான தொகையைக் கொடுத்துத் தீர்ப்பதற்குப் போதுமானதுமான சொந்தக்காரரின் அத்தகைய அசைவுள்ள ஆதனம் எங்கிருப்பினும், எழுத்தாணையை நிறைவேற்றுகையில் ஆதனம் எதுவும் கைப்பற்றப்படுமுன்னர் கைப்பற்றப்பட்டு விற்பனை செய்யப்படுதல் வேண்டும்.

(3) சொந்தக்காரரின் அசைவுள்ள ஆதனம் எதுவும் காணப்படாதவிடத்து, அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழ் கைப்பற்றப்பட்ட அசைவுள்ள ஆதனத்தின் விற்பனை மூலம் தேறிப் பெறப்பட்ட தொகை அறவிடப்படற்பாலதான தொகையைக் கொடுத்துத் தீர்ப்பதற்குப் போதுமானதாகவில்லாதவிடத்து, எழுத்தாணை தொடர்புபடுத்தும் ஆதனத்தில் அல்லது ஆதனத்தின் மீது காணப்படக்கூடிய அத்தகைய அசைவுள்ள ஆதனம் கைப்பற்றப்பட்டு விற்பனை செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் அசைவுள்ள ஆதனம் எதுவும் கைப்பற்றப்பட்டு விற்பனை செய்யப்பட்டில்லாதிருக்கின்றவிடத்து அல்லது அவ்வாறு கைப்பற்றப்பட்ட அசைவுள்ள ஆதனம் எதனதும் விற்பனையிலான விற்றுவரவுகள் அறவிடப்படற்பாலதான தொகையைக் கொடுத்துத் தீர்ப்பதற்குப் போதுமானதாக இல்லாதிருக்குமிடத்து, சேகரிப்பாளர் அல்லது வேறு அலுவலர் அவரது அபிப்பிராயப்படி அறவிடற்பாலதான தொகையைக் கொடுத்துத் தீர்ப்பதற்குப் போதுமான காலப்பகுதிக்கு எழுத்தாணை தொடர்புபடுத்துகின்ற ஆதனத்திலிருந்து கிடைக்கப்பெறும் வாடகைகளையும், இலாபங்களையும் கைப்பற்றுதலும் விற்பனை செய்தலும் வேண்டும்.

(5) அத்தகைய வாடகைகள், இலாபங்கள் எவையும் காணப்படாத விடத்து அல்லது (2) ஆம் அல்லது (3) ஆம் உட்பிரிவுகளின் கீழ் அசைவுள்ள ஆதனத்தின் விற்பனை மூலம் அல்லது (4) ஆம் உட்பிரிவின் கீழ் வாடகைகளினதும் இலாபங்களினதும் மூலம் தேறிப் பெறப்பட்ட தொகை அறவிடப்படற்பாலதான தொகையைக் கொடுத்துத் தீர்ப்பதற்குப் போதுமானதாகவில்லாத விடத்து, சேகரிப்பாளர் அல்லது வேறு அலுவலர், அதற்கெனச் செயலாளர் வழங்கும் அத்தகைய பணிப்புக்கிணங்க, எழுத்தாணை தொடர்பு படுத்துகின்ற அசைவுள்ள ஆதனத்தைக் கைப்பற்றுதல் வேண்டும்.

(6) அத்தகைய அசைவற்ற ஆதனம் கைப்பற்றப்பட்டதன்மேல் அத்தகைய செயலாளர், கைப்பற்றுகை பற்றிய அறிவித்தலை ஆதனத்தின் இருப்பாட்சியாளரிடம், அவர் கைப்பற்றப்பட்ட ஆதனத்தின் சொந்தக்காரராகவிருப்பினுஞ்சரி வாடகைக் குடியிருப்பாளராக இருப்பினுஞ்சரி, சேர்ப்பிக்கச் செய்தல் அல்லது இருப்பாட்சியாளரின் வளவுகளில் விடச்செய்தல் வேண்டும். சொல்லப்பட்ட அறிவித்தலானது, வருமதியாகவுள்ள வீதவரிகளும் செலவுத் தொகைகளும் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட வேண்டிய தேதிக்கு முன்னர் செலுத்தப்படாவிடின், கைப்பற்றப்பட்ட ஆதனம் அத்தகைய தேதியன்று பிரதேச சபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும் எனத் தெரிவித்தல் வேண்டும். குறித்துரைக்கப்பட வேண்டிய தேதியானது, கைப்பற்றுகைத் தேதியிலிருந்து இருபத்தெட்டு நாட் காலப்பகுதியொன்று முடிவடைந்தன் பின்னரானதும், ஆனால் அத்தகைய கைப்பற்றுகைத் தேதியிலிருந்து நாற்பத்திரண்டு நாட்களுக்குப் பிந்தாததுமான ஒரு தேதியாகவிருத்தல் வேண்டும்.

(7) செயலாளர், (5) ஆம் உட்பிரிவின் கீழ் கைப்பற்றப்பட்ட அசைவற்ற ஆதனங்களையும், (6) ஆம் உட்பிரிவின் கீழான அறிவித்தலில் எத்தேதிக்கு முன்னராக விடயத்திற்கேற்ப, வருமதியாகவுள்ள எல்லா வீதவரிகளும், வரிகளும், வாடகைகளும் அல்லது கட்டணங்களும் அத்துடன் அவற்றிற்கான செலவுத் தொகைகளும் செலுத்தப்படாவிடின் அத்தகைய ஆதனம் அத்தேதியிலிருந்து சபைக்குரித்தாக்கப்படுதல் வேண்டும் எனக் குறித்துரைக்கப்பட்டுள்ளதோ அத்தேதியையும் தருவதான அத்தகைய அறிவித்தலொன்றை சுதேசமொழியொன்றிலும், அவ்விடப்பரப்பில் புழக்கத்திலிருக்கும் பதினைப் பத்திரிகையொன்றிலும் வெளியிடச் செய்தல் வேண்டும். இந்த அறிவித்தலானது (6) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட தேதிக்கு ஆகக்குறைந்தது இருபத்து நான்கு நாட்களுக்கு முன்னராகவேனும் வெளியிடப்படுதல் வேண்டும்.

(8) எவையேனும் சேத ஈடுகளைக் கோரும் ஆள், தமது அசைவற்ற ஆதனம் கைப்பற்றப்படும் நேரத்தில் தாம் அல்லது தமது சார்பில் வேறெவரேனும் ஆள், அறவிடற்பாலதான தொகையைக் கொடுத்துத் தீர்ப்பதற்குப் போதுமானதாக இருந்திருக்கக்கூடியதும் இனைத்து முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக முதற்றடவையிலேயே சட்டமுறையாகக் கைப்பற்றப்பட்டிருக்கக்கூடியதுமான கட்டற்ற, உரிமை கோரப்படாத ஆதனத்தைச் சேகரிப்பாளருக்கு அல்லது அலுவலருக்குச் சுட்டிக்காட்டினர் என்றும், சேகரிப்பாளர் அல்லது

அலுவலர் அவ்வாறு சுட்டிக்காட்டப்பட்ட ஆதனத்தைக் கைப்பற்றத் தவறியுள்ளார் என்றும் நீதிமன்றம் திருப்திப்படும் வண்ணம் எண்பித்தாலேயொழிய, சேகரிப்பாளர் அல்லது வேறு அலுவலர் எவரும், இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க ஏதேனும் கைப்பற்றுகையையும் விற்பனையையும் நிறைவேற்றத் தவறியமை காரணமாக அத்தகைய சேத ஈடுகளுக்கு ஆளாதல் ஆகாது.

(9) விண்ணப்பத்தைச் செய்யும் ஆள், அறவிடற்பட்டற்பாலதான தொகையைக் கொடுத்துத் தீர்ப்பதற்குப் போதுமானதாகவிருந்திருக்கக்கூடியதும், இதனகத்து முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு முதற்றடவையிலேயே சட்டமுறையாகக் கைப்பற்றப்பட்டிருக்கக் கூடியதுமான கட்டற்ற, உரிமை கோரப்படாத அசைவுள்ள ஆதனத்தைத் தருவதான எழுத்திலான வெளிப்படுத்துகையைச் சேகரிப்பாளருக்கு அல்லது அலுவலருக்கு, அத்துடன் பிரதேச சபையின் செயலாளருக்குச் செய்திருந்து, சேகரிப்பாளர் அல்லது அலுவலர் அல்லது அத்தகைய செயலாளர் வெளிப்படுத்தப்பட்டவாறான ஆதனத்தைக் கைப்பற்றத் தவறியிருந்தாலேயொழிய, (5) ஆம் உட்பிரிவின் கீழான ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் கைப்பற்றுகை எதுவும் அவ் ஆதனம் எவ்வொழுங்கு முறையில் கைப்பற்றப்பட வேண்டுமோ அவ்வொழுங்குமுறை பின்பற்றப்படவில்லை என்ற காரணத்தினாலோ அல்லது கைப்பற்றப்பட்டு விற்பனை செய்திருக்கப்படக்கூடிய அசைவுள்ள ஆதனம் கைப்பற்றப்பட்டு விற்பனை செய்யப்படவில்லை என்ற காரணத்தினாலோ செல்லுபடியற்றதென, குறைகாணப்பட்டுள்ளதென அல்லது பாதிக்கப்பட்டுள்ளதெனக் கருதப்படுதல் ஆகாது.

அசைவுள்ள ஆதனத்தின் விற்பனை.

163. (1) இப்பாகத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் எழுத்தாணையை நிறைவேற்றுகையில் கைப்பற்றப்பட்ட அசைவுள்ள ஆதனம், எழுத்தாணை வழங்கப்பெற்றிருக்கின்றவரான சேகரிப்பாளரினால் அல்லது அலுவலரினால் அல்லது செயலாளரினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆளினால் இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்கப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய ஆதனத்தைக் கைப்பற்றும் சேகரிப்பாளரின் அல்லது அலுவலரின் அபிப்பிராயப்படி அதன் பெறுமதி ஆயிரம் ரூபாவுக்கு மேற்படவுள்ளதான ஆதனம் எதுவும்—

(அ) அத்தகைய கைப்பற்றுகைத் தேதியிலிருந்து இருபத்து நான்கு நாட் காலப்பகுதியொன்று முடிவடைந்த பின்னையாகவன்றியும் ; அத்துடன்

(ஆ) விற்பனைக்கு நிர்ணயிக்கப்பட்ட தேதி, நேரம், இடம் ஆகியன பற்றிய அறிவித்தல், அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் பதினொரு நாட்களுக்குக் குறையாது கசெற்றிலும் இலங்கையில் புழக்கத்திலிருக்கும் புதினப்பத்திரிகையொன்றிலும் வெளியிடப்பட்டிருந்தாலேயொழியவும்,

இப்பிரிவின் கீழ் விற்பனை செய்யப்படுதல் ஆகாது.

(3) பிரதேச சபையின் செயலாளர், ஏதேனும் எழுத்தாணையை நிறைவேற்றுகையில் கைப்பற்றப்பட்ட அசைவுள்ள ஆதனம் எதனையும், அத்தகைய கைப்பற்றுகைத் தேதியிலிருந்து அறுபது நாட் காலப்பகுதியினுள் விற்பனை செய்வித்தல் வேண்டும்.

(4) ஏதேனும் எழுத்தாணையை நிறைவேற்றுகையில் கைப்பற்றப் பட்ட ஆதனம் எதுவும், அத்தகைய ஆதனத்தின் விற்பனைக்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் அல்லது அதற்குமுன்னர் எழுத்தாணையின் கீழ் அறவிடற்பாலதான தொகையும், செலவுத்தொகையும் செயலாளருக்கு முறையாகச் செலுத்தப்பட்டிருப்பின், இப்பிரிவின் கீழ் விற்கப்படுதல் ஆகாது.

164. எழுத்தாணையொன்றை நிறைவேற்றுகையில் கைப்பற்றப்பட்ட ஏதேனும் அசைவுள்ள ஆதனம் இப்பாகத்தின்கீழ் விற்கப்படுகின்றவிடத்து, பிரதேச சபையின் செயலாளர், எழுத்தாணையின்கீழ் அறவிடற்பாலதான தொகையையும் செலவுத்தொகையையும் விற்பனையினாலான விற்றுவரவுகளிலிருந்து கழித்தபின்னர் மேனமிகையாக எதுவுமிருப்பின், அதனை, ஆதனத்தின் சொந்தக்காரரினால் அல்லது கூட்டுச்சொந்தக்காரரினால் செய்யப்படும் விண்ணப்பத்தின் மீது, விடயத்திற்கேற்ப, சொந்தக்காரருக்கு அல்லது சொந்தக்காரர்களுக்குச் செலுத்துதல் வேண்டும்: விற்பனையினாலான மேனமிகை.

ஆயின், எவ்வாறாயினும், ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தின் விற்பனைத் தேதியிலிருந்து ஓராண்டு காலம் முடிவடையுமுன்னராக அத்தகைய விண்ணப்பம் எதுவும் செய்யப்படாதவிடத்து, அத்தகைய மேனமிகைத் தொகையானது பிரதேச சபை நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அதன் பின்னர் ஆள் எவரும் அத்தகைய தொகையைக் கோருவதற்கோ பெற்றுக் கொள்ளுவதற்கோ உரித்துடையவராதலும் ஆகாது.

165. இப்பாகத்தின் கீழான எழுத்தாணை எதுவும் எவ்வாளுக்கு முகவரியிடப்பட்டுள்ளதோ, அவ்வாள், அத்தகைய எழுத்தாணையைப் பின்பற்றி ஆதனத்தைக் கைப்பற்றும் நோக்கத்துக்காக, ஏதேனும் வீட்டை அல்லது கட்டிடத்தை பகல்நேரத்தில் உடைத்துத் திறக்கலாம். வீடுகளை உடைத்துத் திறப்பதற்குள்ள தத்துவம்.

166. (1) பிரிவு 160 ல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆதனம் தவிர்ந்த வேறு ஏதேனும் விவரணத்தினதான அசைவுள்ள ஆதனம் எதுவும் காணப்படாத ஒவ்வொரு விடயத்திலும் அல்லது எழுத்தாணை வழங்கப்பட்டிருக்கின்றவரான சேகரிப்பாளர் அல்லது வேறு அலுவலர் அசைவுள்ள ஆதனத்தைக் கைப்பற்றுவது செயல்முறையில் சாத்தியப்படாதென அறிக்கை செய்யும் விடயம் ஒவ்வொன்றிலும், செயலாளர், வீதவரியை அல்லது வரியைச் செலுத்தத் தவறியவரான ஆளை அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட் காலப்பகுதியினுள் அத்தகைய வீதவரியையும் அல்லது வரியையும் எழுத்தாணைச் செலவுத் தொகையுடன் சேர்த்துச் செலுத்தும்படி தேவைப்படுத்துவதும், அக்காலப் பகுதியினுள் வீதவரியையும் அல்லது வரியையும் செலவுத் தொகையையும் செலுத்தத் தவறும் பட்சத்தில் வீதவரி அல்லது வரி எக்கட்டடம் அல்லது காணி தொடர் வீதவரி அல்லது வரிக் கொடுப்பனவிலான தவறுகை.

பில் வருமதியாகவுள்ளதோ அக்கட்டடத்தை அல்லது காணியைக் கைப்பற்றி விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவருக்கு அறிவிப்பதும் இதற்கான ஐந்தாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்திலானதுமான எழுத்திலான அறிவித்தல் ஒன்றை அவ்வாறு செலுத்தத் தவறியவரிடம் சேர்ப்பித்தல் வேண்டும்.

(2) ஆளெவருக்கும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் சேர்ப்பிக்கப்பட்ட அறிவித்தலுடன் ஆளெவரும், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, அவ்வாளிடமிருந்து வருமதியான கூட்டு மொத்தத் தொகையை, ஆதனமானது எந்நீதிமன்றத்தின் நியாயாதிக்க எல்லைக்குள் அமைந்திருக்கிறதோ, விடயத்துக்கேற்றவாறு, வீதவரியானது அல்லது வரியானது ஆயிரத்து ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவிடத்து நீதிவான் நீதிமன்றத்துக்கும், வருமதியான வீதவரியானது அல்லது வரியானது ஆயிரத்து ஐந்நூறு ரூபாவை விஞ்சுகின்றவிடத்து மாவட்ட நீதிமன்றத்துக்கும், செயலாளரானவர் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்; அத்துடன் அத்தகைய விண்ணப்பமானது செய்யப்பட்டதன் மேல், அத்தகைய அசைவற்ற ஆதனத்தைக் கைப்பற்றி விற்பனை செய்வதன்மூலம் அத்தகைய வீதவரிகள் அல்லது வரிகள் அல்லது செலவுத்தொகைகள் அறவிடப்படுவதற்கென, பிசுக்காலுக்கு நீதிமன்றமானது எழுத்தாணையொன்றை வழங்குதல் வேண்டும்.

(3) நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட எழுத்தாணையொன்று பிசுக்காலினால் நிறைவேற்றப்படுகையில், ஆதனமானது கைப்பற்றப்பட்டு விற்பனை செய்யப்படுவது தொடர்பிலான குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகளானவை, செயலாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பணத்தொகையினை அறவிடுவதற்காக அசைவற்ற ஆதனமானது கைப்பற்றப்பட்டு விற்பனை செய்யப்படுவதற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) அத்தகைய ஏற்பாடுகளை ஏற்புடைத்தாக்கும் நோக்கத்துக்கென அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட பணத்தொகையானது, நீதிமன்றத்தினால் பதிவீடு செய்யப்பெற்ற தீர்வையொன்றின்மேல் வருமதியானதெனக் கருதப்படல் வேண்டுமென்பதுடன், செயலாளரானவர் தீர்ப்புக் கடன்பெறுநராகவும், அத்தகைய பணத்தொகையைச் செலுத்துவதற்கு தவறுகின்ற ஆளானவர், தீர்ப்புக் கடனாளியாகவும் கருதப்படலும் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழ் செலுத்தப்படுகின்ற அல்லது அறவிடப்படுகின்ற பணத்தொகை ஒவ்வொன்றும் பிரதேச சபை நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

நீதிவானின் மூதற் கட்டளை.

167. (1) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் துணைவிதியின்கீழ் அதற்கென வழங்கப்பட்ட உரிமமொன்றில்லாமல், ஏதேனும் வியாபாரத்துக்காக அல்லது தொழிலுக்காக எவையேனும் வளவுகளைப் பயன்படுத்திய தவறுக்கு ஏதேனும் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொருவர், உரிமமொன்றில்லாமல் அத்தகைய வியாபாரத்துக்காக அல்லது தொழி

லுக்காக, தாமாகவோ அல்லது தமது சார்பில் வேறோர் ஆள் மூலமாகவோ அத்தகைய வளவுகளைத் தொடர்ந்து பயன்படுத்துகின்றவிடத்து, நீதிவானொருவர், மூடுதற் கட்டளையொன்றுக்கான விண்ணப்பமொன்றானது, விடயத்துக்கேற்றவாறு, பிரதேச சபையின் தவிசாளரினால், செயலாளரினால் அல்லது அதற்கென அத்தகைய தவிசாளரினால் அல்லது செயலாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் செய்யப்பட்டதன்மேல், பிரதேச சபையிடமிருந்து அத்தகைய ஆளானவர் உரிமமொன்று பெறும்வரைக்கும் அத்தகைய வளவுகளில் அத்தகைய வியாபாரத்தை அல்லது தொழிலை மூடும்படி கட்டளையிடலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில், சான்றிதழில் குறிப்பிடப்பட்ட ஆளானவர், உரிமமொன்று பெற்றுக்கொள்ளாமலே ஏதேனும் வியாபாரத்துக்காக அல்லது தொழிலுக்காக அத்தகைய வளவுகளைத் தொடர்ந்தும் பயன்படுத்துகிறார் என்ற விபரத்தைத் தருகின்றதும், விடயத்துக்கேற்றவாறு, பிரதேச சபையின் தவிசாளரினால் அல்லது செயலாளரினால் அல்லது அதற்கென அத்தகைய தவிசாளரினால் அல்லது செயலாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் வழங்கப்பட்டதுமான சான்றிதழொன்றானது, அதன்கண் கூறப்பட்டுள்ள கருமங்களுக்கு முதற்றோற்றச் சான்றாதல் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட மூடுதற் கட்டளையொன்றுடன் அத்தகைய ஆளானவர் இணங்கியொழுகத் தவறுகின்ற ஏதேனும் விடயத்தில், நீதிவானொருவர், அத்தகைய வளவுகளிலுள்ள ஏதேனும் வியாபாரத்தை அல்லது தொழிலை அத்தகைய கட்டளையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தேதியொன்றுக்கு முன்னர் மூடும்படி நீதிமன்றத்தின் பிசுக்காலைத் தேவைப்படுத்தியும், அதிகாரமளித்தும் உடனடியாகக் கட்டளையிடுதல் வேண்டும். (இத்தேதியானது, அத்தகைய கட்டளையானது வழங்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று முழு நாட்களுக்கு முந்தாமலும் அல்லது ஏழு முழு நாட்களுக்குப் பிந்தாமலும் இருத்தல் வேண்டும்.) அத்தகைய கட்டளையானது, சொல்லப்பட்ட பிசுக்காலானவருக்கு அல்லது அவரினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் பொலிசு அலுவலரானவருக்கும் அத்தகைய வளவுகளிலுள்ள ஏதேனும் வியாபாரத்தை அல்லது தொழிலை மூடுவதற்கு பிசுக்காலானவர் அல்லது அத்தகைய பொலிசு அலுவலரானவர் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய உதவியாளர்களுடன் அத்தகைய வளவுகளுக்குள் நுழைவதற்குப் போதுமான அதிகாரமாதல் வேண்டும்.

## பாகம் VI

## பிரதேச சபைகளை மேற்பார்வை செய்தலும் கட்டுப்படுத்தலும்

168. (1) பிரதேச சபை ஒவ்வொன்றினதும் தவிசாளரானவர், ஒவ்வோர் ஆண்டில், விதிகளினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்றும் அல்லது அத்தகைய தேதிக்கு முன்னரும், அத்துடன் அத்தகைய படிவத்திலும், அடுத்துவரும் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம்.

வரவுசெலவுத்திட்டமொன்றைத் தயாரித்து பிரதேச சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்; இது, அடுத்துவருகின்ற ஆண்டுக்குக் கிடைக்கக்கூடியதான வருமானத்தின் மதிப்பீடொன்றையும் உத்தேசிக்கப்பட்டுள்ள செலவினத்தின் விபரங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பிரதேச சபை ஒவ்வொன்றும், வரவு செலவுத் திட்டம், தொடர்பிலான ஆண்டு ஆரம்பிக்குமுன்னர், எவையேனும் திருத்தங்கள் இருப்பின் அவற்றோடு சேர்த்து அத்தகைய வரவு செலவுத் திட்டத்தை இறுதியாகப் பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

(3) பிரதேச சபையின் தவிசாளரானவர், எக்காலத்திலும், குறைநிரப்பு வரவுசெலவுத் திட்டமொன்றைத் தயாரிக்கலாம்; அத்துடன் அவர் அதைப் பிரதேச சபையின் முன்னர் இடலாம்.

(4) பிரதேச சபையானது, ஏதேனும் வரவுசெலவுத் திட்டத்தில் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத் திட்டத்தில் உள்ள எல்லா விடயங்களையும் அல்லது அவற்றில் எவற்றையும் நிறைவேற்றலாம், திரிபுபடுத்தலாம் அல்லது நிராகரிக்கலாம் அல்லது அதற்கு ஏதேனும் விடயத்தைச் சேர்த்துக்கொள்ளலாம்.

*வரவு செலவுத் திட்டம் தொடர்பில் தவிசாளரின் தத்துவங்கள்.*

169. பிரதேச சபையானது, ஏதேனும் வரவுசெலவுத் திட்டத்திலுள்ள அல்லது குறைநிரப்பு வரவு செலவுத் திட்டத்திலுள்ள எல்லா விடயங்களையும் அல்லது அவற்றுள் எவற்றையேனும் திரிபுபடுத்தினால் அல்லது நிராகரித்தால் அல்லது அதற்கு ஏதேனும் விடயத்தைச் சேர்த்தால், அத்துடன் பிரதேச சபையின் அத்தகைய ஏதேனும் முடிவுக்கு தவிசாளரானவர் இணங்கிக் கொள்ளாவிட்டால், மேலும் பரிசீலனை செய்வதற்கெனப் பிரதேச சபைக்கு வரவு செலவுத்திட்டத்தை அல்லது குறைநிரப்பு வரவுசெலவுத்திட்டத்தை அவர் மீண்டும் சமர்ப்பித்தல் வேண்டும். வரவு செலவுத்திட்டமானது அல்லது குறைநிரப்பு வரவுசெலவுத் திட்டமானது, மீளச் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் இரண்டு வாரங்களுக்குப் பிரதேச சபையினால் நிறைவேற்றப்படாதவிடத்து, அத்தகைய வரவு செலவுத் திட்டமானது அல்லது குறைநிரப்பு வரவுசெலவுத் திட்டமானது, பிரதேச சபையினால் அது நிறைவேற்றப்படவில்லையென்பதைப் பொருட்படுத்தாது, அப்பிரதேச சபையின் முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வரவு செலவுத்திட்டமென அல்லது குறைநிரப்பு வரவு செலவுத் திட்டமெனக் கருதப்படல் வேண்டும்.

*வரவு செலவுத் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட செலவினத்தை வேறுபடுத்தல்.*

170. ஏதேனும் ஆண்டின்போது அவசியமேற்படும் விடயத்தில், அவ்வாண்டிற்கென ஏற்றுக்கொள்ளப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் அல்லது ஏதேனும் குறைநிரப்பு வரவு செலவுத் திட்டத்தில், ஏதேனும் தலைப்பின் கீழான செலவினத்தைத் தவிசாளரானவர் குறைக்கலாம் அல்லது அதிகரிக்கலாம், அல்லது ஒரு தலைப்பின்கீழ் ஒதுக்கப்பட்ட பணத்தை வேறொரு தலைப்புக்குக் கைமாற்றலாம்; ஆனால் எவ்வாறாயினும், அத்தகைய வரவு செலவுத்திட்டத்தினால் அனுமதி அளிக்கப்பட்ட மொத்தத்தொகை அல்லது செலவினம் விஞ்சப்படுதல் ஆகாது.

**நிதியத்தையும் ஆதனத்தையும் நிருவகிப்பது பற்றிய விதிகள்.**

**171.** பிரதேச சபை நிதியத்தையும் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அதனால் பயன்படுத்தப்பட்ட அல்லது இருப்பாட்சி கொள்ளப்பட்ட ஆதனத்தையும் பிரதேச சபையொன்றினது நிருவகிப்பது, பின்வருவனவற்றை விதித்துரைப்பதற்கென இப்பிரிவின்கீழ் ஆக்கப்படக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கைமுறை விதிகளுக்கு மேலும் அமைய இருத்தல்வேண்டும் :—

(அ) மதிப்பீடுகளும் வரவு செலவுத்திட்டங்களும் எப்படிவத்தில் தயாரிக்கப்படவேண்டும் என்பது ;

(ஆ) அமைச்சரின் அல்லது உதவி ஆணையாளரின் அங்கீகாரம் தேவைப்படுகின்ற வரவு செலவுத் திட்டமொன்று சம்பந்தப்பட்ட ஏதேனும் கருமத்தில், அத்தகைய அங்கீகாரம் எக்காலப்பகுதியினுள்ளும் எம்முறையிலும் பெறப்படுதல் வேண்டும் என்பது ;

(இ) வரவு செலவுத்திட்டமொன்று சம்பந்தப்பட்ட ஏதேனும் கருமத்தில் அதற்கு அமைச்சரினால் அல்லது உதவி ஆணையாளரினால் அங்கீகாரம் மறுக்கப்படுமிடத்து எடுக்கப்படவேண்டிய நடபடிகள் ;

(ஈ) பிரதேச சபையொன்றினால் கணக்குப் புத்தகங்கள் தயாரிக்கப்பட்டு வைத்திருக்கப்படவேண்டிய படிவம் ;

(உ) பிரதேச சபையினால் தயாரிக்கப்படவேண்டிய கணக்குகள் பற்றிய காலாகாலக் கூற்றுக்களின் படிவம் ;

(ஊ) பிரதேச சபையொன்றின் புத்தகங்கள், கணக்குகள், ஆவணங்கள், அத்துடன் வேறு பதிவேடுகள் என்பனவும், பிரதேச சபையொன்றினால் பொறுப்பேற்கப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலைகள், பேணுதல் வேலைகள் அல்லது பழுதுபார்த்தல் வேலைகள் என்பனவும், அத்துடன் பிரதேச சபையொன்றுக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது பிரதேச சபையொன்றினால் பயன்படுத்தப்படுகின்ற அல்லது இருப்பாட்சி கொள்ளப்படுகின்ற காணிகளும் கட்டிடங்களும் எம்முறையில், எக்கால இடைவெளிகளில் அத்துடன் எவ்வாட்களினால் சோதிக்கப்படவேண்டும் என்பது அத்துடன்

(எ) பிரதேச சபையொன்றின் நிதிசார் உத்தேசங்கள்பற்றி பிரதேச சபையொன்றின் எல்லைகளுக்குள் அறிவித்தல் கொடுக்கும் மாதிரியும், கணக்குகள் பற்றிய காலா காலக் கூற்றுக்களை வெளியிடும் மாதிரியும்.

**கணக்கினை கணக்காய்வும் மேலதிகக் கட்டணமும்**

**172.** (1) பிரதேச சபையொவ்வொன்றினதும் கணக்குகளின் கணக்காய்வுக்கு, அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரை ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) நிதியென்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதங்களுக்கு இணங்கவுள்ள கட்டணம் ஒன்றை, அத்தகைய கணக்காய்வின் செலவுத்தொகைக்கான உதவுதொகையொன்றாக, பிரதேச சபை ஒவ்வொன்றும் அரசாங்கத்துக்குச் செலுத்துதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் பிரதேச சபையொன்றின் கணக்குகளைக் கணக்காய்வு செய்கையில், சட்டத்துக்கு முரணான கணக்குகளின் ஒவ்வொரு விடயத்திற்கும் கணக்காய்வாளர் தலைமையதிபதியானவர் அனுமதி மறுத்தல்வேண்டும் என்பதுடன், சட்டவிரோதமான கொடுப்பனவை செய்கின்ற அல்லது அதற்கு அதிகாரமளிக்கின்ற ஆளின்மேல், இதை போன்றிக்க கட்டணமாக அவர் விதித்தலும் வேண்டும்; அத்துடன் எவரேனும் ஆளின் கவனமின்மையால் அல்லது பிறழ் நடத்தையால் உறப்பட்ட ஏதேனும் குறைபாட்டின் அல்லது இழப்பின் தொகையையும், அவ்வாளினால் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்க வேண்டிய, ஆனால் கணக்கிற்குக் கொண்டுவரப்படாத ஏதேனும் பணத்தொகையையும் அவ்வாளிடமிருந்து இறுத்தல் வேண்டும்; அத்துடன் ஒவ்வொரு விடயத்திலும் அத்தகைய ஆளிடமிருந்து வருமதியான தொகையைஅவர் அத்தாட்சிப்படுத்தி, தனது முடியை அத்தகைய ஆளுக்கு எழுத்துமூலம் உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும். அறிவித்தலானது, உள்ளூராட்சி ஆணையாளரினால் அத்தகைய ஆளுக்குப் பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு அது அனுப்பப்பட்டால் அஞ்சலின் சாதாரண நெறியில் முடிவடைக் கொண்டிருக்கின்ற கடிதமானது ஒப்படைக்கப்படும் நேரத்தில் அத்தகைய ஆளினால் பெறப்பட்டதாகக் கருதப்படலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய கடிதமானது அஞ்சலில் இடப்பட்டதென்பதை எண்பிப்பதில் அத்தகைய கடிதமானது தகுந்தமுறையில் முகவரியிடப்பட்டு அஞ்சலில் இடப்பட்டதென்பதை எண்பித்தல் போதுமானதாதல் வேண்டும்;

ஆயின், பிரதேச சபையொன்றினால் உறப்பட்ட செலவுகள் எவற்றிற்கும், அத்தகைய செலவுகள் அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டிருந்தால், கணக்காய்வாளர் தலைமையதிபதியானவரினால் அனுமதி மறுக்கப்படுதல் ஆகாது.

(4) பிரதேச சபையொன்றின் தீர்மானத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அப்பிரதேச சபையின் ஏதேனும் செலவினம் தொடர்பான கணக்குகளின் ஏதேனும் விடயமானது இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் சட்டத்துக்கு முரணானது எனக் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அதற்கு அனுமதிமறுக்கப்படுமிடத்து, அப்பிரதேச சபையின் தவிசாளரும், அத்தகைய தீர்மானத்துக்குச் சாதகமாக வாக்களித்த அப்பிரதேச சபையின் மற்றைய ஒவ்வொரு உறுப்பினரும், அவ்வுப்பிரிவின் நோக்கங்களுக்காகக் கொடுப்பனவைச் செய்த அல்லது கொடுப்பனவைச் செய்ய அதிகாரமளித்த ஆளொருவர் எனக் கருதப்படல் வேண்டும்.

(5) ஆளெவருக்கும் எதிராக ஏதேனும் மேலதிகக் கட்டண விதிப்பை அல்லது அனுமதி மறுப்பைச் செய்யுமுன்னர், கணக்காய்வாளர் தலைமையதிபதியானவர், அவர் தகுதியானதென எண்ணக்கூடிய வாறான கருமம் தொடர்பாகக் கேட்கப்படுவதற்கு அல்லது ஏதேனும் முறையீட்டைச் செய்வதற்கு அத்தகைய ஆளுக்குச் சந்தர்ப்பம் ஒன்றை அளித்தல் வேண்டும் ; அத்துடன், கணக்காய்வாளர் தலைமையதிபதியானவர் அத்தகைய மேலதிகக் கட்டணத்தை விதிக்கின்ற அல்லது அனுமதி மறுக்கின்ற பட்சத்தில், அந்நோக்கத்துக்கென அத்தகைய ஆளினால் அவருக்கு விண்ணப்பம் ஒன்று செய்யப்பட்டதன்மேல், அத்தகைய மேலதிகக் கட்டணம் அல்லது அத்தகைய அனுமதி மறுப்புத் தொடர்பிலான தமது முடிபுக்கான காரணங்களை எழுத்தில் அவ்வாளுக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(6) (அ) ஏதேனும் மேலதிகக் கட்டண விதிப்பினால் அல்லது ஏதேனும் அனுமதி மறுப்பினால் இன்னலுறும் ஆளெவரும், மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அதற்கெதிராக மேன்முறையீடுசெய்யலாம் ; அத்துடன், மேன்முறையீட்டு நீதிமன்றமானது, மேலதிகக் கட்டண விதிப்பு அல்லது அனுமதி மறுப்புச் சட்டத்துக்கு இணங்கவில்லையென அபிப்பிராயப்பட்டால், ஒன்றில் அத்தகைய மேலதிகக் கட்டண விதிப்பை அல்லது அனுமதிமறுப்பை உறுதிப்படுத்தலாம், அல்லது அத்தகைய மேலதிகக்கட்டண விதிப்பை அல்லது அனுமதி மறுப்பைத் திரிபுபடுத்தலாம் அல்லது தள்ளிவைக்கலாம்.

(ஆ) பந்தி (அ) வின்கீழான மேன்முறையீடு ஒவ்வொன்றும், மாவட்ட நீதிமன்றங்களின் இடைக்காலக் கட்டளைகளுக்கெதிரான மேன்முறையீட்டிற்கென விதித்துரைக்கபபட்டு அதில் பின்பற்றப்பட்ட காலத்துக்குள்ளும் முறையிலும் அவ்விதிகளுக்கமையவும் சமர்ப்பிக்கப்படுதலும், வழக்குத் தொடரப்படுதலும், வலுவுக்கிடப்படுதலும் வேண்டும்.

(7) (அ) ஆறும் உட்பிரிவின்கீழான மேன்முறையீடொன்றுக்குப் பதிலாக ஏதேனும் மேலதிகக் கட்டண விதிப்பினால் அல்லது அனுமதி மறுப்பினால் இன்னலுறும் ஆளெவரும், அவருக்குக் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் முடிபானது தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், அத்தகைய முடிபுக்கு எதிராக அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்; அத்துடன், அத்தகைய மேன்முறையீடு செய்யப்பட்டதன்மேல், வழக்கின் நன்மை தீமைகளின்படி பிரச்சினைக்குரிய விடயத்தைத் தீர்மானிப்பது, அத்தகைய செயலாளருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(ஆ) அமைச்சரின் அமைச்சுச் செயலாளரானவர், மேலதிகக் கட்டணமாக விதிக்கப்பட்ட அல்லது அனுமதி மறுக்கப்பட்ட தொகை முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பகுதியை, அதற்கான காரணங்கள் இருக்கின்றனவென அவர் எண்ணினால், அத்தகைய மேன்முறையீடு செய்கின்ற ஆளிடமிருந்து அறவிடும்படி கட்டளை மூலம் பணிக்கலாம் ; அத்துடன் ஏதேனும் மேலதிகக் கட்டண விதிப்பு

அல்லது ஏதேனும் அனுமதி மறுப்பு சட்டமுறையாகச் செய்யப்பட்டுள்ளது, ஆனால் அதன் விடயப்பொருளானது, மேலதிகக் கட்டணமானது அல்லது அனுமதி மறுப்பானது குறைக்கப்பட வேண்டும் என்பதை நியாயமானதும் ஒப்புவானதுமானதாக்கும் அத்தகைய சூழ்நிலைகளின்கீழ் உறப்பட்டதென அவர் கண்டால், அது குறைக்கப்படல் வேண்டுமென, ஆனால், அத்தகைய மேலதிகக் கட்டண விதிப்பை அல்லது அனுமதி மறுப்பை வலுவுக்குக் கொணடுவருவதில் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் உறப்பட்டிருக்கக்கூடியவாறான செலவுத் தொகைகளினதும் செலவுகளினதும் தொகையானது அல்லது செயலாளரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தொகையின் அத்தகைய பகுதியானது, அத்தகைய ஆளிடமிருந்து அறவிடப்படல் வேண்டும் எனக் கட்டளைமூலம் பணிக்கலாம்.

(8) மேற்கூறப்பட்டவாறு ஆளெவரிடமிருந்தும் வருமதியாக இருக்கின்றதெனக் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அத்தாட்சிப்படுத்தப்படுகின்ற பணத்தொகை ஒவ்வொன்றும், அம்முடிபுக்கெதிராக மேன்முறையீடொன்று இருந்தாலொழிய, அத்தகைய ஆளுக்குக் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் முடிபானது தெரிவிக்கப்பட்ட பின்னர் பதினன்கு நாட்களுக்குள் உள்ளூராட்சி ஆணையாளரிடம் அத்தகைய ஆளினால் செலுத்தப்படல்வேண்டும்; அத்துடன் அத்தகைய பணத்தொகையானது அவ்வாறு செலுத்தப்படாவிட்டாலும் அத்துடன் அத்தகைய மேன்முறையீடெதுவும் இல்லாவிட்டாலும், அத்தகைய ஆளிடமிருந்து வருமதியான பணத்தொகையை (9) ஆம் உட்பிரிவில் அல்லது (10) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டமுறையில் அறவிடுவது உள்ளூராட்சி ஆணையாளரின் கடமையாதல் வேண்டும்.

(9) எட்டாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட பணத்தொகையெதுவும், எவ்வாளிடமிருந்து அது வருமதியாயிருக்கின்றதோ, அவ்வாளினால், அவ்வுட்பிரிவில் அதற்கென அனுமதிக்கப்பட்ட காலஎல்லைக்குள் உள்ளூராட்சி ஆணையாளரிடம் செலுத்தப்படாவிட்டால், அத்தகைய ஆளின் அசைவற்ற ஆதனத்தைக் கைப்பற்றி விற்பனை செய்வதன்மூலம் அத்தகைய பணத்தொகையை அறவிடுவதற்காக அத்தகைய ஆளானவர் எம்மாவட்ட நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் வதிகின்றாரோ, அம்மாவட்ட நீதிமன்றத்துக்கு அத்தகைய ஆணையாளர் விண்ணப்பமொன்றைச் செய்யலாம்; அத்துடன், அத்தகைய விண்ணப்பமான்து செய்யப்பட்டதன்மேல், அத்தகைய அசைவற்ற ஆதனத்தைக் கைப்பற்றி விற்பனை செய்வதன் மூலம் அத்தகைய பணத்தொகையை அறவிடுவதற்கான எழுத்தாணையொன்றைப் பிசுக்காலுக்கு நீதிமன்றமானது வழங்குதல் வேண்டும். நீதிமன்றமொன்றினால் வழங்கப்பட்ட எழுத்தாணையொன்றை நிறைவேற்றுகையில் அசைவற்ற ஆதனமானது பிசுக்காலினால் கைப்பற்றப்பட்டு விற்பனை செய்யப்படுதலும், அத்துடன் பிசுக்காலினால் கைப்பற்றப்பட்ட அசைவற்ற ஆதனம் தொடர்பில் உரிமைக்கோரிக்கைகள் செய்யப்படுதலும் அவற்றுக்கு நீதித்தீர்ப்பளிக்கப்படுதலும்

தொடர்பான குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுகளானவை, ஆணையாளரின் விண்ணப்பத்திற் குறித்துரைக்கப்பட்ட பணத்தொகைகளை அறவிடுவதற்காக அசைவற்ற ஆதனமானது கைப்பற்றப்பட்டு விற்பனை செய்யப்படுவதற்கும், அத்தகைய பணத்தொகையை அறவிடுவதற்காகக் கைப்பற்றப்பட்ட அசைவற்ற ஆதனம் தொடர்பில் உரிமைக்கோரிக்கைகள் செய்யப்படுவதற்கும் அவற்றுக்கு நீதித்தீர்ப்பளிக்கப்படுவதற்கும் ஏற்புடையனவாதல் வேண்டும். அத்தகைய ஏற்பாடுகளை ஏற்புடைத்தாக்கும் நோக்கத்துக்கென, அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட பணத்தொகையானது, நீதிமன்றத்திற் பதிவுசெய்யப்பட்ட தீர்வையொன்றின்மேல் வருமதியானதெனக் கருதப்படல் வேண்டும்: அத்துடன் அத்தகைய ஆணையாளரானவர் தீர்ப்புக் கடன்பெறுநராகக் கருதப்படல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பணத்தொகையைச் செலுத்துவதற்கு ஆளாகின்ற ஆளானவர் தீர்ப்புக் கடனாளியாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(10) ஆளொவரிடமிருந்தும், அத்தகைய ஆளின் அசைவற்ற ஆதனத்தைக் கைப்பற்றி விற்பனைசெய்வதன்மூலம் (8) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பணத்தொகை எதையும் அறவிடுவது செய்முறைக்கு உகந்ததல்ல அல்லது உசிதமானதல்லதென உள்ளூரதிகார ஆணையாளர் ஏதேனும் விடயத்தில் அபிப்பிராயப்படுமிடத்து, அல்லது அத்தகைய பணத்தொகையின் முழுத்தொகையும் அவ்வாறு அறவிடப்பட்டிருக்காதவிடத்து, அத்தகைய ஆளிடமிருந்து வருமதியான தொகை, அத்துடன் அத்தகைய ஆளினது பெயர், அவர் கடைசியாகத் தொழில்புரிந்த இடம் அல்லது அவர் கடைசியாக வசித்த இடம் ஆகியன பற்றிய விபரங்கள் அடங்கிய சான்றிதழொன்றை அத்தகைய ஆள் வதிகின்ற இடத்தில் நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவானொருவருக்கு அத்தகைய ஆணையாளரானவர் வழங்கலாம். அதன்மேல், நீதிவான் வருமதியான தொகையை அறவிடுவதற்கு அத்தகைய ஆளுக்கெதிராக வழக்கு நடவடிக்கைகள் ஏன் எடுக்கப்படக்கூடாதென்பதற்கான காரணம் காட்டுவதற்கு அத்தகைய ஆளைத் தமக்குமுன் தோன்றும்படி அழைப்புக் கட்டளை விடுத்தல் வேண்டும்; அத்துடன் அத்தகைய ஆளினால் போதுமான காரணம் எதுவும் காட்டப்படாவிடின், வருமதியான தொகையானது குற்றப்பணமொன்றினால் மட்டும் தண்டிக்கப்படக்கூடியதும், மறியற் றண்டனையினால் தண்டிக்கப்படமுடியாததுமான தவறொன்றுக்காக அத்தகைய தவறுகை புரியுநர்மீது நீதிவானின் தண்டனைத் தீர்ப்பொன்றின்மூலம் சுமத்தப்பட்ட குற்றப்பணமொன்றாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அது அதற்கிணங்க அறவிடவும் படலாம்.

(11) அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளைமூலம் அத்தகைய ஆளிடமிருந்து அறவிடப்படவேண்டுமெனப் பணிக்கப்பட்ட தொகை எதுவும், கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பணத்தொகை எதுவும் இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் அறவிடப்படற்பாலதான அதே முறையில், உள்ளூராட்சி ஆணையாளரினால் உடனடியாக அறவிடப்படலாம்.

(12) இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் வழங்கப்படுகின்ற மேலதிகக் கட்டணவிதிப்பு அல்லது அனுமதி மறுப்புப்பற்றிய ஏதேனும் சான்றிதழின் அல்லது அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் (7) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படுகின்றகட்டளையொன்றின் அல்லது உள்ளூராட்சி ஆணையாளரினால் (10) ஆம் உட்பிரிவின்கீழ் கொடுக்கப்படும் சான்றிதழின் செம்மையானது அல்லது செல்லுபடியானது, இப்பிரிவின்கீழ் உருமதியான ஏதேனும் பணத்தொகையானது அறவிடப்படுவதற்கான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் ஏதேனும் மாவட்ட நீதிமன்றத்தில் அல்லது நீதிவான் நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்படலாகாது.

(13) ஏதேனும் மேலதிகக் கட்டணவிதிப்பை அல்லது அனுமதி மறுப்பை வலுவுக்குக் கொண்டுவருவதில் உறப்பட்ட செலவுத்தொகைகள், செலவுகள் என்பனவாகச் செலுத்தப்பட்ட அல்லது அறவிடப்பட்ட ஏதேனும் பணத்தொகை தவிர்ந்த இப்பிரிவின்கீழ் செலுத்தப்பட்ட அல்லது அறவிடப்பட்ட ஒவ்வொரு பணத்தொகையும் பிரதேச சபையின் பிரதேச சபை நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

வேலை நிறைவேற்றுவதற்கான ஒப்பந்தங்கள் விதித்துரைக்கப்பட்ட எல்லையை விஞ்சினால், எழுத்தில் இடப்படுதல் வேண்டும்.

173. ஏதேனும் வேலையை அல்லது சேவையை நிறைவேற்றுவதற்கான அல்லது புரிதற்கான அல்லது எவையேனும் பொருட்களை அல்லது சாமான்களை வழங்குவதற்கான அல்லது இச்சட்டத்தின் நோக்கத்துக்கு அவசியமான வேறு ஏதேனும் கருமத்துக்கான ஒப்பந்தம் எதுவும், ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லைகளை விஞ்சுகின்ற மதிப்பீடு செய்யப்பட்ட செலவினமொன்றை அல்லது அரசிறையொன்றை உள்ளடக்குகின்றவிடத்து, அல்லது ஓராண்டுக்கு மேலாக நீடித்திருக்கின்றவிடத்து அல்லது நீடித்திருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றவிடத்து, எழுத்தில் இடப்படல் வேண்டும் என்பதுடன், பிரதேச சபையின் சார்பில் பிரதேச சபையின் தவிசாளரினாலும் செயலாளரினாலும் ஒப்பமிடப்பட்டுப் பிரதேச சபையின் பொது இலச்சினை இடப்படுதலும் வேண்டும்; அத்துடன், அத்தகைய ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படுவதற்கு அவசியமானவையெனக் கருதப்படக்கூடியவாறான அத்தகைய வேறு கருமங்களோடு சேர்த்து, அது பின்வருவனவற்றைக் குறித்துரைத்தலும் வேண்டும் :—

(i) நிறைவேற்றப்படவேண்டிய அல்லது புரியப்பட வேண்டிய வேலை அல்லது சேவைகள் அல்லது வழங்கப்பட வேண்டிய பொருட்கள் அல்லது சாமான்கள் ;

(ii) வேலைக்கு, சேவைக்கு, பொருட்களுக்கு அல்லது சாமான்களுக்குச் செலுத்தப்படவேண்டிய விலை அல்லது வீதம் ;

(iii) எக்கால எல்லைக்குள் அல்லது எக்கால எல்லைகளுக்குள் வேலை அல்லது சேவைகள் முடிக்கப்பட வேண்டும் அல்லது பொருட்கள் அல்லது சாமான்கள் வழங்கப்படவேண்டும் என்பது ;

(iv) மீறுதலின் விடயத்தில் சுமத்தப்படவேண்டிய ஏதேனும் தண்டம் அல்லது தண்டங்கள்.

173 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப் பட்ட ஒப்பந்தங் களைச் செய்வதற் கான நடவடிக்கை முறை.

**174.** நூற்றெழுபத்துமூன்றும் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ளவாறான ஒப்பந்தம் எதுவும் செய்து கொள்ளப்படமுன்னர்:—

(i) பிரதேச சபையானது அவ்வாறு பணித்தால், செயலாளரானவர், ஒப்பந்தமானது முறையாகப் புரியப்படுவதற்குப் போதுமானளவு பிணைப்பணம் பெற்றுக்கொள்ளல் வேண்டும்;

(ii) விதித்துரைக்கப்பட்ட முறையில் கேள்விப்பத்திரங்களையோ அல்லது கூறுவிலைகளையோ செயலாளரானவர் அல்லது தவிசாளரானவர் கோருதல் வேண்டும்;

(iii) கேள்விப்பத்திரத்துக்கான அழைப்பு எதுவும் இருப்பின் அதுவும், அத்துடன் கேள்விப்பத்திரங்கள் அல்லது கூறுவிலைகள் எவையும் இருப்பின் அவையும், அல்லது அவற்றின் பிரதிகள் சபைக்குமுன்னர் இடப்படுதல் வேண்டும்; சபையானது, அத்தகைய கேள்விப்பத்திரங்களில் அல்லது கூறுவிலைகளில் ஒன்றை, ஒன்றில் ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது அவை எல்லாவற்றையும் நிராகரித்தல் வேண்டும்; அத்துடன், ஆகக்குறைந்தது தவிர்ந்த வேறு கேள்விப் பத்திரமொன்று அல்லது கூறுவிலையொன்று செலவினம் தொடர்பினதாய் இருக்குமிடத்தும், அத்துடன் அரசிறை தொடர்பினதாயிருக்குமிடத்து ஆகக்கூடிய கேள்விப்பத்திரமொன்றும் அல்லது கூறுவிலையொன்றும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றவிடத்து, விடயத்துக்கேற்றவாறு ஆகக்குறைந்ததை அல்லது ஆகக் கூடியதை ஏற்றுக்கொள்ளாததற்கான திருப்தியான காரணங்களைத் தீர்மானமானது கொடுத்தல் வேண்டும்; அத்துடன்

(iv) அனுமதிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டமொன்றில் அல்லது குறைநிரப்பு வரவு செலவுத்திட்டமொன்றில் ஒப்பந்தத்துக்கு அவசியமான நிதிகள் ஏற்பாடுசெய்யப்பட்டுவிட்டனவெனத் தன்னைத் திருப்திப்படுத்தியபின்னர், ஒப்பந்தமானது பிரதேச சபையினால் அனுமதிக்கப்பட வேண்டும்:

ஆயின், வேலை அல்லது சேவை அல்லது ஏதேனும் பொருளின் அல்லது சாமானின் வழங்கல் அல்லது இச்சட்டத்தின் நோக்கத்துக்கு அவசியமான வேறு ஏதேனும் கருமம் அரசாங்கத் திணைக்களமொன்றினால், பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றினால், அல்லது பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமொன்றினால் நிறைவேற்றப்படவிருக்கின்றவிடத்து, கேள்விப்பத்திரங்களை அல்லது கூறுவிலைகளைக் கோருதலானது, பிரதேசசபையின் செயலாளருக்கு அல்லது தவிசாளருக்கு அவசியமானதாதல் ஆகாது.

**செலவின விடயத்தின் சட்டப்படியாந் தன்மை பற்றிய ஐயுறவுகளைத் தீர்த்துவைத்தல்.**

**175.** (1) பிரதேச சபையொன்றினது தீர்மானமொன்றினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் செலவின விடயத்தின் சட்டப்படியாந்தன்மை பற்றிய எவையேனும் ஐயுறவுகளைத் தீர்த்துவைக்கும் நோக்கத்துக்காக, பிரதேச சபையின் தவிசாளரானவர், முடிபுக்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு உதவியாணையாளரின்மூலம் அவ்விடயத்தை ஆற்றுப்படுத்தலாம். ஆணையாளரானவர், அத்தகைய ஏதேனும் ஆற்றுப்படுத்துகைமீதான தமது முடிபை, உதவி ஆணையாளர் மூலமாகத் தவிசாளருக்குத் தெரிவித்தல் வேண்டும்.

(2) உள்ளூராட்சி ஆணையாளரானவர், (1) ஆம் உட்பிரிவின் கீழ் தமக்குச் செய்யப்பட்ட ஏதேனும் ஆற்றுப்படுத்துகையின்மேல் பிரதேச சபையொன்றின் தீர்மானமொன்றினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் செலவின விடயத்தினது சட்டப்படியாந்தன்மையை உறுதிப்படுத்தியுள்ளவிடத்து, சபையின் தவிசாளரும் அதன் வேறு ஒவ்வோர் உறுப்பினரும், 172 ஆம் பிரிவில் முரணாக எது எப்படியிருப்பினும் அச்செலவின விடயம் தொடர்பான ஏதேனும் கொடுப்பனவு தொடர்பில், அப்பிரிவின்கீழ் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்படும் மேலதிகக் கட்டணமொன்றுக்கு ஆளாதல் ஆகாது.

**ஓய்வூதியம், ஆண்டுத்தொகை, பணிக்கொடை, அல்லது இளைப்பாற்றுப்படி முதலியனவற்றின் தன்மையிலான கொடுப்பனவு.**

**176.** (1) பிரதேச சபையானது—

(அ) அப்பிரதேச சபையின் அலுவலர் ஒருவராக அல்லது சேவையாளர் ஒருவராகச் சேவையில் இருந்து இளைப்பாறுகின்ற அல்லது இளைப்பாறியுள்ள ஆளெவருக்கும் ; அல்லது

(ஆ) அத்தகைய சேவையிலிருந்து அரசாங்கச் சேவைக்கு மாற்றப்படுகின்றவரும் அல்லது மாற்றப்பட்டுள்ளவரும், அத்துடன் அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறுகின்றவரும் அல்லது இளைப்பாறியுள்ளவரும் ஆன ஆளெவருக்கும்,

நிதியெனும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடனான கலந்தாலோசனையின்பின்னர் அமைச்சரினால் கொடுக்கப்பட்ட அங்கீகாரத்துடன், அத்தகைய அலுவலராக அல்லது சேவையாளராக அவர் சேவை ஆற்றிய எக்காலப்பகுதிக்கு ஓய்வூதியம், பணிக்கொடை அல்லது இளைப்பாற்றுப்படி எதுவும், அல்லது போதுமானளவு ஓய்வூதியம், பணிக்கொடை அல்லது இளைப்பாற்றுப்படி எதுவும், பிரதேச சபையின் எவையேனும் துணைவிதிகளின்கீழ் அல்லது விதிகளின்கீழ் அல்லது 1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் கொடுபடற்பாலதானதல்லாததோ, அச்சேவைக் காலப்பகுதி எதனதும் தொடர்பில், ஓய்வூதியமொன்றை, பணிக்கொடையொன்றை அல்லது இளைப்பாற்றுப்படியொன்றை, அப்பிரதேச சபையின் பிரதேச சபை நிதியத்திலிருந்து வழங்கலாம்.

(2) எப்பிரதேச சபையொன்றின் எவரேனும் இறந்த அலுவலரினது அல்லது சேவையாளரினது விதவைக்கு, பிள்ளைகளுக்கு, ஆகக்கிட்டிய உறவினருக்கு அல்லது தங்கிவாழுநருக்கு, அப்பிரதேச சபையின் எவையேனும் துணைவிதிகளின்கீழ் அல்லது விதிகளின்கீழ் அல்லது 1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் திட்டத்தின்கீழ் அல்லது நிதியத்தின்கீழ் ஓய்வூதியம், ஆண்டுத்தொகை அல்லது பணிக்கொடை எதுவும், அல்லது போதுமானளவு ஓய்வூதியம், ஆண்டுத்தொகை அல்லது பணிக்கொடை எதுவும் கொடுபடற்பாலதானதல்லாததோ, அப்பிரதேச சபையானது, நிதியென்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடனான கலந்தாலோசனையின்பின்னர் அமைச்சரினால் கொடுக்கப்படுகின்ற அங்கீகாரத்துடன், அத்தகைய விதவைக்கு பிள்ளைகளுக்கு, ஆகக்கிட்டிய உறவினருக்கு அல்லது தங்கிவாழுநருக்கு ஓய்வூதியமொன்றை, ஆண்டுத்தொகையொன்றை அல்லது பணிக்கொடையொன்றைச் சபையின் பிரதேச சபை நிதியத்திலிருந்து வழங்கலாம்.

(3) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அல்லது (2) ஆம் உட்பிரிவில் உள்ளது எதுவும், அவ்விரண்டு உட்பிரிவுகளில் ஏதேனும் ஒன்றின் கீழ் ஏதேனும் ஓய்வூதியத்துக்கு, ஆண்டுத்தொகைக்கு, பணிக்கொடைக்கு அல்லது இளைப்பாறுப்படிக்கு ஆளெவருக்கும் உரிமையெதனையும் அளிப்பதாகப் பொருள்கொள்ளப்படலாகாது.

177. (1) பிரதேச சபையொன்றானது, அப்பிரதேச சபையின் சேவையிலிருந்து அப்பிரதேச சபையின் தற்காலிக அலுவலர்களும் சேவையாளர்களும் நிறுத்தப்படுவதன்மேல் அவர்களுக்குப் பணிக்கொடைகளைக் கொடுப்பனவு செய்வதற்கான திட்டமொன்றைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்கின்ற துணைவிதிகளை நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் கொடுக்கப்படும் அங்கீகாரத்துடன் ஆக்கலாம், அத்துடன் அத்தகைய துணைவிதிகளுக்கிணங்க அத்தகைய திட்டமொன்றைத் தாபிக்கலாம். பணிக்கொடைத் திட்டத்தைத் தாபிப்பதற்கான தத்துவம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படுகின்ற துணைவிதிகளானவை, துணைவிதிகள் நடைமுறைக்கு வருமுன்னர் அப்பிரதேச சபையின் சேவையிலிருந்து நிறுத்தப்பட்ட அப்பிரதேச சபையின் தற்காலிக அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் ஏற்புடையனவாகலாம்.

## கடன்கள்

178. (1) பிரதேச சபையின் நோக்கங்களுள் எவற்றுக்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையை அல்லது பணத்தொகைகளை இலங்கை அரசாங்கத்திடமிருந்து, அல்லது எவரேனும் ஆளிடமிருந்து அல்லது ஆட்களிடமிருந்து அல்லது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவிடமிருந்து, அமைச்சரின் அங்கீகாரத்துக்கு அமைய கடன்பெறுவது, பிரதேச சபையொன்றுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்: வீதவரிகள், வரிகள் ஆகிய வற்றின் பிணையப் பொறுப்பின் மேல் கடன் பெறுவதற்கும் பிரதேச சபைக்கு உள்ள தத்துவம்.

ஆயின், அத்தகைய பிரதேச சபையினால் ஏற்கனவே திரட்டப்பட்ட எல்லாக் கடன்கள் தொடர்பிலும் நிலுவையாக இருக்கும் தொகையானது, எவ்வாண்டில் அப்பணத்தொகையானது கடனாகப் பெறப்படவுள்ளதோ, அவ்வாண்டுக்கு நேர்முற்போந்த மூன்று ஆண்டுகளின்போது அத்தகைய பிரதேச சபையினால் பெறப்பட்ட மொத்த வருமானத்தை விஞ்சாதிருந்தால், அத்தகைய பணத்தொகை எதையும் கடனாகப் பெறுவதற்கு அமைச்சரின் அங்கீகாரமானது அவசியமானதாதல் ஆகாது.

(2) பிரதேச சபையொன்றினால் திரட்டப்படும் கடன் ஒவ்வொன்றும் அமைச்சரின் அங்கீகாரத்துடன் அக்கடனானது திரட்டப்படுமிடத்து, அமைச்சரினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறானதும், அத்துடன் வேறு ஏதேனும் விடயத்தில் பிரதேச சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறானதுமான அத்தகைய வட்டிவீதத்துக்கும் அதன் மீள்கொடுப்பனவுக்கான அத்தகைய நிபந்தனைகளுக்கும் அமைய இருத்தல் வேண்டும்.

(3) பிரதேச சபையொன்றினால் கடனாகப் பெறப்பட்ட, பணத்தொகையினதும் அல்லது பணத்தொகைகளினதும் அத்துடன் அவற்றின்மீது திரளுகின்ற வட்டியினதும் கொடுப்பனவை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காக அத்தகைய பணத்தொகையானது அல்லது பணத்தொகைகளானவை அல்லது அதன் ஏதேனும் பாகமானது எந்தப் பணம் கொடுக்குநரால் அல்லது பணம் கொடுக்குநர்களால் அல்லது எந்தப் பணம் கொடுக்குநரின் அல்லது பணம் கொடுக்குநர்களின் சார்பில் கடனாகக் கொடுக்கப்படக்கூடுமோ, அந்தப் பணம் கொடுக்குநருக்கு அல்லது பணம் கொடுக்குநர்களுக்கு, இச்சட்டத்தின்கீழ் விதிக்கப்படுகின்ற அல்லது சுமத்தப்படுகின்ற ஏதேனும் வீதவரியின் அல்லது வரியின் வரும்படிகளை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை , அல்லது பிரதேச சபைக்குச் சொந்தமான ஏதேனும் ஆதனத்தை அல்லது பிரதேச சபைக்குத் திரளுகின்ற வேறு ஏதேனும் வருமானமூலத்தை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை ஈடுவைத்துச் சாட்டுதல் செய்யலாம்.

கடன் பெறும் தத்துவங்களை வரையறுத்தல்.

179. (1) பிரதேச சபையிலிருந்து வருமதியான எல்லாக் கடன்கள் தொடர்பிலும், எந்நேரத்திலும் நிலுவையாயிருக்கின்ற தொகையானது (அவை இச்சட்டத்தின் அதிகாரத்தின்கீழ் திரட்டப்பட்டாலுஞ்சரி அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் அதிகாரத்தின்கீழ் திரட்டப்பட்டாலும்சரி), முற்போந்த ஐந்தாண்டுகளுக்கான எல்லா வீதவரிகளிலிருந்தும், வரிகளிலிருந்தும், ஆதனங்களிலிருந்தும் அத்துடன் வேறு வருமான மூலங்களிலிருந்தும் பிரதேச சபையாற் பெறப்பட்ட நியாயமான சராசரி ஆண்டு வருமானத்தைக் கூட்டுமொத்தத்தில் பத்து மடங்கு விஞ்சுதல் ஆகாது, அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு உளதாயிராத பிரதேச சபையொன்றின் விடயத்தில், அமைச்சரின் அங்கீகாரத்துக்கமைய, பிரதேச சபையினால் மதிப்பீடுசெய்யப்பட்டவாறாக அதன் ஓராண்டிற்கான வருமானத்தைக் கூட்டுமொத்தத்தில் பத்துமடங்கு விஞ்சுதல் ஆகாது.

(2) இப்பாகத்தின்கீழான கடன்கள் தொடர்பில் கொடுக்கப்பட்ட எல்லாப் பிணைப்பொறுப்புகளும் முத்திரைத்தீர்வை அற்றவையாயிருத்தல் வேண்டும்.

**180.** இப்பாகத்தின்கீழான எதேனும் கடனின் நோக்கத்துக்காகக் கொடுக்கப்படும் எதேனும் பிணைப்பொறுப்பின் படிவமும் அதை நிறைவேற்றும் முறையும், கடன்பெறப்பட்ட எவையேனும் பணத் தொகைகள் மீளக்கொடுப்பனவு செய்யப்படும் விதமும், ஒழுங்கு முறையும், அத்துடன் எதேனும் கடனை ஒழித்துக்கட்டுவதற்கான ஒழுங்குகளும், உள்ளூர்க்கடன்கள், அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் துணைவிதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடிய அத்தகையனவாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய துணைவிதிகள் எவையும் இல்லாதிருக்கும் பட்சத்தில், மாநகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க இருத்தலும் வேண்டும்; அத்துடன் சொல்லப்பட்ட ஏற்பாடுகளானவை, அவசியமான திரிபுகளோடு, அத்தகைய சூழ்நிலைகளில், இச்சட்டத்தின்கீழ் பிரதேச சபை எதற்கும் அளிக்கப்படுகின்ற கடன் எதற்கும் ஏற்புடையனவாதல் வேண்டும். பிணைப்பொறுப்பின் படிவம் முதலியன

**181.** தவிசாளர் அவசியமானதெனக் கருதுகின்ற எதேனும் வேலையை நிறைவேற்றுவதற்காகப் பிரதேச சபையின்மீது சுமத்தப்பட்ட எதேனும் கடமையை நிறைவேற்றும் நோக்கத்துக்காகக் கடன்கள் திரட்டுவதைப் பிரதேச சபையானது அனுமதிக்கத் தவறினால், தவிசாளரானவர், ஆணையாளரின் அங்கீகாரத்துடன், அத்தகைய கடன்களைத் திரட்டலாம் என்பதுடன், 178 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள எல்லாத் தத்துவங்களையும், அத்தகைய தத்துவங்கள் அப்பிரிவினால் தவிசாளருக்கு அளிக்கப்பட்டிருந்தன என்றுற்போன்று, பிரயோகிக்கலாம். கடன்களை நடாத்துவது தொடர்பாகப் பிரதேச சபைக்குள்ள தத்துவங்களைத் தவிசாளர் எப்போது பிரயோகிக்கலாம் என்பது

**182.** எவரேனும் ஆளிடமிருந்து பிரதேச சபைக்கு வருமதியான எதேனும் பணத்தொகை முழுவதையும் அல்லது அதன் எதேனும் பாகத்தை, விட்டுவிடப்படவேண்டிய அத்தொகையானது சிறிதளவானது அல்லது அறவிடப்படமுடியாதது என்ற எதுவின்மேல் அல்லது அத்தகைய ஆள் ஏழ்மையாய் இருக்கிறார் என்ற எதுவின் மேல், தீர்மானமொன்றின்மூலம் பிரதேச சபையானது விட்டுவிடலாம். ஐம்பது ரூபாவை விஞ்சுகின்ற தொகையின் விட்டு விடுகை தொடர்பான தீர்மானமொன்றானது, அமைச்சரின் அங்கீகாரத்துக்கு அமைய இருத்தல் வேண்டும். பிரதேச சபைக்கு வருமதியான பணத் தொகைகளை விட்டுவிடுதல்

## பாகம் VII

### பிரதேச சபை தொடர்பான குறைநிரப்பு ஏற்பாடுகள்

**183.** பிரதேச சபையொன்றானது கொடுப்பனவு செய்வதற்கு ஆளானதாக வரக்கூடிய எதேனும் தொடர்ச்சியிலிருந்து, வழக்கு நடவடிக்கையிலிருந்து அல்லது சட்ட நடவடிக்கைகளிலிருந்து அல்லது இவை தொடர்பில் எழுகின்ற எல்லாச் செலவுத்தொகைகளும், விதிப்பனவுகளும், செலவுகளும், பிரதேச சபை நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டும்; அத்துடன் பிரதேச சபையின் உறுப்பினர் எவரும் அல்லது பிரதேச சபை எல்லைகளுக்குள் வாழ்கின்ற வாசி எவரும், அக்கொடுப்பனவுக்குத் தனிப்பட்ட முறையில் ஆளாதல் ஆகாது. பிரதேச சபைக்கு எதிராக வழங்கப்படும் செலவுத் தொகைகளின் கொடுப்பனவு

**கூட்டங்கள், வரி, நிதி என்பன பற்றிய விதிகள்.**

184. (1) அமைச்சரானவர், இவ்வேற்பாடுகள் நிறைவேற்றப்படுவது அல்லது வலுவுக்குக் கொண்டுவரப்படுவது தொடர்பிலான ஏதேனும் கருமத்தின்மேல், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக விராத விதிகளை ஆக்கலாம்; அத்துடன், இத்தால் அளிக்கப்படுகின்ற தத்துவங்களின் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றி, பின்வரும் எல்லாக் கருமங்கள்மீதும் அல்லது அவற்றில் எவையேனும் கருமங் கள்மீதும் அத்தகைய விதிகளை ஆக்கலாம் :—

(அ) பிரதேச சபையொன்றின் கூட்டங்களைக் கூட்டுவதற்கான அறிவித்தலின்படிவம், சாதாரண கூட்டங்கள் எக்கால இடை வெளிகளில் நடாத்தப்படவேண்டுமென்பது, அத்துடன் கூட்டங்கள் நடாத்தப்படும் போது பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை;

(ஆ) பிரதேச சபையொன்றினால் ஆக்கப்படும் துணைவிதிகளின் கீழ் முன்கூட்டியே செலுத்தப்படற்பாலதல்லாத வாடகை அல்லது கட்டணம் எதுவும், அதன் கொடுப்பனவில் தவறுகையேதும் நிகழும் பட்சத்தில் எம்முறையில் பிரதேச சபையினால் உடனடியாக அறவிடப்படலாம் என்பது ;

(இ) நிதிதொடர்பிலானவையும் நிதிகளின் அத்துடன் வேறு ஆதனத்தின் நிருவாகம் தொடர்பிலானவையுமான எப்பல் வேறு கருமங்களுக்கு 171 ஆம் பிரிவின்கீழ் விதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ, அப்பல்வேறு கருமங்களும், அவற்றோடு சம்பந்தப்பட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான வேறு எல்லாக் கருமங்களும்;

(ஈ) பிரதேச சபையின் உறுப்பினர்களுக்கும், அலுவலர்களுக்கும் அல்லது சேவையாளர்களுக்கும், ஏதேனும் கடமைபுரிகை யில் உறப்பட்ட செலவுகளை ஈடுசெய்தல் என்ற வகையில் கொடுபடற்பாலதான உணவுச் செல்வுப்படியினதும் பயணப் படிகளினதும் வீதங்கள் ;

(உ) பிரதேச சபையின் கூட்டங்களில் சமூகமளித்தமைக்காகப் பிரதேச சபை உறுப்பினர்களுக்குக் கொடுபடற்பாலனவான பயணப்படிகளின் வீதங்கள் ;

(ஊ) பிரதேச சபையொன்றின் தவிசாளருக்கும் துணைத்தவிசாள ருக்கும் உறுப்பினர்களுக்கும் கொடுபடற்பாலனவான படிகளின் வீதங்கள் ;

(எ) பிரதேச சபைகளினால் அமைச்சருக்குக் காலத்துக்குக்காலம் அளிக்கப்பட வேண்டிய விபரத்திரட்டுக்கள் ;

(ஏ) களஞ்சியப்பொருட்களையும் சாதனத்தையும் பெற்றுக்கொள்ளு தலும் கையாளுதலும், பொருட் பதிவேடுகளை வைத்தி ருத்தலும் எம்முறையில் அத்தகைய பொருட் பதிவேடுகள் வைத்திருக்கப்படல் வேண்டும் என்பதும்;

(ஐ) உள்ளூராட்சிச் சேவையின் உறுப்பினர்களல்லாத பிரதேச சபைகளின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் நியமனமும், ஒழுக்காறும், இடைநிறுத்தமும், பதவிநீக்கமும், அத்துடன்—

(i) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்துநாலாம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூராட்சிச் சேவைச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள் உள்ளூராட்சிச் சேவை உத்தியோகங்களல்லாத உத்தியோகங்களுக்கு அல்லது பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்கு அவசியமான தகைமைகள் ;

(ii) அத்தகைய உத்தியோகங்களுக்கு அல்லது பதவிகளுக்கு குறித்தொதுக்கப்படவேண்டிய சம்பள அளவுகள் ;

(iii) அத்தகைய அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் வழங்கப்படக்கூடிய வராமைக்கானலீவு எதனதும் நியதிகளும் நிபந்தனைகளும், அதன் கால அளவும் ;

(iv) உள்ளூராட்சிச் சேவையின் உறுப்பினர்களல்லாத பிரதேச சபையின் அத்தகைய அலுவலர்களினதும், சேவையாளர்களினதும் நன்மைக்கான சகாய நிதிகள்;

(ஒ) பிரதேச சபையொன்றின் பிரதம நிறைவேற்று அலுவலர் என்ற தன்மையில், தவிசாளரின் தத்துவங்களும் கடமைகளும் ;

(ஓ) 126 (xii) ஆம் பிரிவின்கீழான துணைவிதிகள் ஏற்புடைத்தாகின்ற ஏதேனும் இடப்பரப்பை வரையறுக்குமுன்னர், பிரதேச சபையொன்றினால் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறை.

(2) இப்பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்படும் விதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுக்குப் பின்னர் அங்கீகாரத்துக்கென, கூடியளவு விரைவாகப் பாராளுமன்றத்துக்கு முன்னர் கொணரப்படுதலும் வேண்டும்.

(3) அமைச்சரினால் ஆக்கப்படும் விதி ஒவ்வொன்றும், பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படும்போது அதே கருமம்தொடர்பில் அல்லது அதே நோக்கத்துக்காகப் பிரதேச சபையொன்றினால் ஆக்கப்படும் அல்லது ஆக்கப்பட்டதாகக் கருதப்படும் ஏதேனும் துணைவிதியின்மீது அல்லது அப் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தின்மீது, மேலோங்கிநிற்றல் வேண்டும். அத்தகைய அங்கீகாரம்பற்றிய அறிவிப்பானது கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும்.

**தவிசாளரை அகற்றப்படுதலும் பிரதேச சபை கலைக்கப்படுதலும்.**

185. (1) (அ) தகுதியின்மையும் பிறழ் முகாமைத்துவமும், அல்லது

(ஆ) இச்சட்டத்தினால் சுமத்தப்பட்ட கடமைகளைப் புரிவதற்கு விடாப்பிடியான மறுப்பு அல்லது வேண்டுமென்ற அலட்சியம், அல்லது

(இ) அக்கடமைகளைப் புரிவதில் பிறழ்நடத்தை, அல்லது

(ஈ) அமைச்சரினது அல்லது ஆணையாளரினது பணிப்புக்களுக்கு, அறிவுறுத்தல்களுக்கு அல்லது விதப்புரைகளுக்கு விடாப்பிடியாகக் கீழ்ப்படியாமை அல்லது அவற்றின் புறக்கணிப்பு, அல்லது

(உ) பிரதேச சபையொன்றின் தவிசாளர்பால் அல்லது பிரதேச சபையின் உறுப்பினர்களுள் எவர்பாலும், இச் சட்டத்தினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் துர்ப்பிரயோகம்,

என்பன இருக்கின்றன என்பதற்குப் போதுமானளவு எண்பிப்பு இருக்கின்றதென அமைச்சர் எந்நேரத்திலும் திருப்திப்பட்டால், ஒவ்வொரு விடயத்தினதும் சூழ்நிலைகள் தேவைப்படுத்தக்கூடியவாறு, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அமைச்சரானவர்—

(i) தவிசாளரைப் பதவியிலிருந்து அகற்றலாம், அல்லது

(ii) எல்லா உறுப்பினர்களையும் அல்லது அவர்களுள் எவரையும் பதவியிலிருந்து அகற்றலாம் ; அல்லது

(iii) பிரதேச சபையைக் கலைக்கலாம் ;

அத்துடன், அத்தகைய கட்டளையானது, வசதியாகக்கூடிய விரைவில் பாராளுமன்றத்துக்கு முன்னர் இடப்படலும் வேண்டும்.

(2) அமைச்சரானவர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்றை ஆக்குமுன்னர், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள எவையேனும் கருமங்கள் பற்றித் தம்மைத் திருத்திப்படுத்தும் நோக்கத்துக்கென, அத்தகைய கருமம்பற்றி விசாரணைசெய்து மூன்று மாத காலப்பகுதியொன்றுக்குள், அதன்மீது அறிக்கையிடும்படி ஓய்வு பெற்ற நீதி, நிருவாக அலுவலர் ஒருவரை நியமித்தல் வேண்டும். என்பதுடன், அத்தகைய அலுவலரானவர், அத்தகைய விசாரணை தொடர்பாக விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவொன்றின் தத்துவங்களை உடையவராக இருத்தலும் வேண்டும்.

(3) (அ) அமைச்சரானவர், ஏதேனும் கருமத்தைப்பற்றி விசாரணை செய்யுமாறு (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஓய்வுபெற்ற நீதி நிருவாக அலுவலரொருவரை நியமிக்கும்போது, அமைச்சர் விடயம் ஒவ்வொன்றினதும் சூழ்நிலைகள் தேவைப்படுத்தக்கூடியவாறு, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் பின்வருவனவற்றைச் செய்யலாம் :—

(i) தவிசாளரைப் பதவியிலிருந்து இடைநிறுத்தலாம் ; அத்துடன், துணைத் தவிசாளரை, அல்லது துணைத்தவிசாளரின் பதவி வறிதாயிருக்குமிடத்து அல்லது துணைத்தவிசாளரானவர் இடைநிறுத்தப்பட்டிருக்குமிடத்து, தவிசாளரின் தத்துவங்களைப் பிரயோகிக்குமாறும், கடமைகளைப்புரியுமாறும் உதவி ஆணையாளரைப் பணிக்கலாம் ; அல்லது

(ii) உறுப்பினர்களுள் எவரையும் பதவியிலிருந்து இடை நிறுத்தலாம் ; அல்லது

(iii) பிரதேச சபையை இடைநிறுத்திவிட்டு, பிராந்தியத்தின் உதவி ஆணையாளரை, அப்பிரதேச சபையினதும் அதன் தவிசாளரினதும் தத்துவங்களைப் பிரயோகிக்குமாறும் கடமைகளைப் புரியுமாறும் பணிக்கலாம்.

(ஆ) இரண்டாம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஆளினது அறிக்கையைப் பெற்றுக்கொண்டதன்மேல், அமைச்சரானவர் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்றை ஆக்கலாம் அல்லது இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையை இல்லாதொழிக்கலாம்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழான கட்டளைமூலம் பிரதேச சபையொன்றின் உறுப்பினர் எவரையும் அமைச்சரானவர் பதவியிலிருந்து அகற்றுகின்றவிடத்து, அவ்வாறு அகற்றப்பட்ட அத்தகைய உறுப்பினருக்குப் பதிலாக நியமிக்கப்படும் உறுப்பினரானவர், தமக்கு முற்போந்தவரின் பதவிக்காலத்தில் முடிவுறுதெஞ்சியுள்ள காலப் பகுதிக்கு அல்லது பகுதிக்குப் பதவிவகித்தல்வேண்டும்.

(5) ஓராம்பிரிவின்கீழான கட்டளைமூலம் பிரதேச சபையொன்றை அமைச்சரானவர் கலைக்கின்றவிடத்து, அவர், அதே கட்டளைமூலம் அல்லது பின்னுறும் ஏதேனும் கட்டளைமூலம், பின்வருவனவற்றைச் செய்யலாம் :—

(அ) பிரதேச சபையின் அலுவல்களை நிருவகிப்பதற்கெனவும், அத்துடன் அந்நோக்கத்துக்கெனவும், கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கும் அல்லது வரையறைகளுக்கும் அமைய இச்சட்டத்தின்கீழ் பிரதேச சபையொன்றின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கெனவும் கடமைகளைப் புரிவதற்கெனவும், குறிப்பிடப்பட்ட காலப் பகுதியொன்றுக்கு, அல்லது காலத்துக்குக்காலம் விசேட ஆணையாளர் ஒருவரை அல்லது ஆணையாளர்களை நியமிக்கலாம், அத்துடன்

(ஆ) அவருக்கு உசிதமானதெனத் தோன்றுகின்றவாறு அத்தகைய ஒரு பெரிய எண்ணிக்கையிலான அல்லது சிறிய எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக்கொண்டுள்ள புதிய பிரதேச சபையொன்றை அப்பிரதேச சபை இடப்பரப்புக்கென அமைப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய பணிப்புக்களை விடுக்கலாம்.

(6) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் விசேட ஆணையாளர் அல்லது ஆணையாளர்கள் எவரையும் அமைச்சரானவர் நியமிக்கின்றவிடத்து, ஒப்பந்தங்களின்கீழான எல்லா ஆதனமும் உரிமைகளும், அத்துடன் பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள எல்லாத் தத்துவங்களும் அத்தகைய விசேட ஆணையாளருக்கு அல்லது ஆணையாளர்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளனவெனக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன் கட்டளையில் கூறப்பட்டுள்ள காலப்பகுதியானது முடிவடையும் வரைக்கும் அல்லது அமைச்சர் வேறுவிதமாகப் பணிக்கும் வரைக்கும், பிரதேச சபையின் எல்லாப் பொறுப்புக்களும் கடமைகளும் அத்தகைய விசேட ஆணையாளருக்கு அல்லது ஆணையாளர்களுக்கு கைமாற்றப்படல் வேண்டுமென்பதுடன், அவரினால் அல்லது அவர்களினால் அவை நிறைவேற்றப்படுதலும் வேண்டும்.

(7) பிரதேச சபை ஒன்றன் விவகாரங்களின் நிருவாகம் சிறப்பு ஆணையாளர் ஒருவரினால் அல்லது ஆணையாளர்களினால் முடிவுறுத் தப்பட்டதன்மேல், அந்தப் பிரதேச சபை இடப்பரப்புக்கு ஒரு புதிய பிரதேச சபை அமைக்கப்படும் ; புதிய பிரதேச சபையானது விடயத் திற்கு ஏற்ப சிறப்பு ஆணையாளரின் அல்லது ஆணையாளர்களின் வழியுரிமையானதாதல் வேண்டும்.

துணைவிதிகளை மீறல்.

186. இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட அல்லது ஏதேனும் எழுத் திலான சட்டத்தின் பயனாகச் செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படும் துணைவிதியொன்றினது மீறுகை ஒவ்வொன்றும், எவ்விடப்பரப்பில் மீறுகையானது நடைபெறுகின்றதோ அவ்விடப்பரப்பின்மீது நியா யாதிக்கம் கொண்டுள்ள நீதிவான் நீதிமன்றத்தினால், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளவாறான முறையில் விளங்கப்படக்கூடிய தவறொன்றாதல் வேண்டும்.

பிரதேச சபையானது தவறுகை முதலியன புரியும் போது அமைச்சருக்குள்ள தத்துவம்.

187. (1) பிரதேச சபை எதுவும், இச்சட்டத்தினால் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் பிரதேச சபையின்மீது சுமத் தப்பட்டுள்ள கடமை எதனையும் புரியாது அல்லது வேலையெதனையும் கொண்டுநடாத்தாது விட்டுவிடுகின்றதென, அல்லது இச்சட்டத்தின் கீழான அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழான அதன் கடமைகள் எவற்றையும் புரிவதில் அல்லது அதன்பொறுப் புடமைகள் எவற்றையும் நிறைவேற்றுவதில் பிரதேச சபையானது வேறு விதமாகத் தவறுகை புரிந்துள்ளதென எந்நேரத்திலும் அமைச்சருக்குத் தோன்றினால், அறிவித்தலில் குறித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய காலத்துக்குள் பிரதேச சபையானது அதற்கு முரணாகக் காரணம் காட்டாவிடின், அத்தகைய விட்டு விடுகை அல்லது தவறுகை பற்றி விசாரணைசெய்து அமைச்சருக்கு அறிக்கை இடுவதற்கும் அத்தகைய கடமையைப் புரிகின்ற அல்லது அத்தகைய வேலையை நிறைவேற்றுகின்ற அல்லது அத்தகைய தவறு கையைச் சீராக்குகின்ற நோக்கத்துக்காக எடுக்கப்படவேண்டிய வழி வகைகள் பற்றி விதப்புரைகள் செய்வதற்கும் அமைச்சரானவர் ஆளொருவரை அல்லது ஆட்களை நியமிப்பாரெனப் பிரதேச சபைக்கு அமைச்சரானவர் எழுத்திலான அறிவித்தல் கொடுக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எப்பிரதேச சபைக்கு அறிவித்தலானது கொடுக்கப்பட்டுள்ளதோ, அப்பிரதேச சபையானது, காரணம் எது வும் அல்லது போதுமானளவு காரணம் காட்டாதிருக்குமிடத்து, அறி வித்தலில் குறிப்பீடுசெய்யப்பட்ட விசாரணையை நடாத்துவதற்கு அமைச்சரானவர், ஆளொருவரை அல்லது ஆட்களை நியமித்தல் வேண்டும். அத்தகைய விசாரணை செயல்முறைக்குகந்தவரை பகிரங்க மாக நடாத்தப்படுதல் வேண்டும்.

**181 ஆம் பிரிவின் கீழான அறிக்கை பெறப்பட்டதன் மேல் எடுக்கப்பட வேண்டிய வழிவகைகள் பற்றி அமைச்சர் தீர்மானித்தல்.**

**188.** (1) நூற்றுஎண்பத்தேழாம் பிரிவின்கீழான விசாரணையொன்றை நடாத்துவதற்கு நியமிக்கப்பட்ட ஆளின் அல்லது ஆட்களின் அறிக்கையானது கிடைத்தன்மேல், பிரதேச சபையானது எக்கடமையைப்புரியாது அல்லது எவ்வேலையைக் கொண்டு நடாத்தாது விட்டுவிட்டதோ அல்லது எக்கடமை அல்லது எவ்வேலை தொடர்பில் அது தவறுகை எதனையும் புரிந்துள்ளதோ, அக்கடமை எதனையும் புரிகின்ற அல்லது அவ்வேலை எதனையும் கொண்டுநடாத்துகின்ற நோக்கத்துக்காக எவ்வழிவகைகள் எடுக்கப்படல்வேண்டும் என அமைச்சரானவர் தீர்மானித்தல் வேண்டும் ; அத்துடன், ஒரு கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்துக்குள் அதற்கிணங்க அத்தகைய வழிவகைகளை எடுக்கும்படியும் இச்சட்டத்தின்கீழ் விதிக்கப்படற்பாலனவான ஒன்றோ அல்லது அதற்குமேற்பட்ட வீதவரிகள் அல்லது வரிகள் எவற்றையும் விதிப்பதன்மூலம் அல்லது கடன்ஒன்றின்மூலம் அந்நோக்கத்துக்கு அவசியமான நிதிகளைத் திரட்டும்படியும் பிரதேச சபையைத் தேவைப்படுத்துகின்ற அக்கட்டளையை எழுத்தில் அமைச்சர் ஆக்குதல் வேண்டும்.

(2) பிரதேச சபையொன்றானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலத்துக்குள் அதற்கு இணங்கியொழுகத் தவறினால், அமைச்சரானவர், கட்டளையில் குறித்துரைக்கப்பட்டுள்ள வழிவகைகளை எடுப்பதற்கு எழுத்துமூலம் ஆளெவரையும் நியமிக்கலாம் ; அத்துடன், அத்தகைய ஆளுக்குக் கொடுபடவேண்டிய ஊதியத்தை எழுத்துமூலம் நிர்ணயிக்கலாம் என்பதுடன், அத்தகைய ஊதியமும் அமைச்சரின் கட்டளைக்கிணங்க எடுக்கப்பட்ட வழிவகைகளின் செலவுத்தொகையும், பிரதேச சபை நிதியத்திலிருந்து கொடுபடல் வேண்டும் அல்லது செலவிடப்படல் வேண்டுமெனவும், அவசியமானால், இச்சட்டத்தின்கீழ் விதிக்கப்படக்கூடிய ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட வீதவரிகள் அல்லது வரிகள் சுமத்தப்படல், அல்லது அதிகரிக்கப்படல், அத்துடன் விதிக்கப்படல் வேண்டுமெனவும் பணிக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான அமைச்சரின் பணிப்புரையொன்றை நிறைவேற்றும் நோக்கத்துக்கென, அவ்வுட்பிரிவின்கீழ் நியமிக்கப்படுகின்ற ஆளெவரும், பின்வரும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) அத்தகைய பணிப்புரை சம்பந்தப்பட்ட பிரதேச சபையினால் சுமத்தப்படக்கூடியவாறான, அல்லது அதிகரிக்கப்படக்கூடியவாறான, அத்துடன் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதவரி அல்லது வரி எதனையும் சுமத்துவதற்கும் அல்லது அதிகரிப்பதற்கும், அத்துடன் விதிப்பதற்கும் ; அத்துடன்

(ஆ) பிரதேச சபையின் பிரதேச சபை நிதியத்திலிருந்து பணத்தொகை எதனதும் மீளப்பெறுகைக்காக காசோலை ஒன்றை அல்லது கொடுப்பனவுக் கட்டளையொன்றை ஒப்பமிட்டு வழங்குவதற்கும் அப்பணத்தொகை எதனையும் மீளப்பெறுவதற்கும் ;

அத்துடன் அத்தகைய பணிப்புரையின்மூலம் அவரினால் கொடுபடவேண்டுமென அல்லது செலவிடப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட எல்லாப் பணத்தொகைகளையும் செலவினத்தையும் செலுத்

தியபின்னர் அல்லது செலவிட்டபின்னர், இவ்வுட்பிரிவின்கீழ் தமது தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அவரினால் பெறப்பட்ட பணமெதுவும் மேன்மிகையாக இருந்தால், அதை அவர் பிரதேச சபை நிதியத்துக்குச் செலுத்துதலும் வேண்டும்.

**கடன்களைத் திரட்டுவதற்கான பணிப்புரை வழங்குதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம்.**

189. பிரதேச சபை இடப்பரப்பொன்றின் எல்லைக்குள் வீதவரியை அல்லது வரியைச் சுமத்துதல், அதிகரித்தல் அத்துடன் விதித்தல் என்பவற்றோடு மேலதிகமாக அல்லது அதற்குப் பதிலாக அப்பிரிவின் கீழ் எதேனும் கடமையைப்புரியும் அல்லது எதேனும் வேலையைக் கொண்டு நடாத்தும் அல்லது எதேனும் தவறுகையைச் சரிசெய்யும் நோக்கத்துக்காக அதன் எல்லைகளுக்குள் எதேனும் வீதவரியின் அல்லது வரியின் பிணைப்பொறுப்பின்மீது உள்ளூர்க் கடமைகள் அபிவிருத்தி ஆணையாளர்களிடமிருந்து கடனொன்றைத் திரட்டுமாறு 188 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப் பட்ட ஆளொருவரை அமைச்சர் பணிக்கலாம்.

**செலவினங்களை அத்தாட்சிப் படுத்துவதற்கான தத்துவம்.**

190. நூற்றெண்பத்தெட்டாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஆளெவராலும் உறப்பட்ட செலவுத்தொகையை அல்லது உறப்படவுள்ள செலவினங்களின் மதிப்பீடொன்றை, அத்துடன் அல்லது உறப்பட்ட அல்லது உறப்படவேண்டியதாகவுள்ளதென மதிப்பிடப்பட்ட செலவினங்களைக் கொடுத்துத்தீர்க்கும் நோக்கத்துக்காகத், திரட்டுவதற்குத் தேவையான எதேனும் கடன்தொகையை அமைச்சர் காலத்துக்குக்காலம் அத்தாட்சிப்படுத்தலாமென்பதுடன் அமைச்சரின் சான்றிதழொன்றை அது தொடர்புபடுத்தும் எல்லா விடயங்களுக்கும் முடிவானதாதலும் வேண்டும்.

**கடன்களை முற்பணமாக வழங்க உள்ளூராட்சி ஆணையாளர்களுக்குள்ள தத்துவம்.**

191. (1) நூற்றெண்பத்தெட்டாம் பிரிவின்கீழ் எதேனும் பிரதேச சபை தொடர்பாக அவசியமானதென கடனொன்றை அமைச்சர் அத்தாட்சிப்படுத்துகின்றபோதெல்லாம், உள்ளூர்க் கடன்கள், அபிவிருத்தி ஆணையாளர்கள், உள்ளூராட்சி ஆணையாளருக்கு அல்லது 188 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஆளுக்கு, பிரதேச சபை இடப்பரப்பின் எல்லைகளுக்குள் வேறேதேனும் பிணைப்பொறுப்பினைத் தேவைப்படுத்தாது எதேனும் வீதவரியின் அல்லது வரியின் பிணைப்பொறுப்பின் மீது அத்தகைய கடன்தொகையை, வழங்கலாம்.

(2) உள்ளூராட்சி ஆணையாளர் அல்லது 188 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஆள் எதேனும் பிரதேச சபைக்காகப் பெறப்பட்டவாறான (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எதேனும் அத்தகைய கடனுக்குப் பொறுப்பாக அவ்விடப்பரப்பில் எதேனும் வீதவரியை அல்லது வரியை ஈடுவைக்கலாம். அத்துடன் அத்தகைய ஈடானது அப்பிரதேச சபையால் வைக்கப்பட்டிருந்தாற்போன்றவாறான அதே பயனைக்கொண்டிருத்தல் வேண்டும்.

**பிரதேச சபையிலிருந்து முதலையும், வட்டியையும் அறவிடுதல்.**

192. (1) எதேனும் பிரதேச சபை இடப்பரப்பின் எல்லைக்குள், இப்பாகத்தின் கீழ், உறப்பட்ட அல்லது உறப்படவேண்டிய எவையேனும் செலவினங்களின் கொடுப்பனவுக்காக, பெறப்பட்ட எதேனும் கடன் தொடர்பில் வருமதியான முதலும், வட்டியும், பிரதேச சபையிலிருந்து வருமதியான கடனொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன், வேறு எதேனும் நிவாரணங்களோடு, மேலதிகமாக, உள்ளூர் கடன்களும், அபிவிருத்தி கட்டளைச்சட்டத்தினால் எற்பாடு செய்யப்பட்ட முறையில் அறவிடப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான ஏதேனும் பிரதேச சபை தொடர்பிலான அத்தகைய செலவுகளைக் கொடுப்பனவு செய்த பின்னர், உள்ள ஏதேனும் கடனின் மேல்மிகையானது, அம்மேன்மிகை, அமைச்சரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பின்னர், பிரதேச சபை நிதியத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உள்ளூராட்சி ஆணையாளரின் தத்துவங்களை அல்லது கடமைகளை, உதவி ஆணையாளருக்குக் கையளித்தல்.**

193. இச்சட்டத்தினால் அல்லது இதன்கீழ் உள்ளூராட்சி ஆணையாளருக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது சுமத்தப்பட்ட, அல்லது குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி, ஆணையாளரால், பொதுவாக அல்லது சிறப்பாக எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட உதவி ஆணையாளரினால், ஆணையாளரின் பணிப்புரைக்கும், கட்டுப்பாட்டுக்கும் அமைய அத்தகைய எழுத்திலான அதிகாரத்தினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்துக்கும், அத்தகைய அளவுக்கும், பிரயோகிக்கப்படலாம், புரியப்படலாம், அல்லது நிறைவேற்றப்படலாம்.

**பிரதேச சபையொன்றின் ஏதேனும் புத்தகங்களை அல்லது ஆவணத்தைக் கேட்டுப் பரிசோதிப்பதற்கு அமைச்சருக்குள்ள தத்துவம்**

194. பிரதேச சபையின் எவையேனும் அலுவல்கள் தொடர்பான எவையேனும் புத்தகங்களை அல்லது ஆவணத்தைப், பரிசோதனைக்காகத் தமக்கு அனுப்புமாறு, அமைச்சர், அப்பிரதேச சபையின் தவிசாளரை எழுத்தில் பணிக்கலாம்.

**கொள்கை பற்றி விதப்புரைகள் செய்வதற்கான தத்துவம்.**

195. (அ) அமைச்சரின் அல்லது ஆணையாளரின் அபிப்பிராயப்படி பிரதேச சபையினால் நிருவகிக்கப்படும் இடப்பரப்பினுள் பொதுச் சுகாதார அல்லது பாதுகாப்பு நலன் கருதி அதற்கான எடுக்கப்பட வேண்டிய எவையேனும் வழிவகைகளை; அல்லது

(ஆ) அமைச்சரின் அல்லது ஆணையாளரின் அபிப்பிராயப்படி இலங்கையில் அல்லது இலங்கையின் ஏதேனும் பாகத்தில் பொதுவாக வலுவிலிருக்கும், நிருவாகக் கொள்கையோடு, பிரதேச சபையானது அதன் கொள்கையை இயைபுபடுத்தல் வேண்டுமென அமைச்சர் அல்லது ஆணையாளர் கருதினால், எந்த நிருவாகக் கொள்கை விரும்பப்படுகின்றதோ, அந்த நிருவாகக் கொள்கை பற்றிய ஏதேனும் பொதுவிடயங்களை,

ஆணையாளர் அல்லது அமைச்சர் ஏதேனும் பிரதேச சபையின் கவனத்துக்குக் கொண்டுவரலாம்.

**அமைச்சரினதும், ஆணையாளரினதும் தத்துவம்.**

196. (1) அமைச்சர் அல்லது ஆணையாளர் அல்லது அமைச்சரால் அல்லது ஆணையாளரால் அது சார்பாகப் பொதுவாக அல்லது சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்ட, எவரேனும் ஆள்,

(அ) பிரதேச சபையொன்றினால் பயன்படுத்தப்படும் அல்லது அதனால் இருப்பாட்சி செய்யப்படும் அல்லது அதன் கட்டுப்பாட்டில் இருக்கும், ஏதேனும் பொதுக் கட்டிடத்தை, அசைவற்ற ஆதனத்தை அல்லது நிறுவனத்தை, அல்லது பிரதேச சபையின் பணிப்பின்கீழ் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஏதேனும் வேலையைப் பரிசோதிக்கலாம் ;

(ஆ) பிரதேச சபையின் உடைமையிலுள்ள, அல்லது கட்டுப்பாட்டின கீழுள்ள, எவையேனும் புத்தகங்களை அல்லது ஆவணங் களைக் கேட்டுப் பரிசோதிக்கலாம் அல்லது பொறுப்பேற்கலாம்;

(இ) ஏதேனும் பிரதேச சபையின் ஏதேனும் பணத்தை அல்லது ஆதனத்தைப் பொறுப்பில் வைத்திருக்கும் அல்லது அதன் மீது ஆதிக்கம் கொண்டிருக்கும் எவரேனும் ஆளை, அத்த கைய பணத்தை அல்லது ஆதனத்தைப் பரிசோதனைக்காக அல்லது சரி பார்த்தலுக்காகச் சமர்ப்பிக்குமாறு தேவைப் படுத்தலாம் ;

(ஈ) பிரதேச சபையின் நிருவாகம் சம்பந்தமாக அல்லது இச்சட்டத் தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் பிர தேச சபையினால் தத்துவங்கள் பிரயோகிக்கப்படுதல், கடமை களும், புரியப்படுதல் சம்பந்தமாக ஏதேனும் கருமத்தைப் பற்றி விசாரணை செய்யலாம்.

(உ) பிரதேச சபை அல்லது அதற்கான ஏதேனும் குழு தொடர் பான கூற்றுக்கள், கணக்குகள், அறிக்கைகள், அல்லது ஆவணங்களின் பிரதிகள் என்பவற்றைக் கொடுத்துதவுமாறு ஏதேனும் பிரதேச சபையைத் தேவைப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அவ்வாறு தேவைப்படுத்தப்படும் பொழுது எவையேனும் புத்தகங்களை ஆவணங்களை, பணங்களை அல்லது ஆதனங்களைச் சமர்ப்பிக்க அல்லது எவையேனும் கூற்றுக் களை, கணக்குகளை அல்லது ஆவணங்களின் பிரதிகளைக் கொடுத்துவ தவறுகின்ற அல்லது மறுக்கின்ற ஆளெவரும், தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும், அத்து டன் அத்தகைய குற்றத்தீர்ப்பின் பின்னர் அத்தகைய தவறுனது தொடர்ந்து புரியப்படுகின்ற நாளொவ்வொன்றுக்கும், மேலும் ஐம் பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதல் வேண் டும்.

ஆணையாளருக் குள்ள மேற்பார்வைத் தத்துவங்கள்.

197. ஆணையாளர் அல்லது அதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், பிரதேச சபை இடப்பரப்பொன்றின் எல்லை களுக்குள், அவர்களின் தத்துவங்களையும், பணிகளையும் முறையாகப் பிரயோகிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும், பிரதேச சபையின் அலு வலர்களுக்குள்ளவாறு தேவைப்படுத்தப்பட்ட அதே தத்துவங்களையும் அதிகாரத்தையும் உடையவராதல் வேண்டும்.

ஆயின், ஆணையாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், இப்பிரிவின்கீழ் அவர்களின் தத்துவங்களையும், பணிகளையும் பிரயோ கிக்கையிலும், நிறைவேற்றுகையிலும், அப்பிரதேச சபையின் தவிசாள ருடன் கலந்தாலோசித்துச் செயலாற்றுதல் வேண்டும்.

வீதிக்கு அல்லது பாதைக்கு பெயரிடுதல்.

198. அமைச்சர், அவரது சொந்தப் பிரேரணையின் மேல் அல்லது பிரதேச சபையால் அதன்பொருட்டு செய்யப்பட்ட விண்ணப்பத்தின் பேரில் பிரதேச சபை இடப்பரப்பிலுள்ள ஏதேனும் வீதி அல்லது பாதை எப்பெயரினால் அறியப்படவேண்டுமென்பதனைத் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன் அதே முறையில், எப்பொழுதேனும் ஏதேனும் வீதியின் அல்லது பாதையின் பெயரை மாற்றுதலும் வேண்டும்.

## பாகம் VIII

## பொது

### விதிப்பனவுகளையும், செலவுகளையும் அறவிடுதல்

**199.** இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் சட்டவாக்கத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் துணைவிதியின், விதியின் அல்லது ஒழுங்குவிதியின், ஏற்பாடுகளின்கீழ், ஏதேனும் வீட்டின், கட்டிடத்தின், அல்லது காணியின் சொந்தக்காரரால் அல்லது இருப்பாட்சியாளரால், ஏதேனும் வேலை நிறைவேற்றப்படவேண்டுமென்று பிரதேச சபையானது தேவைப்படுத்தி, அத்தகைய வேலையை நிறைவேற்றுவதில் தவறுகை ஏற்படும்போதிலெல்லாம் அத்தகைய தவறுகைக்காக ஏதேனும் தண்டம், ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலுஞ்சரி, இல்லாவிடினுஞ்சரி பிரதேச சபையானது அத்தகைய வேலையை நிறைவேற்றச் செய்விக்கலாமென்பதுடன், அதற்காகப் பிரதேசசபையினால் உறப்பட்ட செலவுகள், அத்தகைய வேலை எவ்வாளினால் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டுமோ அவ்வாளினால் செலுத்தப்படுதலும் வேண்டும். அத்துடன் இப்பாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அறவிடப்படற்பாலதாதலும் வேண்டும்.

*வேலைகளை நிறைவேற்றுதலிலும் செலவுகளை அறவிடுவதிலும் சொந்தக்காரரால் அல்லது இருப்பாட்சியாளரால் செய்யப்பட்ட தவறுகை மீது, பிரதேச சபைக்குள்ள தத்துவம்.*

**200.** (1) நூற்றுத்தொண்ணூற்று ஒன்பதாம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தவறுகையைச் செய்யும் ஆள், வீட்டின், கட்டிடத்தின் அல்லது காணியின் சொந்தக்காரராயின், அத்தகைய சொந்தக்காரருக்கெதிராக வழக்கொன்று அல்லது நடவடிக்கையொன்று கொண்டுவரப்பட்டு அல்லது எடுக்கப்பட்டு இருந்தாலுஞ்சரி, இல்லாவிடினுஞ்சரி, பிரதேச சபையானது, மேலதிக நிவாரணமாக, அப்போதைக்குச் சொந்தக்காரரால் செலுத்தப்படவேண்டிய எல்லாச் செலவுகளையும் அல்லது அவற்றின் ஏதேனும் பாகத்தினைக் கொடுப்பனவு செய்யுமாறு அப்போது அல்லது அதன்பின்னர் எப்போதேனும் அவ்வீட்டை கட்டிடத்தை அல்லது காணியை, அத்தகைய சொந்தக்காரரின் கீழ் இருப்பாட்சி செய்கின்ற ஆளைத் தேவைப்படுத்தலாம்.

*அவரது வாடகையிலிருந்து விதிப்பனவுகளைக் கழிக்கக்கூடிய இருப்பாட்சியாளர் மீது விதிப்பனவுகளை அறவிடுவதற்கான தத்துவம்.*

(2) தேவைப்படுத்தப்பட்டதன்மேல், இருப்பாட்சியாளர் கொடுப்பனவு செய்யத் தவறினால், (1)ஆம் உட்பிரிவின்கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் செலவு முழுவதும் அல்லது அதன் ஏதேனும் பகுதி அத்தகைய இருப்பாட்சியாளரின் பண்டங்களையும், உடைமைகளையும் நடுக்கட்டுதல்மூலம் அறவிடப்படலாம்.

(3) பிரதேச சபையால் உறப்பட்ட செலவுகள் தொடர்பில் ஏதேனும் பணம் (1)ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (2)ஆம் உட்பிரிவின்கீழ் இருப்பாட்சியாளரால் செலுத்தப்பட்டவிடத்து அல்லது அவரிடமிருந்து அறவிடப்பட்டவிடத்து, இருப்பாட்சியாளர், சொந்தக்காரருக்கு அவரால் செலுத்தப்படவேண்டிய வாடகையிலிருந்து அத்தகைய பணத்தொகையைக் கழிப்பதற்கும், அத்தகைய பணத்தொகை அவருக்கு முழுதாக ஈடுசெய்யப்படும் வரை அவ்வீட்டின், கட்டிடத்தின் அல்லது காணியின் உடைமையை வைத்திருப்பதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

13 — ச 094616 (86/12)

**வருமதியாக வேண்டிய வாடகையின் தொகையிலும் பார்க்கக் கூடிய தொகைக்கு இருப்பாட்சியாளர்கள் பொறுப்பாகாதல் என்பது.**

201. (1) இச்சட்டத்தினால் அல்லது வேறு ஏதேனும் சட்டவாக்கத்தினால் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் துணைவிதியினால் விதியினால் அல்லது ஒழுங்குவிதியினால் அறவிடப்படும் எவையேனும் செலவுகள் தொடர்பாக ஏதேனும் வீட்டின், கட்டிடத்தின் அல்லது காணியின் இருப்பாட்சியாளர் எவரும், அந்த நோக்கத்துக்காகப் பிரதேச சபையினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மேல், அவரது வாடகைத் தொகையையும் அத்தகைய வாடகை எவ்வாளுக்குச் செலுத்தப்படவேண்டுமோ, அவ்வாளினது முகவரியையும் உண்மையாகத் தெரிவிக்கத் தவறினால் அல்லது மறுத்தாலன்றி எவ்வளவுகள் தொடர்பில் அத்தகைய செலவினங்கள், அவரிடமிருந்து கேட்கப்பட்ட நேரத்தில் செலுத்தப்படவேண்டியதாகவுள்ளதோ அல்லது அவ்வாறு கேட்கப்பட்டிருக்கும் அவரது காணிச் சொந்தக்காரருக்கு வாடகையைச் செலுத்த வேண்டுமென்ற அறிவித்தலுக்கும் பின்னர் எந்நேரத்தில் திரட்டப்பட்டு செலுத்தப்படவேண்டியதாகவுள்ளதோ, அவ்வளவுகளுக்காக அவரிடமிருந்து வருமதியான வாடகையிலும் பார்க்கக் கூடிய தொகையைச் சொந்தக்காரருக்குச் செலுத்துவதற்குப் பொறுப்புடையவராதல் ஆகாது.

(2) எவரேனும் இருப்பாட்சியாளரிடம் கேட்கப்பட்ட தொகையானது அவ்வாறு கேட்கப்பட்ட நேரத்தில் அவரால் கொடுக்கப்பட வேண்டிய அல்லது அப்பொழுதுமுதல் திரண்டுள்ள வாடகையிலும் கூடுதலானதென்பதை எண்பிக்கும் பொறுப்பு, அத்தகைய இருப்பாட்சியாளரினதாதல் வேண்டும்.

(3) இதிலடங்கியுள்ளதெதுவும், மேலே சொல்லப்பட்ட அத்தகைய எவையேனும் வேலைகளுக்கான செலவுகளின் கொடுப்பனவு தொடர்பாக, எவரேனும் சொந்தக்காரருக்கும், இருப்பாட்சியாளருக்குமிடையே செய்யப்பட்ட, ஏதேனும் விசேட ஒப்பந்தத்தைப் பாதிப்பதாகக் கருதப்படுதலாகாது.

**சொந்தக்காரர் தவறுகையின் இருப்பாட்சியாளர் வேலைகளை நிறைவேற்றுதலும் வாடகையிலிருந்து செலவுகளைக் கழித்தலும்.**

202. (1) ஏதேனும் வீட்டின், கட்டிடத்தின் அல்லது காணியின் சொந்தக்காரர், அவரால் நிறைவேற்றப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் வேலையை நிறைவேற்றத்தவறும்போதிலெல்லாம் அத்தகைய வீட்டின், கட்டிடத்தின் அல்லது காணியின் இருப்பாட்சியாளர் பிரதேச சபையின் அங்கீகாரத்துடன், அத்தகைய வேலையை நிறைவேற்றச் செய்யலாம் அத்துடன் அதற்கான செலவுகள் சொந்தக்காரரால் அவருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் அல்லது அத்தொகையானது அவரிடமிருந்து அத்தகைய சொந்தக்காரருக்கு வருமதியாக வருகின்ற வாடகையிலிருந்து, காலத்துக்குக் காலம் கழிக்கப்படலாம்.

(2) ஒராமுட்பிரிவின்கீழ் இருப்பாட்சியாளரால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், அவ்வுட்பிரிவினால் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு, முழுமையாகச் செலுத்தப்படும்வரை, அல்லது கழிக்கப்படும் வரை ஏதேனும் வீட்டின், கட்டிடத்தின் அல்லது காணியின் சொந்தக்காரர் அதிலிருந்து, இருப்பாட்சியாளரை வெளியேற்றுவதற்கு உரித்துடையவராதல் ஆகாது.

**203.** ஏதேனும் வீடு, கட்டிடம் அல்லது காணி தொடர்பாக, இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் துணைவிதியின், எவையேனும் ஏற்பாடுகளைப் பயனுற நிறைவேற்றும் தமது எண்ணம் பற்றி ஏதேனும் வீட்டின் இருப்பாட்சியாளருக்கு அதன் சொந்தக்காரர் அறிவித்தல் கொடுத்தபின்னர் அவ்வாறு பயனுற நிறைவேற்றுவதிலிருந்து சொந்தக்காரரை, அத்தகைய வீட்டின், கட்டிடத்தின் அல்லது காணியின் இருப்பாட்சியாளர், தடுப்பாராயின், பிரதேச சபையானது, அதுபற்றி எண்பிக்கப்பட்ட தன்மேலும் சொந்தக்காரரின் விண்ணப்பத்தின் மீதும், இச்சட்டத்தின் அல்லது இதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் துணைவிதியின் ஏற்பாடுகளைப் பயனுறச் செய்வதற்கு அவசியமாகக்கூடியவாறான, அத்தகைய வீடு, கட்டிடம் அல்லது காணி தொடர்பான அத்தகைய எல்லா வேலைகளையும், சொந்தக்காரர் நிறைவேற்றுவதற்கு, அத்தகைய இருப்பாட்சியாளரை அனுமதிப்பதனைத் தேவைப்படுத்தும் எழுத்திலான கட்டளையொன்றை ஆக்கலாம். அத்துடன் அது தகுந்ததெனக் கருதினால், அத்தகைய விண்ணப்பம் அல்லது கட்டளை தொடர்பான செலவுகளைச் சொந்தக்காரருக்குச் செலுத்துமாறு இருப்பாட்சியாளருக்குக் கட்டளையிடலாம் என்பதுடன் கட்டளைத் தேதியிலிருந்து, எட்டுநாட்கள் முடிந்ததன் பின்னர், அத்தகைய வேலைகளை நிறைவேற்றுதற்கு அத்தகைய சொந்தக்காரரை அனுமதிப்பதற்கு அத்தகைய இருப்பாட்சியாளர் தொடர்ந்து மறுத்து வருவாரெனில், அத்தகைய இருப்பாட்சியாளர், அவ்வாறு தொடர்ந்து மறுக்கின்ற, நாளொவ்வொன்றுக்கும் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்தினால் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும். அத்துடன், அத்தகைய சொந்தக்காரர் ஒவ்வொருவரும், அத்தகைய மறுப்பு தொடர்ந்திருக்கும் வேளையில், அத்தகைய வேலைகளை நிறைவேற்றத் தவறியமை காரணமாக அவர் வேறுவகையில் பொறுப்புடையவராயிருந்திருக்கக்கூடிய எவையேனும் தண்டங்களிலிருந்து விடுவிக்கப்படுதலும் வேண்டும்.

**இருப்பாட்சியாளர்களினால் தடுக்கப்படுதல்.**

**204.** ஏதேனும் வீட்டின், கட்டிடத்தின் அல்லது காணியின் சொந்தக்காரரோ அல்லது இருப்பாட்சியாளரோ, பிரதேசசபையினால் உறப்பட்ட செலவுகளைச் செலுத்தாவிடின், செலவுதொகையானது, எந்த வீடு, கட்டிடம் அல்லது காணி தொடர்பாக செலவுகள் உறப்பட்டனவோ அந்த வீடு, கட்டிடம் அல்லது காணி மீதான விதிப்பனவொன்றாதல் வேண்டுமென்பதுடன் பிரதேச சபைக்கு வருமதியான கடனொன்றென்றுபோன்று செலுத்தப்படற்பாலதாதலும் வேண்டும்.

**சொந்தக்காரரோ, இருப்பாட்சியாளரோ செலவுகளைச் செலுத்தாவிடின், பரிகாரம்.**

**205.** இதனகத்து வேறு வகையில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சட்டவாக்கத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் துணைவிதி அல்லது விதியின் ஏற்பாடுகளின் கீழ், சேதஈடுகள், செலவு தொகைகள் அல்லது செலவுகள், செலுத்தப்படற்பாலதான எல்லா விடயங்களிலும், பிணக்கின் விடயத்தில், தொகையும் அத்துடன் அதன் பங்கீடும், உள்ளூர் நியாயாதிக்கமுடைய நீதிவான் நீதிமன்றத்தினால், அத்தகைய நீதிமன்றத்துக்கு, அதன் சார்பில், பிரதேச சபையினால் அல்லது அத்தகைய சேதஈடுகள் செலவுதொகைகள் அல்லது செலவுகள் எந்த ஆளுக்கு வருமதியாகவிருக்கின்றனவோ, அந்த ஆளினால் விண்ணப்பிக்கப்பட்டதன் மேல் நிச்சயிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

**சேதஈடுகள் செலவு தொகைகள் முதலானவைகளைத் தீர்மானித்தலும், அறவிடுதலும்.**

சேதாரங்களை அறவிடுதல்.

**206.** இருநூற்று ஐந்தாம் பிரிவின்கீழ், நீதிவானால் தீர்மானிக்கப்பட்ட சேதாரட்டுத் தொகை, செலவுதொகைகள் அல்லது செலவுகள் கேட்கப்பட்டதன்மேல் அது செலுத்தப்படுவதற்கு ஆளானவரான ஆளினால் எழுநாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், அவ்வாறு செலுத்தத்தவறியமை பற்றி அத்தகைய நீதிவானுக்கு அறிவிக்கப்படலாம் என்பதுடன் நீதிவானொருவரால் விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றென்றுற்போன்று அதே முறையில் அத்தொகை அறவிடப்படுதலும் வேண்டும்.

தனியார் ஆதனத்தினை மேம்படுத்துவதனால் ஏற்பட்ட செலவுகளை அறவிடுதல்.

**207.** இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் சட்டவாக்கத்தின் அல்லது ஏதேனும் துணைவிதியின், விதியின் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியின்கீழ், எந்த வேலைகளை நிறைவேற்றும்படி அல்லது எந்தச் செயல்களைப் புரியும்படி ஏதேனும் வீட்டின், கட்டிடத்தின் அல்லது காணியின் சொந்தக்காரர் தேவைப்படுத்தப்படுகின்றாரோ, அந்த வேலைகளுள் எதனையும் நிறைவேற்றுகையில் அல்லது அச் செயல்களுள் எதனையும் புரிகையில் பிரதேச சபைக்கு எவையேனும் செலவுகள் உறப்படுமிடத்து சபையானது, ஒன்றில் 205 ஆம் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் அத்தகைய செலவுத் தொகையை அறவிடலாம் அல்லது அது தகுந்ததென்று கருதினால், ஆண்டொன்றுக்கு ஒன்பது சதவீதத்தின் படி அதற்கான , வட்டியுடன் சேர்த்து, ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதியினுள் செலவுத்தொகை முழுவதையும் கொடுத்துத் தீர்ப்பதற்குப் போதியதாயிருக்கக்கூடிய அத்தகைய தொகையினை தவணை முறையில் செலுத்துவதற்குச் சொந்தக்காரரால் அளிக்ககப்பட்ட ஏதேனும் பொறுப்பேற்பை ஏற்கலாம். அத்துடன் அத்தகைய தொகையானது வருமதியாகும் போது இச்சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான வீதவரி அறவிடப்படக்கூடிய அதே முறையில் அறவிடப்படலாம்.

## நட்டஈட்டுக் கொடுப்பனவு

பிரதேச சபையானது பிரதேச சபை நிதியத்திலிருந்து நட்டஈட்டினை வழங்கலாம்.

**208.** இச்சட்டத்தின் அல்லது இதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் துணைவிதியின்கீழும் அல்லது இச்சட்டத்தின் அல்லது இதன்கீழ் ஆக்கப்படும் ஏதேனும் துணைவிதியின் பயனைக்கொண்டும் பிரதேச சபைக்கு, அதன் அலுவலர்களுக்கு அல்லது வேலையாட்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள எவையேனும் தத்துவங்களைப் பிரயோகிப்பதன் காரணமாக சேதமெதுவும் அடையும் எல்லா ஆட்களுக்கும், பிரதேச சபையொன்று பிரதேச சபை நிதியத்திலிருந்து நட்டஈட்டினைச் செலுத்தலாம்.

நட்டஈட்டினைத் தீர்மானித்தலும் கொடுப்பனவு செய்தலும்.

**209.** இதனகத்து வேறுவிதமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றவாறு தவிர, இச்சட்டத்தினால் அல்லது இதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் துணை விதியினால் நட்டஈடானது செலுத்தப்படவேண்டுமெனப் பணித்துரைக்கப்பட்டுள்ள எல்லா விடயங்களிலும், அத்தகைய நட்ட ஈடுட்டுத் தொகையும், பிணக்கின் விடயத்தில் அதன் பங்கீடும், 205 ஆம் பிரிவின்கீழ் சேதங்களுக்கான, செலவுதொகைகளுக்கான அல்லது செலவுகளுக்கான உரிமைக் கோரிக்கையொன்றென்றுற்போன்று அதே முறையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அப்பிரிவின் ஏற்பாடுகள் அவசியமான திரிபுகளுடன் இப்பிரிவின் கீழான எல்லாப் பிரச்சினைகளையும் தீர்மானிப்பதற்கு ஏற்புடையவாதலும் வேண்டும்.

## நடவடிக்கைமுறையும், சட்டநடவடிக்கைகளும்

அறிவித்தல்களைச் சேர்ப்பித்தல்.

**210.** (1) இச்சட்டத்தின்கீழ் அல்லது இதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் துணைவிதியின்கீழ் சேர்ப்பிக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் அறிவித்தல், கட்டளை அல்லது வேறு ஆவணம் எதுவும், அந்த ஆவணமானது எந்த ஆளுக்கு முகவரியிடப்பட்டுள்ளதோ அந்த ஆளுக்கு அல்லது அவரின் வதிவிடத்துக்கு அல்லது வதிவிடத்தில் ஒப்படைப்பதன் மூலம் சேர்ப்பிக்கப்படலாம், அல்லது எவையேனும் வளவுகளின் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு முகவரியிடப்பட்டிருக்கும்போது அந்த ஆவணத்தினை அல்லது அதன் உண்மைப் பிரதியொன்றினை அந்த வளவுகளிலுள்ள எவரேனும் ஆளிடம் ஒப்படைப்பதன் மூலம் அல்லது அந்த வளவுகளில், சேர்ப்பிக்கக்கூடிய ஆட்களெவரும் இல்லாத விடத்து, அவ்வளவுகளில் ஏதேனும் துலாம்பரமான பாகத்தில் அந்த ஆவணத்தை ஒட்டுவதன்மூலம் சேர்ப்பிக்கப்படலாம்.

(2) எவையேனும் அறிவித்தல், கட்டளை அல்லது வேறு ஆவணம் தபாலில்பதிவஞ்சல்மூலம் சேர்ப்பிக்கப்படலாம் என்பதுடன், அவ்வாறு சேர்ப்பிக்கப்பட்டால் அதனைக் கொண்டுள்ள கடிதமானது சாதாரண முறையில் தபாலில் ஒப்படைக்கப்படும் அதே நேரத்திலேயே அது சேர்பபிக்கப்பட்ட தெனக் கருதப்படலும் வேண்டும். அத்துடன் அத்தகைய சேர்ப்பித்தலை எண்பிக்கையில், அறிவித்தல் கட்டளை அல்லது வேறு ஆவணம் என்பன சரியாக முகவரியிடப்பட்டுத் தபாலில் இடப்பட்டதெனபதை எண்பித்தல் போதுமானதாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தினால், எவையேனும் வளவுகளின் சொந்தக்காரருக்கு அல்லது இருப்பாட்சியாளருக்கு வழங்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட அறிவித்தல், கட்டளை அல்லது வேறு ஆவணம் ஏதேனும், மேலதிக பெயர் அல்லது விபரணமின்றி, எவ்வளவுகள் தொடர்பில் அறிவித்தலானது வழங்கப்படுகின்றதோ அந்த வளவுகளின் "சொந்தக்காரரின்" அல்லது "இருப்பாட்சியாளரின்" (அவர்களது பெயரை இட்டு) விவரணத்தினால் முகவரியிடப்படலாம்.

அறிவித்தல்கள் செயலாளரினால் அல்லது அதற்கான அதிகாரம் அளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலரினால் கொடுக்கப்படலாம் அல்லது பெறப்படலாம்.

**211.** பிரதேச சபை அல்லது அதன எவரேனும் அலுவலர், எந்த அறிவித்தல்களைக் கொடுப்பதற்கு அல்லது பெறுவதற்குத் தத்துவமளிக்கப்பட்டுள்ளதோ அல்லது தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அந்த எல்லா அறிவித்தல்களும், அத்துடன் எந்த அறிவித்தல்களைக் கொடுப்பதற்கு அல்லது பெறுவதற்குப் பிரதேச சபைக்குச் சந்தர்ப்பம் ஏற்படக்கூடுமோ அந்த எல்லா அறிவித்தல்களும் பிரதேச சபையின் செயலாளரினால் அல்லது அந்நோக்கத்துக்கெனத் துணை விதியினால் அதிகாரமளிக்கப்பட்ட அதன் வேறு எவரேனும் அலுவலர்களினால் கொடுக்கப்படலாம் அல்லது பெறப்படலாம்.

நீதிவானால் விளங்கப்பட வேண்டிய தவறு.

**212.** இச்சட்டத்தின் கீழான தவறெவ்வொன்றும் உள்ளூர் நியாயாதிக்கங்கொண்ட நீதிவானால் சுருக்கமுறையாக விளங்கப்படுதல்வேண்டுமென்பதுடன் இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் தண்டமானது, அத்தகைய தண்டம் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் நீதிவானது நியாயாதிக்கத்திற்கு விதிக்கப்பட்ட எல்லைகளை விஞ்சுதல் எவ்வாறிருப்பினும், அத்தகைய நீதிவானால் விதிக்கப்படலாம்.

குற்றவழக்குத் தொடுத்தற்கான வரையறை.

**213.** ஏதேனும் தவறு தொடர்பிலான முறைப்பாடானது அத்தகைய தவறு புரியப்பட்டதன் பின்னர் ஆறு மாதங்களுக்குள் செய்யப்பட்டிருந்தாலன்றி, நீதிவானால் விளங்கப்படற்பாலதான ஏதேனும் தவறுக்காக ஆளெவரும் இச்சட்டத்தின் அல்லது இதன்கீழ் ஆக்கப்படும் துணை விதியின்கீழ் ஏதேனும் குற்றப்பணத்துக்கு அல்லது தண்டத்துக்கு ஆளாதலாகாது.

ஒரு மாத அறிவித்தல் வரை அல்லது வழக்குக் காரணத்திற்கு ஆறு மாதங்களுக்குப் பின்னர் பிரதேச சபைக்கெதிராக வழக்கெதுவும் தொடுக்கப்படுதலாகாது என்பது.

**214.** (1) ஏதேனும் பிரதேச சபைக்கு அல்லது பிரதேச சபையின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது அலுவலருக்கு அல்லது பிரதேச சபையினது பணிப்புரையின்கீழ் செயலாற்றும் எவரேனும் ஆளுக்கெதிராக, இச்சட்டத்தினால் அல்லது இதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் துணைவிதியினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட எதற்காகவும், அத்தகைய வழக்குக் காரணத்தையும், உத்தேச வழக்காளியின் பெயரையும், வதிவிடத்தையும், அவ்வழக்கில் அவரது சட்டத்தரணி அல்லது முகவர் எவரேனுமிருப்பின் அவரின் பெயரையும், முகவரியையும், நியாயமான நிச்சயத்துடன் கூறி பிரதேச சபைக்கு அல்லது எதிரிக்கு எழுத்திலான அறிவித்தல் கொடுத்ததன் பின்னர் ஒருமாதகாலம் முடிவடையும் வரை வழக்கு எதுவும் தொடுக்கப்படுதல் ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வழக்கு ஒவ்வொன்றும் வழக்குக்காரணம் ஏற்பட்டதன் பின்னர் ஆறு மாதங்களுக்குள், தொடங்கப்படுதல் வேண்டும்; அதன் பின்னரல்ல.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் வழக்குப் பற்றிய அறிவித்தல் எந்த ஆளுக்கு வழங்கப்பட்டதோ அந்த ஆள் எவரும் வழக்கு கொணரப்படுமுன்னர் வழக்காளியினைப் போதுமான அளவு திருப்திப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வழக்காளி அத்தகைய ஏதேனும் வழக்கு கொணரப்படும் போது எதுவும் அறவிடவியலாது ; அத்துடன் எதிராளியானவர் அவரது செலவுத்தொகை வழக்காளியால் செலுத்தப்படுவதற்கு உரித்துடையவராதலும் வேண்டும்.

(4) மூன்றும் உட்பிரிவின் கீழ் எவ்வித பரிகாரமும் காணப்படாவிட்டால், எந்த நீதிமன்றத்தின் முன்னர் வழக்கானது முடிவுறுதுள்ளதோ அந்த நீதிமன்றத்தின் அனுமதியுடன் வழக்கெழுவினைக்கள் ஒன்று சேர்க்கப்படுமுன்னர். எந்நேரத்திலேனும் எதிராளி பொருத்தமானதெனக் கருதக்கூடிய அத்தகைய பணத்தொகையை நீதிமன்றத்தில் செலுத்துதல் அவருக்குச் சட்டபூர்வமானதாதல் வேண்டும். அத்துடன் அதன்மேல் நீதிமன்றத்தில் பணத்தைச் செலுத்துவதற்கு எதிராளிகள், அனுமதிக்கப்படும் ஏனைய வழக்குகளில் போன்று அத்தகைய வழக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் வழக்கானது விளக்கத்தின்மீது. வழக்காளி அவ்வுட்பிரிவின்கீழ் அவரால் கொடுக்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட வழக்குக்காரணம் தவிர்ந்த எதையேனும் வழக்குக் காரணத்தை எண்பிப்பதற்கு அனுமதிக்கப்படுதலாகாது. அத்துடன் அத்தகைய அறிவித்தலானது எண்பிக்கப்பட்டாலன்றி நீதிமன்றமானது எதிராளிக்குத் தண்டம் விதித்தலாகாது

பிரதேச சபையும் அதன் அலுவலர்களையும் பாதுகாத்தல்.

**215.** (1) ஏதேனும் பிரதேச சபையினால் செய்யப்பட்ட விடயம் அல்லது செயல் எதுவும் அத்துடன் பிரேதச சபையினால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் எதுவும் அத்துடன் ஏதேனும் பிரதேச சபையின் பணிப்புரையின் கீழ் அத்தகைய பிரதேச சபையின் எவரேனும் உறுப்பினரால் அல்லது அலுவலரினால் அல்லது வேறு எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட விடயம் அல்லது செயல் எதுவும், அவ்வாறு செய்யப்பட்ட விடயம் அல்லது செயலை அல்லது அவ்வாறு செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தமானது இச்சட்டத்தின் அல்லது பிரதேச சபை ஒன்றினது தத்துவங்களுடனும் கடமைகளுடனும், தொடர்புடைய வேறேதேனும் சட்டவாக்கத்தினது அல்லது ஏதேனும் துணைவிதியினது அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட விதியினது நோக்கங்களுக்காக நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டால் அல்லது செய்து கொள்ளப்பட்டால் பிரதேச சபையின் எவரேனும் உறுப்பினர் அல்லது எவரேனும் அத்தகைய அலுவலர் அல்லது வேறு ஆள் தனிப்பட்டமுறையில் எத்தன்மைத்தானதுமான அச்செயலுக்கு, பொறுப்புக்கு, உரிமைக் கோரிக்கைக்கு அல்லது கோரிக்கைக்கு ஆளாகார்; அத்துடன் ஏதேனும் அத்தகைய பிரதேச சபையினால் அல்லது எவரேனும் உறுப்பினரால், அலுவலரால் அல்லது மேற் சொல்லப்பட்டவாறு செயலாற்றும் வேறு ஆளினால் உறப்பட்ட எவையேனும் செலவுகள், பிரதேச சபையினால் பொறுத்துக்கொள் ளப்பட்டு அதன் நிதியத்திலிருந்து மீளச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) வேறேதேனும் தத்துவங்களுக்கு அமைவாகவும் அவற்றிற்குப் பங்கமின்றியும், ஏதேனும் வழக்கில், குற்றவழக்கில் அல்லது வேறு நடவடிக்கைகளில் எதிராளியானவர் பிரதேச சபையின் உறுப்பினரொருவராக அல்லது அதன் அலுவலராக, முகவராக அல்லது சேவையாளராகவிருக்கும் ஏதேனும் விடயத்தில் பிரதேச சபையொன்று அது பொருத்தமானதெனக் கருதினால், வழக்கு, குற்றவழக்கு அல்லது வேறு நடவடிக்கைகள் எந்த நீதிமன்றத்தின் முன்னர் விளங்கப்பட்டு தீர்மானிக்கப்படுகின்றதோ, அந்த நீதிமன் றம் வேறுவகையாகப் பணிக்கும் விடயத்தில் தவிர, வழக்கில், குற்றவழக்கில் அல்லது நடவடிக்கையில் அல்லது அதன் விளைவாக ஏற்பட்ட, செலவு தொகைகள், கட்டணங்கள், செலவுகள், சேதங்கள், தண்டங்கள், என்பன தொடர்பிலாயினுஞ்சரி அல்லது வேறுவகையிலாயினுஞ்சரி எதிராளியினால் செலுத்தப்படற்பாலதான தொகை முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தினைப் பிரதேச நிதியத்திலிருந்து செலுத்தலாம் ;

ஆயின், இப்பிரிவிலுள்ள எதுவும், ஏதேனும் பிரதேச சபையினது எவரேனும் உறுப்பினருக்கு, அத்தகைய பிரதேச சபையின கணக்குகளின் கணக்காய்வின் மீது அனுமதி மறுக்கப்பட்டதும், அத்தகைய உறுப்பினரால் அதிகாரமளிக்கப்பட்டதும், அல்லது சேர்ந்து அதிகாரமளிக்கப்பட்டதுமான ஏதேனும் கொடுப்பனவின் தொகை மிகை வரி செலுத்தும் பொறுப்பில் இருந்து விலக்களித்தலாகாது.

## அலுவலர்களின் தத்துவங்களும், பொறுப்புக்களும்

*பொது அதிகார மங்கலை அதன் அலுவலர்களுக்கு வழங்குவதற்குப் பிரதேச சபைக் குள்ள தத்துவம்.*

**216.** பிரதேச சபையொன்று, தீர்மானத்தின் மூலம், பிரதேச சபையினது எவரேனும் அலுவலருக்கு, தவிசாளரின் பொதுவான கட்டுப்பாட்டுக்கு அமைவாக இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டவாக்கத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் துணைவிதியினால் அல்லது விதியினால், அவசியமாகக்கூடியவாறாக பிரதேச சபைக்குத் தத்துவமளிக்கப்பட்டுள்ள எல்லாச் செயல்களையும், பெறுகைகளையும், அங்கீகாரங்களையும் செய்வதற்கு, கொடுப்பதற்கு அல்லது பெறுவதற்கு ஒரு பொதுவான அதிகாரத்தினை வழங்கலாம்; அத்துடன் அத்தகைய தீர்மானமானது வலுவிலிருக்கும் வரை, அத்தகைய அலுவலரினால் செய்யப்பட்ட அல்லது கொடுக்கப்பட்ட அல்லது பெறப்பட்ட எல்லாச் செயல்களும், பெறுகைகளும், அங்கீகாரங்களும், அத்தகைய செயல்களும், பெறுகைகளும், அங்கீகாரங்களும் பிரதேச சபையினால் செய்யப்பட்டன அல்லது கொடுக்கப்பட்டன என்றாற்போன்று அதே பிணிப்பும் செல்லுபடியும் உடையனவாதல் வேண்டும்.

*பிரதேச சபையின் அலுவலர்களைத் தடை செய்தற்கான தண்டனை.*

**217.** பிரதேச சபையின் எவரேனும் அலுவலரை, இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் சட்டவாக்கத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் துணைவிதியின், விதியின் அல்லது ஒழுங்குவிதியின் ஏதேனும் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு அவருக்கு உரித்தாக்கப்பட்ட அல்லது அவர்மீது சமத்தப்பட்ட ஏதேனும் கடமையைப் புரிவதிலிருந்து அல்லது ஏதேனும் அதிகாரத்தைப் பிரயோகிப்பதிலிருந்து வேண்டுமென்று தடைசெய்யும் எவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்படாத இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

*பிரதேச சபை அலுவலர்களினால் தத்துவமானது துர்ப் பிரயோகம் செய்யப்படுதற்கான தண்டம்.*

**218.** பிரதேச சபையொன்றின் எவரேனும் அலுவலர், இச்சட்டத்தின் அல்லது இதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் துணைவிதியின் அல்லது விதியின் அதிகாரத்தின்கீழ், ஏதேனும் வேலைப் புரியும் தோரணையில் எவரேனும் ஆளுக்கு ஏதேனும் அநாவசியமான வன் செயலைப பயனபடுத்தினால் அல்லது ஏதேனும் அலைக்கழிப்பை அல்லது மனக்குலைவை ஏற்படுத்தினால் அவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல், ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

*பிரதேச சபையின் அலுவலர்களும் சேவையாளர்களும் ஒப்பந்தங்களில் அக்கறை காட்டக் கூடாதென்பது.*

**219.** (1) பிரதேச சபையின் உறுப்பினர் அல்லது சேவையாளர் எவரும், பிரதேச சபையுடன் செய்யப்படும் அல்லது பிரதேச சபைக்காக நிறைவேற்றப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தில் அல்லது வேலையில் நேரடியாகவோ மறைமுகமாகவோ அக்கறை காட்டுதல் அல்லது நிதிசார் அக்கறையினைக் கொண்டிருத்தல் ஆகாது.

(2) பிரதேச சபையின் எவரேனும் உறுப்பினர் அல்லது சேவை யாளர், அத்தகைய ஒப்பந்தத்தில் அல்லது வேலையில் அக்கறை கொண்டிருந்தால் அல்லது ஏதேனும் நிதிசார் அக்கறை கொண்டி ருந்தால், அவர் ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன் றினால் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், விடயத்துக்கேற்றுற்போன்று பிரதேச சபையி னது உறுப்பினரொருவராக அமர்வதிலிருந்து அல்லது பிரதேச சபையின்கீழ் ஏதேனும் பதவியை வகிப்பதிலிருந்து அல்லது சபையின் கீழ் ஊழியம் புரிவதிலிருந்து தகைமையிழந்தவராதல் வேண்டும்;

ஆயின், எவ்வாறாயினும், ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட கம்பனி யொன்றில் பங்குதாரரொருவராகவிருக்கும் ஆளெவரும், அத்தகைய கம்பனிக்கும் பிரதேச சபைக்கும் இடையிலான ஏதேனும் ஒப்பந்தம் அல்லது பிரதேச சபைக்காக அத்தகைய கம்பனியால் நிறை வேற்றப்பட்ட ஏதேனும் வேலை என்பன காரணமாக மட்டும் அத்த கைய குற்றப்பணத்திற்கு ஆளாதலாகாது.

பிரதேச சபையின் அலுவலர்களும், சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாதல் வேண்டுமெனபது.

220. பிரதேச சபை நிதியத்திலிருந்து ஊதியம்பெறும் பிரதேச சபையொன்றின் அலுவலர் அல்லது வேலையாள் ஒவ்வொருவரும், அத்துடன் பிரதேச சபையினது ஏதேனும் காணி அல்லது கட்டிடத் தின் மீதான ஏதேனும் கொடுப்பனவை அல்லது வரியினைச் செலுத் துதல் பிரதேச சபையினது அதிகாரத்தினால் அல்லது அதிகாரத்தின் கீழ், பொறுப்பிக்கப்பட்டுள்ள ஒப்பந்தகாரர் அல்லது முகவர் ஒவ் வொருவரும் அத்துடன் அத்தகைய வரியை அல்லது கொடுப்பன வைச் சேர்ப்பதற்காக அத்தகைய ஒப்பந்தகாரரால் அல்லது முகவரால் ஊழியத்துக்கமர்த்தப்பட்டுள்ள சேவையாளர் அல்லது வேறு ஆள் ஒவ்வொருவரும் தண்டனைச் சட்டக்கோவையில் பயன்படுத்தப்படுகின்ற வாறு அச்சொல்லமைப்பின் கருத்திற்குட்பட, ஒரு பகிரங்க சேவையாள் ரொருவராகக் கருதப்படுதல் வேண்டும்.

## நீக்கம், இடைக்கால ஒழுங்குகள், பல்லினமானவை

எழுத்திலான ஏதேனும் சட்டத்தில் ஒரு பட்டினசபை, கிராமசபை அல்லது உள்ளூரதிகாரசபை பற்றிய குறிப்பீடுகள் பயன்.

221. இச்சட்டத்தின் 1ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட தேதி யன்று நடைமுறையிலுள்ள எழுத்திலான ஏதேனும் சட்டத்தில்—

(அ) ஒரு பட்டின சபை பற்றிய அல்லது ஒரு கிராம சபை பற்றிய குறிப்பீடொன்று பிரதேச சபை பற்றிய குறிப் பீடாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) உள்ளூர் அதிகாரசபை பற்றிய குறிப்பீடொன்று, சந்தருப் பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய, பிரதேச சபையொன்றை உள்ளடக்குவதாகக் கருதப் படுதல் வேண்டும்.

*நீக்கம்.*

**222.** ஏதேனும் பிரதேச சபையின் நோக்கங்களுக்காக, இதறகான ஆறும் அட்டவணையில் வரிசைப்படுத்தப்பட்ட சட்டவாக்கங்கள், அத்தகைய பிரதேச சபை நிறுவப்பட்ட தேதியிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும்.

ஆயின், இப்பிரிவில் அடங்கியுள்ளதெதுவும் ஏதேனும் பிரதேச சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள பிரதான பொதுவழிகள் அல்லது அவற்றின் எவையேனும் பாகங்கள் தொடர்பில் இச்சட்டத்தால் வெளிப்படையாக வேறுவகையாக ஏற்பாடுசெய்யப்படாதவாறு அமைச்சருக்குள்ள உரிமைகளையும், தத்துவங்களையும், கடமைகளையும் பாதிப்பதாக அல்லது எவ்வகையிலேனும் மதிப்புக் குறைப்பதாகக் கருதப்படுதலாகாது.

*ஏற்பாடு செய்யப்படாத விடயங்களைச் சீராக்குதல்.*

**223.** இலங்கை முழுவதிலும் அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட இடத்தில் அல்லது இடப்பரப்பில் பொதுவாக, அல்லது ஏதேனும் சிறப்பான கருமம் அல்லது கருமங்கள் தொடர்பில் ஏதேனும் எதிர்பார்க்கப்படாத அல்லது சிறப்பான சூழ்நிலைகளுக்கு ஏற்பாடு செய்யும் அல்லது எப்பிரச்சினையை அல்லது விடயத்தினைத் தீர்மானிப்பதற்கு அல்லது சீராக்குவதற்கு ஏதேனும் ஏற்பாடு அல்லது பயனுறுதியுள்ள ஏற்பாடு இச்சட்டத்தினால் செய்யப்படவில்லையோ அப்பிரச்சினையை அல்லது விடயத்தினைத் தீர்மானிக்கும் அல்லது சீராக்கும் நோக்கத்தோடு இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான முதனிலை ஏற்பாடுகள் தொடர்பில் அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அவர் அவசியமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணிப்புரைகளையும் வழங்கலாம்.

*இடைக்கால ஏற்பாடு.*

**224.** பிரதேச சபையொன்றின் எல்லைகளுக்குள் அமைந்துள்ள தேர்தல் மாவட்டமொன்றுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது தெரிவு செய்யப்பட்டவராகக் கருதப்பட்ட முதலாவது பாராளுமன்ற உறுப்பினர், அத்தகைய சபையின் கூட்டங்களில் பங்குபற்றி உரையாற்றலாம். ஆனால், அங்கு தீர்மானிக்கப்படும் ஏதேனும் கருமத்தின் மீது வாக்களிப்பதறகு உரித்துடையவராகார்.

*நீக்கலும் நிலைமாறு கால ஏற்பாடும்.*

**225.** (1) நகரசபைகள் கட்டளைச் சட்டமும் கிராமசபைகள் கட்டளைச் சட்டமும் இத்தால் நீக்கப்படுகின்றன.

(2) பட்டினமொன்றுக்கென அமைக்கப்பட்ட பட்டின சபையொன்றினால் அல்லது கிராம இடப்பரப் பொன்றுக்கென அமைக்கப்பட்ட, கிராமசபையொன்றினால் ஆக்கப்பட்டு, 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் சட்டத்தின் 18 (2) (உ) என்னும்பிரிவின் கீழ் அபிவிருத்திச் சபையொன்றினால் ஆக்கப்பட்ட துணைவிதிகளாகக் கருதப்பட்ட எல்லாத்துணை விதிகளும் இச்சட்டத்தின் 1 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்படும்

தேதியிலிருந்து எந்தப் பிரதேச சபை இடப்பரப்புக்குள்ளாக அத்தகைய பட்டினம் அல்லது கிராம இடப்பரப்பு அமைந்துள்ளதோ அந்தப் பிரதேச சபை இடப்பரப்புக்கென அமைக்கப்பட்ட பிரதேச சபையினால் ஆக்கப்பட்ட துணை விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

**226.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி—. பொருள் கோடல்.

"ஆண்டுப் பெறுமதி" என்பது, வாடகைக் குடியிருப்பாளர், எல்லாப் பொது வீதவரிகளையும், வரிகளையும் செலுத்துவதற்குப் பொறுப்பேற்றும், அத்துடன், காணிச்சொந்தக்காரர் வீட்டை, கட்டிடத்தை, காணியை அல்லது குடிமனையை, வாடகையைப் பெறக்கூடிய நிலையில் வைத்திருப்பதற்கு அவசியமான, காப்புறுதி, பழுதுபார்த்தல், பேணுதல், பராமரித்தல் எனபவற்றுக்கான செலவுத்தொகைகளைக் கொடுப்பதற்குப் பொறுப்பேற்றும் இருந்தால், ஓராண்டை இன்னோராண்டுடன் சேர்த்துப்பார்க்குமிடத்து ஏதேனும் வீட்டிற்கு, கட்டிடத்திற்கு, காணிக்கு அல்லது சிறுமனைக்கு, வாடகைக்குடியிருப்பாளர் செலுத்தவேண்டுமென்று நியாயமாக எதிர்பார்க்கப்படக்கூடிய ஆண்டொன்றுக்கான வாடகையெனப் பொருள்படும் :

ஆயின், ஆண்டுத்தொகையைத் கணக்கிடுவதிலும், மதிப்பீடு செய்வதிலும்—

(அ) அத்தகைய காப்புறுதி, பழுதுபார்த்தல், பேணல், பராமரிப்பு என்பவற்றுக்காக ஏற்பட்டிருக்கக்கூடிய ஆண்டுச் சராசரிச் செலவுத்தொகை கழிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) வாடகைக் குடியிருப்பற்ற ஏதேனும் காலப்பகுதிக்காக சலுகை அல்லது கழிவு எதுவும் செய்யப்படுதலாகாது;

"உதவி ஆணையாளர்" என்பது ஏதேனும் பிரதேசசபை இடப்பரப்புத் தொடர்பாக, அவ்விடப்பரப்புக்கு நியமிக்கப்படும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் என்று பொருள்படும்;

"உள்ளூராட்சி ஆணையாளர்" என்பது எவரேனும் உள்ளூராட்சிப் பிரதி ஆணையாளரையும் உள்ளடக்கும்;

"கூட்டுறவுச் சங்கம்" என்பது அத்தகைய சங்கங்கள் தொடர்பாக அப்போதைக்கு வலுவிலிருக்கும் ஏதேனும் சட்டத்தின் கீழ் பதியப்பட்ட ஏதேனும் சங்கமெனப் பொருள்படும்;

"மாவட்டம்" என்பது நிருவாக மாவட்டமெனப் பொருள்படும்;

"முதலாவது பாராளுமன்றம்" என்பது அரசியலமைப்பின் 161 ஆம் உறுப்புரையில் குறிப்பீடுசெய்யப்பட்ட முதலாவது பாராளுமன்றம் எனப் பொருள்படும்;

"பிசுக்கால்" என்பது பிசுக்கால் மாகாணத்துக்குள்ளுள்ள பிரதிப் பிசுக்காலேயும் உள்ளடக்கும்;

"அரசாங்க அதிபர்" என்பது உதவி அரசாங்க அதிபரையும் உள்ளடக்கும்;

"கிராம சேவை அலுவலர்" என்பது ஒரு பொலிச விதானே யையும் உள்ளடக்கும்;

"உள்ளூர் அதிகாரசபை" என்பது மாநகரசபை அல்லது நகர சபையொன்று எனப் பொருள்படுவதுடன், ஏதேனும் அத்த கைய சபையினால் பிரயோகிக்கப்படும், புரியப்படும் அல்லது நிறைவேற்றப்படும், தத்துவங்களேயும், கடமைகளேயும், பணி களேயும் ஒத்த அல்லது அதே போன்ற தத்துவங்களேயும், கடமைகளேயும், பணிகளேயும் பிரயோகிப்பதற்கும், புரிவதற் கும், நிறைவேற்றுவதற்கும், ஏதேனும் எழுத்திலான சட்டத் தினால் அல்லது அதன்கீழ் உருவாக்கப்பட்டதும், தாபிக்கப்பட்ட துமான ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும்;

"உள்ளூர்க் கடன்கள் அபிவிருத்தி ஆணையாளர்கள்" என்பது, (404 ஆம் அத்தியாயமான) உள்ளூர்க் கடன்கள் அபி விருத்திக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட உள்ளூர்க் கடன்கள், அபிவிருத்தி ஆணை யாளர்கள் எனப் பொருள்படும்;

"உள்ளூராட்சிச் சேவை" என்பது 1974 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவைச் சட்டத்தினால் அமைக்கப் பட்ட உள்ளூராட்சிச் சேவை எனப் பொருள்படும்;

"ஆறு", "வீதி", "பொதுவழி" அத்துடன் "கால்வாய்" என்பன முறையே 193 ஆம் அத்தியாயமான பொதுவழிகள் கட்டளைச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்.

முதலாம் அட்டவணை (பிரிவு 129)

பிரதேச சபை இடப்பரப்பினுள், பின்வரும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளின் மீறுகைகள் தொடர்பாக, பிரதேசசபையொன்றினுல் அல்லது பிரதேச சபை இடப்பரப்பின்மீது நியாயாதிக்கமுடைய நீதிவான் நீதிமன்றமொன்றினுல் அறவிடப்படுகின்ற எல்லாக குற்றப்பணங்களும், தண்டங்களும், வேறு தொகைகளும் :—

(1) இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட துணைவிதிகளும், எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் பயனு, இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதாகக் கருதப்படும் துணைவிதிகளும் ;

(2) தொல்லைகள் கட்டளைச்சட்டம் ;

(3) பின்வரும் கட்டளைச்சட்டங்களின் கீழ், பிரதேச சபையின் நிருவாக எல்லைகளுக்குள் அறவிடப்பட்ட எல்லாக் குற்றப்பணங்களும், தண்டங்களும்—

(அ) மதுவரிக் கட்டளைச்சட்டம் ;

(ஆ) தெருக்கள் சேகரிப்புகள் (ஒழுங்குவிதிகள்) கட்டளைச்சட்டம் ;

(இ) நஞ்சுகள், அபின், அபாயகரமான மருந்துகள் கட்டளைச்சட்டம் ;

(ஈ) 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச்சட்டம் ;

(உ) அடைவுபிடிப்போர் கட்டளைச்சட்டம் ;

(ஊ) பொது அரங்காட்டுக் கட்டளைச்சட்டம் ;

(எ) மிருகங்களுக்குக் கொடுமையிழைத்தல் தடுப்புக் கட்டளைச்சட்டம் ;

(ஏ) உள்ளூரதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டம்.

இரண்டாம் அட்டவணை (பிரிவு 129)

1. பின்வரும் கட்டளைச் சட்டங்களின்கீழ், பிரதேச சபை இடப்பரப்பில் வதிபவர்களிடமிருந்து அறவிடப்பட்ட அல்லது அவர்களால் செலுத்தப்பட்ட எல்லா முத்திரைத் தீர்வைகளும், கட்டணங்களும்—

(அ) படகுகள் கட்டளைச்சட்டம் ;

(ஆ) ஊன் விற்போர் கட்டளைச்சட்டம் ;

(இ) வாகனங்கள் கட்டளைச்சட்டம் ;

(ஈ) எச்சட்டவாக்கத்தின் செயற்பாடு பிரதேச சபைக்கு நீடிக்கப்பட்டுள்ளதோ, அச்சட்டவாக்கம் எதுவும்.

2. பின்வரும் கட்டளைச் சட்டங்களின்கீழ், பிரதேச சபை இடப்பரப்பில் வதிபவர்களால் உரிமங்கள் தொடர்பில் செலுத்தப்பட்ட எல்லா முத்திரைத்தீர்வைகளும், கட்டணங்களும்—

(அ) எஜமான் கவனிப்பாளர் கட்டளைச்சட்டம் ;

(ஆ) பெற்றோலியக் கட்டளைச்சட்டம் ;

(இ) வெடிப்பொருட்கள் கட்டளைச்சட்டம் ;

(ஈ) சுடுபடைக்கலங்கள் கட்டளைச்சட்டம் ;

(உ) நஞ்சுகள், அபின், அபாயகரமான மருந்துகள் கட்டளைச்சட்டம் ;

(ஊ) பொது அரங்காட்டுக் கட்டளைச்சட்டம்.

3. (1) பிரதேச சபை இடப்பரப்பினுள் வதிபவர்களால் பின்வருவனவற்றிக்காகச் செலுத்தப்பட்ட எல்லா முத்திரைத் தீர்வைகளும்—

(அ) சட்டத்தணிகளாகச் சட்டத் தொழிலர்கள் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் சேர்த்துக்கொள்வதற்கான சான்றிதழ்கள் மீது அல்லது அக்கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் பிரகடனத்தின் மீது ;

(ஆ) நொத்தாரிசுகளாக நொத்தாரிசுகள் கட்டளைச்சட்டத்தின் 3 ஆம், 27 ஆம், 28 ஆம் பிரிவுகளின் கீழ் நொத்தாரிசாக வழங்கப்பட்ட எழுத்தாணைகள், சான்றிதழ்கள் மேல் வெளிப்படுத்துகைகள் என்பன மீது ;

(இ) தொழிற்பயிற்சி அமைப்பு விதிகள் தொடர்பாக அல்லது எவரேனும் ஆள், நொத்தாரிசு ஒருவராகத் தகைமை பெறுவதற்கு, முதலில் கட்டுப்பட்டவராக வருகின்ற ஏதேனும் ஒப்பந்தத்தின்மீது ;

(ஈ) அடைவுபிடிப்போர்களாக அடைவு பிடிப்போர் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட உரிமங்களின்மீது ;

(2) சட்டத்தரணியாக இருப்பவரும் பிரதேச சபை இடப்பரப்பில் வதிபவருமான ஒருவருக்கு, சட்டத்தொழிலர்கள் கட்டளைச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஆண்டுச் சான்றிதழ் மீது, 1960, செப்டெம்பர் 15 ஆந் தேதி செலுத்தப்பட வேண்டியிருந்த முத்திரைத்தீர்வைக்குச் சமமான முத்திரைத் தீர்வையின் அத்தகைய பாகம்.

4. பிரதேச சபை இடப்பரப்பின் நிருவாக எல்லைகளுக்குள் அமைந்துள்ள ஏதேனும் காணியைப் பாதிக்கும் அறுதிஉறுதிகள், ஈட்டு முறிகள், நன்கொடைகள், குத்தகைகள் தொடர்பாக, 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க முத்திரைத் தீர்வைகள் சட்டத்தின் கீழ் செலுத்தப்பட்ட எல்லா முத்திரைத் தீர்வைகளும்.

## மூன்றும் அட்டவணை (பிரிவு 141)

### வரி மதிப்பீட்டுக்கான அறிவித்தல் படிவம்

பிரதேச சபை

அலுவலகம்.

19 ......................

இல................................

..........................என்பவருக்கு.

பிரதேச சபையானது இதன்கீழ் குறிப்பிடப்பட்ட தொகையில், கீழேகுறிப்பிடப்பட்ட ஆதனம் தொடர்பில், நீங்கள் வரிமதிப்பீடு செய்யப்படவேண்டுமென பிரதேச சபைச் சட்டத்தின் பயனைக் கொண்டு கட்டளையிட்டுள்ளது என்பதைக் கவனத்திற் கொள்க:—

| வரிமதிப்பிடப்பட்ட ஆதனம்/ சரிபார்க்கப்பட்ட அளவு | வரிமதிப்பிடப்பட்ட வாருள ஆண்டுப் பெறுமதி/சரிபார்க்கப்பட்ட அளவு |
|---|---|

சேர்ப்பிக்கப்பட்ட தேதி :—

19........................மாதம் ......ஆந் தேதி,

சரிபார்க்கப்பட்ட அளவுக்கான வரி மதிப்பீட்டினால் நீங்கள் இன்னலுற்றால் இவ்வறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுள் பிரதேச சபை அலுவலகத்திற்கு உங்கள் ஆட்சேபனையைத் தெரிவிக்கலாம். அத்தகைய ஆட்சேபனை எழுத்திலான கூற்றொன்றில் இருத்தல் வேண்டுமென்பதுடன், ஆட்சேபனைக்கான காரணங்களையும் கொண்டதாயிருத்தல் வேண்டும்.

தவிசாளர்.
பிரதேச சபை.

## நாலாம் அட்டவணை

(பிரிவு 148)

| | |
|---|---|
| | ரூ. ச. |
| மோட்டார் கார், மோட்டார் முச்சக்கரக் கார், மோட்டார் லொறி, மோட்டார் துவிச்சக்கரவண்டி, வண்டி, ஜின்ரிக்ஷோ, துவிசக்கரவண்டி, முச்சக்கர வண்டி தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வாகனத்திற்கும் .. .. | 25.00 |
| ஒவ்வொரு துவிச்சக்கரவண்டி அல்லது முச்சக்கரவண்டி அல்லது துவிச்சக்கரக் கார் அல்லது வண்டிக்கு— | |
| (அ) வர்த்தக நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படின்.. .. | 18.00 |
| (ஆ) வர்த்தக நோக்கங்கள் தவிர்ந்த ஏனைய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படின் .. .. .. | 4.00 |
| ஒவ்வொரு வண்டிக்கும் .. .. .. | 20.00 |
| ஒவ்வொரு கைவண்டிக்கும் .. .. .. | 10.00 |
| ஒவ்வொரு ஜின் ரிக்ஷோவிற்கும் .. .. .. | 7.50 |
| ஒவ்வொரு குதிரைக்கும் மட்டக்குதிரைக்கும் அல்லது கோவேறு கழுதைக்கும் | 15.00 |
| ஒவ்வொரு யானைக்கும் .. .. .. | 50.00 |

இருபத்தாறு அங்குலங்களுக்கு மேற்படாத விட்டமுடைய சில்லுகளைக் கொண்ட பிள்ளைகளின் வண்டிகள், தள்ளுவண்டிகள், தனியார் வளவில் மாத்திரம் வர்த்தக நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் தள்ளுவண்டிகள், வர்த்தக நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படாத கைவண்டிகள், என்பன கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

இவ்வட்டவணையில் "வியாபார நோக்கங்கள்" என்பது, ஏதேனும் தொழில் அல்லது வியாபாரத்துடன் தொடர்புடையதாக விற்பனைக்காகவோ அல்லது வேறெதற்காகவோ எவையேனும், பொருட்களை அல்லது பண்டங்களை அல்லது ஏதேனும் எழுத்திலான அல்லது அச்சிடப்பட்ட பொருட்களைக் கொண்டு செல்லுதலை அல்லது ஏற்றுதலை அல்லது கொண்டு செல்லுதலை உள்ளடக்கும்.

ஐந்தாம் அட்டவணை (பிரிவு 166)

**அசைவற்ற ஆதனத்தின் பறிமுதலுக்கும், விற்பனைக்கும் முன்னரான அறிவித்தல்**
**பிரதேச சபை**

.............................. என்னும் வரிமதிப்பீட்டிலக்கங் கொண்டகட்டிடம்

............................................. இன் இருப்பாட்சியாளருக்கு

.......................... என்றழைக்கப்படும் காணி.

19..................ஆண்டு..................................ஆம் மாதம் முடிவுறும் காலத்துக்கான மேலே குறிப்பிடப்பட்ட காணி/கட்டிடத்தின்மீது வருமதியாகவுள்ள வீதவரி/வரி செலுத்தப்படாதிருப்பதனாலும், சொல்லப்பட்ட வீதவரி/வரி அறவிடுதலுக்கு எந்த ஆதனம் பறிமுதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படக்கூடுமோ அந்த ஆதனம் காணப்படாதிருப்பதனாலும், இவ்வறிவித்தல் சேர்க்கப்பட்ட திகதியிலிருந்து 30 நாட் காலப்பகுதிக்குள்ளாக மேற்சொல்லப்பட்ட வீதவரிகளையும்/வரிகளையும்/செலவுகளையும் செலுத்துமாறு இத்தால் நீங்கள் வேண்டப்படுகிறீர்களென்பதுடன், அவ்வாறு கொடுப்பனவு செய்யத் தவறுமிடத்து, எக்கட்டடம் அல்லது காணி தொடர்பாக வீதவரி/வரி வருமதியாகவுள்ளதோ அக்கட்டடம் அல்லது காணி பறிமுதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றீர்கள்.

..............................

தவிசாளர்,

..................பிரதேச சபை.

...............பிரதேச இடப்பரப்பு.

ஆறாம் அட்டவணை (பிரிவு 222)

1. தொற்றுநோய்கள் கட்டளைச் சட்டமும் அதனைத் திருத்துதற்காக நிறைவேற்றப்பட்ட எல்லாக் கட்டளைச்சட்டங்களும்.

2. வடமாகாணச் சந்தைகள் கட்டளைச்சட்டமும் அதனைத் திருத்துதற்காக நிறைவேற்றப்பட்ட எல்லாக் கட்டளைச் சட்டங்களும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆம் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.